# பகுதி III

# பகுதி III

# 2008 ஆம் ஆண்டில் நாணயச்சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும் அறிவித்தல்களும்


| | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் | 02/17/402/0073/002 | (i) |
| 2. | வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல் | 02/17/402/0073/002 | (i) |
| 3. | வேளாண்மைத்துறைக்கான கடன் வழங்கலை அதிகரித்தல் | 02/04/008/0002/001 | (ii) |
| 4. | 2008ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் | | (ii) |
| 5. | 2008ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் | | (xiv) |
| 6. | வங்கிக் கிளைகளை நிறுவுதல் | | (xxiv) |
| 7. | 2008ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | (xxv) |
| 8. | 2008ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | (xxvi) |
| 9. | திரவச் சொத்துக்கான வரைவிலக்கணம் - திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 86இற்கு அமைவாக | 02/17/800/0005/01 | (xxvii) |
| 10. | 2007ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வர்த்தகத்தில் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் ஈடுபடுவதற்கு அனுமதியளித்தல் | 02/17/800/0005/01 | (xxvii) |
| 11. | 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணம் | | (xxviii) |
| 12. | 2008ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணம் | | (xxix) |
| 13. | குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் | 02/17/600/0009/001 | (xxx) |
| 14. | 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கட்டளை - வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபார திட்டம்) கட்டளை | | (xxx) |
| 15. | வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வங்கித்தொழில் முறைமையை பயன்படுத்துதல் | 02/04/004/0012/001 | (xxxi) |
| 16. | 2008ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | | (xxxii) |
| 17. | 2008ஆம் ஆண்டு 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் | | (xxxii) |
| 18. | வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும் | 02/17/800/0006/01 | (xxxiii) |
| 19. | இறக்குமதி உண்டியல்களுக்கான முற்பணம் | 02/17/800/0006/01 | (xxxv) |
| 20. | பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வு கழகத்தை தடை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகள் | 02/17/800/0007/01 | (xxxv) |
| 21. | தவறாக வழிநடத்தும் மற்றும் ஒழுக்க விழுமியத்திற்கு புறம்பான விளம்பரங்கள் | 02/17/800/0007/001 | (xxxvii) |
| 22. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் | 02/17/800/0006/01 | (xxxviii) |
| 23. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் | 02/17/800/0006/01 | (xxxix) |
| 24. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள் | 02/17/800/006/01 | (xl) |

25. 2008ஆம் ஆண்டு 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை வகைப்படுத்தல், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் (xlii)

26. 2008ஆம் ஆண்டு 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - இலங்கையில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை வகைப்படுத்தல், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் (xliii)

## உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

27. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/15 (xliv)
28. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/16 (xliv)
29. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 35/01/005/0006/17 (xlv)
30. ஏலமுறையின் கீழ் நீண்டகால நேர்மாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 35/01/005/0006/18 (l)
31. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/18 (liii)
32. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/19 (liv)
33. ஒதுக்குத் தேவைப்பாடுகள் 35/01/005/0007/02 (liv)
34. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/20 (lv)
35. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/07 (lv)
36. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/08 (lvi)
37. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/09 (lvi)
38. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/10 (lvii)
39. ஒதுக்குத் தேவைப்பாடுகள் 35/01/005/0007/03 (lvii)
40. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/11 (lviii)

## செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

41. வெளிநாட்டு சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் கப்பல்களை தொழிற்படுத்தாது பொதுவாகச் சரக்குகளை கொண்டு செல்பவர்களுக்கான (உரிமம் வழங்குகின்ற) ஒழுங்குவிதிகள் - 2005 06/04/01/2008 (lxiv)
42. வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்களில் செய்யப்படும் முதலீடு 06/04/02/2008 (lxiv)
43. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை இல. 1550/21 (lxvi)
44. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை இல. 1550/22 (lxvi)
45. தொடர்பான விடயம்: 2007.01.22ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/03/2007 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 06/04/03/2008 (lxvii)
46. இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் 06/04/04/2008 (lxviii)
47. வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்குகள் 06/04/05/2008 (lxix)
48. வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்குகள் 06/04/07/2008 (lxxi)
49. புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை 06/04/08/2008 (lxxiv)
50. வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் 06/04/09/2008 (lxxv)
51. மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள் 06/04/11/2008 (lxxvi)
52. வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தாள்களை வழங்குதல் 06/04/12/2008 (lxxvii)
53. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை இல. 1559/16 (lxxviii)
54. சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டில் தரையிறங்கும் கட்டணம்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் 06/04/13/2008 (lxxix)
55. இலங்கை அரசாங்கத்தினால் 2007இல் வழங்கப்பட்ட பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதித்தல் 06/04/14/2008 (lxxx)
56. பயண நோக்கங்களுக்காக வழங்கப்படும் வெளிநாட்டுச் செலாவணியினை கண்காணிக்கும் திட்டம் 06/04/15/2008 (lxxx)
57. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் 06/04/18/2008 (lxxxi)
58. வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் 06/04/19/2008 (lxxxii)

59. முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளில் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள் 06/04/20/2008 (lxxxii)

60. சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டில் தரையிறங்கும் கட்டணம்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்குதல் 06/04/21/2008 (lxxxvi)


### நிதியியல் உளவறிதல் பிரிவு


61. காப்புறுதித் தொழிலுக்காக உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் என்பன மீதான விதிகள் (lxxxvii)

62. நிதியியல் நிறுவனங்களுக்கான வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மீதான விதிகளுக்கு இணங்கியொழுகுதல் 037/01/016/0001/008 (cv)

63. கனடாவிலுள்ள பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் உலக தமிழர் இயக்கத்தினை உள்ளடக்குதல் (cvi)

64. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் 037/01/023/0001/008 (cvii)


### கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்


65. லங்கா செட்டில் பங்கேற்பாளரின் பெயர் மாற்றம் ஆர்ரிஜிஎஸ்/01/2008 (cviii)

66. 2008 ஏப்பிறல் 11ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்தல் ஆர்ரிஜிஎஸ்/02/2008 (cviii)

67. காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைமையின் கீழ் வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் என்பனவற்றிற்கான பங்கேற்பு நிறுவனங்களின் பணி விதிமுறைகள் மற்றும் நியம நேரம் என்பன மீதான பொதுவான பணிப்புரை சிஐரிஎஸ்/01/2008 (cix)

68. லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் பெயர் மாற்றங்கள் ஆர்ரிஜிஎஸ்/03/2008 (cx)

69. ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியினால் வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் (பாக்கித்தான்) வியாபாரம் கையேற்கப்படுகின்றமை ஆர்ரிஜிஎஸ்/04/2008 (cxi)

70. காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைமையினை இறுவட்டு உள்ளடக்க முறைமைக்கு மாற்றுதல் சிஐரிஎஸ்/02/2008 (cxi)

71. லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தம் - 2003 ஓகத்து (திருத்தப்பட்டவாறு) லங்காசெட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை ஆர்ரிஜிஎஸ்/05/2008 (cxii)

72. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உடன்படிக்கைக்கும் நடைமுறை விதிகளுக்குமான திருத்தங்கள் பிஎஸ்டி/ஏசியு/01/2008 (cxiii)


### பொதுப்படுகடன் திணைக்களம்


73. பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் (cxviii)

74. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் (cxx)

75. பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் (cxxiv)

76. 2003 ஓகத்தில் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம் - தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் அறிமுகம் எஸ்எஸ்எஸ்எஸ்/01/2008 (cxxvii)


### வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்


77. 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்பு (cxl)

78. 2008ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்பு (cxli)

79. 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்பு (cxlii)

80. 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை - திருத்தம்) பணிப்புரை (cliii)

தொடர்பு எண்: 02/17/402/0073/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 சனவரி 01

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.2,500 மில்லியனாக அதிகரிக்கப்படுகின்றது என்ற மத்திய வங்கியின் நாணயச் சபையின் தீர்மானத்தை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கும் 2005 ஏப்பிறல் 12 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

ஆகக் குறைந்த மூலதன தேவைப்பாட்டை அடைவது தொடர்பில் "மூலதனம்" என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 2007 திசெம்பர் 26ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரையுடன் அட்டவணை 1ஆக இணைக்கப்பட்ட வழிகாட்டுகை அறிவுறுத்தல்கள் இல. 6.2.2.2 இன் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மைய மூலதனம் என கருதப்படலாம் என தங்களுக்கு நாம் அறிவிக்கின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

தொடர்பு எண்: 02/17/402/0073/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 சனவரி 01

*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வங்கிகளின் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினை அதிகரித்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக, உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு ரூ.1,500 மில்லியனாக அதிகரிக்கப்படுகின்றது என்ற மத்திய வங்கியின் நாணயச் சபையின் தீர்மானத்தை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு அறிவிக்கும் 2005 ஏப்பிறல் 12 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக.

ஆகக் குறைந்த மூலதன தேவைப்பாட்டை அடைவது தொடர்பில் "மூலதனம்" என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 2007 திசெம்பர் 26ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரையுடன் அட்டவணை 1ஆக இணைக்கப்பட்ட வழிகாட்டுகை அறிவுறுத்தல்கள் இல. 6.2.2.2 இன் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மைய மூலதனம் என கருதப்படலாம் என தங்களுக்கு நாம் அறிவிக்கின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/04/008/0002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 மே 06

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்
உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்
*முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வேளாண்மைத்துறைக்கான கடன் வழங்கலை அதிகரித்தல்**

அண்மைக் காலங்களில் உலக உணவுப் பொருட்களில் விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் அதிகரித்துள்ளன என்பதும் இவ் விலைகள் அதிகரிப்பானது இலங்கையிலும் ஏனைய உலக நாடுகளிலும் பாரிய செயல்விளைவுகளைக் கொண்ட தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்பதும் உங்களுக்குத் தெரிந்ததே. இலங்கையில் தற்போதைய பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்களவு பங்கு இத்தகைய உயர் உணவு விலை அதிகரிப்பால் தூண்டப்படுகின்றது என்பதும் நீங்கள் அறிந்ததே. இது நாட்டின் உணவுப் உற்பத்தியை அதிகரிப்பதினதும் உணவு பாதுகாப்பினதும் முக்கியத்துவத்தை தெளிவாகக் காட்டுகிறது.

எனவே, 2008 ஏப்பிறல் 24ஆம் திகதி இடம் பெற்ற வங்கி முகாமையாளர்களின் கூட்டத்தில் ஆளுநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டவாறு, வேளாண்மைத்துறைக்கு கடன் வழங்கலை தொடருவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான தேவை ஒன்று உள்ளது. இத் துறைக்கு கடன் வழங்குவதில் சில வங்கிகள் 2006ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் இலக்கை ஏற்கனவே அடைந்துள்ள போதிலும், மற்றும் சில வங்கிகள் இன்னும் இம் மட்டத்தின் கீழே இருப்பதையும் நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே, வேளாண்மைக்கான கடன் வழங்கலை மொத்தக் கடன் சொத்துக்களின் 10 சதவீதமாக இன்னும் அதிகரிக்க வேண்டிய வங்கிகள் அவ்வாறு செய்ய அவசிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் வேளாண்மை கடன்களை அதிகரித்தல் தொடர்பாக குறிப்பாக உணவுப் பயிர்களை பயிர் செய்தலுக்கான கடன்கள் சம்பந்தமான அவற்றின் திட்டங்களை எமக்கு அறியத் தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உணவு உற்பத்தியை விரிவாக்குவதற்கும் வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குமான தற்போதைய தேசிய தேவை காரணமாக இத் துறைக்கு கடன் வழங்குவதலை வழிப்படுத்துவதற்கு உங்களது அவசரமான அவதானத்தையும் ஒத்துழைப்பையும் கோருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், பிரிவின் 46(1)) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 மே 08

**பணிப்புரைகள்**

**2008ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை**

**கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள்**

எடுத்துக்காட்டு

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 46அ ஆகியவற்றினால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக, நாணயச் சபையினால் வெளியிடப்படும் பணிப்புரைகள் பின்வருமாறு:

1 (1) இப்பணிப்புரைகள் 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படாலம். இப்பணிப்புரைகளால் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள், 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலுள்ளவை போன்று இருக்கும்.

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 46அ என்பவற்றின் கீழான அதிகாரமளிப்பு

2 (1) வங்கித்தொழிலின் உறுதித்தன்மையை நிலைப்படுத்தும் முகமாகவும், வங்கித்தொழில் எந்தவொரு விடயத்தின் கையாளுகை தொடர்பாகவும் பணிப்புரைகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு வழங்குவதற்கு நாணயச் சபைக்கு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2 (2) அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் சம்பந்தமாக அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் பொது மற்றும் விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்கு நாணயச் சபைக்கு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46அ இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

வரைவிலக்கணம்

3 (1) இந்தப் பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் பிரயோகிக்கப்படலாம்.

3 (2) ஐந்தொகையிலடங்கும் கடன் கொடுப்பனவுகளை மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பான கடன் கொடுப்பனவுகள் என்பனவற்றைக் கொண்ட மொத்தக்கடன் கொடுப்பனவுகள் பின்வருமாறு குறிப்பிடப்படும்.

3 (2) (I) ஐந்தொகையிலடங்கும் கொடுகடன் வசதிகள்:

ஐந்தொகை கொடுகடன் வசதிகள் என்பது மேலதிகப் பற்றுக்கள், தவணைக் கடன்கள், தடுத்து வைக்கப்பட்ட கடன்கள், பொதியிடல் கொடுகடன்கள், உறுதியளிக்கப்பட்ட கடன்கள், சுழலும் கடன்கள், உண்டியல் நிதியிடல், கழிவிடல் வசதிகள், தவணைக் கொள்வனவுக் கடன்கள், குத்தகைக்கு விடும் வசதிகள், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள், அடகு முற்பணங்கள், கொடுகடன் அட்டை வசதிகள், நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள், துணைநில் கொடுகடன் வசதிகளின் கீழ் படுகடன் சாதனங்களுக்கான கடன் வழங்கல் மற்றும் இதையொத்த ஏனைய சாதனங்கள்; என்பனவற்றைக் குறிப்பதாகும்.

3 (2) (II) ஐந்தொகைக்குப் புறம்பான கொடுகடன் வசதிகள்:

ஐந்தொகைக்கு வெளியிலான கொடுகடன் வசதிகள் என்பது எதிர்பாரா பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற கடப்பாடு மற்றும் உத்தரவாதங்கள், முறிகள், பற்றாணைகள், நாணயக் கடிதம் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் என்பனவற்றைக் குறிப்பதாகும்.

3 (3) தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட கம்பனிகள், இலங்கை அரசாங்கம், பொதுக் கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், நிறுவகங்கள், மக்கள் அமைப்புக்கள், வேறுபிற நிறுவனங்கள் என்பன கடன்படுனராகக் கருதப்படும்.

3 (4) பணிப்புரை 3(5) இற்கு அமைவாக வகைப்படுத்தப்படும் செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அல்லாத பிற கடன் கொடுப்பனவுகள் செயற்படு கடன் மற்றும் முற்பணங்கள் எனப்படும்.

3 (5) வங்கியியல் சட்டத்தின் பகுதி 46அ இற்கு அமைவாக செயற்படாக் கடன்கள் என்பது அறவிடமுடியாக் கடன்கள் மற்றும் ஐயக் கடன்கள் எனப்படும். இந்த நோக்கத்திற்காக, பணிப்புரை 4(2) இற்கமைய விதிவிலக்கான கடன் கொடுப்பனவுகள் நீங்கலாக அனைத்துக் கடன் கொடுப்பனவுகளும் பின்வரும் அடிப்படையில் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

3 (5) (I) காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டவை

(i) வங்கி மேலதிகப் பற்றுக்கள்:

(அ) தொடர்ச்சியாக 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகக் கடன் நிலுவை அங்கீகரிக்கப்பட்ட எல்லைத் தொகையை விடக் கூடுதலாக இருக்கின்ற பட்சத்தில்.

(ஆ) கடன்படுநர் வங்கியில் மேலதிகப்பற்று எல்லைத் தொகைகளுடன் கூடிய பல நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்குமிடத்து அவற்றின் நாளாந்த சராசரி நிலுவை கடன் நிலுவையாக மேற்படி 3(5)(I)(i)(அ) பணிப்புரை நோக்கத்திற்காக கருதப்படும்.

(ii) மாதாந்த தவணைக் கட்டணத்தில் மீள்செலுத்தப்படும் கொடுகடன்கள்: தொடர்ந்து வரும் மூன்று தவணைக் கட்டணங்கள், முதலும் வட்டியும் அல்லது முதல் அல்லது வட்டி செலுத்தத் தவறும் பட்சத்தில்.

(iii) காலாண்டு, அரையாண்டுத் தவணையில் மீள்செலுத்தப்படும் கொடுகடன்கள்: தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில்.

(iv) ஒரு கடன் மீளளிப்பு திகதியில் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியின் முடிவில் ஒரு தவணைக்

கட்டணத்தில் செலுத்தப்பட வேண்டிய கொடுகடன்கள்: ஒத்துக்கொள்ளப்பட்ட மீளளிப்புத் திகதி அல்லது காலப்பகுதியின் முடிவிலிருந்து 90 நாட்களுக்குள் மீளளிக்கப்படாத பட்சத்தில்.

(v) கொடுகடன் அட்டைகள்: மீளளிப்புத் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருக்கும் பட்சத்தில்.

3 (5)(II) சாத்தியமான இடர்நேர்வு அடிப்படையில்

பணிப்புரை 3(5)(I) இல் நிர்ணயிக்கப்பட்ட செயற்படா கொடுகடன்கள் வகைப்படுத்தலுக்கான தேவைப்பாடுகட்கு மேலதிகமாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் மீளளிப்பு இயலுமை பாதிக்கப்பட்டு, உடன்பாடுகளுக்கு அமைவாக முழு மீளளிப்பு என்பது சந்தேகத்திற்கு இடமாகும் போது, வங்கிகள் செயற்படு கொடுகடன்களை செயற்படா கொடுகடன்களாக வகைப்படுத்தலாம்.

3 (6) நிதி அசைவுகள் அல்லது காசுத் தலையீட்டுடன் கடன்படுநர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு கொடுகடன்களும் புதிய கொடுகடன்கள் எனப்படும். செலுத்தப்படாத முதல் அல்லது செலுத்தப்படாத வட்டி என்பவற்றை நிவர்த்தி செய்வதற்காக வழங்கப்படும் கடன்கள் மற்றும் தவணைக் கடன்களாக மாற்றப்படும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பன புதிய கொடுகடன்களாக கருதப்படமாட்டாது.

கொடுகடன்களில் வகைப்படுத்தல்

4 (1) செயற்படு மற்றும் செயற்படா கொடுகடன்களின் வகைப்படுத்தல்:

மேலுள்ள பணிப்புரை 3(4) மற்றும் 3(5) ஆகியவற்றில் விதந்துரைக்கப்பட்டபடி, ஒரு கடன்படுநருக்கு வழங்கப்படும் எல்லாவிதமான கொடுகடன்களையும் கண்காணிப்பு மற்றும் இடர் நிவர்த்தி நோக்கங்களுக்காக (அ) செயற்படு கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ஆ) செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகிய இரு வகைகளாக வகைப்படுத்தலாம்.

4 (2) விலக்களிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள்:

மேற்கூறப்பட்ட பணிப்புரை (4)(1) இன் கீழ் கொடுகடன்களை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தும் போது பண வைப்புக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கொடுகடன்கள் விதிவிலக்காகும். இந்த விதிவிலக்கை இயலுமைப்படுத்தும் நோக்கத்திற்காக வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) கடன்படுநர் முறிவடையும் போது அல்லது கடனை மீளச் செலுத்த இயலாதவராகின்ற போது அல்லது மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் வங்கியானது பண வைப்புக்களை தன்னுடைமை ஆக்குவதற்கான சட்ட ரீதியான உரிமையுடையதாக இருக்க வேண்டும்.

(ii) பணத்தினை ஆதாரமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் சகல ஆவணங்களும் எல்லாத் தரப்பினரையும் பிணைப்பதோடு, இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும். வங்கிக்குரியது எனக் கோரும் வங்கிக்குச் சார்பான மற்றும் முறையாக கையெழுத்திட்ட இறுப்பு கடிதத்தினையும் வங்கி கொண்டிருக்க வேண்டும்.

(iii) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக மாற்றப்பட்டிருக்க வேண்டிய திகதியில் அவ்வாறு செய்யப்படாதவிடத்து அத்திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கிடையில் கொடுகடன்களுக்கு எதிரான வைப்புக்கள் இறுப்பளிக்கப்படலாம்.

(iv) மேலுள்ள பணிப்புரை 4(2)(iii) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய தொகை வைப்பினைவிடக் கூடுதலாக இருக்குமிடத்து, அக் கூடுதல் தொகை செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்படும்.

4 (3) மேலுள்ள பணிப்புரை 4(2) இனால் அனுமதியளிக்கப்பட்டிருந்தாலொழிய பிணையங்கள் அல்லது கடன்படுனர்/ பிணையாளர்களின் தேறிய பெறுமதி பணிப்பரை 3(5)இன் பிரயோகத்தின் போது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4 (4) மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் வகைப்படுத்தல்:

கொடுகடன்கள் நிலுவையாக உள்ள காலப்பகுதியின் சராசரி மீளமைப்புக்கு முன்னர் அல்லது பின்னர் பணிப்புரை 3(5)இல் விதந்துரைக்கப்பட்ட தொடர்புடைய கொடுகடன்களிற்கான காலப்பகுதிகளை விடக் கூடுதலாகக் காணப்படுமிடத்தில், கொடுகடனானது செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்படுவதற்கு முன்பு மீளஅட்டவணைப்படுத்தல் இடம்பெறுமானால் அத்தகைய மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படும். பணிப்புரை 4(6)இல் வேண்டப்படும் வகைப்படுத்தல்கள் மற்றும் பணிப்புரை 3(5)இன் வரைபுகளுக்கமைய செலுத்தப்பட வேண்டிய முதல் மற்றும் வட்டி கொண்டு உருவாக்கப்பட்ட கொடுகடன்களை செயற்படாக் கடன்களாக வங்கிகள் வகைப்படுத்தலாம்.

4 (5) ஒரு தனிப்பட்ட கடன்பெறுநருக்கு வழங்கப்பட்ட பல்வேறுபட்ட கொடுகடன்களின் வகைப்படுத்தல்.

(i) பணிப்புரை 3(5)இற்கு அமைய ஒரு கடன்பெறுநருடைய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டால் அக் கடன்பெறுநருக்கான சகல கொடுகடன்களும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படும். மேலும், கடன்பெறுநரின் சராசரிக் கொடுகடன் மீதி மொத்தக் கொடுகடன் மீதியின் 30 சதவீதத்திலும் கூடுதலாக இருப்பின் அக் கடன்பெறுநரின் சகல கொடுகடன்களையும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தலாம். 2009 சனவரி 01ஆம் திகதியிலிருந்து இந்தப் பணிப்புரையைப் பின்பற்றுமாறு வங்கிகள் கோரப்படுகின்றன.

(ii) மேலுள்ள பணிப்புரை 4(5)(i)இல் விதந்துரைக்கப்பட்ட அபாய எல்லைச் சதவீதக் கணிப்பீட்டிற்கு, பகுதியாக அல்லது முழுமையாக வட்டித் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்ட பெறவேண்டிய வட்டி எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

4 (6) செயற்படாக் கடன் வசதிகளின் வகைப்படுத்தல்:

மேலுள்ள பணிப்புரை 3(5) மற்றும் 4(5) என்பற்றிற்கிணங்க, (அ) கொடுகடன்களானவை செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி (ஆ) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர் என்பவற்றின் அடிப்படையில் கீழ்க்குறித்தவாறு நான்கு வகைகளாக வங்கிகள் செயற்படாக் கடன்களை வகைப்படுத்தலாம். எனினும், பணிப்புரை 4(5) இற்கமைய, ஒரு தனிப்பட்ட கடன்பெறுநருக்கு வழங்கப்பட்ட பல்வேறு கொடுகடன்கள் கீழுள்ளவாறு வகைப்படுத்தப்படும்.

(i) பணிப்புரை 3(5) இற்கமைவாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் பணிப்புரைகள் 4(6)(i) இலிருந்து 4(6)(iv) ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும்.

(ii) கடன்பெறுநருடைய ஏனைய கொடுகடன்கள் ஆரம்பத்தில் "விசேட கவனிப்பு" வகைக்கு வகைப்படுத்தப்படலாம். கொடுகடன்களுக்கு தொடர்ந்து வரும் வகைப்படுத்தல்கள் பணிப்புரைகள் 4(6)(i) இலிருந்து 4(6)(iv) ஆகியவற்றின்படி இருக்கும்.

4 (6) (I) "விசேட கவனிப்பு" கொடுகடன்கள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் | தொடர்ச்சியான காலப்பகுதியான 90 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலான ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையை விஞ்சிய ஆனால் 180 நாட்களுக்குக் குறைவானவை |
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 3 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 6 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்பு திகதியிலிருந்து, 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 120 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்பு திகதியிலிருந்து 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 180 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

4 (6) (II) "குறைந்ததர" கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் | தொடர்ச்சியான காலப்பகுதியான 180 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலான ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையை விஞ்சிய ஆனால் 360 நாட்களுக்குக் குறைவானவை |
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 6 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 12 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்பு திகதியிலிருந்து, 120 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 180 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்பு திகதியிலிருந்து 180 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 360 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

(ii) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வு

போதுமையற்ற பிணையங்கள், கடன்படுநருடைய பாதகமான நிலைமை நிதி அல்லது திருப்தியற்ற கடன்சேவைப் பதிவுகள் என்பவற்றினால் ஏற்படக்கூடிய சாதாரண இடரிலும் கூடிய நட்டம், ஏனைய

பிறகாரணிகளின் தாக்கத்தால் கடன்பெறுநர் தற்போதைய மீளளிப்பு உடன்பாடுகளுக்கமைவாக கடனை மீளளிக்கும் இயலுமை மீதான சந்தேகம் அதிகரித்தல் மற்றும் கடனை பகுதியாகவோ முழுமையாகவோ மீளளிப்பதில் கடன்பெறுநர் ஏற்படுத்துகின்ற நிச்சயமற்றதன்மை ஆகிய சந்தர்ப்பங்கள்.

4 (6) (III) சந்தேகத்திற்குரிய கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் | தொடர்ச்சியான காலப்பகுதியான 360 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலான ஒப்புதலளிக்கப்பட்ட வரையறையை விஞ்சிய ஆனால் 540 நாட்களுக்குக் குறைவானவை |
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 12 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 18 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்பு திகதியிலிருந்து, 180 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 240 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்பு திகதியிலிருந்து 360 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 540 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

(ii) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வுகள்

பகுதியளவில் செலுத்தத் தவறுவதனால் அல்லது முழுமையான சேகரிப்பு நிகழ்வதற்கரிதாக இருக்கின்றமையின் மூலமான உயர் இடர்நேர்வு எங்கு காணப்படுகின்றதோ அங்கு செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வு உயர்வாக இருக்கும்.

4 (6) (IV) நட்டக் கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| வங்கி மேலதிகப்பற்றுக்கள் | தொடர்ச்சியான காலப்பகுதியான 540 நாட்களுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட காலப்பகுதியை விஞ்சிய அல்லது கூடுதலானவை |
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 18 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு கூடுதலானவை செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | 240 நாட்களுக்கு அல்லது அதற்கும் கூடுதலாக மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | கொடுப்பனவும் 540 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிலுவையில் இருப்பது |

(ii) கொடுகடன் வசதிகளுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வு:

பின்வரும் சூழ்நிலைகளில் காணப்படுவது போல் கடன்படுநரால் பெரும்பாலும் கடன் மீளச் செலுத்தப்படமாட்டாதென்ற சந்தர்ப்பங்கள் உருவாகும் போது:

(அ) வாடிக்கையாளர் நிதி நிலைமை நலிந்து இருப்பது அல்லது வாடிக்கையாளர் வருமானம் ஈட்டக்கூடிய இயலுமை மிகக் குறைவாகக் காணப்படுவது போன்றன வாடிக்கையாளர் கடனை மீளச் செலுத்தமாட்டார் என்பதை அடையாளம் காட்டுகின்றன.

(ஆ) வாடிக்கையாளருடைய வியாபாரம் நிச்சயமற்றதாக மாறிவிடுதல் அல்லது வாடிக்கையாளர் கடன்பெற்ற நோக்கத்தினை விடுத்து வேறு நோக்கங்களில் நிதியைப் பயன்படுத்தல்.

(இ) வாடிக்கையாளர் நோய்வாய்படுவதுடன் கடனை மீளளிப்பதற்கு எந்தவிதமான சொத்துக்களுமற்ற நிலை.

(ஈ) வாடிக்கையாளர் தனது வியாபாரத்தை நிறுத்திவிடுதல் அல்லது கலைத்துவிடுதல் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோரின் கடன்தொகை வாடிக்கையாளரது மொத்தச் சொத்துக்களின் பெறுமதியை விட கூடுதலாக இருக்கும் போது ஏனைய கடன் கொடுத்தோர் வாடிக்கையாளரின் சொத்துக்கள் மீது முன்னுரிமை உரித்து கொண்டு இருத்தல்

(உ) வாடிக்கையாளருடைய வியாபாரம் ஒடுக்கிவிடும் நிலையின் கீழ் இருக்கிறது.

(ஊ) வங்கியானது வாடிக்கையாளருக்கு எதிராக வியாபார முறிவு வழக்கைப் பதிவு செய்துவிட்டநிலை அல்லது இது போல் வழக்கிட்ட ஏனைய கடன்கொடுத்தோர்களுடன் சேர்ந்து ஆதனப் பங்கெடுப்பிற்கு விண்ணப்பித்ததுடன், நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஏனைய பிரிவினருடன் கடனை மீளமைப்பு செய்ய உடன்பட்ட நிலை.

(எ) கடனாளிக்கு எதிராக வழக்கிட்ட ஏனைய கடன்கொடுத்தோருடன் சேர்ந்து வங்கியானது ஆதனப் பங்கெடுப்பிற்கு விண்ணப்பித்த நிலை

(ஏ) வங்கியானது கடனாளியைத் தொடர்புகொள்ள முடியாத அல்லது கண்டுபிடிக்க முடியாத நிலை

4 (7) கொடுகடன் வசதிகளின் மீளவகைப்படுத்தல்

4 (7) (I) செயற்படாக் கடன்களை செயற்படு கடன்களாக மீளவகைப்படுத்தல்

வகைப்படுத்தப்பட்ட செயற்படாக்கடன் தொடர்பில் செலுத்தப்பட வேண்டியிருந்த நிலுவையான வட்டியும் முதலும் செலுத்தப்படும் பட்சத்தில், வங்கிகள் செயற்படாக் கடன்களை செயற்படுகடன்களாக மீள்வகுதிப்படுத்த முடியும்.

4 (7) (II) மீளவகைப்படுத்த செயற்படாக் கடனை செயற்படுகடனாக மீளவகைப்படுத்தல்:

முதல் தவணைக் கட்டணம் அல்லது வட்டித்தொகை தொடர்பாக பின்வருமாறு வகையிடப்பட்ட விசேட காலப்பகுதிகளில் திருப்திகரமான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்களானவை, செயற்படுகடன்களாக தரமுயர்த்தப்படக்கூடிய தகுதி உடையனவாகும்.

| மீள அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்கள் | செயற்படுகடன்கள் முற்பணங்களுக்கான தரமுயர்த்தலுக்கு |
|---|---|
| சிறப்பு கவனிப்பு வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 90 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |
| இரண்டாந்தர மற்றும் சந்தேகத்திற்குரிய வகைகள் நட்டக் கொடுகடன் வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 180 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |
| நட்டக் கொடுகடன் வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 360 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |

மேற்குறித்த காலப்பகுதியின் பின்னர், மீளமைக்கப்பட்ட செயற்படாக் கடன்களின் வகைகளுக்கேற்ப, ஏற்கனவே செய்யப்பட்டிருந்த விசேட ஏற்பாடுகள் எதிரிடை (இல்லாமல்) செய்யப்படலாம்.

4 (8) புதிய கொடுகடன் வசதிகளை வழங்கல்

பணிப்புரை 4(6)இன் கீழ், புதிதாக உருவாக்கப்படும் கொடுகடன்கள் பழைய அதே வகையான செயற்படாக் கடன்களாக இருக்கும் பட்சத்திலன்றி, செயற்படாக் கடனை மீளிப்பு செய்வதற்காக அதே கடனாளியின் பெயரில் அல்லது ஏனைய குழுவினரின் பெயரில் புதிய கொடுகடன்களை வங்கிகள் வழங்கமுடியாது. பணிப்புரைகள் (4)(7)(I) மற்றும் பணிப்புரை (4)(7)(II) ஆகியவற்றிற்கமைவாக இவ்வகை செயற்படாக்கடன்களின் மீளவகைப்படுத்தல்கள் அமையும்.

செயற்படாக் கொடுகடன் வட்டியின் அங்கீகாரம்

5 (1) செயற்படாக்கடன் தொடர்பில் வட்டியானது காசு அடிப்படையில் வங்கியால் வசூலிக்கப்படும் போது அதனை வருமானமாக அங்கீகரித்து வங்கி தனது கணக்குகளில் காட்டலாம்.

5 (2) கொடுகடனானது செயற்படாக்கடனாக வகைப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து வசூலிக்கப்பட வேண்டிய அனைத்து வட்டித்தொகையையும் வங்கியானது நிச்சயமற்றதொன்றாகக் காட்டி, அவ்வகைப் பெறவேண்டிய வட்டியை வட்டித்தொங்கல் கணக்கில் செலவாகவும், பெறவேண்டிய வட்டிக் கணக்கில் வரவாகவும் பதிவு செய்ய வேண்டும்.

5 (3) பெறவேண்டிய வட்டியை செயற்படாத வங்கி மேலதிப்பற்று மற்றும் கடன அட்டை கணக்குகளில் வரவு வைத்தும், வட்டித் தொங்கல் கணக்கில் செலவு வைத்தும் காட்டும் தற்போதைய வழமையை வங்கிகள் தொடர்ந்தும் பின்பற்றலாம்.

5 (4) கொடுகடன்களை செயற்படாக் கொடுகடன்களாக வகைப்படுத்தும் போது வங்கியானது ஏற்கனவே வருமானமாகக் காட்டப்பட்ட பெறவேண்டிய வட்டியை எதிரிடை செய்து அச்செயற்படாக் கடனுக்குரிய வட்டித்தொங்கல் கணக்கில் செலவு வைக்கலாம். எதிரிடை செய்யப்பட வேண்டிய ஈட்டப்படாத வருமானம்

குறித்த நிதியாண்டின் முடிவின் பின்னர் அடையாளம் காணப்பட்டால், கொடுகடனானது எந்த ஆண்டில் செயற்படாக்கடனாக அடையாளப்படுத்தப்பட்டதோ அவ்வாண்டிற்குரியதாக கருத்திற்கொள்ளப்படும்.

கொடுகடன்களுக்கான ஒதுக்கங்கள்

6 (1) கடன் இடர்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் வங்கியானது (அ) பொது ஒதுக்கீடுகள் (ஆ) விசேட கொடுகடன்களுக்கான ஒதுக்கீடுகள் ஆகியவற்றைப் பேணலாம்.

6 (1) (I) பொது ஒதுக்கீடுகள்

வங்கிகள் பின்வரும் வழிமுறைகளில் பொது ஒதுக்கங்களைப் பேணலாம்.

(i) மேலுள்ள பணிப்புரை 3(4)இன்படி, ஐந்தொகையிலடங்கும் செயற்படுகடன்களின் மொத்தத் தொகை மற்றும் மேலுள்ள பணிப்புரை 4(6)(1)இன்படி ஐந்தொகையிலடங்கும் விசேட கவனிப்பு கொடுகடன்களின் மொத்தத் தொகை ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய கணக்குகளின் தேறிய வட்டித்தொங்கல் தொகை நீக்கப்பட்டு வரும் தொகையின் ஒரு சதவீதம்.

(ii) மேலுள்ள பணிப்புரை 6(1)(I)(i)இல் விதந்துரைக்கப்பட்டபடி, வங்கிகள் மொத்தக் கொடுகடன்களின் 0.7 சதவீதத்தை 30.06.2008 அளவில் பொது ஏற்பாடாக வைத்திருப்பதுடன், இதன்பின்னர், 31.03.2009 வரையான ஒவ்வொரு காலாண்டுக்கும் 0.1 சதவீத அதிகரிப்பு ஏற்பாட்டையும் மேற்கொள்ள வேண்டும். இந்தவகையில், வங்கிகள் 31.03.2009 இலும் காலம் தாழ்த்தாது மொத்தத் தேவைப்பாடாகிய ஒரு சதவீதத்தை அடைய வேண்டும்.

(iii) காசு வைப்புக்கள், தங்கம் மற்றும் அதே வங்கியுடனான அரச பிணையங்கள் என்பனவற்றினால் ஆதாரப்படுத்தப்பட்டு பாதுகாப்பளிக்கப்படும் கொடுகடன்களின் பொது ஒதுக்கீடுகள் தொடர்பில் வங்கிகள் விலக்களிப்பதற்கு ஏற்புடையவை. இந்த விலக்களிப்பை அனுபவிப்பதற்கு வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடன்பெறுநர் கடனைச் செலுத்தத்தவறும் பட்சத்தில் அல்லது இயலாத பட்சத்தில் அல்லது முறிவடையும் பட்சத்தில் வங்கியானது இந்த வகையான பிணையங்களை சட்ட ரீதியாகத் தனதுடமையாக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இந்த வகையான பிணையங்களினைப் பின்னிறுத்திய பரிமாற்றங்களின் சகல ஆவணங்களும் எல்லாத் தரப்பினரையும் பிணைப்பதோடு, இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்களில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும்.

6 (1) (II) விசேட ஒதுக்கீடுகள்

கொடுகடன்களில் வட்டிகள் வரவு வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமயங்களில், இடைநிறுத்தப்பட்ட வட்டி மற்றும் பணிப்புரை 7(1)இல் விதந்துரைக்கப்பட்டவாறு பிணையங்களின் தேறிய மெய்ப்பெறுமதி என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு, பணிப்புரை 4(6) இன்படி வகைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் மொத்தத் தொகைக்கு வங்கிகள் விசேட ஒதுக்கீடுகளைப் பின்வருமாறு பேணவேண்டும்.

| செயற்படாக் கொடுகடன் வசதிகளின் வகை | மிகக் குறைந்த விசேட ஒதுக்கீட்டுத் தேவைப்பாடு |
|---|---|
| குறைந்ததர வகை: கடனட்டை | 25 சதவீதம் |
| ஏனையவை | 20 சதவீதம் |
| சந்தேகக் கடன் வகை | 50 சதவீதம் |
| நட்டக் கடன் வகை | 100 சதவீதம் |

6 (2) பணிப்புரை 4(8)இன் அதிகார எல்லைக்குள் உள்ளடங்கும் எந்தவொரு கொடுகடன் தொடர்பிலும் வங்கியானது பின்வருமாறு விசேட ஒதுக்கீடுகளைப் பேணவேண்டும்.

(i) கொடுகடன்தொகையின் முதல்பகுதி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, செயற்படாக்கடன் மீளச்செலுத்தப்படும் வேளையில், பணிப்புரை 6(1)(II)இன் கீழ் பேணப்படுமாறு வேண்டப்பட்ட ஒதுக்கீடுகளை குறைவின்றி பேணப்படவேண்டும்.

(ii) கொடுகடனின் வட்டிப்பகுதி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, கொடுகடன் தொகையின் 100 சதவீதம் ஒதுக்கீடுகள் பேணப்படுதல் வேண்டும்.

(iii) கொடுகடனில் முதல் மற்றும் வட்டி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, (உ-ம்: வங்கி மேலதிகப்பற்று போன்ற சமயங்களில்) பணிப்புரைகள் 6(2)(i) மற்றும் 6(2)(ii) இற்குஅமைய வட்டிக்கும் முதலுக்குமான ஒதுக்கீடுகள் பேணப்படுதல் வேண்டும்.

பிணையங்களின் மதிப்பீடு

7 (1) ஒதுக்கீட்டு நோக்கங்களுக்கான பிணையங்களின் விலைமதிப்பு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

7 (1) (I) அசையா ஆதனத்துக்கான முதனிலை ஈடு

(i) தற்போதைய விலைமதிப்பு அறிக்கையின்படியான அசையா ஆதனத்தின் திணிப்பு விற்பனைப் பெறுமதியின் மீதான செயற்பாட்டு கழிவிடலை அடிப்படையாகக் கொண்ட பிணையப் பெறுமதி பின்வரும் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(ii) படிமுறையான கழிவிடல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

| உருப்படி | பிணையப்பெறுமதியாகக் கருதப்படும் அசையா ஆதனத்தின் தணிப்பு விற்பனைப் பெறுமதியின் சதவீதம் | |
|---|---|---|
| | வரையறையற்ற சொத்து | குத்தகைச் சொத்து |
| முதல் தடவையாக ஒதுக்கம் செய்யப்படும் போது நட்டக் காலப்பகுதியில் | 75 | 60 |
| 12 மாதங்களிலும் குறைவு | 75 | 60 |
| 12 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 50 |
| 24 மாதங்களிலும் குறைவாகவும் | 60 | |
| 24 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 40 |
| 36 மாதங்களிலும் குறைவாகவும் | 50 | |
| 36 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 30 |
| 48 மாதங்களிலும் குறைவாகவும் | 40 | |
| 48 மாதங்களிலும் அதிகம் | ஆதனமானது கிரமமாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன், வங்கி முகாமைத்துவம் தன் உசிதப்படி மேலதிக கழிவிடப்படுதலையும் ஏற்படுத்த வேண்டும் | இல்லை |

(iii) தற்போதைய வெளியிலுள்ள தொழில் நிபுணத்துவ விலைமதிப்பீட்டு அறிக்கை:

விலைமதிப்பு அறிக்கை பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடனுடைய முதல்தொகை ரூ.5,000,000 இற்கு சமனாக அல்லது கூடுதலாக அல்லது வங்கியினுடைய மூலதனத்தனத்தில் 0.1 சதவீதத்திலும் கூடுதலாக இருக்கும்போது, மேலிரண்டு சந்தர்ப்பங்களில் எது குறைவானதாக இருக்கின்றதோ அச்சந்தர்ப்பத்தில் வங்கியானது கொடுகடன்/கள் தொடர்பில் தற்போதைய வெளியக தொழில் நிபுணத்துவ விலைமதிப்பு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூலதனப் போதுமை வீதக் கணிப்பீட்டிற்காக வங்கியின் வெளியக கணக்காய்வாளரினால் சிபார்சு செய்யப்பட்ட மூலதனத்தளமே இங்கு குறிப்பிடப்படும் மூலதனத் தளமுமாகும்.

(ஆ) இவ்வகை அறிக்கைகள் வெளியிலுள்ள சுயாதீன விலைமதிப்பாளருடையதாக இருத்தல் வேண்டும்.

ஒரு வெளியிலுள்ள சுயாதீன விலைமதிப்பாளர் பின்வருமாறு காணப்படலாம்.

(அஅ) ஒரு பட்டய விலைமதிப்பீட்டு அளவையாளர்; அல்லது

(அஆ) 5 வருட அனுபவத்தினையுடைய இலங்கை விலைமதிப்பீட்டாளர் நிறுவகத்தின் ஒரு அங்கத்தவர்.

(அஇ) 10 வருட அனுபவத்துடன் கூடிய இலங்கை விலை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினர்

(அஈ) 20 வருட அனுபவத்துடன் கூடிய இலங்கை விலை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் ஒரு இணை உறுப்பினர்

(இ) விலைமதிப்பீட்டு அறிக்கையின் காலப்பகுதி பின்வருமாறு இருக்கும்.

(அஅ) கடன்பெறுநரினால் வாழ்வுசார் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் வதியும் ஆதனத்திற்கு எதிராக வழங்கப்படும் கொடுகடன்கள் தொடர்பாக: நான்கு வருடங்களுக்கும் குறைந்த அறிக்கையாக இருத்தல் வேண்டும்.

(அஆ) ஏனைய சகல நோக்கங்களுக்காகவும் வழங்கப்படும் கொடுகடன்கள் தொடர்பாக: 3 வருடங்களுக்கும் குறைந்த அறிக்கையாக இருத்தல் வேண்டும்.

(iv) தற்போதைய உள்ளக விலைமதிப்பீட்டு அறிக்கை

விலைமதிப்பீட்டு அறிக்கை பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(அ) கடனுடைய முதல்தொகை ரூ.5,000,000 இற்கும் குறைவானதாக அல்லது வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 0.1 சதவீதம் இற்குக் குறைவானதாக இருக்கின்ற போது இரண்டில் எது குறைவாக இருக்கின்றதோ அப்போது வங்கியானது கொடுகடன்/ கள் தொடர்பில் தற்போதைய உள்ளக விலைமதிப்பு அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) கடன் தீர்மானங்களில் சம்பந்தப்படாத ஒரு சுயாதீன அதிகாரியினால் கொடுகடன்களுக்காக ஈட்டிலிருக்கும் ஆதனங்களின் தற்போதைய விலைமதிப்பு தொடர்பான உள்ளக மதிப்பீடு செய்யப்படுவதுடன் அது வங்கியினுடைய ஒரு சிரேஷ்ட அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

(இ) ஒரு தற்போதைய உள்ளக மதிப்பீட்டு அறிக்கை என்பது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியில் செய்யப்பட்ட மதிப்பீடு என வரைவிலக்கணப்படுத்தப்படும்.

7(1)(II) முதன்மை ஈடு தவிர்ந்த ஏனைய ஈடுகள்

மேலுள்ள பணிப்புரை 7(1)(I)இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்குமுகமாக, அதே வங்கியில் ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின், முதன்மை ஈடல்லாத அசையா ஆதனம் மீதான ஈடுகள் மேற்படி நோக்கத்திற்கான தகுதியை உடையனவாகும்.

7(1)(III) ஈடு வைப்பதற்கான பொறுப்பைக் கொண்ட ஆதனத்தின் உறுதி வைப்பு. ஆதன ஈடானது வங்கிக்கு சார்பானதாக மாற்றிக் கொள்ளப்படும் வரையில் எந்தவொரு பெறுமதியும் கொடுக்கப்படலாகாது.

7(1)(IV) ஆயுட் காப்புறுதிப் பூட்கை மீதான ஒப்படை

காப்புறுதி செய்பவரால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட சரண் பெறுமதி கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டியதோடு, அச்சரண் பெறுமதியின் 90 சதவீதம் அப்பிணையத்தின் பெறுமதியாகக் கொள்ளப்படும். மேலும், முறைமையாக பதிவு செய்யப்பட்ட வங்கிக்குச் சார்பான ஒப்படையும் இருத்தல் வேண்டும்.

7(1)(V) தங்கப் பிணையம்

போதுமான காப்புறுதிக் கவசம் கொண்ட தங்கத்தினுடைய சந்தைப் பெறுமதி

7(1)(VI) பங்குகளின் ஒப்படை

(i) நிரற்படுத்தப்பட்டது.

(அ) சமீப சந்தைப் பெறுமதியின் 90 சதவீதம்

(ஆ) கணக்காய்வாளரின் சான்றுடன் கூடிய பங்குப் பெறுமதி கிடைப்பனவாக இருக்கின்றபோது, விற்பனை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பின் (தற்காலிக நிறுத்தம் அல்லாது) சமீபகால கணக்காய்வு நிதிக்கூற்றுக்களின்படியான (18 மாதங்களிலும் கூடுதல் அல்லாத) தேறிய பணமாக மாற்றிடக்கூடிய கட்புலனாகும் சொத்துக்களின் பெறுமதி பாவிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும். விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் போது, பொருத்தமான நிதிக்கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்கள் இல்லாதவிடத்து எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

(ii) நிரற்படுத்தப்படாதது

வழங்கப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய பங்குகளின் பெறுமதி தரப்படலாம். பொருத்தமான பெறுமதி கம்பனியினுடைய கணக்காய்வாளர்களினால் சாட்சிப்படுத்தப்பட்ட பங்கொன்றிற்கான தேறிய கட்புலனாகும் சொத்தின் 75 சதவீத அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

7(1)(VII) பொறித்தொகுதி, பொறி மற்றும் கருவிகள் மீதான ஈடு

வெளியக விலைமதிப்பீட்டு அறிக்கையின் படியான பெறுமதி, அல்லது மேற்படி அறிக்கை இல்லாதவிடத்து, கொள்வனவுத் திகதி மற்றும் கொள்வனவு விலை என்பன எடுத்துக் கொள்ளப்பட்டு, 20 சதவீத நேர்கோட்டு முறையிலான பெறுமானத்தேய்வு கருத்திலெடுக்கப்பட்டுத் தேறிய ஏட்டுப் பெறுமதி கணிப்பிடப்படும்.

7(1)(VIII) மோட்டார் வாகனங்கள் மீதான ஈடு

வெளியக விலைமதிப்பு அறிக்கையின்படியான பெறுமதி, அல்லது மேற்படி அறிக்கை இல்லாதவிடத்து, மூலப் பதிவுத் திகதி மற்றும் அத்திகதியில் கொள்வனவு விலை என்பன எடுத்துக் கொள்ளப்பட்டு, 25 சதவீத நேர்கோட்டு முறையிலான பெறுமானத்தேய்வு கருத்திலெடுக்கப்பட்டுத் தேறிய புத்தகப் பெறுமதி கணிப்பிடப்படும்.

7(1)(IX) வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்புக்கள்/ பொருட்கள் மீதான அடமானம்

ஒவ்வொரு வகை அடிப்படையிலும் சந்தைப்பெறுமானத்தின் 50 சதவீதம் கொண்டு தீர்மானிக்கப்படும்.

7(1)(X) விற்பனையிற் சரக்கு மீதான அடமானம்

வங்கியால் உன்னிப்பாக விற்பனையிற் சரக்குமட்டம் கண்காணிக்கப்பட்டுக் கொடுக்கப்படும் சரக்கின் தற்போதைய பெறுமதியின் 30 சதவீதம்

7(1)(XI) குறிப்பீடு செய்யப்பட்ட தொகுதிக்கடன்கள்

(i) சமீப சந்தைப் பெறுமதியின் 90 சதவீதம்

(ii) கணக்காய்வாளரின் சான்றுடன் கூடிய பங்குப் பெறுமதி கிடைப்பனவாக இருக்கின்றபோது, விற்பனை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பின் (தற்காலிக நிறுத்தம் அல்லாது) சமீபகால கணக்காய்வு நிதிக்கூற்றுக்களின்படியான (18 மாதங்களிலும் கூடுதல் அல்லத) தேறிய பணமாக மாற்றிடக்கூடிய கட்புலனாகும் சொத்துக்களின் பெறுமதி பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் போது, பொருத்தமான நிதிக்கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்கள் இல்லாதவிடத்து எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

7(1)(XII) உத்தரவாதங்கள்

(i) அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் - இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ ஸ்தாபிக்கப்பட்டவை

மூலதனப் போதுமை விகிதம் (பாசல் II) பேணுதல் தொடர்பாக வெளியிடப்பட்ட பணிப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இயலுமையான கடன் தரப்படுத்தல் முகவரின் தரப்படுத்தல் அடிப்படையில் பின்வருமாறு பிணையின் இயலுமைப் பெறுமதி பெறுமதியிடப்படும்.

| வங்கியினுடைய கடன் தரப்படுத்தல் | பிணையத்தின் பெறுமதி |
|---|---|
| அஅஅ இலிருந்து அஅ- அல்லது சமனானது வரை | 80 சதவீதம் |
| அ + இலிருந்து அ - அல்லது சமனானது வரை | 50 சதவீதம் |

(ii) அரச உத்தரவாதம்

முழுப்பெறுமதி

7(1)(XIII) பிணைய ஏனைய வகைகள்

ஒவ்வொரு வகை அடிப்படையிலான வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டவை

செயற்படாக் கடன்களின் பதிவழிப்பு/ பதிவிறக்க வசதிகள்

8(1) விளக்கமான கையாளுகை வழிமுறை, அதிகாரம், கவனமின்மை மற்றும் தவறான பின்பற்றுதலுக்கான பொறுப்புகள், கணக்காய்வு மற்றும் சுயாதீன மீளாய்வு, தொடர்ச்சியான கண்காணிப்பு, அறிக்கையிடல், என்பனவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையினால் நன்கு வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட பதிவளிப்பு/ பதிவிறக்கக் கொள்கையை, இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட வங்கிகள் கொண்டிருக்க வேண்டும். பிணையங்கள், உத்தரவாதங்கள் என்பனவற்றின் மீது வலியுறுத்தி அதிகூடிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளுவதனை இக்கொள்கை இலக்காகக் கொண்டிருக்கும்.

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் தங்கள் தலைமைச் செயலகத்திடமிருந்தான பதிவளிப்பு/ பதிவிறக்க கொள்கையை முறையாகப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

செயற்படாக் கடன் வசதிகளின் பிரிப்பு

9(1) உன்னிப்பான கண்காணிப்பையும் மீள்பெறுகைகளையும இலகுபடுத்தும் முகமாக வங்கியானது சகல கொடுகடன்களையும் அ) வகைப்படுத்தப்பட்ட செயற்படாக்கடன்கள் ஆ) மீளமைக்கப்பட்ட கடன்கள் இ) பதிவளிப்பு/ பதிவிறக்கப்பட்ட கடன்கள் என்றவாறாகப் பிரித்து நடவடிக்கைப்படுத்தலாம்.

அறிக்கையிடல் தேவைகள்

10(1) பின்னிணைப்பாக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் அறிக்கையிடல் மாதிரி ஆகியவற்றிற்கேற்ப, மாதாந்தம், வங்கிகளானவை கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட காலப்பகுதிகள் தரவுகளின் பதிலிடல் அக்காலப்பகுதியின் அடுத்த மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**முன்னர் வெளியிடப்பட்ட பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் இரத்து**

11(1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) திருத்தியமைக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டம், பிரிவு 46அ இன் கீழ் வெளியிடப்பட்ட, 1997, ஓகத்து 22ஆம் திகதியிடப்பட்ட செயற்படாக்கடன்கள் வட்டி, ஒதுக்கு நோக்கத்திற்கான அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் முற்பணங்களின் வகையிடுதல் (அட்டவணை I) மற்றும் ஒதுக்கீட்டு நோக்கத்திற்கான பிணையங்களின் விலைமதிப்பு (அட்டவணை II) மீதான மேற்பார்வைப் பணிப்புரைகள்.

(ii) மேலுள்ள பணிப்புரை 11(1)(i)இன் திருத்தியமைக்கப்பட்ட 2003 ஓகத்து 15ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை

(iii) 2004 யூலை 13ஆம் திகதியிடப்பட்ட விலைமதிப்பீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரமாணம் தொடர்பான சுற்றறிக்கை

(iv) 2004 செத்தெம்பர் 8ஆம் திகதியிடப்பட்ட, ஒதுக்கு நோக்கங்களுக்கான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் முற்பணங்களின் வகைப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை (நீண்டகால மற்றும் நடுத்தர நிகழ்ச்சித்திட்டக் கடன்களின் வகைப்படுத்தல்)

(v) 2004, திசெம்பர் 15ஆம் திகதியிடப்பட்ட ஒதுக்கு நோக்கங்களுக்கான பிணையங்களின் விலைமதிப்பு தொடர்பான தற்போதைய தொழில் ரீதியான விலைமதிப்பு அறிக்கை பெறுதல் தேவைப்பாடு தொடர்பான பணிப்புரை 11(1)(i) இன் திருத்தம்

(vi) 2006 மாச்சு 29ஆம் திகதியிடப்பட்ட ஈட்டப்படாத வருமானத்தின் எதிரீடு மற்றும் முற்பணங்களைச் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை

(vii) 2006, திசெம்பர் 6ஆம் திகதியிடப்பட்ட முற்பணங்களுக்கான பொது ஒதுக்கீடு பேணுதல் தேவைப்பாடு தொடர்பான பணிப்புரை

இணைப்பு

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்
## 2008இன் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை
## கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகாரம் என்பனவற்றின் பகுப்பாய்வும் ஒதுக்கங்களின் அறிக்கையிடல் படிவமும்

வங்கியின் பெயர் : தொகை ‘000

திதி/மாமா/ஆஆஆஆ இல் உள்ளவாறு

| கொடுகடன் வசதிகள் | கடன்கள் முற்பணங்களின் செயலாற்றம் | செயற்படாக்கடன்களின் வகைப்படுத்தல் | | | | செயற்படாக் கடன்களின் மொத்தம் | மொத்த கடன் வசதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது | குறைந்த தரம் | ஐயத்திற் குரியது | இழக்கப்படக் கூடியது | | |
| **ஐந்தொகையிலடங்கும் கொடுகடன் வசதிகள்** | | | | | | | |
| கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள் | | | | | | | |
| இறக்குமதி உண்டியல் | | | | | | | |
| ஏற்றுமதி உண்டியல் | | | | | | | |
| மேலதிக பற்றுக்கள் | | | | | | | |
| கொடுகடன் அட்டை | | | | | | | |
| குறுங்காலக் கடன்கள் | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலக் கடன்கள் | | | | | | | |
| வீடமைப்புக் கடன்கள் | | | | | | | |
| அலுவலர்க்கான கடன்கள் | | | | | | | |
| மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் | | | | | | | |
| குத்தகை வாடகைகள் (தேறிய) | | | | | | | |
| படுகடன் பிணையங்களுக்கெதிரான கடன்கள் | | | | | | | |
| அடகு முற்பணம் | | | | | | | |
| வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்கள் | | | | | | | |
| மற்றைய கடன் வெளிப்படுத்துகைகள் | | | | | | | |
| பெறத்தக்க வட்டி | | | | | | | |
| **கடன் மற்றும் முற்பணங்கள் (மொத்தம்)** | | | | | | | |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி (-) | | | | | | | |
| சிறப்பு ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| பொது ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | | | | | | | |
| பிணையத்தின் பெறுமதி | | | | | | | |
| **ஐந்தொகைக்கு புறம்பான கடன் வசதிகள்** | | | | | | | |
| உத்தரவாதங்கள் | | | | | | | |
| முறிகள் | | | | | | | |
| நாணயக் கடிதம் | | | | | | | |
| ஏற்றுக்கொள்ளல்கள் | | | | | | | |
| பெறத்தக்க வட்டி | | | | | | | |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மொத்தம்)** | | | | | | | |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி (-) | | | | | | | |
| சிறப்பு ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| பொது ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய)** | | | | | | | |
| பிணைய கொடுகடனின் பெறுமதி | | | | | | | |

உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிற்குமான கூற்றுக்கள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், பிரிவின் 76ஜே(i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 மே 08

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 46அ ஆகியவற்றினால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக, நாணயச் சபையினால் வெளியிடப்படும் பணிப்புரைகள் பின்வருமாறு:

எடுத்துக்காட்டு

1 (1) இப்பணிப்புரைகள் 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம். இப்பணிப்புரைகளால் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள், 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலுள்ளவை போன்று இருக்கும்

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 46அ என்பவற்றின் கீழான அதிகாரமளிப்பு

2 (1) வங்கித்தொழிலின் உறுதித்தன்மையை நிலைப்படுத்தும் முகமாகவும், வங்கித்தொழில் எந்தவொரு விடயத்தின் கையாளுகை தொடர்பாகவும் பணிப்புரைகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்த வங்கிகளுக்கு வழங்குவதற்கு நாணயச் சபைக்கு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2 (2) அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் சம்பந்தமாக அனுமதியளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பொது மற்றும் விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்கு நாணயச் சபைக்கு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46அ இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

வரைவிலக்கணம்

3 (1) இந்தப் பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் பிரயோகிக்கப்படலாம்.

3 (2) ஐந்தொகையிலடங்கும் கடன் கொடுப்பனவுகள் மற்றும் ஐந்தொகைக்குப் புறம்பான கடன் கொடுப்பனவுகள் என்பனவற்றைக் கொண்ட மொத்தக்கடன் கொடுப்பனவுகள் பின்வருமாறு குறிப்பிடப்படும்.

3 (2) (I) ஐந்தொகையிலடங்கும் கொடுகடன் வசதிகள்:

ஐந்தொகை கொடுகடன் வசதிகள் என்பது மேலதிகப் பற்றுக்கள், தவணைக் கடன்கள், தடுத்து வைக்கப்பட்ட கடன்கள், பொதியிடல் கொடுகடன்கள், உறுதியளிக்கப்பட்ட கடன்கள், சுழலும் கடன்கள், உண்டியல் நிதியிடல், கழிவிடல் வசதிகள், தவணைக் கொள்வனவுக் கடன்கள், குத்தகைக்கு விடும் வசதிகள், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள், அடகு முற்பணங்கள், கொடுகடன் அட்டை வசதிகள், நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள், துணைநில் கொடுகடன் வசதிகளின் கீழ் படுகடன் சாதனங்களுக்கான கடன் வழங்கல் மற்றும் இதையொத்த ஏனைய சாதனங்கள்; என்பனவற்றைக் குறிப்பதாகும்.

3 (2) (II) ஐந்தொகைக்குப் புறம்பான கொடுகடன் வசதிகள்:

ஐந்தொகைக்கு வெளியிலான கொடுகடன் வசதிகள் என்பது எதிர்பாராப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற கடப்பாடு மற்றும் உத்தரவாதங்கள், முறிகள், பற்றாணைகள், நாணயக் கடிதம் மற்றும் ஏற்றுக்கொள்ளல்கள் என்பனவற்றைக் குறிப்பதாகும்.

3 (3) தனிப்பட்டவர்கள், தனிப்பட்ட கம்பனிகள், இலங்கை அரசாங்கம், பொதுக் கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், நிறுவகங்கள், மக்கள் அமைப்புக்கள், வேறுபிற நிறுவனங்கள் என்பன கடன்படுனராகக் கருதப்படும்.

3 (4) பணிப்புரை 3(5) இற்கு அமைவாக வகைப்படுத்தப்படும் செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அல்லாத பிற கடன் கொடுப்பனவுகள் செயற்படு கடன் மற்றும் முற்பணங்கள் எனப்படும்.

3 (5) வங்கியியல் சட்டத்தின் பகுதி 46அ இற்கு அமைவாக செயற்படாக் கடன்கள் என்பது அறவிடமுடியாக் கடன்கள் மற்றும் ஐயக் கடன்கள் எனப்படும். இந்த நோக்கத்திற்காக, பணிப்பரை 4(2) இற்கமைய விதிவிலக்கான கடன் கொடுப்பனவுகள் நீங்கலாக அனைத்துக் கடன் கொடுப்பனவுகளும் பின்வரும் அடிப்படையில் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

3 (5) (I) காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டவை

(i) வங்கி மேலதிகப் பற்றுக்கள்:

(அ) தொடர்ச்சியாக 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகக் கடன் நிலுவை அங்கீகரிக்கப்பட்ட எல்லைத் தொகையை விடக் கூடுதலாக இருக்கின்ற பட்சத்தில்.

(ஆ) கடன்படுநர் வங்கியில் மேலதிகப்பற்று எல்லைத் தொகைகளுடன் கூடிய பல நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்குமிடத்து அவற்றின் நாளாந்த சராசரி நிலுவை கடன் நிலுவையாக மேற்படி 3(5)(I)(i)(அ) பணிப்புரை நோக்கத்திற்காக கருதப்படும்.

(ii) மாதாந்த தவணைக் கட்டணத்தில் மீள்செலுத்தப்படும் கொடுகடன்கள்: தொடர்ந்து வரும் மூன்று தவணைக் கட்டணங்கள், முதலும் வட்டியும் அல்லது முதல் அல்லது வட்டி செலுத்தத் தவறும் பட்சத்தில்.

(iii) காலாண்டு, அரையாண்டுத் தவணையில் மீள்செலுத்தப்படும் கொடுகடன்கள்: தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் செலுத்தத் தவறும் பட்சத்தில்.

(iv) ஒரு கடன் மீளளிப்பு திகதியில் அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியின் முடிவில் ஒரு தவணைக் கட்டணத்தில் செலுத்தப்பட வேண்டிய கொடுகடன்கள்: ஒத்துக்கொள்ளப்பட்ட மீளளிப்புத் திகதி அல்லது காலப்பகுதியின் முடிவிலிருந்து 90 நாட்களுக்குள் மீளளிக்கப்படாத பட்சத்தில்

(v) கொடுகடன் அட்டைகள்: மீளளிப்புத் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருக்கும் பட்சத்தில்

3 (5)(II) சாத்தியமான இடர்நேர்வு அடிப்படையில்

பணிப்புரை 3(5)(I) இல் நிர்ணயிக்கப்பட்ட செயற்படாக் கொடுகடன்கள் வகைப்படுத்தலுக்கான தேவைப் பாடுகட்கு மேலதிகமாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் மீளளிப்பு இயலுமை பாதிக்கப்பட்டு, உடன்பாடுகளுக்கு அமைவாக முழு மீளளிப்பு என்பது சந்தேகத்திற்கு இடமாகும் போது, வங்கிகள் செயற்படு கொடுகடன்களை செயற்படாக் கொடுகடன்களாக வகுதிப்படுத்தலாம்.

3 (6) நிதி அசைவுகள் அல்லது காசுத் தலையீட்டுடன் கடன்படுநர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு கொடுகடன்களும் புதிய கொடுகடன்கள் எனப்படும். செலுத்தப்படாத முதல் அல்லது செலுத்தப்படாத வட்டி என்பவற்றை நிவர்த்தி செய்வதற்காக வழங்கப்படும் கடன்கள் மற்றும் தவணைக் கடன்களாக மாற்றப்படும் வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பன புதிய கொடுகடன்களாக கருதப்படமாட்டாது.

4 (1) செயற்படு மற்றும் செயற்படாக் கொடுகடன்களின் வகைப்படுத்தல்:

கொடுகடன்களில் வகைப்படுத்தல்

மேலுள்ள பணிப்புரை 3(4) மற்றும் 3(5) ஆகியவற்றில் விதந்துரைக்கப்பட்டபடி, ஒரு கடன்படுநருக்கு வழங்கப்படும் எல்லாவிதமான கொடுகடன்களையும் கண்காணிப்பு மற்றும் இடர் நிவர்த்தி நோக்கங்களுக்காக (அ) செயற்படு கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ஆ) செயற்படாக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகிய இரு வகைகளாக வகைப்படுத்தலாம்.

4 (2) விலக்களிக்கப்பட்ட கொடுகடன் வசதிகள்:

மேற்கூறப்பட்ட பணிப்புரை (4)(1) இன் கீழ் கொடுகடன்களை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தும் போது பண வைப்புக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கொடுகடன்கள் விதிவிலக்காகும். இந்த விதிவிலக்கை இயலுமைப்படுத்தும் நோக்கத்திற்காக வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) கடன்படுநர் முறிவடையும் போது அல்லது கடனை மீளச் செலுத்த இயலாதவராகின்ற போது அல்லது மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் வங்கியானது பண வைப்புக்களை தன்னுடைமை ஆக்குவதற்கான சட்ட ரீதியான உரிமையுடையதாக இருக்க வேண்டும்.

(ii) பணத்தினை ஆதாரமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் சகல ஆவணங்களும் எல்லாத் தரப்பினரையும் பிணைப்பதோடு, இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும். வங்கிக்குரியது எனக் கோரும் வங்கிக்குச் சார்பான மற்றும் முறையாக கையெழுத்திட்ட இறுப்பு கடிதத்தினையும் வங்கி கொண்டிருக்க வேண்டும்.

(iii) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக மாற்றப்பட்டிருக்க வேண்டிய திகதியில் அவ்வாறு செய்யப்படாதவிடத்து அத்திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கிடையில் கொடுகடன்களுக்கு எதிரான வைப்புக்கள் இறுப்பளிக்கப்படலாம்.

(iv) மேலுள்ள பணிப்புரை 4(2)(iii) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய தொகை வைப்பினைவிடக் கூடுதலாக இருக்குமிடத்து, அக் கூடுதல் தொகை செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்படும்.

4 (3) மேலுள்ள பணிப்புரை 4(2) இனால் அனுமதியளிக்கப்பட்டிருந்தாலொழிய பிணையங்கள் அல்லது கடன்பெறுனர்/ பிணையாளர்களின் தேறிய பெறுமதி பணிப்புரை 3(5)இன் பிரயோகத்தின் போது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4 (4) மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் வகைப்படுத்தல்:

கொடுகடன்கள் நிலுவையாக உள்ள காலப்பகுதியின் சராசரி மீளமைப்புக்கு முன்னர் அல்லது பின்னர் பணிப்புரை 3(5)இல் விதந்துரைக்கப்பட்ட தொடர்புடைய கொடுகடன்களிற்கான காலப்பகுதிகளை விடக்

கூடுதலாகக் காணப்படுமிடத்தில், கொடுகடனானது செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்படுவதற்கு முன்பு மீளஅட்டவணைப்படுத்தல் இடம்பெறுமானால் அத்தகைய மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படும். பணிப்புரை 4(6)இல் வேண்டப்படும் வகைப்படுத்தல்கள் மற்றும் பணிப்புரை 3(5)இன் வரைபுகளுக்கமைய செலுத்தப்பட வேண்டிய முதல் மற்றும் வட்டி கொண்டு உருவாக்கப்பட்ட கொடுகடன்களை செயற்படாக் கடன்களாக வங்கிகள் வகைப்படுத்தலாம்.

4 (5) ஒரு தனிப்பட்ட கடன்பெறுநருக்கு வழங்கப்பட்ட பல்வேறுபட்ட கொடுகடன்களின் வகைப்படுத்தல்.

(i) பணிப்புரை 3(5)இற்கு அமைய ஒரு கடன்பெறுநருடைய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டால் அக் கடன்பெறுநருக்கான சகல கொடுகடன்களும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படும். மேலும், கடன்பெறுநரின் சராசரிக் கொடுகடன் மீதி மொத்தக் கொடுகடன் மீதியின் 30 சதவீதத்திலும் கூடுதலாக இருப்பின் அக் கடன்பெறுநரின் சகல கொடுகடன்களையும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தலாம். 2009 சனவரி 01ஆம் திகதியிலிருந்து இந்தப் பணிப்புரையைப் பின்பற்றுமாறு வங்கிகள் கோரப்படுகின்றன.

(ii) மேலுள்ள பணிப்புரை 4(5)(i)இல் விதந்துரைக்கப்பட்ட அபாய எல்லைச் சதவீதக் கணிப்பீட்டிற்கு, பகுதியாக அல்லது முழுமையாக வட்டித் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்ட பெறவேண்டிய வட்டி எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

4 (6) செயற்படாக் கடன் வசதிகளின் வகைப்படுத்தல்:

மேலுள்ள பணிப்புரை 3(5) மற்றும் 4(5) என்பற்றிற்கிணங்க, (அ) கொடுகடன்களானவை செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி (ஆ) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர் என்பவற்றின் அடிப்படையில் கீழ்க்குறித்தவாறு நான்கு வகைகளாக வங்கிகள் செயற்படாக் கடன்களை வகைப்படுத்தலாம். எனினும், பணிப்புரை 4(5) இற்கமைய, ஒரு தனிப்பட்ட கடன்பெறுநருக்கு வழங்கப்பட்ட பல்வேறு கொடுகடன்கள் கீழுள்ளவாறு வகைப்படுத்தப்படும்.

(i) பணிப்புரை 3(5) இற்கமைவாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் பணிப்புரைகள் 4(6)(i) இலிருந்து 4(6)(iv) ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும்.

(ii) கடன்பெறுநருடைய ஏனைய கொடுகடன்கள் ஆரம்பத்தில் "விசேட கவனிப்பு" வகைக்கு வகைப்படுத்தப்படலாம். கொடுகடன்களுக்கு தொடர்ந்து வரும் வகைப்படுத்தல்கள் பணிப்புரைகள் 4(6)(i) இலிருந்து 4(6)(iv) ஆகியவற்றின்படி இருக்கும்.

4 (6) (I) "விசேட கவனிப்பு" கொடுகடன்கள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 3 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 6 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்புத் திகதியிலிருந்து, 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 120 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்புத் திகதியிலிருந்து 90 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 180 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

4 (6) (II) "குறைந்ததர" கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 6 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 12 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்புத் திகதியிலிருந்து, 120 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 180 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்புத் திகதியிலிருந்து 180 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 360 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

(ii) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வு

போதுமையற்ற பிணையங்கள், கடன்படுநருடைய பாதகமான நிலைமை நிதி அல்லது திருப்தியற்ற கடன்சேவைப் பதிவுகள் என்பவற்றினால் ஏற்படக்கூடிய சாதாரண இடரிலும் கூடிய நட்டம், ஏனைய பிரகாரணிகளின் தாக்கத்தால் கடன்பெறுநர் தற்போதைய மீளளிப்பு உடன்பாடுகளுக்கமைவாக கடனை மீளளிக்கும் இயலுமை மீதான சந்தேகம் அதிகரித்தல் மற்றும் கடனை பகுதியாகவோ முழுமையாகவோ மீளளிப்பதில் கடன்பெறநர் ஏற்படுத்துகின்ற நிச்சயமற்றதன்மை ஆகிய சந்தர்ப்பங்கள்.

4 (6) (III) சந்தேகத்திற்குரிய கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகுதி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 12 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 18 தவணைக் கட்டணங்களிலும் குறைவானவை. செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | மீளளிப்பு திகதியிலிருந்து, 180 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும், ஆனால் 240 நாட்களிற்கு குறைவாகவும் மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | மீளளிப்பு திகதியிலிருந்து 360 நாட்கள் அல்லது அதற்கு மேலதிகமாகவும் ஆனால் 540 நாட்களுக்கு குறைவாகவும் கட்டணம் நிலுவையாக இருப்பது |

(ii) கொடுகடன்களுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வுகள்

பகுதியளவில் செலுத்தத் தவறுவதனால் அல்லது முழுமையான சேகரிப்பு நிகழ்வதற்கரிதாக இருக்கின்றமையின் மூலமான உயர் இடர்நேர்வு எங்கு காணப்படுகின்றதோ அங்கு செலுத்தத் தவறுவதனால் ஏற்படும் இடர்நேர்வு உயர்வாக இருக்கும்.

4 (6) (IV) நட்டக் கொடுகடன் வசதிகள்:

(i) கொடுகடன்கள் செயற்படாக் கடன்களாக இருக்கின்ற காலப்பகி

| வசதிகளின் வகை | நிர்ணயிப்பு |
|---|---|
| மாதாந்த தவணைகளில் மீளளிக்கப்படும் கொடுகடன் வசதிகள் | 18 தவணைக் கட்டணங்கள் அல்லது அதற்கு கூடுதலானவை செலுத்தப்பட வேண்டிய முதலும் வட்டியும் செலுத்தப்படாது நிலுவையாக இருப்பது |
| கடன் அட்டைகள் | 240 நாட்களுக்கு அல்லது அதற்கும் கூடுதலாக மிகக் குறைந்த கட்டணத்தொகை நிலுவையாக இருப்பது |
| ஏனைய கொடுடன் வசதிகள் | கொடுப்பனவும் 540 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிலுவையில் இருப்பது |

(ii) கொடுகடன் வசதிகளுக்கு நேரிடக்கூடிய இடர்நேர்வு:

பின்வரும் சூழ்நிலைகளில் காணப்படுவது போல் கடன்படுநரால் பெரும்பாலும் கடன் மீளச் செலுத்தப்படமாட்டாதென்ற சந்தர்ப்பங்கள் உருவாகும் போது:

(அ) வாடிக்கையாளர் நிதி நிலைமை நலிந்து இருப்பது அல்லது வாடிக்கையாளர் வருமானம் ஈட்டக்கூடிய இயலுமை மிகக் குறைவாகக் காணப்படுவது போன்றன வாடிக்கையாளர் கடனை மீளச் செலுத்தமாட்டார் என்பதை அடையாளம் காட்டுகின்றன.

(ஆ) வாடிக்கையாளருடைய வியாபாரம் நிச்சயமற்றதாக மாறிவிடுதல் அல்லது வாடிக்கையாளர் கடன்பெற்ற நோக்கத்தினை விடுத்து வேறு நோக்கங்களில் நிதியைப் பயன்படுத்தல்.

(இ) வாடிக்கையாளர் நோய்வாய்ப்படுவதுடன் கடனை மீளளிப்பதற்கு எந்தவிதமான சொத்துக்களுமற்ற நிலை.

(ஈ) வாடிக்கையாளர் தனது வியாபாரத்தை நிறுத்திவிடுதல் அல்லது கலைத்துவிடுதல் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோரின் கடன்தொகை வாடிக்கையாளரது மொத்தச் சொத்துக்களின் பெறுமதியை விட கூடுதலாக இருக்கும் போது ஏனைய கடன் கொடுத்தோர் வாடிக்கையாளரின் சொத்துக்கள் மீது முன்னுரிமை உரித்து கொண்டு இருத்தல்

(உ) வாடிக்கையாளருடைய வியாபாரம் ஒடுக்கிவிடும் நிலையின் கீழ் இருக்கிறது.

(ஊ) வங்கியானது வாடிக்கையாளருக்கு எதிராக வியாபார முறிவு வழக்கைப் பதிவு செய்துவிட்டநிலை அல்லது இது போல் வழக்கிட்ட ஏனைய கடன்கொடுத்தோர்களுடன் சேர்ந்து ஆதனப்

பங்கெடுப்பிற்கு விண்ணப்பித்ததுடன், நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் ஏனைய பிரிவினருடன் கடனை மீளமைப்பு செய்ய உடன்பட்ட நிலை.

(எ) கடனாளிக்கு எதிராக வழக்கிட்ட ஏனைய கடன்கொடுத்தோருடன் சேர்ந்து வங்கியானது ஆதனப் பங்கெடுப்பிற்கு விண்ணப்பித்த நிலை

(ஏ) வங்கியானது கடனாளியைத் தொடர்புகொள்ள முடியாத அல்லது கண்டுபிடிக்க முடியாத நிலை

4 (7) கொடுகடன் வசதிகளின் மீளவகைப்படுத்தல்

4 (7) (I) செயற்படாக் கடன்களை செயற்படு கடன்களாக மீளவகைப்படுத்தல்

வகைப்படுத்தப்பட்ட செயற்படாக்கடன் தொடர்பில் செலுத்தப்பட வேண்டியிருந்த நிலுவையான வட்டியும் முதலும் செலுத்தப்படும் பட்சத்தில், வங்கிகள் செயற்படாக் கடன்களை செயற்படுகடன்களாக மீள்வகைப்படுத்த முடியும்.

4 (7) (II) மீளவகைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடனை செயற்படுகடனாக மீளவகைப்படுத்தல்:

முதல் தவணைக் கட்டணம் அல்லது வட்டித்தொகை தொடர்பாக பின்வருமாறு வகையிடப்பட்ட விசேட காலப்பகுதிகளில் திருப்திகரமான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் மீளஅட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்களானவை, செயற்படுகடன்களாக தரமுயர்த்தப்படக்கூடிய தகுதி உடையனவாகும்.

| மீள அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்கள் | செயற்படுகடன்கள் முற்பணங்களுக்கான தரமுயர்த்தலுக்கு |
|---|---|
| சிறப்பு கவனிப்பு வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 90 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |
| இரண்டாந்தர மற்றும் சந்தேகத்திற்குரிய வகைகள் நட்டக் கொடுகடன் வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 180 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |
| நட்டக் கொடுகடன் வகை | வட்டி அல்லது முதற்தொகையின் முதற் கொடுப்பனவில், இதில் எது முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அத்திகதியிலிருந்து 360 நாட்களின் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் வரும் |

மேற்குறித்த காலப்பகுதியின் பின்னர், மீளமைக்கப்பட்ட செயற்படாக் கடன்களின் வகைகளுக்கேற்ப, ஏற்கனவே செய்யப்பட்டிருந்த விசேட ஏற்பாடுகள் எதிரிடை (இல்லாமல்) செய்யப்படலாம்.

4 (8) புதிய கொடுகடன் வசதிகளை வழங்கல்

பணிப்புரை 4(6)இன் கீழ், புதிதாக உருவாக்கப்படும் கொடுகடன்கள் பழைய அதே வகையான செயற்படாக் கடன்களாக இருக்கும் பட்சத்திலன்றி, செயற்படாக் கடனை மீளளிப்பு செய்வதற்காக அதே கடனாளியின் பெயரில் அல்லது ஏனைய குழுவினரின் பெயரில் புதிய கொடுகடன்களை வங்கிகள் வழங்கமுடியாது. பணிப்புரைகள் (4)(7)(I) மற்றும் பணிப்புரை (4)(7)(II) ஆகியவற்றிற்கமைவாக இவ்வகை செயற்படாக்கடன்களின் மீளவகைப்படுத்தல்கள் அமையும்.

செயற்படாக் கொடுகடன் வட்டியின் அங்கீகாரம்

5 (1) செயற்படாக்கடன் தொடர்பில் வட்டியானது காசு அடிப்படையில் வங்கியால் வசூலிக்கப்படும் போது அதனை வருமானமாக அங்கீகரித்து வங்கி தனது கணக்குகளில் காட்டலாம்.

5 (2) கொடுகடனானது செயற்படாக்கடனாக வகைப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து வசூலிக்கப்பட வேண்டிய அனைத்து வட்டித்தொகையையும் வங்கியானது நிச்சயமற்றதொன்றாகக் காட்டி, அவ்வகைப் பெறவேண்டிய வட்டியை வட்டித்தொங்கல் கணக்கில் செலவாகவும், பெறவேண்டிய வட்டிக் கணக்கில் வரவாகவும் பதிவு செய்ய வேண்டும்.

5 (3) பெறவேண்டிய வட்டியை செயற்படாத வங்கி மேலதிப்பற்று மற்றும் கடன அட்டை கணக்குகளில் வரவு வைத்தும், வட்டித் தொங்கல் கணக்கில் செலவு வைத்தும் காட்டும் தற்போதைய வழமையை வங்கிகள் தொடர்ந்தும் பின்பற்றலாம்.

5 (4) கொடுகடன்களை செயற்படாக் கொடுகடன்களாக வகைப்படுத்தும் போது வங்கியானது ஏற்கனவே வருமானமாகக் காட்டப்பட்ட பெறவேண்டிய வட்டியை எதிரிடை செய்து அச்செயற்படாக் கடனுக்குரிய வட்டித்தொங்கல் கணக்கில் செலவு வைக்கலாம். எதிரிடை செய்யப்பட வேண்டிய ஈட்டப்படாத வருமானம் குறித்த நிதியாண்டின் முடிவின் பின்னர் அடையாளம் காணப்பட்டால், கொடுகடனானது எந்த ஆண்டில் செயற்படாக்கடனாக அடையாளப்படுத்தப்பட்டதோ அவ்வாண்டிற்குரியதாக கருத்திற்கொள்ளப்படும்.

கொடுகடன்களுக்கான ஒதுக்கங்கள்

6 (1) கடன் இடர்களை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் வங்கியானது (அ) பொது ஒதுக்கீடுகள் (ஆ) விசேட கொடுகடன்களுக்கான ஒதுக்கீடுகள் ஆகியவற்றைப் பேணலாம்.

6 (1) (I) பொது ஒதுக்கீடுகள்

வங்கிகள் பின்வரும் வழிமுறைகளில் பொது ஒதுக்கீடுகளைப் பேணலாம்.

(i) மேலுள்ள பணிப்புரை 3(4)இன்படி, ஐந்தொகையிலடங்கும் செயற்படுகடன்களின் மொத்தத் தொகை மற்றும் மேலுள்ள பணிப்புரை 4(6)(1)இன்படி ஐந்தொகையிலடங்கும் விசேட கவனிப்பு கொடுகடன்களின் மொத்தத் தொகை ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய கணக்குகளின் தேறிய வட்டித்தொங்கல் தொகை நீக்கப்பட்டு வரும் தொகையின் ஒரு சதவீதம்.

(ii) மேலுள்ள பணிப்புரை 6(1)(I)(i)இல் விதந்துரைக்கப்பட்டபடி, வங்கிகள் மொத்த கொடுகடன்களின் 0.7 சதவீதத்தை 30.06.2008 அளவில் பொது ஏற்பாடாக வைத்திருப்பதுடன், இதன்பின்னர், 31.03.2009 வரையான ஒவ்வொரு காலாண்டுக்கும் 0.1 சதவீத அதிகரிப்பு ஏற்பாட்டையும் மேற்கொள்ள வேண்டும். இந்தவகையில், வங்கிகள் 31.03.2009 இலும் காலம் தாழ்த்தாது மொத்தத் தேவைப்பாடாகிய ஒரு சதவீதத்தை அடைய வேண்டும்.

(iii) காசு வைப்புக்கள், தங்கம் மற்றும் அதே வங்கியுடனான அரச பிணையங்கள் என்பனவற்றினால் ஆதாரப்படுத்தப்பட்டு பாதுகாப்பளிக்கப்படும் கொடுகடன்களின் பொது ஏற்பாடுகள் தொடர்பில் வங்கிகள் விலக்களிப்பதற்கு ஏற்புடையவை. இந்த விலக்களிப்பை அனுபவிப்பதற்கு வங்கிகள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடன்பெறுநர் கடனைச் செலுத்தத்தவறும் பட்சத்தில் அல்லது இயலாத பட்சத்தில் அல்லது முறிவடையும் பட்சத்தில் வங்கியானது இந்த வகையான பிணையங்களை சட்ட ரீதியாகத் தனதுடமையாக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இந்த வகையான பிணையங்களினைப் பின்னிறுத்திய பரிமாற்றங்களின் சகல ஆவணங்களும் எல்லாத் தரப்பினரையும் பிணைப்பதோடு, இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்களில் சட்ட ரீதியான வலியுறுத்தல்களாகவும் அமையும்.

6 (1) (II) விசேட ஒதுக்கீடுகள்

கொடுகடன்களில் வட்டிகள் வரவு வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமயங்களில், இடைநிறுத்தப்பட்ட வட்டி மற்றும் பணிப்புரை 7(1)இல் விதந்துரைக்கப்பட்டவாறு பிணையங்களின் தேறிய மெய்ப்பெறுமதி என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு, பணிப்புரை 4(6) இன்படி வகைப்படுத்தப்பட்ட கொடுகடன்களின் மொத்தத் தொகைக்கு வங்கிகள் விசேட ஒதுக்கீடுகளைப் பின்வருமாறு பேணவேண்டும்.

| செயற்படாக் கொடுகடன் வசதிகளின் வகை | மிகக் குறைந்த விசேட ஒதுக்கீட்டுத் தேவைப்பாடு |
|---|---|
| குறைந்ததர வகை: கடனட்டை | 25 சதவீதம் |
| ஏனையவை | 20 சதவீதம் |
| சந்தேகக் கடன் வகை | 50 சதவீதம் |
| நட்டக் கடன் வகை | 100 சதவீதம் |

6 (2) பணிப்புரை 4(8)இன் அதிகார எல்லைக்குள் உள்ளடங்கும் எந்தவொரு கொடுகடன் தொடர்பிலும் வங்கியானது பின்வருமாறு விசேட ஒதுக்கீடுகளைப் பேணவேண்டும்.

(i) கொடுகடன்தொகையின் முதல்பகுதி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, செயற்படாக்கடன் மீளச்செலுத்தப்படும் வேளையில், பணிப்புரை 6(1)(II)இன் கீழ் பேணப்படுமாறு வேண்டப்பட்ட ஒதுக்கீடுகளை குறைவின்றி பேணப்படவேண்டும்.

(ii) கொடுகடனின் வட்டிப்பகுதி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, கொடுகடன் தொகையின் 100 சதவீதம் ஒதுக்கீடுகள் பேணப்படுதல் வேண்டும்.

(iii) கொடுகடனில் முதல் மற்றும் வட்டி மீளளிப்பு செய்யப்படுவதற்கு ஆவன செய்யப்படுமிடத்து, (உ-ம்: வங்கி மேலதிகப்பற்று போன்ற சமயங்களில்) பணிப்புரைகள் 6(2)(i) மற்றும் 6(2)(ii) இற்குஅமைய வட்டிக்கும் முதலுக்குமான ஒதுக்கீடுகள் பேணப்படுதல் வேண்டும்.

பிணையங்களின் மதிப்பீடு

7 (1) ஒதுக்கீட்டு நோக்கங்களுக்கான பிணையங்களின் விலைமதிப்பு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

7 (1) (I) அசையா ஆதனத்துக்கான முதனிலை ஈடு

(i) தற்போதைய விலைமதிப்பு அறிக்கையின்படியான அசையா ஆதனத்தின் திணிப்பு விற்பனைப் பெறுமதியின் மீதான செயற்பாட்டு கழிவிடலை அடிப்படையாகக் கொண்ட பிணையப் பெறுமதி பின்வரும் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(ii) படிமுறையான கழிவிடல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:

| உருப்படி | பிணையப்பெறுமதியாகக் கருதப்படும் அசையா ஆதனத்தின் தணிப்பு விற்பனைப் பெறுமதியின் சதவீதம் | |
|---|---|---|
| | வரையறையற்ற சொத்து | குத்தகைச் சொத்து |
| முதல் தடவையாக ஒதுக்கம் செய்யப்படும் போது நட்டக் காலப்பகுதியில் | 75 | 60 |
| 12 மாதங்களிலும் குறைவு | 75 | 60 |
| 12 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 50 |
| 24 மாதங்களிலும் குறைவாகவும் | 60 | |
| 24 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 40 |
| 36 மாதங்களிலும் குறைவாகவும் | 50 | |
| 36 மாதங்களிலும் கூடுதலாகவும் அதேவேளை | | 30 |
| 48 மாதங்களிலும் குறைவாகவும் | 40 | |
| 48 மாதங்களிலும் அதிகம் | ஆதனமானது கிரமமாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன், வங்கி முகாமைத்துவம் தன் உசிதப்படி மேலதிக கழிவிடப்படுதலையும் ஏற்படுத்த வேண்டும் | இல்லை |

(iii) தற்போதைய வெளியிலுள்ள தொழில் நிபுணத்துவ விலைமதிப்பீட்டு அறிக்கை:

விலைமதிப்பு அறிக்கை பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) கடனுடைய முதல்தொகை ரூ.5,000,000 இற்கு சமனாக அல்லது கூடுதலாக அல்லது வங்கியினுடைய மூலதனத்தளத்தில் 0.1 சதவீதத்திலும் கூடுதலாக இருக்கும்போது, மேலிரண்டு சந்தர்ப்பங்களில் எது குறைவானதாக இருக்கின்றதோ அச்சந்தர்ப்பத்தில் வங்கியானது கொடுகடன்/கள் தொடர்பில் தற்போதைய வெளியக தொழில் நிபுணத்துவ விலைமதிப்பு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூலதனப் போதுமை வீதக் கணிப்பீட்டிற்காக வங்கியின் வெளியக கணக்காய்வாளரினால் சிபார்சு செய்யப்பட்ட மூலதனத்தளமே இங்கு குறிப்பிடப்படும் மூலதனத் தளமுமாகும்.

(ஆ) இவ்வகை அறிக்கைகள் வெளியிலுள்ள சுயாதீன விலைமதிப்பாளருடையதாக இருத்தல் வேண்டும்.

ஒரு வெளியிலுள்ள சுயாதீன விலைமதிப்பாளா் பின்வருமாறு காணப்படலாம்.

(அஅ) ஒரு பட்டய விலைமதிப்பீட்டு அளவையாளா்; அல்லது

(அஆ) 5 வருட அனுபவத்தினையுடைய இலங்கை விலைமதிப்பீட்டாளா் நிறுவகத்தின் ஒரு அங்கத்தவா்.

(அஇ) 10 வருட அனுபவத்துடன் கூடிய இலங்கை விலை மதிப்பீட்டாளா் நிறுவகத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினா்

(அஈ) 20 வருட அனுபவத்துடன் கூடிய இலங்கை விலை மதிப்பீட்டாளா் நிறுவகத்தின் ஒரு இணை உறுப்பினா்

(இ) விலைமதிப்பீட்டு அறிக்கையின் காலப்பகுதி பின்வருமாறு இருக்கும்.

(அஅ) கடன்பெறுநரினால் வாழ்வுசாா் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் வதியும் ஆதனத்திற்கு எதிராக வழங்கப்படும் கொடுகடன்கள் தொடா்பாக: நான்கு வருடங்களுக்கும் குறைந்த அறிக்கையாக இருத்தல் வேண்டும்.

(அஆ) ஏனைய சகல நோக்கங்களுக்காகவும் வழங்கப்படும் கொடுகடன்கள் தொடா்பாக: 3 வருடங்களுக்கும் குறைந்த அறிக்கையாக இருத்தல் வேண்டும்.

(iv) தற்போதைய உள்ளக விலைமதிப்பீட்டு அறிக்கை

விலைமதிப்பீட்டு அறிக்கை பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(அ) கடனுடைய முதல்தொகை ரூ.5,000,000 இற்கும் குறைவானதாக அல்லது வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 0.1 சதவிதம் இற்குக் குறைவானதாக இருக்கின்ற போது இரண்டில் எது குறைவாக இருக்கின்றதோ அப்போது வங்கியானது கொடுகடன்/ கள் தொடர்பில் தற்போதைய உள்ளக விலைமதிப்பு அறிக்கையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) கடன் தீர்மானங்களில் சம்பந்தப்படாத ஒரு சுயாதீன அதிகாரியினால் கொடுகடன்களுக்காக ஈட்டிலிருக்கும் ஆதனங்களின் தற்போதைய விலைமதிப்பு தொடர்பான உள்ளக மதிப்பீடு செய்யப்படுவதுடன் அது வங்கியினுடைய ஒரு சிரேஷ்ட அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டிருக்கவும் வேண்டும்.

(இ) ஒரு தற்போதைய உள்ளக மதிப்பீட்டு அறிக்கை என்பது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியில் செய்யப்பட்ட மதிப்பீடு என வரைவிலக்கணப்படுத்தப்படும்.

7(1)(II) முதன்மை ஈடு தவிர்ந்த ஏனைய ஈடுகள்

மேலுள்ள பணிப்புரை 7(1)(I)இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்குமுகமாக, அதே வங்கியில் ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின், முதன்மை ஈடல்லாத அசையா ஆதனம் மீதான ஈடுகள் மேற்படி நோக்கத்திற்கான தகுதியை உடையனவாகும்.

7(1)(III) ஈடு வைப்பதற்கான பொறுப்பைக் கொண்ட ஆதனத்தின் உறுதி வைப்பு. ஆதன ஈடானது வங்கிக்கு சார்பானதாக மாற்றிக் கொள்ளப்படும் வரையில் எந்தவொரு பெறுமதியும் கொடுக்கப்படலாகாது.

7(1)(IV) ஆயுட் காப்புறுதிப் பூட்கை மீதான ஒப்படை

காப்புறுதி செய்பவரால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட சரண் பெறுமதி கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டியதோடு, அச்சரண் பெறுமதியின் 90 சதவீதம் அப்பிணையத்தின் பெறுமதியாகக் கொள்ளப்படும். மேலும், முறைமையாக பதிவு செய்யப்பட்ட வங்கிக்குச் சார்பான ஒப்படையும் இருத்தல் வேண்டும்.

7(1)(V) தங்கப் பிணையம்

போதுமான காப்புறுதிக் கவசம் கொண்ட தங்கத்தினுடைய சந்தைப் பெறுமதி

7(1)(VI) பங்குகளின் ஒப்படை

(i) நிரற்படுத்தப்பட்டது.

(அ) சமீப சந்தைப் பெறுமதியின் 90 சதவீதம்

(ஆ) கணக்காய்வாளரின் சான்றுடன் கூடிய பங்குப் பெறுமதி கிடைப்பனவாக இருக்கின்றபோது, விற்பனை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பின் (தற்காலிக நிறுத்தம் அல்லாது) சமீபகால கணக்காய்வு நிதிக்கூற்றுக்களின்படியான (18 மாதங்களிலும் கூடுதல் அல்லாத) தேறிய பணமாக மாற்றிடக்கூடிய கட்புலனாகும் சொத்துக்களின் பெறுமதி பாவிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படும். விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் போது, பொருத்தமான நிதிக்கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்கள் இல்லாதவிடத்து எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

(ii) நிரற்படுத்தப்படாதது

வழங்கப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய பங்குகளின் பெறுமதி தரப்படலாம். பொருத்தமான பெறுமதி கம்பனியினுடைய கணக்காய்வாளர்களினால் சாட்சிப்படுத்தப்பட்ட பங்கொன்றிற்கான தேறிய கட்புலனாகும் சொத்தின் 75 சதவீத அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

7(1)(VII) பொறித்தொகுதி, பொறி மற்றும் கருவிகள் மீதான ஈடு

வெளியக விலைமதிப்பீட்டு அறிக்கையின் படியான பெறுமதி, அல்லது மேற்படி அறிக்கை இல்லாதவிடத்து, கொள்வனவுத் திகதி மற்றும் கொள்வனவு விலை என்பன எடுத்துக் கொள்ளப்பட்டு, 20 சதவீத நேர்கோட்டு முறையிலான பெறுமானத்தேய்வு கருத்திலெடுக்கப்பட்டுத் தேறிய ஏட்டுப் பெறுமதி கணிப்பிடப்படும்.

7(1)(VIII) மோட்டார் வாகனங்கள் மீதான ஈடு

வெளியக விலைமதிப்பு அறிக்கையின்படியான பெறுமதி, அல்லது மேற்படி அறிக்கை இல்லாதவிடத்து, மூலப் பதிவுத் திகதி மற்றும் அத்திகதியில் கொள்வனவு விலை என்பன எடுத்துக் கொள்ளப்பட்டு, 25 சதவீத நேர்கோட்டு முறையிலான பெறுமானத்தேய்வு கருத்திலெடுக்கப்பட்டுத் தேறிய புத்தகப் பெறுமதி கணிப்பிடப்படும்.

7(1)(IX) வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்புக்கள்/ பொருட்கள் மீதான அடமானம்

ஒவ்வொரு வகை அடிப்படையிலும் சந்தைப்பெறுமானத்தின் 50 சதவீதம் கொண்டு தீர்மானிக்கப்படும்.

7(1)(X) விற்பனையிற் சரக்கு மீதான அடமானம்

வங்கியால் உன்னிப்பாக விற்பனையிற் சரக்குமட்டம் கண்காணிக்கப்பட்டுக் கொடுக்கப்படும் சரக்கின் தற்போதைய பெறுமதியின் 30 சதவீதம்

7(1)(XI) குறிப்பீடு செய்யப்பட்ட தொகுதிக்கடன்கள்

(i) சமீப சந்தைப் பெறுமதியின் 90 சதவீதம்

(ii) கணக்காய்வாளரின் சான்றுடன் கூடிய பங்குப் பெறுமதி கிடைப்பனவாக இருக்கின்றபோது, விற்பனை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பின் (தற்காலிக நிறுத்தம் அல்லாது) சமீபகால கணக்காய்வு நிதிக்கூற்றுக்களின்படியான (18 மாதங்களிலும் கூடுதல் அல்லத) தேறிய பணமாக மாற்றிடக்கூடிய கட்புலனாகும் சொத்துக்களின் பெறுமதி பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விற்பனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் போது, பொருத்தமான நிதிக்கூற்றுக்கள் அல்லது சான்றிதழ்கள் இல்லாதவிடத்து எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

7(1)(XII) உத்தரவாதங்கள்

(i) அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் - இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ ஸ்தாபிக்கப்பட்டவை

மூலதனப் போதுமை விகிதம் (பாசல் II) பேணுதல் தொடர்பாக வெளியிடப்பட்ட பணிப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இயலுமையான கடன் தரப்படுத்தல் முகவரின் தரப்படுத்தல் அடிப்படையில் பின்வருமாறு பிணையின் இயலுமைப் பெறுமதி பெறுமதியிடப்படும்.

| வங்கியினுடைய கடன் தரப்படுத்தல் | பிணையத்தின் பெறுமதி |
|---|---|
| அஅஅ இலிருந்து அஅ- அல்லது சமனானது வரை | 80 சதவீதம் |
| அ + இலிருந்து அ - அல்லது சமனானது வரை | 50 சதவீதம் |

(ii) அரச உத்தரவாதம்

முழுப்பெறுமதி

7(1)(XIII) பிணைய ஏனைய வகைகள்

ஒவ்வொரு வகை அடிப்படையிலான வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டவை

செயற்படாக் கடன்களின் பதிவழிப்பு/ பதிவிறக்க வசதிகள்

8(1) விளக்கமான கையாளுகை வழிமுறை, அதிகாரம், கவனமின்மை மற்றும் தவறான பின்பற்றுதலுக்கான பொறுப்புகள், கணக்காய்வு மற்றும் சுயாதீன மீளாய்வு, தொடர்ச்சியான கண்காணிப்பு, அறிக்கையிடல், என்பனவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர் சபையினால் நன்கு வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட பதிவளிப்பு/ பதிவிறக்கக் கொள்கையை, இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட வங்கிகள் கொண்டிருக்க வேண்டும். பிணையங்கள், உத்தரவாதங்கள் என்பனவற்றின் மீது வலியுறுத்தி அதிகூடிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளுவதனை இக்கொள்கை இலக்காகக் கொண்டிருக்கும்.

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகள் தங்கள் தலைமைச் செயலகத்திடமிருந்தான பதிவளிப்பு/ பதிவிறக்க கொள்கையை முறையாகப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

செயற்படாக் கடன் வசதிகளின் பிரிப்பு

9(1) உன்னிப்பான கண்காணிப்பையும் மீள்பெறுகைகளையும் இலகுபடுத்தும் முகமாக வங்கியானது சகல கொடுகடன்களையும் அ) வகைப்படுத்தப்பட்ட செயற்படாக்கடன்கள் ஆ) மீளமைக்கப்பட்ட கடன்கள் இ) பதிவளிப்பு/ பதிவிறக்கப்பட்ட கடன்கள் என்றவாறாகப் பிரித்து நடவடிக்கைப்படுத்தலாம்.

அறிக்கையிடல் தேவைகள்

10(1) பின்னிணைப்பாக இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் அறிக்கையிடல் மாதிரி ஆகியவற்றிற்கேற்ப, மாதாந்தம், வங்கிகளானவை கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல் தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட காலப்பகுதிகள் தரவுகளின் பதிலிடல் அக்காலப்பகுதியின் அடுத்த மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

முன்னர் வெளியிடப்பட்ட பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகளின் இரத்து

11(1) உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) திருத்தியமைக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டம், பிரிவு 76ஜே(i) இன் கீழ் வெளியிடப்பட்ட, 1997, நவெம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட செயற்படாக்கடன்கள் வட்டி, ஒதுக்கு நோக்கத்திற்கான அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் முற்பணங்களின் வகையிடுதல் (அட்டவணை I) மற்றும் ஒதுக்கீட்டு நோக்கத்திற்கான பிணையங்களின் விலைமதிப்பு (அட்டவணை II) மீதான மேற்பார்வைப் பணிப்புரைகள்.

(ii) மேலுள்ள பணிப்புரை 11(1)(i)இன் திருத்தியமைக்கப்பட்ட 2003 ஓகத்து 15ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை

(iii) 2004 யூலை 13ஆம் திகதியிடப்பட்ட விலைமதிப்பீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரமாணம் தொடர்பான சுற்றறிக்கை

(iv) 2004 செத்தெம்பர் 8ஆம் திகதியிடப்பட்ட, ஒதுக்கு நோக்கங்களுக்கான அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் முற்பணங்களின் வகைப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை (நீண்டகால மற்றும் நடுத்தர நிகழ்ச்சித்திட்டக் கடன்களின் வகைப்படுத்தல்)

(v) 2006 மாச்சு 29ஆம் திகதியிடப்பட்ட ஈட்டப்படாத வருமானத்தின் எதிரீடு மற்றும் முற்பணங்களைச் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை

(vi) 2006, திசெம்பர் 6ஆம் திகதியிடப்பட்ட முற்பணங்களுக்கான பொது ஒதுக்கீட்டைப் பேணுதல் தேவைப்பாடு தொடர்பான பணிப்புரை

இணைப்பு

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**
**2008இன் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை**

**கடன்கள் மற்றும் முற்பணங்கள், வருமான அங்கீகாரம் என்பனவற்றின் பகுப்பாய்வும் ஒதுக்கங்களின் அறிக்கையிடல் படிவமும்**

வங்கியின் பெயர் :
திதி/மாமா/ஆஆஆஆ இல் உள்ளவாறு

தொகை '000

| கொடுகடன் வசதிகள் | கடன்கள் முற்பணங்களின் செயலாற்றம் | செயற்படாக்கடன்களின் வகைப்படுத்தல் | | | | செயற்படாக் கடன்களின் மொத்தம் | மொத்த கடன் வசதிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிறப்பாகக் | குறைந்த தரம் | ஐயத்திற் குரியது | இழக்கப்படக் கூடியது | | |
| **ஐந்தொகையிலடங்கும் கொடுகடன் வசதிகள்** | | | | | | | |
| கொள்வனவு செய்யப்பட்ட காசோலைகள் | | | | | | | |
| இறக்குமதி உண்டியல் | | | | | | | |
| ஏற்றுமதி உண்டியல் | | | | | | | |
| மேலதிக பற்றுக்கள் | | | | | | | |
| கொடுகடன் அட்டை | | | | | | | |
| குறுங்காலக் கடன்கள் | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலக் கடன்கள் | | | | | | | |
| வீடமைப்புக் கடன்கள் | | | | | | | |
| அலுவலர்க்கான கடன்கள் | | | | | | | |
| மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் | | | | | | | |
| குத்தகை வாடகைகள் (தேறிய) | | | | | | | |
| படுகடன் பிணையங்களுக்கெதிரான கடன்கள் | | | | | | | |
| அடகு முற்பணம் | | | | | | | |
| வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்கள் | | | | | | | |
| மற்றைய கடன் வெளிப்படுத்துகைகள் | | | | | | | |
| பெறத்தக்க வட்டி | | | | | | | |
| **கடன் மற்றும் முற்பணங்கள் (மொத்தம்)** | | | | | | | |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி (-) | | | | | | | |
| சிறப்பு ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| பொது ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | | | | | | | |
| பிணையத்தின் பெறுமதி | | | | | | | |
| **ஐந்தொகைக்கு புறம்பான கடன் வசதிகள்** | | | | | | | |
| உத்தரவாதங்கள் | | | | | | | |
| முறிகள் | | | | | | | |
| நாணயக் கடிதம் | | | | | | | |
| ஏற்றுக்கொள்ளல்கள் | | | | | | | |
| பெறத்தக்க வட்டி | | | | | | | |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள் (மொத்தம்)** | | | | | | | |
| இடைநிறுத்தப்பட்ட வட்டி (-) | | | | | | | |
| சிறப்பான ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| பொது ஒதுக்கீடுகள் (-) | | | | | | | |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய)** | | | | | | | |
| பிணைய கொடுகடனின் பெறுமதி | | | | | | | |

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 மே 26

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வங்கிக் கிளைகளை நிறுவுதல்**

உத்தேசிக்கப்பட்ட விரிவாக்கலின் சாத்தியப்பாடு, பொருத்தம் என்பனவற்றை கவனத்திற் கொண்டு, உரிமம் பெற்ற வங்கிகள் கிளைகள் மற்றும் ஏனைய நிலையங்களை நிறுவுவதற்கு, தற்போது மத்திய வங்கி அனுமதியளிக்கின்றது. தற்போது நாட்டிலுள்ள 40 சதவீதமான வங்கிக் கிளைகள் மேல் மாகாணத்திற்குள் செறிவாக அமைந்திருப்பதுடன், ஏனைய மாகாணங்களின் வங்கி அடர்த்தியான (100,000 ஆட்களுக்கான வங்கிக் கிளைகள்) 5.3 - 8.4 க்கு மாறாக, இவ் அடர்த்தி மேல் மாகாணத்தில் 11.9 ஆகக் காணப்படுகின்றது.

நாட்டின் பிராந்திய அபிவிருத்தியில் சமநிலையை அடைவதற்காக, மேல் மாகாணத்திற்கு வெளியே நாட்டின் ஏனைய பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான தேவையுள்ளது. மேல் மாகாணத்திற்கு வெளியே மேலும் வங்கி கிளைகளையும், வங்கி நிலையங்களையும் நிறுவுவதன் மூலமாக, இப் பிராந்தியங்களில் நிதிபெறுதல் மேம்படுமெனவும் சேமிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்படும் எனவும், அவை மூலம் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு உதவுமுகமாக, மேல் மாகாணத்தில் நிறுவப்படும் ஒவ்வொரு கிளைக்கும், குறைந்தது இரண்டு கிளைகளை வங்கிகள் மேல் மாகாணத்திற்கு வெளியே நிறுவ வேண்டும் என்று நாணயச் சபை தீர்மானித்துள்ளது. இப் புதிய பிரமாணம், வங்கிக் கிளைகளைத் திறப்பதற்காக மத்திய வங்கிக்கு அனுப்பப்படும் அனைத்து எதிர்கால விண்ணப்பங்களுக்கும் ஏற்புடையதாகும்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 ஓகத்து 15

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1), மற்றும் 2008 யூலை 8ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு நியமங்களுக்கமைவாக, நாணயச் சபையானது, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 2008 ஏப்பிறல் 23ஆம் திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பணிப்புரைக்கு பதிலாக கீழ்வரும் பணிப்புரைகளை வழங்குகின்றது. இப் பணிப்புரைகளானது 2008ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1. 2008 ஏப்பிறல் 23ஆம் திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையில் விவரிக்கப்பட்ட "நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் ஸ்தாபக பணிப்பாளர்கள், பதவியிலுள்ள தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் தொடர்பான மாறிச் செல்லும் ஏற்பாடுகள்", ஆகியவை இத்தால் இரத்து செய்யப்படுகிறது.

2. பின்வரும் புதிய பணிப்புரை, நடைமுறையிலுள்ள 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(2)(ii)(ஆ) இனை பதிலீடு செய்யும்.

   3(2) (ii) (ஆ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொதுவான விதிவிலக்கு பொருந்தும்.

   2008 சனவரி 1ஆம் திகதி ஒன்பது வருடங்களை பூர்த்தி செய்த ஒரு பணிப்பாளர், அல்லது 2008 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பாக ஏதேனும் ஒரு காலப்பகுதியில் அக் காலத்தவணையை பூர்த்தி செய்தவர், 2009 சனவரி 1ஆம் திகதி தொடக்கம் மேலும் அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு அப் பதவியை தொடரலாம்.

3. கீழ்வரும் புதிய பணிப்புரை நடைமுறையிலுள்ள 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(3)(i)(அ) மற்றும் 3(3)(i)(ஆ) இனை பதிலீடு செய்யும்.

   3(3)(i)(அ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொது விதிவிலக்கு பொருந்தும்:

   2008, சனவரி 1ஆம் திகதியன்று 70 வயதை பூர்த்தி செய்த ஒரு பணிப்பாளர், அல்லது 2008 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 70 வயதை பூர்த்தி செய்தவர், 2009 சனவரி 1ஆம் திகதி முதல் மேலும் அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு அப் பதவியை தொடரலாம்.

4. கீழ்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(3)(ii) இனை உடனடுத்து புகுத்தப்படல் வேண்டும்.

   3(3)(ii)(அ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொது விதிவிலக்கு பொருந்தும்.

   மேல் கூறப்பட்ட வரையறைகளுக்கு மேலதிகமாக ஏதேனும் ஒரு நபர் பணிப்பாளர் பதவியை வகிப்பாரானால், அந் நபர், 2009 சனவரி 1ஆம் திகதி தொடக்கம் அதிகபட்சமாக மூன்று வருட காலப்பகுதிக்குள் மேற்கூறப்பட்ட வரையறையுடன் இணங்குவதோடு நாணயச் சபைக்கு அறிவிக்கவும் வேண்டும்.

5. கீழ்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(9)(iv) இனை உடனடுத்து புகுத்தப்படல் வேண்டும்.

   3(9)(v) வங்கித்தொழில் சட்டத்தினால் வழங்கப்பட்டவாறு உடல் நலக்குறைவு அல்லது வேறு தகுதியின்மை போன்ற ஏதேனும் காரணங்களுக்காக பணிப்புரைகள் 3(2)(ii)(ஆ), 3(3)(i)(அ) மற்றும் 3(3)(ii)(அ) ஆகியவற்றில் கூறப்பட்ட விதி விலக்கல்களை பயன்படுத்தக்கூடாது என நாணயச் சபை கருதுவதோடு, நாணயச் சபை அத்தகைய காரணங்களை குறிப்பிட்ட நபருக்கு அறிவிப்பதுடன், நாணயச் சபையானது அது பற்றி கேட்டறிந்த பின்னர் விதிவிலக்கு காலப்பகுதியை வரையறை செய்யலாம்.

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(i)இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 ஓகத்து 15

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1), மற்றும் 2008 யூலை 8ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு நியமங்களுக்கமைவாக, நாணயச் சபையானது, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் 2008 ஏப்பிறல் 23ஆம் திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க பணிப்புரைக்கு பதிலாக கீழ்வரும் பணிப்புரைகளை வழங்குகின்றது. இப் பணிப்புரைகளானது 2008ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1. 2008 ஏப்பிறல் 23ஆம் திகதியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையில் விவரிக்கப்பட்ட "நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் ஸ்தாபக பணிப்பாளர்கள், பதவியிலுள்ள தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் தொடர்பான மாறிச் செல்லும் ஏற்பாடுகள்", ஆகியவை இத்தால் இரத்து செய்யப்படுகிறது.

2. பின்வரும் புதிய பணிப்புரை, நடைமுறையிலுள்ள 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(2)(ii)(ஆ) இனை பதிலீடு செய்யும்.

   3(2) (ii) (ஆ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொதுவான விதிவிலக்கு பொருந்தும்.

   2008 சனவரி 1ஆம் திகதி ஒன்பது வருடங்களை பூர்த்தி செய்த ஒரு பணிப்பாளர், அல்லது 2008 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பாக ஏதேனும் ஒரு காலப்பகுதியில் அக் காலத்தவணையை பூர்த்தி செய்தவர், 2009 சனவரி 1ஆம் திகதி தொடக்கம் மேலும் அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு அப் பதவியை தொடரலாம்.

3. கீழ்வரும் புதிய பணிப்புரை நடைமுறையிலுள்ள 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(3)(i)(அ) மற்றும் 3(3)(i)(ஆ) இனை பதிலீடு செய்யும்.

   3(3)(i)(அ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொது விதிவிலக்கு பொருந்தும்.

   2008, சனவரி 1ஆம் திகதியன்று 70 வயதை பூர்த்தி செய்த ஒரு பணிப்பாளர், அல்லது 2008 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 70 வயதை பூர்த்தி செய்தவர், 2009 சனவரி 1ஆம் திகதி முதல் மேலும் அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு அப் பதவியை தொடரலாம்.

4. கீழ்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(3)(ii) இனை உடனடுத்து புகுத்தப்படல் வேண்டும்.

   3(3)(ii)(அ) இச் சந்தர்ப்பத்தில், கீழ்வரும் பொது விதிவிலக்கு பொருந்தும்.

   மேல் கூறப்பட்ட வரையறைகளுக்கு மேலதிகமாக ஏதேனும் ஒரு நபர் பணிப்பாளர் பதவியை வகிப்பாரானால், அந் நபர், 2009 சனவரி 1ஆம் திகதி தொடக்கம் அதிகபட்சமாக மூன்று வருட காலப்பகுதிக்குள் மேற்கூறப்பட்ட வரையறையுடன் இணங்குவதோடு நாணயச் சபைக்கு அறிவிக்கவும் வேண்டும்.

5. கீழ்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை 3(9)(iv) இனை உடனடுத்து புகுத்தப்படல் வேண்டும்.

   3(9)(v) வங்கித்தொழில் சட்டத்தினால் வழங்கப்பட்டவாறு உடல் நலக்குறைவு அல்லது வேறு தகுதியின்மை போன்ற ஏதேனும் காரணங்களுக்காக பணிப்புரைகள் 3(2)(ii)(ஆ), 3(3)(i)(அ) மற்றும் 3(3)(ii)(அ) ஆகியவற்றில் கூறப்பட்ட விதி விலக்கல்களை பயன்படுத்தக்கூடாது என நாணயச் சபை கருதுவதோடு, நாணயச் சபை அத்தகைய காரணங்களை குறிப்பிட்ட நபருக்கு அறிவிப்பதுடன், நாணயச் சபையானது அது பற்றி கேட்டறிந்த பின்னர் விதிவிலக்கு காலப்பகுதியை வரையறை செய்யலாம்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 ஓகத்து 20

எனது தொடர்பு : **02/17/800/0005/01**
**உமது தொடர்பு :**

**திரவச் சொத்துக்கான வரைவிலக்கணம் - திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 86இற்கு அமைவாக**

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா

2007ஆம் ஆண்டில் இலங்கை அரசால் வழங்கப்பட்ட பன்னாட்டு அரச பிணைகளிலான முதலீடுகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் 86ஆவது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட "திரவச் சொத்துகள்" வரைவிலக்கணத்தின் விடயம் (ஜி) இன் நியதிகளுக்கமைய திரவச் சொத்துக்களாக கருதப்படும் என நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

எனவே, வங்கித்தொழில் சட்டத்தின் 21ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்குமுகமாக அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் திரவச்சொத்து வீதத்தினைக் கணிப்பிடும் போது அவற்றின் பன்னாட்டு அரச பிணைகளிலான முதலீடுகளின் நாளாந்த சந்தைப் பெறுமதியினையும் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளலாம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 ஓகத்து 20

**எனது தொடர்பு : 02/17/800/0005/01**

**உமது தொடர்பு :**

**2007ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வர்த்தகத்தில் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் ஈடுபடுவதற்கு அனுமதியளித்தல்**

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்*
*அனைத்து முதன்மை நிறைவேற்று அதிகாரிகள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா

திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 23, 25 மற்றும் 26 இன் கீழ் அமைக்கப்பட்ட, வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் திட்டம்) சட்டம் 2000 இன் ஏற்பாடுகளின் அடிப்படையில் 2007இல் இலங்கை அரசால் விநியோகிக்கப்பட்ட சர்வதேச அரச பிணைகளில் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இரண்டாந்தரச் சந்தையில் முதலிடுவதற்கு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் இணக்கத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை அதிகாரமளிக்கிறது என்பது இத்தால் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், 8 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட நிர்ணயங்கள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 செத்தெம்பர் 05

**நிர்ணயங்கள்**

**2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணம்**

**எடுத்துக்காட்டு**

1 இத் தீர்மானம் 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் தீர்மானம் என நிர்ணயம் எடுத்துக்காட்டப்படலாம். இத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாகக் கருதப்படும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8இன் கீழான அதிகாரமளிப்பு**

2 (1) திருத்தியமைக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) இற்கு அமைவாக, வெவ்வேறு வகையான வங்கித்தொழில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வங்கிகள் அடிப்படையினைக் கருத்திற்கொண்டு நாணயச் சபை உரிமக் கட்டணத்தைத் தீர்மானித்ததற்கமைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு உரிமக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

(2) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(2) இற்கு அமைவாக, ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் செலுத்த வேண்டிய உரிமக் கட்டணத்தையும், செலுத்தப்பட வேண்டிய வழிமுறைகளையும் அந்தந்த வங்கிகளுக்கு நாணயச் சபை அறிவிக்கும்.

(3) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(3) இன்படி, வங்கித்தொழில் வியாபார வகுப்புக்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற உரிமக் கட்டணமானது அந்த வகுப்பில் அமைந்த எல்லா வங்கிகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

**2009ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த உரிமக் கட்டணம்**

3. திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) இன் மூலம் பகிரப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக, 2009ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த உரிமக்கட்டணத்தை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வரும் அடிப்படையில் செலுத்த வேண்டும் என நாணயச் சபை நிர்ணயித்துள்ளது.

(1) வெளிநாட்டு செலாவணி வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் உள்ளடங்கலான உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரம் மேற்கொள்ளும் வங்கிகள் ரூ.500,000.00;

(2) கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் மட்டும் ரூ.300,000.

**உரிமக் கட்டணம் செலுத்துகை**

4. (1) ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் அதற்குரிய உரிமக் கட்டணத்தை 2009 சனவரி 31 இற்கு முன்னர் மத்திய வங்கிக்கு செலுத்தவேண்டும்.

(2) 2009இல் உரிமம் பெற்ற ஒவ்வொரு வர்த்தக வங்கியும் உரிமம் பெறுவதற்கு முன்னர் 2009 இற்கான உரிமக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**எதிர்வரும் ஆண்டுகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம்**

5. எதிர்வரும் ஆண்டுகளுக்குரிய உரிமக்கட்டணம் நாணயச்சபையால் நிர்ணயிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வங்கிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

**முன்னைய நிர்ணயம் இரத்து**

6. வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8 இற்கு அமைவாக, நாணயச் சபையினால் 1989 மாச்சு 1ஆம் திகதியிட்டு வெளியிட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உரிமக்கட்டணம் தொடர்பான நிர்ணயம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், பிரிவின் 76டி(6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 செத்தெம்பர் 05

**தீர்மானங்கள்**

**2008ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம்**

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான ஆண்டு உரிமக் கட்டணம்**

எடுத்துக்காட்டு

1 2008ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தீர்மானம் என இந்த தீர்மானத்தை எடுத்துக்காட்டப்படலாம். இந்த தீர்மானத்தில் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாகக் கருதப்படும்.

வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி 76டி(6) கீழான அதிகாரமளிப்பு

2 (1) திருத்தியமைக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(டி)6 இற்கு அமைவாக, வெவ்வேறு வகையான வங்கித்தொழில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வங்கிகளின் அடிப்படையில் நாணயச் சபை உரிமக் கட்டணத்தைத் தீர்மானிப்பதற்கமைய உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகள் மத்திய வங்கிக்கு அனுமதிக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும்.

2009ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த உரிமக் கட்டணம்

3. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76டி(6) இன் மூலம் பகிரப்பட்ட அதிகாரங்களுக்கமைவாக, 2009ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த உரிமக் கட்டணமாக ரூ.200,000 ஐ ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டும் என நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

உரிமக் கட்டணம் செலுத்துகை

4. (1) ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் அதற்குரிய உரிமக் கட்டணத்தை 2009 சனவரி 31 இற்கு முன்னர் மத்திய வங்கிக்கு செலுத்தவேண்டும்.

(2) 2009இல் உரிமம் பெற்ற ஒவ்வொரு சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் உரிமப்பத்திரத்தைப் பெறுவதற்கு முன்னர் 2009 இற்கான உரிமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் ஆண்டுகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம்

5. எதிர்வரும் ஆண்டுகளுக்குரிய அனுமதிக் கட்டணம் நாணயச் சபையால் நிர்ணயிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் வங்கிகளுக்கு தெரியப்படுத்தப்படும்.

முன்னைய நிர்ணயம் இரத்து

6. 2005ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76டி(6) இற்கு அமைவாக, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த அனுமதிக் கட்டணம் தொடர்பாக 2005 ஓகத்து 11இல் நாணயச் சபையால் வெளியிடப்பட்ட நிர்ணயம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 செத்தெம்பர் 12

எனது தொடர்பு : **02/17/600/0009/001**
உமது தொடர்பு :

**குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்*
*அனைத்து முதன்மை நிறைவேற்று அதிகாரிகள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, நிதி திட்டமிடல் அமைச்சின் ஒப்புதலுடன் நியூசிலாந்து டொலரினை உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு இரண்டினதும் கொடுக்கல் வாங்கல்களுக்கான குறித்துரைக்கப்பட்ட நாணயமாக நிர்ணயித்திருக்கிறது என்பது தங்களுக்கு அறியத் தரப்படுகிறது.

இதற்கமைய, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 23, 24, 25 மற்றும் 26இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட 2000ஆம் ஆண்டின் 7ஆம் நாளிடப்பட்ட 2000ஆம் ஆண்டு வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் திட்டம்) கட்டளையானது நியூசிலாந்து டொலரை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்களுக்கான குறித்துரைக்கப்பட்ட நாணயமாக உள்ளடக்கும் விதத்திலும் டியூச்மார்க், பிரான்சிய பிராங் மற்றும் நெதர்லாந்து கில்டர் என்பனவற்றைக் குறித்துரைக்கபட்ட வெளிநாட்டு நாணயங்களின் அட்டவணையிலிருந்து நீக்கும் விதத்திலும் இத்தால் திருத்தப்படுகிறது.

குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் திருத்தப்பட்ட அட்டவணையைக் கொண்டுள்ள 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டக் கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 23, 25 மற்றும் 26இன் கீழ் அமைச்சரின் அனுமதியுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 செத்தெம்பர் 12

**2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கட்டளை**

**வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபார திட்டம்) கட்டளை**

எடுத்துக்காட்டல்

2008ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளைச் சட்டம் என இக் கட்டளை எடுத்துக்காட்டப்படலாம். இக் கட்டளையில் குறிக்கப்பட்டுள்ள பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளால் கருதப்படும்.

இக் கட்டளையில் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் வெளிநாட்டு நாணயங்கள் வங்கித்தொழில் கட்டளையின் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபார திட்டம்) கீழ் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

குறித்துரைக்கப் பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

இக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை, 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் திகதியிடப்பட்ட வங்கித்தொழில் கட்டளையின் அட்டவணை 2000 இனை (கரை கடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) அகற்றுகிறது.

## குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

(i) அவுஸ்திரேலியன் டொலர்
(ii) கனேடியன் டொலர்
(iii) டனிஷ் குரோனர்
(iv) யூரோ
(v) கொங்கொங் டொலர்
(vi) யப்பானிய யென்
(vii) நியூசிலாந்து டொலர்
(viii) நோர்விஜியன் குரோனர்
(ix) இசுரேலிங் பவுண்
(x) சிங்கப்பூர் டொலர்
(xi) சுவிடிஷ் குரோனர்
(xii) சுவிஸ் பிராங்
(xiii) ஐ.அ.டொலர்

**தொடர்பு எண்: 02/04/004/0012/001**

வங்கித்தொழில் மேற்பார்வைத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 8

*உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அதிகாரிகள் அனைவருக்கும்*

## வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வங்கித்தொழில் முறைமையை பயன்படுத்துதல்

பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்படாத பல எண்ணிக்கையிலான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் முதலீட்டுச் சாதனங்கள் மற்றும் திட்டங்கள் போன்ற போலிகளை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் நிதியினை திரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தகைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வங்கித்தொழில் முறைமையை தங்கள் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதையும் மற்றும் சில வங்கிகள் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் சட்டபூர்வ தன்மையையோ அல்லது அவற்றிலுள்ள சாத்தியமான இடர்நேர்வுகளையோ அடையாளம் கண்டு கொள்ளாமல் இக் கொடுக்கல் வாங்கல்களை அனுமதிப்பதையும் நாங்கள் அவதானித்துள்ளோம்.

இவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களையும் தனிநபர்களையும் வங்கித்தொழில் முறைமையை பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தால் அது உங்கள் நிறுவனத்தின் நன்மதிப்பினைக் கறைபடுத்தி விடும் என்பதுடன் அதன் காரணமாக வங்கித்தொழில் முறைமையில் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் குறைந்து விடும் என்பதும் நீங்கள் அறிந்ததே.

இது தொடர்பாக, 2001 திசெம்பர் 3ஆம் நாள் திகதியிடப்பட்ட வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல், 2007 சனவரி 19ஆம் நாள் திகதியிடப்பட்டு வங்கி மேற்பார்வை திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட உமது வாடிக்கையாளரை அறிந்து கொள்ளும் வழிமுறைகளும் மற்றும் 2007 மே 18ஆம் நாள் திகதியிடப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல் தொடர்பான விதிமுறைகள் போன்றவற்றுக்காக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களை நாங்கள் உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம். உங்கள் வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல் மற்றும் உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுதல் என்பன தொடர்பாக சிறப்பான கவனம் எடுக்குமாறும் இவ்வலியுறுத்தல்களில் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு வருமான மூலங்கள் மற்றும் நிதிய நகர்வுகள் கண்காணிக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய சுற்றறிக்கைகளுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

எச் ஏ கருணரத்ன
**நிதியியல் உளவறிதல் பிரிவு**

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின், 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 ஒத்தோபர் 24

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாகவும், 2008 செத்தெம்பர் 1ஆம் நாள் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளுக்கிணங்கவும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2008 ஓகத்து 15ஆம் நாள் திகதியிடப்பட்ட 2008இன் 5ஆம் இலக்க பணிப்புரையினைத் திருத்தும் விதத்தில் நாணயச் சபை பின்வரும் பணிப்புரையினை விடுக்கிறது. இப்பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. கீழ் வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டு ஓகத்து 15ஆம் திகதியிடப்பட்ட, 2008ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையை பதிலீடு செய்யும்.

   3(9)(வி) வங்கித்தொழில் சட்டத்தில் வழங்கப்பட்டவாறு உடல் நலக்குறைவு அல்லது வேறு தகுதியின்மை போன்ற ஏதேனும் காரணங்களுக்காக பணிப்புரைகள் 3(2)(ii)ஆ, 3(3)(i)அ மற்றும் 3(3)(ii) அ ஆகியவற்றில் கூறப்பட்ட விதி விலக்குகளை பயன்படுத்தக்கூடாது என நாணயச் சபை கருதுவதோடு நாணயச் சபை அத்தகைய காரணங்களை குறிப்பிட்ட நபருக்கு அறிவிப்பதுடன், அவரிடமிருந்து பதில் கிடைத்த பின்னர், நாணயச் சபை விதிவிலக்கு காலப்பகுதியினையும் மட்டுப்படுத்தலாம்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின், 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(i) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 ஒத்தோபர் 24

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டு 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(i)ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாகவும், 2008 செத்தெம்பர் 1ஆம் நாள் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளுக்கிணங்கவும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2008 ஓகத்து 15ஆம் நாள் திகதியிடப்பட்ட 2008இன் 5ஆம் இலக்க பணிப்புரையினைத் திருத்தும் விதத்தில் நாணயச் சபை பின்வரும் பணிப்புரையினை விடுக்கிறது. இப்பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. கீழ் வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டு ஓகத்து 15ஆம் திகதியிடப்பட்ட, 2008ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையை பதிலீடு செய்யும்.

   3(9)(வி) வங்கித்தொழில் சட்டத்தில் வழங்கப்பட்டவாறு உடல் நலக்குறைவு அல்லது வேறு தகுதியின்மை போன்ற ஏதேனும் காரணங்களுக்காக பணிப்புரைகள் 3(2)(ii)ஆ, 3(3)(i)அ மற்றும் 3(3)(ii) அ ஆகியவற்றில் கூறப்பட்ட விதி விலக்குகளை பயன்படுத்தக்கூடாது என நாணயச் சபை கருதுவதோடு நாணயச் சபை அத்தகைய காரணங்களை குறிப்பிட்ட நபருக்கு அறிவிப்பதுடன், அவரிடமிருந்து பதில் கிடைத்த பின்னர், நாணயச் சபை விதிவிலக்கு காலப்பகுதியினையும் மட்டுப்படுத்தலாம்.

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 31

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும்**

உலகளாவிய நிதியியல் சந்தை நெருக்கடிகள் ஆரோக்கியமற்ற ஊகரீதியான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் சாத்தியத்தன்மை, வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான தாக்கம், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பல்களைத் தவிர்ப்பதற்கான தேவை என்பன தொடர்பான கரிசனைகளை கருத்திற் கொண்டு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வரும் முன்மதியுடைய தேவைப்பாடுகளை உடனடியாக நடைமுறைக்கிடுமாறு அறிவிக்கப்பட்டன.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவர்களின் வாடிக்கையாளர்களுடன் வெளிநாட்டு செலாவணியில் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்கையில் (ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்களை புதுப்பிப்பது உட்பட), மறுஅறிவித்தல் வரை பின்வரும் நிபந்தனைகளுக்கு உடனடியாக இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(i) வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை அத்துடன்/ அல்லது கொள்வனவிற்கான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் 180 நாள் வரையானதாக மாத்திரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுப்பனவுகளினதும் பெறுகைகளினதும் நோக்கம் பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகம் மீதானதாக மாத்திரம் இருத்தலும் வேண்டும்.

(ii) வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்பான உண்மையான வர்த்தக ஒப்பந்தங்களுடன் தொடர்பானவையே என்பதில் அவரே திருப்திப்பட்டுக் கொள்ளல் வேண்டும்.

(iii) வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைக்காக வாடிக்கையாளருடன் முன்னோக்கிய ஒப்பந்தத்தைச் செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்ற நேரத்தில், ஒப்பந்த பெறுமதியில் 100 சதவீதத்திற்குக் குறையாத இலங்கை ரூபாவிலான வைப்பொன்றினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதனை ஒப்பந்தத்தின் செயலாற்ற நாள் வரை வைத்திருத்தல் வேண்டும்.

(iv) முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தத்தின் ஆதாரமான தொடர்பான வர்த்தக ஒப்பந்தத்தின் நியதிகளின்படி, விடயம் எவ்வாறாயிருப்பினும், முன்னோக்கிய ஒப்பந்தத்தின் செயலாற்ற திகதி வெளிநாட்டுச் செலாவணியின் கொடுப்பனவு அல்லது பெறுகைத் திகதிக்கு அப்பாலானதாக இருக்கக்கூடாது.

(v) தற்பொழுது, வாடிக்கையாளரினால் செய்யப்படும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தத்தின் எந்தவொரு இரத்தும் தண்டனைக்குரியதாக இருத்தல் வேண்டும். இத் தண்டனை குறைந்தது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இவ் நடவடிக்கையினால் ஏற்படும் இழப்பினை முழுமையாக ஈடு செய்யத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

3. இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பின்வருவனவற்றிற்குப் பொருந்தாது என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

(i) வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய ஒப்பந்தங்கள் (உள்ளூர் மற்றும் வெளிநாடு),

(ii) இன்னொரு வெளிநாட்டு நாணயத்துடன் சேர்த்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இருக்குமிடத்து அத்தகைய முன்னோக்கிய ஒப்பந்தங்கள்,

(iii) 2002 மே 8ஆம் நாளிடப்பட்ட எண் 06/12/10/2002 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் விடயம் 3இல் குறித்துரைக்கப்பட்ட பங்கு வர்த்தகப்படுத்தல் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வெளிநாட்டு செலாவணிக் கொள்வனவுகள்,

(iv) அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகள்.

4. ஒப்பந்தமொன்றினைப் புதுப்பித்தல் அல்லது நீடித்தல் தொடர்பான விடயத்தினைப் பொறுத்தவரை, முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தத்தின் ஆகக்கூடிய காலமானது ஏற்கனவே காலாவதியான காலப்பகுதி உட்பட 180 நாட்களாக இருத்தல் வேண்டும்.

காலப்பகுதி 180 நாட்களை விஞ்சியதாக இருக்குமிடத்து புதிய ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான புதிய முன்னோக்கிய ஒப்பந்தத்தினைப் போன்று 100 சதவீத வைப்பு தேவைப்படுத்தப்படும்.

5. அத்தகைய வைப்புக்கள் மீதான வட்டியினை அதிகாரமளிக்கக்பட்ட வணிகர்கள் செலுத்துவர்.

6. இறக்குமதியாளரொருவரைப் பொறுத்தவரை, நாணயக் கடிதம் தொடர்பான அளவு வைப்பு ஏதும் ஏற்கனவே பெறப்பட்டிருப்பின், வெளிநாட்டுச் செலாவணி விற்பனைக்கான முன்னோக்கிய ஒப்பந்தத்திற்காக தேவைப்படுத்தப்பட்ட வைப்பாக கருதப்படக்கூடாது. எனவே, இலங்கை ரூபாவில் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 100 சதவீதம் புதிய வைப்பொன்று தேவைப்படுத்தப்படுகிறது.

7. எந்தவொரு நாளிலும் இடம்பெறும் வெளிநாட்டுச் செலாவணியிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் மறுஅறிவித்தல் வரை அதேநாளன்று முடிவில் (பிப 6.00 மணிக்குப் பிந்தாமல்) இங்கேயுள்ள இணைப்பில் காட்டப்பட்டுள்ள படிவத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு

## வெளிநாட்டு நாணயத்திலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர் :**

**திகதி :**

| | உரிய நாளின் ஆரம்பத்தில் வெளிநின்ற மீதி (ஐ.அ.டொலருக்குச் சமமான மில்லியன்) | உரிய நாளன்று பெற்ற மொத்த கொடுக்கல் வாங்கல்கள் (ஐ.அ.டொலருக்குச் சமமானது மில்லியன்) | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த அளவு வைப்புக்கள் (இலங்கை ரூபா மில்லியன்) | நாளின் இறுதியில் வெளிநின்ற மீதி (ஐ.அ.டொலருக்குச் சமமானது மில்லியன்) |
|---|---|---|---|---|
| அ. மொத்த முன்னோக்கிய விற்பனைகள் | | | | |
| ஆ. மொத்த முன்னோக்கிய கொள்வனவுகள் | | | பொருந்தாது | |

**மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.**

**திகதி:**

.......................................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்**

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 31

*அனுமதியளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**இறக்குமதி உண்டியல்களுக்கான முற்பணம்**

அனுமதியளிக்கப்பட்ட வணிகர்களான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேலும் அறிவிப்பு வரும் வரை அவர்கள் இறக்குமதி உண்டியல்களை விளைவிக்கக் கூடாதென்றும் அவ்வுண்டியல்கள் இறக்குமதிக் கட்டளையிடும் நேரத்திலேயே வழங்குநர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதின் பிரகாரம் மதிப்பளிக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0007/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 நவெம்பர் 06

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு*
*வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

**பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வு கழகத்தை தடை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகள்**

இலங்கையில் தமிழர் புனர்வாழ்வு கழகத்தை தடை செய்வதற்காக, 2007ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதி 9ஆம் இலக்க அவசரகால சட்ட (தமிழர் புனர்வாழ்வு கழகத்தைச் தடை செய்தல்) ஒழுங்குவிதிகள் மேன்மை தங்கிய சனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார் என்பதனை நாங்கள் உங்களுக்கு அறியத் தருகிறோம். இது தொடர்பாக 2007ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 1529/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினுடைய பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நாங்கள் இவ்வொழுங்கு விதிகளின் ஒழுங்குவிதி 3 இன்பால் உங்களின் விசேட கவனத்தைக் ஈர்க்க விரும்புவதுடன் மேல் குறிப்பிடப்பட்ட தடை செய்யப்பட்ட நிறுவனத்துடன் எவ்வித கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என ஆலோசனை வழங்குகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு:
படி: செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் சங்கம்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேடமானது

இல. 1529/13 புதன்கிழமை 2007 திசெம்பர் 26

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (40ஆம் அத்தியாயம்)

### (40ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

மகிந்த ராஜபக்ஷ
சனாதிபதி

கொழும்பு
2007 திசெம்பர் 26

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, அவசரகால (தமிழ் புனர்வாழ்வு ஒழுங்கமைப்புத் தடை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காகவும் பொது ஒழுங்கமைதியை நிலைநாட்டுவதற்காகவும் சட்ட ஆட்சியைப் போற்றிக் காப்பதற்காகவும் “தமிழ் புனர்வாழ்வு கழகம்” எனப் பெயர் கொண்ட கழகம் இத்தால் தடை விதிக்கப்படுகின்றது.

3. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்தும் அதன் பின்னரும் -

(அ) (இதனகத்துப் பின்னர் “தடைவிதிக்கப்பட்டுள்ள கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “தமிழ் புனர்வாழ்வு ஒழுங்கமைப்புடனான” ஏதேனும் தொடர்பை, அல்லது அதிலான உறுப்பாண்மையை, அல்லது அதனைப் பின்பற்றுவதனைக் குறிப்பிடுகின்ற அல்லது சுட்டிக்காட்டுகின்ற ஏதேனும் சீருடையை, உடையை, குறியீட்டை அல்லது வேறு சின்னத்தை அணிகின்றவரான; அல்லது

(ஆ) தடைவிதிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பின் ஏதேனும் கூட்டத்தைக் கூட்டுகின்றவரான அல்லது அதற்கு வருகை தருகின்றவரான அல்லது சொல்லப்பட்ட தடைவிதிக்கப்பட்டுள்ள கழகத்தின் ஏதேனும் செயற்பாட்டில், அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட ஏதேனும் செயற்பாட்டில் பங்குபற்றுகின்றவரான அல்லது ஈடுபடுகின்றவரான; அல்லது

(இ) உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக ஆட்களை வரைவழைப்பதன் மூலம் அல்லது வற்புறுத்தல் மூலம் அல்லது நிதிகளை உதவுகின்றதன் மூலம் அல்லது சேகரிக்கின்றதன் மூலம், அல்லது தகவலைக் கொடுத்துதவுவதன் மூலம், அல்லது சொல்லப்படட தடைவிதிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்கு வேறேதேனும் உதவியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், தடைவிதிக்கப்பட்டுள்ள கழகத்திற்கு ஆதரவளிக்கின்றவரான; அல்லது

(ஈ) தடைவிதிக்கப்பட்டுள்ள கழகத்தின் எவரேனும் உறுப்பினர் கைது செய்யப்படுவதை, விளங்கப்படுவதை அல்லது தண்டிக்கப்படுவதை, அதன் மூலம் தடுக்கும், தடங்கல் செய்யும் அல்லது அதனோடு தலையிடும் உட்கருத்துடன், அத்தகை உறுப்பினருக்குப் புகலிடமளிக்கின்றவரான, அவரை ஒளித்து வைத்திருக்கின்றவரான அல்லது வேறேதேனும் முறையில் உதவுகின்றவரான; அல்லது

(உ) தடைவிதிக்கப்பட்டுள்ள கழகத்தினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரினால் அச்சிடப்படுகின்ற அல்லது அச்சிடப்படுவாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட விடயத்தைத் தயாரிக்கின்றவரான, அச்சிடுகின்றவரான, விநியோகிக்கின்றவரான அல்லது வெளியிடுகின்றவரான அல்லது அதனைத் தயாரிப்பதில், அச்சிடுவதில், விநியோகிப்பதில் அல்லது வெளியிடுவதில் எவ்வகையிலேனும் சம்பந்தப்பட்டுள்ளவரான அல்லது அக்கறை கொண்டுள்ளவரான; அல்லது

(ஊ) சொல்லப்பட்ட தடைவிதிக்கப்பட்டுள்ள கழகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துக்காக, தடைவிதிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பினால் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரால் ஆக்கப்பட்ட ஏதேனும்

கட்டளையை, செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது வெளிப்படுத்துகையை அல்லது வற்புறுத்துகையை, அல்லது அது தொடர்பான ஏதேனும் தகவலை, எத்தகையதுமான எம்முறையிலேனும் வேறெவரேனுமாளுக்குத் தெரிவிக்கின்றவரான அல்லது தெரிவிக்க எத்தனிக்கின்றவரான,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பதினைந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

4. (1) தடைவிதிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படுகின்ற ஏதேனும் பணத்தின், எவையேனும் பிணையங்களின் மற்றும் வரவுகளின் கட்டுக்காப்பை எவரேனுமாள் கொண்டுள்ளாரென, அமைச்சர், தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய விசாணையின் பின்னர் திருப்திப்படுமிடத்து, அமைச்சர், எழுத்திலான கட்டளையின் மூலம் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலுள்ளவாறான அத்தகைய பணங்களும் பிணையங்களும் வரவுகளும் அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட பின்னர் அவரது கட்டுக்காப்பினுள் வரக்கூடிய அத்தகைய எவையேனும் பணங்களும் பிணையங்களும் வரவுகளும் அத்துடன் சொல்லப்பட்ட தடைவிதிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்குச் சொந்தமான வேறேதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமும் அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் அமைச்சரின் முடிபு இறுதியானதும் முடிவானதுமானதால் வேண்டுமென்பதுடன், எழுத்தாணை வகையாகவோ அல்லது வேறு வகையாகவோ ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

**தொடர்பு எண்: 02/17/800/0007/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 நவெம்பர் 06

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா

**தவறாக வழிநடத்தும் மற்றும் ஒழுக்க விழுமியத்திற்கு புறம்பான விளம்பரங்கள்**

தவறாக வழிநடத்தும் ஒழுக்க விழுமியங்களுக்கு புறம்பான விளம்பரங்களை, அதாவது ஐ.அ.டொலர் வைப்புகளுக்கு 15 சதவீத வட்டி, நிலையான வைப்புகளுக்கு 30 சதவீத வட்டி, 300 சதவீதமான பிரமாண்டமான மிகையூதியம் அல்லது 200 சதவீதம் மிகையூதியம் கொண்ட வட்டி போன்ற பல விளம்பரங்களை, வங்கிகள், ஊடகங்களினூடாகவும் பொது இடங்களில் நிறுவப்படும் விளம்பரப் பலகைகளினூடாகவும் பிரசுரிப்பது பற்பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த விளம்பரங்கள் மிகவும் தவறாக வழிநடத்துவனவாயும், நாட்டின் பொருளாதார நிலையினை நேர்மாறாக விவரணப்படுத்துகின்றவாகவும் அமைகின்றன. இவ் வகை விளம்பரங்கள் தவறான வழிகாட்டல்களை ஏற்படுத்துவதாக பொதுமக்களிடமிருந்து கூட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. போட்டி நிறைந்த சந்தையில் நல்ல சந்தைப்படுத்தல் உபாயங்கள் அவசியமானவை என்தை நாம் உணர்கின்ற அதேவேளையில், அவை ஒழுக்க விழுமியங்கட்கு அமைவானவையாகவும் மிகத் தெளிந்த கொள்கையுடையனவாகவும் இருக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

எனவே, உரிமம் பெற்ற வங்கிகள் அனைத்தும், இத்தகைய தவறாக வழிநடத்தும் ஒழுக்க விழுமியங்களுக்கு புறம்பான விளம்பரங்களை பிரசுரிப்பதை உடனடியாக தவிர்க்கும்படியும் மேலும் வங்கிச் சாதனங்களின் தன்மைகளையும் அந்நடைமுறையிலிருக்கும் வட்டி வீதங்களையும் பொதுமக்கள் தெளிவாக அறிந்துகொள்ளும் விதத்தில் எல்லா முக்கிய தகவல்களும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

2008 நவெம்பர் 07

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள்**

நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் தொடர்பாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2008.11.04ஆம் திகதிய எண் 35/01/005/0010/09 கொண்ட சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் ஏற்றுக்கொள்ளல் நியதிகள் மீது அட்டவணை 'அ' இல் தரப்பட்டுள்ள உந்து ஊர்திகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான விடயங்களின் (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) இறக்குமதி மீது பின்வரும் தேவைப்பாடுகளை மறுஅறிவித்தல் வரை, உடனடியாக நடைமுறைக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. ஏற்றுக்கொள்ளல் நியதிகளின் கீழ், அட்டவணை 'அ' இல் தரப்பட்டுள்ள இறக்குமதிகளின் பொருட்பட்டியல் பெறுமதியின் மீது 200 சதவீதமான அளவு வைப்புத் தேவைப்பாடொன்று ஆவணங்கள் விடுவிக்கப்படும் நேரத்திலும் இறக்குமதியாளரினால் உண்டியல் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நேரத்திலும் இறக்குமதியாளரினால் வைத்திருக்கப்படல் வேண்டும்.

2. அதே பொருள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் அளவு வைப்புத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டிருக்காத போதும் கூட பொருள்பட்டியலின் மொத்தப் பெறுமதியின் மீது 200 சதவீத அளவுத் தேவைப்பாடு இருத்தல் வேண்டும்.

3. அளவு வைப்புத் தேவைப்பாடு பெறப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கி பொருட்பட்டியல் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

4. அளவு வைப்புக்கள் ஆவணச் சான்றுகளை சமர்ப்பிப்பதன் மீது அல்லது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிமுறைகளினூடான கொடுப்பனவுகளின் மீது மற்றும் இறக்குமதிகள் அகற்றப்பட்டமைக்கான சுங்க ஆவணங்களின் மீது விடுவிக்கப்படல் வேண்டும்.

5. இவ்விறக்குமதிகள் தொடர்பான அளவு வைப்புக்களை மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் வங்கிகள் முற்பணங்கள் எதனையும் வழங்கக்கூடாது.

6. அளவு வைப்புக்கள் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.

7. அத்தகைய அளவு வைப்புக்களுக்கு வங்கி வட்டி செலுத்துதல் வேண்டும்.

8. வங்கிகள் அத்தகைய அளவு வைப்புக்களின் விபரங்களடங்கிய மாதாந்தக் கூற்றினை இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில் வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. 2008 நவெம்பர் 6ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ கப்பலேற்றப்பட்ட இறக்குமதிகளைப் பொறுத்த வரை அத்தகைய இறக்குமதிகளுக்கு மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகள் பொருந்தா. கப்பலேற்றப்பட்ட திகதி என்பது பொருட்கள் ஏற்றப்பட்ட பட்டியல் நாள் எனக் கருதப்படும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு 1

**ஏற்றுக் கொள்ளல் நியதிகளின் கீழ் அட்டவணை 'அ' இல் தரப்பட்டுள்ள விடயங்களின் இறக்குமதி மீதான அளவு வைப்புக்கள்**

வங்கியின் பெயர் :
அறிக்கையிடும் மாதம் :

| இறக்குமதியாளரின் பெயர் | விபரம் | | இறக்குமதியாளரின் பெயர் | வைப்பு ரூபாவில் | வைப்பு திகதி | விடுவிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|---|
| | விடயம் | இணங்குவிப்பு குறியீடு | | | | |
| | | | | | | |

............................................................................
அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பம்

தயவுசெய்து அறிக்கையினை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனுப்பவும்
தொலைநகல்: 2477711
மின்னஞ்சல் : hdajit@cbsl.lk

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2008 திசெம்பர் 05

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான எமது 07.11.2008 நாளிடப்பட்ட எண். 02/17/800/0006/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு எமது 07.11.2008 நாளிடப்பட்ட எண் 02/17/800/0006/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட அட்டவணை 'அ', **ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகளுக்கெதிராக 200 சதவீத அளவு வைப்பு தேவைப்படும் விடயங்களின்** பட்டியல் என்ற தலைப்பினைக் கொண்ட அட்டவணை அ இன் மூலம் 08.12.2008 இலிருந்து அகற்றப்படுகின்றது என்பது இத்தால் அறியத் தரப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

2008 திசெம்பர் 8

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்குமான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், 2008 திசெம்பர் 8ஆம் நாள் தொடக்கம் பின்வரும் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

1. ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்படுகின்ற விடயங்களின் பட்டியல் 2008.12.05 என்ற தலைப்பினைக் கொண்ட அட்டவணை அ1 இல் தரப்பட்டுள்ள இறக்குமதிகளின் பொருள்பட்டியலின் பெறுமதி மீதான 100 சதவீத அளவு வைப்பானது இறக்குமதியாளர்களினால் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நேரத்தில், ஆவணங்களை விடுவிக்கின்ற வங்கிகளில் இறக்குமதியாளர்களினால் வைத்திருக்கப்படல் வேண்டும். அதே பொருட்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் சில அளவுத் தேவைப்பாட்டிற்கு உட்பட்டிருக்காத போதும் கூட பொருட்பட்டியலின் மொத்தப் பெறுமதியின் மீது 100 சதவீத அளவுத் தேவைப்பாடு இருத்தல் வேண்டும். அளவு வைப்பு தேவைப்பாடு பெறப்பட்டிருக்கிறதா என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள் பொருட்பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

2. அளவு வைப்புக்கள், ஆவணச்சான்றுகளை சமர்ப்பிப்பதன் மீது அல்லது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் முறைமைகளினூடான கொடுப்பனவுகளின் மீது அல்லது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிமுறையினூடான கொடுப்பனவுகளின் மீது மற்றும் இறக்குமதிகள் அகற்றப்பட்டமைக்கான சுங்க ஆவணங்களின் மீது விடுவிக்கப்படல் வேண்டும்.

3. இவ்விறக்குமதிகள் தொடர்பான அளவு வைப்புக்களை மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் வங்கிகள் முற்பணங்கள் எதனையும் வழங்கக்கூடாது.

4. அளவு வைப்புக்கள் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கும்.

5. வங்கிகள் அத்தகைய அளவு வைப்புகளுக்கு வட்டியைச் செலுத்தலாம்.

6. இவ்வறிவுறுத்தல்களின் நியதிகளில் இறக்குமதிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள அளவு வைப்புத் தேபைப்பாடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு துறைமுக பண்டகசாலை வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பொருந்தாது.

   (அ) இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள், அத்தகைய பொருட்கள் மூன்றாவது நாடொன்றிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்படும் வரை சுங்கவரி செலுத்தாத பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

   (ஆ) மீள் பொதியிடல்/ சுட்டுத்துண்டு ஒட்டுதல்/ சாதாரண பதனிடலுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அவை மூன்றாவது நாடொன்றிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னர் சுங்கவரி செலுத்தாத பண்டகசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

   (இ) வர்த்தகரின் நாட்டிற்கு பொருட்கள் வராமலேயே இரண்டாவது நாட்டிலிருந்து மூன்றாவது நாட்டிற்கு பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்தல்.

   (ஈ) சுங்கவரி செலுத்தாத பண்டசாலைகளுக்கு சரக்குகள் எடுத்துச் செல்லாமலே ஒரு கப்பல்/ வான்கலத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றல் செய்தல்

7. வங்கிகள் அத்தகைய அளவு வைப்புக்களின் விபரங்களடங்கிய மாதாந்த கூற்றினை இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில், செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கான ஒரு பிரதியுடன் வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8. 2008 ஒத்தோபர் 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ கப்பலேற்றப்பட்ட இறக்குமதிகளைப் பொறுத்தவரை அத்தகைய இறக்குமதிகளுக்கு மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகள் பொருந்தா. கப்பலேற்றப்பட்ட திகதி என்பது பொருட்கள் ஏற்றப்பட்ட பட்டியல் நாள் எனக் கருதப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக முன்னர் விடுக்கப்பட்ட 2008.10.31ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/17/800/006/01 மற்றும் 2008.11.04ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 02/17/800/0006/01 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2008 திசெம்பர் 08ஆம் நாளிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

பீ டி டபிள்யூ ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இணைப்பு 1**

**அறிக்கை 1: ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழான இறக்குமதிகள் மீதான அளவு வைப்பு**

வங்கியின் பெயர்:
அறிக்கையிடும் மாதம்:

| இறக்குமதியாளரின் பெயர் | இறக்குமதி வகை | பொருட்பட்டியலின் பெறுமதி (ரூ.) | வைப்பு (ரூ.) | வைப்புத் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

**அறிக்கையினை தயவுசெய்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்**
**தொலைநகல்: 2477711**
**மின்னஞ்சல்:** hdajit@cbsl.lk

..........................................................................
**அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்**

**அறிக்கை 2: ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழான இறக்குமதிகள் மீதான அளவு வைப்புக்களை விடுவித்தல்**

வங்கியின் பெயர்:
அறிக்கையிடும் மாதம்:

| இறக்குமதியாளரின் பெயர் | இறக்குமதி வகை | பொருட்பட்டியலின் பெறுமதி (ரூ.) | வைப்பு (ரூ.) | வைப்புக்களை விடுவிக்கும் நாள் |
|---|---|---|---|---|
| | | | | |

**அறிக்கையினை தயவுசெய்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்**
**தொலைநகல்: 2477711**
**மின்னஞ்சல்:** hdajit@cbsl.lk

..........................................................................
**அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்**

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 திசெம்பர் 30

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டு 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை வகைப்படுத்தல், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பிரிவு 76(1) வங்கித்தொழில் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் விதத்தில் நாணயச் சபையானது 2008ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2008ஆம் ஆண்டு 3ஆம் இலக்க பணிப்புரையை இத்தால் திருத்தியமைக்கும் விதத்தில் பின்வரும் பணிப்பரைகளை விடுத்தது. இப்பணிப்புரையானது 2008ஆம் ஆண்டு 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4(5)(i) இனை பதிலீடு செய்கின்றது.

   (i) பணிப்புரை 3(5) இன் நியதிகளில் ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான கொடுகடன் வசதிகள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டு அத்தகைய செயற்படாக் கடன்களின் மொத்த வெளிநின்ற தொகை அத்தகைய கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட மொத்த கொடுகடன் வசதியில் 30 சதவீதத்தினை விஞ்சுமிடத்து வங்கி அக் கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட அனைத்து கடன்வசதிகளையும் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தலாம். வங்கிகளானது 2010 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் திகதியிலிருந்து இப் பணிப்புரைக்கு இணங்கி நடக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றன.

2. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 4(7)(I) இற்கு பதிலீடாக அமையும். இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டு திசெம்பர் 31இலிருந்து நடைமுறைக்கு வரும்.

   4(7)(I) செயற்படாக் கொடுகடன்களை செயற்படும் கொடுகடன்களாக மீள வகைப்படுத்தல்:

   வங்கியானது பின்வரும் முறைகளில் செயற்படாக் கொடுகடன்களை செயற்படு கொடுகடன்களாக மீள வகைப்படுத்தலாம்.

| | வசதியின் வகை | செயற்படாக் கொடுகடனை செயற்படு கொடுகடனாக மீள வகைப்படுத்தலுக்கான பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | மேலதிகப் பற்றில்: | |
| | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 60 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| | குறைந்த தர வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| | ஐயத்திற்குரிய வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 80 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| | இழப்பு வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 90 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| (ii) | மேலதிகப் பற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை காலாவதியாகியுள்ளவிடத்து அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது வரையறையெதுவும் இல்லாதவிடத்து | மீள வகைப்படுத்தல் எழாது. |
| (iii) | கடன் வசதிகள் மாதாந்த தவணைகளில் மீளச் செலுத்தக் கூடிய கடன் வசதிகள் | தவணைக்கட்டணம், முதலும் அத்துடன் அல்லது வட்டியும் மூன்றுக்கு குறைவாக செலுத்தாது இருக்கும் போது |
| (iv) | ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகள் | கடன்பெறுநரினால் நிலுவையிலுள்ள வட்டி மற்றும் முதல் செலுத்தப்படின் |

**திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2008 திசெம்பர் 30

## பணிப்புரைகள்

## 2008ஆம் ஆண்டு 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## இலங்கையில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களை வகைப்படுத்தல், வருமான அங்கீகரிப்பு மற்றும் ஏற்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால், இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பிரிவு 76ஜே(1) வங்கித்தொழில் சட்டத்தாலும் வழங்கப்பட்ட அதிகாரத்தினை நடைமுறைப்படுத்த நாணயச் சபையானது 2008ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டு 4ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான பணிப்புரை இத்தால் நாணயச் சபையினால் வெளியிடப்படுகின்றது.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை 4(5)(i) ஆம் இலக்க பணிப்புரையாக மாற்றப்படுகின்றது.

   (i) வங்கியின் 3(5)ஆம் பணிப்புரையின் நிபந்தனைகளுக்கேற்ப கடன்பெறுநரின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொடுகடன் வசதிகள் செயற்படாத கொடுகடனாகப் போகும் போது அக்கடன் பெறுநருக்கு வழங்கப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகள் மற்றும் அக்கடன் பெறுநரின் மொத்தக் கொடுகடன் வசதியில் 30 சதவீதத்திற்கு மேல் செயற்படாக் கொடுகடன் மீதி காணப்படுமாயின் கடன்பெறுநரின் கொடுகடன் செயற்படாத கொடுகடனாக வகைப்படுத்தப்படலாம். வங்கிகளானது 2010 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் திகதியிலிருந்து இப் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

2. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளை 4(7)(I)ஆம் இலக்க பணிப்புரையாக மாற்றப்படுகின்றது. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டு திசெம்பர் 31இலிருந்து அமுல்படுத்தப்படும்.

   4(7)(I) செயற்படாக் கொடுகடன்களை செயற்படு கொடுகடன்களாக மீள வகைப்படுத்தல்:

   வங்கியானது பின்வரும் முறைகளில் செயற்படாக் கடன்களை செயற்படு கடன்களாக மீள வகைப்படுத்தலாம்.

| வசதியின் வகை | செயற்படாக் கடனை செயற்படு கடனாக மீள வகைப்படுத்தலுக்கான பிரமாணங்கள் |
|---|---|
| (i) மாதாந்த தவணைகளில் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | முதற்தொகை அத்துடன் வட்டி என்பனவற்றைக் கொண்ட தவணைப் பணம் மூன்றிற்கும் குறைவாக செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| (ii) மற்றைய அனைத்து கடன் வசதிகளும் | வட்டியும் முதலும் கடன் பெற்றவரினால் செலுத்தப்பட்டிருக்குமிடத்து |

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/15**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 சனவரி 31

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இது, மேற்குறிப்பிட்ட விடயம் மீதான 2007 நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட எண்: 35/01/005/0006/14 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழான கடன்பாடுகள் கலண்டர் மாதமொன்றிற்கு 4 தடவைகளை விஞ்சும் பொழுது அத்தகை கடன்பாடுகளுக்கு பொருந்தத்தக்க ஆண்டு வட்டி வீதம் எமது முன்னைய சுற்றறிக்கையின் விடயம் 8இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 19 சதவீத தண்ட வீதத்தில் எவ்வித மாற்றமுமின்றி மறுஅறிவித்தல் வரை தொடர்ந்துமிருக்கும் என்பதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் (பங்கேற்கும் நிறுவனங்கள்) இத்தால் அறியத் தருகின்றோம்.

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/16**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 பெப்புருவரி 21

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இலங்கை மத்திய வங்கி 2008 பெப்புருவரி 22ஆம் நாளிலிருந்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கு (அதாவது வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை வழங்குவதில் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றும். நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பாக 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/006/04இன் பிரிவு சி (ஆ) இன் விடயம் 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பன ஏற்புடைத்தாக இருக்கும். (இலகுவான உசாத்துணையின் பொருட்டு எமது சுற்றறிக்கையின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது).

1. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி மிகையான திரவத்தன்மைகள் இருக்கும் நாட்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைக்காதென்பதுடன் இலங்கை மத்திய வங்கி திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தும்.

2. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி, திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படும் வேளைகளில் முறைமையிலுள்ள பற்றாக்குறையின் முழுத்தொகையினையும் ஈடுசெய்யும் விதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

3. சந்தையில் பற்றாக்குறை நிலவும் நாட்களில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறையில், நிலையியல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் மொத்தத் தொகையினை 09.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ அறிவிக்கும்.

4. இவ் வசதியினைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தமது தேவைப்பாடுகளை தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் செய்தி மூலம் 10.30 மணிக்கு முன்னர் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களினாலும் கேட்டுக் கொள்ளப்பட்ட தொகையின் அடிப்படையில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்தத் தொகையினை ஒதுக்கீடு செய்யும். கேட்டுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்த தொகையினைவிட உயர்வாக இருப்பின் ஒதுக்கீடு விகிதசம அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

6. பெறுபேறுகள் ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனத்திற்கும் 11.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொலைபேசி அல்லது தொலைநகல் மூலமாக அறிவிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனங்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையினையும் பத்திரங்களற்ற பிணையங்களின் விபரங்களையும் அதேநேர அடிப்படையில் இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதியினைப் பயன்படுத்தி (நிலையியல் வசதி) 12.00 மணிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

8. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும்.

(அ) குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனமொன்றிற்கு அப்போது நிலவும் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் கலண்டர் மாதமொன்றிற்கு மூன்று (3) தடவைகள் மாத்திரமே நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(ஆ) குறிப்பிட்ட பங்கேற்பாளரின் அவசர நிதித் தேவைப்பாடொன்றினை கட்டுப்படுத்துவதற்காக இறுதிக்கடனை நாடுதல் என்ற அடிப்படையில் மாத்திரம் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

(இ) குறிப்பிட்ட நாளன்று வசதியைக் கோருகின்ற பங்கேற்பாளர்கள் அதேநாளன்று பணச்சந்தையில் தேறிய கடன்வழங்குநராக இருக்கக்கூடாது.

(ஈ) நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கடன்பட்ட நிதியத்தினை, மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்குக் கணக்கிலுள்ள மிகையான ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு குறிப்பிட்ட நாளன்று பயன்படுத்தக்கூடாது.

9. தண்ட வீதமான 19 சதவீதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் பின்வரும் நாட்களில் கிடைக்கும்.

(அ) இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி, முறைமையில் பற்றாக்குறையிருக்கும் நாள். இது மேலே 2இன் கீழ் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி வழங்கப்படுகின்றமைக்குப் புறம்பானதாக இருக்குமென்பதுடன் கலண்டர் மாதமொன்றில் 3 தடவைகள் என்ற வரையறையை விஞ்சியவர்களையும் உள்ளிட்ட அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களும் தகுதியுடையனவாக இருக்கும்.

(ஆ) திரவத்தன்மையானது முறைமையில் சமநிலையில் காணப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தாது.

பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் அவசர திரவத்தன்மை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு இறுதிக்கடன் ஈயுமிடமாக இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை பயன்படுத்துமாறும் இவ் வசதிகளையும் எச்சரிக்கையுடன் பயன்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/17**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 மாச்சு 12

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 91(1)(ஆ)இன் கீழ் எப்பொழுது அவசியமானது என நம்புகிறதோ அப்பொழுது மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு தீர்மானிக்கும். இப் பிணையங்களின் முக்கியமான பண்புகள் வருமாறு:

i) இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படும்.

ii) இலங்கை மத்திய வங்கியின் பிணைங்கள் கைமாறத்தக்கவை.

iii) பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் மத்திய வைப்பக முறை என்பனவற்றின் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் ஒழுங்கு விதிகளும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மாற்றல்களுக்கும் தீர்ப்பனவுகளுக்கும் ஏற்புடைத்தாக இருக்கும்.

iv) இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சந்தைப்படுத்தத்தக்கனவாகும். எனினும், இப்பிணையங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிக்கோ அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கோ தகைமையுடையனவல்ல.

v) அரச திறைசேரி உண்டியல்களைப் போன்றே இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களும் கழிவிடல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

vi) மத்திய வங்கியிலிருந்து இப்பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனைத்து வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தகைமையுடையவராவர். பொதுமக்கள் இவற்றினை இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தக வங்கிகளிடமிருந்து அல்லது முதனிலை வணிகர்களிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

vii) அரச பிணையங்களைப் போன்றே, இப்பிணைங்களின் ஆரம்ப வழங்கல் வட்டி வருமானத்தின் மீது தற்போதைய 10 சதவீத பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாகும்.

viii) இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் முதனிலை வணிகர்களுக்கு

(அ) ஏலமொன்றின் அடிப்படையில் அத்துடன்/ அல்லது

(ஆ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதமொன்றின் (விளைவு வீதம்) அடிப்படையில் வழங்கப்படும்.

ix) இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் காலம் (முதிர்ச்சிக்காலம்) பிணையங்கள் வழங்கப்படுகின்ற நேரத்தில் நிலவுகின்ற சந்தை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும்.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன்னறிவிப்புடன் எந்தவொரு நியதியையும் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளை அல்லது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஒரு பகுதியினை திருத்தவோ, மாற்றவோ அல்லது வேறுபடுத்தவோ இலங்கை மத்திய வங்கி உரிமைகளைக் கொண்டுள்ளது.

**(அ) ஏல முறைகளின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்ளை வழங்குதல்**

1. மத்திய வங்கி, அவசியமானவிடத்து இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு ஏலமொன்றினை நடத்த எண்ணியுள்ளமை பற்றி உடனடி கணனி இலத்திரனியல் விலைக்கோரல் முறை/ பணச்சந்தை கண்காணிப்பு முறை அத்துடன் அல்லது வேறு ஏதாவது தொடர்பூட்டல் முறையூடாக அறிவிக்கும். ஏல அறிவித்தல்கள் விற்கப்படவுள்ள பிணையங்களின் தொகை மற்றும் முதிர்ச்சிக்காலம், ஏலமிடும் நாள் மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவு செய்யும் நாள் என்பன ஏலமிடும் நாளன்று அல்லது ஏலமிடும் நாளுக்கு ஒரு வேலைநாள் முன்னதாக தெரிவிக்கப்படும்.

2. ஏலமானது உடனடி விற்பனை ஏலங்களுக்கான விருப்பத்தேர்வின் கீழ் தற்போதுள்ள உடனடிக் கணனி வலைய இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக நடத்தப்படும். ஏல அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏல நாளன்று பங்கேற்கும் நிறுவனங்கள் தொகை (கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் வட்டி வீதம் (விளைவு வீதம்) என்பனவற்றைக் கொண்ட விலைக்கோரலைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்கள் வரியுடனான விளைவு வீதங்களாக இருக்கும்.

4. விலைக்கோரல்கள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உடனடிக் கணனி வலையமைப்பு விலைக்கோரல் முறை பழுதடைகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே தொலைபேசி மூலமான விலைக்கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி ஊடாகச் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் இருவர் கையொப்பமிட்ட தொலைநகல் மூலமாக 15 நிமிடங்களுக்கிடையில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். தொலைநகலின் மூலப்பிரதியினை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அதே நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு முதிர்ச்சிக்குமாக ஆகக்கூடியது ஆறு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்க முடியும். ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை ரூபாய் ஒரு மில்லியனாகவும் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. ஏலம் முடிவடைந்த அரை மணித்தியாலத்திற்குப் பின்னர் உடனடியான இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக விலைக்கோரல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அத்தகை பெற்றுக் கொள்ளல்கள் பற்றி அறிவிக்கப்படும். வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்கள் குறிப்பீடு செய்த வீதங்களில் ஒதுக்குகள் மேற்கொள்ளப்படும்.

6. ஏலங்களின் பெறுபேறுகள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அத்துடன் அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் வழிமுறைகளினூடாக ஏலம் முடிவடைந்த அரை மணித்தியாலத்தின் பின்னர் வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றைத் தருகின்ற ஏலங்களின் பெறுபேறு அறிவிக்கப்படும்.

7. அதேவீதத்தில் வழங்கப்படுவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினை விலைக்கோரல் தொகை விஞ்சும் சந்தர்ப்பங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை அத்தகைய விலைக் கோரலாளர்களிடையே "விகித சம" அடிப்படையில் ஒதுக்கப்படும். இதன்படி, வெட்டு வீதத்திலமைந்த விலைக்கோரல்கள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

8. ஒவ்வொரு வெற்றி பெற்ற விலைக் கோரலினதும் விற்பனைப் பெறுமதி (பிடித்து வைத்தல் வரி உட்பட விற்பனை விலை) பிணையங்களின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்காக, தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

9. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையின் அடிப்படையில், பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (பிடித்து வைத்தல் வரியுடனான விலைகள்) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பெறப்பட்ட நிதியங்களுக்கு எதிராக வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களின் தொடர்பான சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் இக் கணனி முறையானது கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யும். இது தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் கணனி முறைக்கு எந்தவித தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

10. வணிகம் மேற்கொள்ளப்பட்ட நாள் அன்றே தீர்ப்பனவு செய்யப்படும் விடயங்களைப் பொறுத்த வரையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது ஏலம் முடிவுற்ற இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் லங்கா செக்குயருக்கு சமர்ப்பிக்கப்படும். தீர்ப்பனவுகள் மறுநாளாக இருக்குமாயின் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது தீர்ப்பனவு செய்யப்பட்ட நாளன்று 08.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செக்குயருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்கள் இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக் கொள்ளப்படுவதானது பங்கேற்கும் நிறுவனத்தினை பணிப்பதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்கள் (பங்கேற்கும் நிறுவனத்தின் கொள்வனவு) கௌரவிக்கத் தவறுவது, பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட விதத்தில் கொள்வனவு விலைகளின் மீது முதிர்ச்சிக் காலப்பகுதிக்கான வட்டித் தொகைக்குச் சமமான தொகையினை நட்ட ஈடாகச் செலுத்துவதற்கு அந்நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளினைத் தொடர்ந்து வரும் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும்.

12. முதிர்ச்சி நாளன்று, மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பிணையங்களையும் தொடர்பான பிணையங்களை வைத்திருந்த பங்கேற்கும் நிறுவனங்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கணக்கிற்கு முதிர்ச்சித் திகதிக்கு முன்னருள்ள வியாபார நாளன்று முதிர்ச்சிப் பெறுகைகளையும் மாற்றல் செய்வதன் மூலம் கணனி முறை தன்னியக்கமாகவே தீர்ப்பனவினை மேற்கொள்ளும்.

13. இலங்கை மத்திய வங்கி, அவசியமெனக் கருதுமிடத்து, அதே நாளன்று மேலதிக ஏலங்களை நடத்தும் உரிமையினையும் கொண்டுள்ளது.

14. இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை தன்வசம் கொண்டுள்ளது.

**(ஆ) முன்னரே, தீர்மானிக்கப்பட்ட வீதமொன்றில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்**

1. மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விளைவு வீதமொன்றில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு வழங்கும்.

2. முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முதிர்ச்சிக்காலம், பிணை வீதம் (பிடித்து வைத்தல் வரியுடன்) மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பன நாணயத்தொழிற்பாட்டு குழுவினால் தீர்மானிக்கப்பட்டு உடனடி கணனி இலத்திரனியல் விலைக்கோரல் முறை/ பணச்சந்தை கண்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு மற்றைய தொடர்பூட்டல் முறைகளினூடாக அறிவிக்கப்படுவதுடன் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவுடன் தொடர்புகளை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு வியாபார நாளன்றும் 1100 மணிக்கும் 1430 மணிக்குமிடையில் அவற்றினைக் கொள்வனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன.

3. முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை மத்திய வங்கி பிணையங்களை கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்குத் தேவையான தொகையினை தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் மூலம் கொள்வனவு செய்வதற்கு தேவைப்படும் தொகையினை (முகப்புப் பெறுமதி) அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. கொள்வனவு (முகப்புப் பெறுமதி) செய்வதற்குத் தேவையான தொகையினை இலத்திரனியல் விலைக்கோரல் முறைக்கு (நிலையியல் வசதியின் கீழ், உடனடி விற்பனை விருப்பத்தேர்வு) 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. கொடுக்கல் வாங்கலின் ஆகக் குறைந்த தொகை ரூபாய் ஒரு மில்லியனாக இருக்குமென்பதுடன் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களிலும் இருத்தல் வேண்டும்.

6. வணிக கையாளல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்பு நிறுவனங்கள் அத்தகைய ஏற்றுக் கொள்ளல்களை அதே நாளன்று 1500 மணியளவில் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக (உடனடி விற்பனை ஏல விருப்பத் தேர்வுகளின் கீழ்) பார்வையிடலாம்.

7. வணிகம் மேற்கொள்ளப்பட்ட நாளன்றே தீர்ப்பனவு செய்யப்படும் விடயங்களைப் பொறுத்த வரையில், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது வணிகம் செய்யப்பட்ட நாளன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தீர்ப்பனவுகள் மறு நாளாக இருக்குமாயின், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது தீர்ப்பனவு செய்யப்பட்ட நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. கொடுக்கல் வாங்கலின் தீர்ப்பனவு வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக மேற்கொள்ளப்படும். விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதியம் கிடைக்கப் பெற்றதற்கு எதிராக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் கணனி முறையானது கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும் இது தொடர்பான கணனி முறைக்கு பங்கேற்கும் நிறுவனங்கள் எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

9. விற்பனைப் பெறுமதியானது (பிடித்து வைத்தல் வரி உட்பட விற்பனை விலை) பிணையத்தின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்கான பிடித்து வைத்தல் வரிக்கு (வரி வீதத்திற்குப் பின்) சீராக்கப்பட்ட ஏற்புடைத்தான வட்டி வீதங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

10. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து அது பங்கேற்கும் நிறுவனங்களை கட்டுப்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களைக் கௌரவிக்கத் தவறுமிடத்து (பங்கேற்கும் நிறுவனங்களின் கொள்வனவு) பங்கேற்கும் நிறுவனங்கள் முதிர்ச்சிக் காலப்பகுதிக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு விலைகளின் மீதான வட்டித் தொகைக்குச் சமமான தொகையொன்றினை மத்திய வங்கிக்கு நட்ட ஈடாகச் செலுத்த வேண்டும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளைத் தொடர்ந்து வரும் அடுத்த வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் பங்கேற்பு நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

11. முதிர்ச்சி நாளன்று, மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பிணையங்களையும் தொடர்பான பிணையங்களை வைத்திருந்த பங்கேற்கும் நிறுவனங்களின் அதேரே மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கிற்கு முதிர்ச்சிப் பெறுகைகளையும் முதிர்ச்சித் திகதிக்கு முன்னைய வேலை நாளன்று மாற்றல் செய்வதன் மூலம் கணனி முறை தன்னியக்கமாகவே தீர்ப்பனவினை மேற்கொள்ளும்.

12. அவசியமானது எனக் கருதுமிடத்து, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களின் கீழ் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் விளைவு வீதத்தையும் முதிர்ச்சிக் காலத்தினையும் மாற்றுவதற்கான உரிமையினை மத்திய வங்கி கொண்டிருப்பதுடன், அத்தகைய மாற்றங்கள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறை/ பணச்சந்தை நாணயமுறை அல்லது வேறு ஏதாவது தொடர்பூட்டல் வழிமுறைகள் மூலமாக இது நடைமுறைக்கு வரவுள்ள நாளன்று 0930 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

### (இ) இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை உரிய காலத்திற்கு முன்னர் முதிர்வடையச் செய்தல்

முதிர்ச்சி நாளுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை எப்பொழுது தீர்ப்பனவு செய்வது அவசியமானது என்பதனை நாணய தொழிற்பாட்டுக்குழு தீர்மானிக்கும். இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் தீர்ப்பனவு ஒன்றில்

(அ) ஏலங்களின் அடிப்படையில் அல்லது;

(ஆ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில்

மேற்கொள்ளப்படும்.

ஏலங்களின் அடிப்படையிலும் முன்னரே தீர்மனிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையிலும் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள பிணையங்கள் மீதான நியதிகளும் நிபந்தனைகளும் பிரிவுகள் இ1 மற்றும் இ2 இல் மேலோட்டமாகத் தரப்பட்டுள்ளன.

### (இ1) ஏல முறைகளின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல்

1. அவசிமான வேளையில் இலங்கை மத்திய வங்கி உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையின் மூலமாக அது, முதிர்ச்சிக் காலத்திற்கு முன்னதாக மத்திய வங்கிப் பிணையங்களை ஏலமொன்றின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்ய (கொள்வனவு) எண்ணியுள்ளமை பற்றி அறிவிக்கும்.

2. ஏல அறிவித்தலில் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள பிணையங்களின் விபரங்கள், அதாவது, தொகை ((முகப்புப் பெறுமதி) முதிர்ச்சி நாள் மற்றும் பிணையங்களின ஐஎஸ்ஐஎன் என்ற பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் என்பன ஒன்றில் ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னைய ஒரு வேலை நாளன்று உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக/ பணச்சந்தை

கண்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு ஏதாவது தொடர்பூட்டல் முறையினூடாக அறிவிக்கப்படும். அத்துடன் பங்கேற்கும் நிறுவனங்கள் ஏல நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையிலான காலப்பகுதியில் தொகை மற்றும் வட்டி விதம் (விளைவு வீதம்) என்பனவற்றைக் குறிப்பிட்டு வழங்கல் முனைவினை சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன. தீர்ப்பனவு நாள் ஏல நாளினைத் தொடர்ந்த வரும் வேலை நாளாக இருக்கும்.

3. வழங்கல் முனைவு உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உடனடி இலத்திரனியல் முறை பழுதடைந்துள்ள சந்தர்ப்பங்களில் மட்டுமே தொலைபேசி ஊடான வழங்கல் முனைவுகள் ஏற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட வழங்கல் முனைவுகள் 15 நிமிடங்களுக்கிடையில் அதிகாரம் பெற்ற இரு அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்ட தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொலைநகலின் மூலப்படி அதே நாளன்று வேலை நேரம் முடிவடைவதற்கு முன்னதாக உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு முதிர்ச்சிக்கும் ஆகக் கூடியது ஆறு வழங்கல் முனைவுகளை சமர்ப்பிக்க முடியும். வழங்கல் முனைவின் ஆகக் குறைந்த தொகை ரூபாய் ஒரு மில்லியனாக இருப்பதுடன் வழங்கல் முனைவு ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

4. வெற்றிபெற்ற ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனத்திற்கும் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக, அதன் வழங்கல் முனைவு ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றியும் மத்திய வங்கிப் பிணையங்களின் தொடர்பான கொள்வனவு விலை பற்றியும் 1430 மணியளவில் அறிவிக்கப்படுவர்.

5. வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ஒரே வீதத்தில் வழங்கல் முனைவுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையானது "விகித சம" அடிப்படையில் அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்களிடையே ஒதுக்கீடு செய்யப்படும். இதன்படி வழங்கல் முனைவு வெட்டு வீதத்தில் பகுதியளவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

6. வெற்றி பெற்ற ஒவ்வொரு வழங்கல் முனைவினதும் கொள்வனவு பெறுமதி (விலை), பிணையங்களின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்காக தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

7. தீர்ப்பனவு நாளன்று, பொருத்தப்பாடு செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை 0830 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் அடிப்படையில், லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பெறப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட (கொள்வனவு செய்யப்பட்ட) பிணையங்களுக்கெதிராக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையிலுள்ள ஒவ்வொரு வெற்றி பெற்ற பங்கேற்பு நிறுவனத்தினதும் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கிற்கு, கணனி முறை கொள்வனவு விலைகளை வரவு வைக்கும். இது தொடர்பாக கணனி முறைக்கு கொடுகடன் நிறுவனங்கள் எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

8. பங்கேற்கும் நிறுவனமொன்றின் முனைவு வழங்கல் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அது பங்கேற்கும் நிறுவனத்தினைக் கடப்பாட்டிற்குட்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வேலை நாள் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனத்தின் விற்பனை) கௌரவிக்கத் தவறுமிடத்து பங்கேற்கும் நிறுவனத்தினால் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விற்பனைப் பெறுமதி மீதான வட்டித்தொகைக்கு சமமான தொகையினை தீர்ப்பனவு நாளுக்கு அடுத்து வரும் வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

9. தேவையானது எனக் கருதப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி அதே நாளன்று மேலதிக ஏலங்களை நடத்தும் உரிமையினையும் கொண்டுள்ளது.

10. இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனமொன்றில் எந்தவொரு வழங்கல் முனைவினையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.

**(இ2) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல்**

1. மத்திய வங்கி முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்ய உத்தேசித்துள்ளமை பற்றி, முதிர்ச்சியடைவதற்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள மத்திய வங்கிப் பிணையங்களின் வீதம், முதிர்ச்சி நாள் மற்றும் பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் என்பனவற்றை வழங்குகின்ற விதத்தில் உடனடி இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறை/ பணச்சந்தைக் கணக்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு ஏதாவதொரு தொடர்பூட்டல் முறையூடாக அறிவிப்பதுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் அவர்களது வழங்கல் முனைவினை அதே நாளன்று முன் வைக்குமாறும் அழைப்புவிடும்.

2. தீர்ப்பனவு நாள் வியாபாரம் செய்கின்ற நாளை அடுத்து வரும் வேலை நாளாக இருக்கும்.

    (அ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை விற்பனை செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு விற்பதற்கு எதிர்பார்க்கும் தொகையினை தொலைபேசி/ தொலைநகல் மூலம் அதே நாளன்று 1500 மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) விற்பனை செய்வதற்குத் தேவையான தொகையினை இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறைக்கு (நிலையியல் வசதி உடனடிக் கொள்வனவு விருப்பத்தேர்வின் கீழ்) அதே நாளன்று 1530 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

(இ) கொடுக்கல் வாங்கல்களின் ஆகக் குறைந்த தொகை ஒரு மில்லியன் ரூபாவாகவும் வணிக நடவடிக்கைகள் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) வணிக நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்பு நிறுவனங்கள் அத்தகைய ஏற்றுக் கொள்ளல்களை அதே நாளன்று 1530 மணியளவில் உடனடி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் (உடனடி கொள்வனவு ஏல விருப்பத் தேர்வின் கீழ்) பார்வையிட முடியும்.

3. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா செகுயரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியூடாக வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கிக்கு சொந்தமான கணக்கிற்கு பெறப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கெதிராக பிணையங்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்காக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கிற்கு வங்கி முறையானது வரவு வைப்பதன் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை லங்கா செகுயருக்கு தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் முறைக்கு எவ்வித தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு கோரப்படவில்லை.

4. பிணையங்களின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை கழிவு செய்வதன் மூலம் கொள்வனவுப் பெறுமதி (விலை) கணிக்கப்படும்.

5. முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை விற்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட முனைவு மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து அது பங்கேற்கும் நிறுவனங்களைப் பிணைப்பதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வேலை முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனங்களின் விற்பனை) கௌரவிக்கத் தவறுமிடத்து பங்கேற்கும் நிறுவனங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக விற்பனைப் பெறுமதியின் மீதான வட்டித் தொகைக்குச் சமமான தொகையினை மத்திய வங்கிக்கு நட்ட ஈடாகச் செலுத்தப் பொறுப்புடையதாகும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளை அடுத்து வரும் வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியூடாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் தீர்ப்பனவு கணக்கில் பற்று வைக்கப்படும்.

ஏ கமலசிறி
**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/18**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 மே 21

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## ஏலமுறையின் கீழ் நீண்டகால நேர்மாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் மீதானதும் குறிப்பாக அதிலுள்ள பந்தி 'அ' பற்றியதுமான 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/006/04 கொண்ட எமது சுற்றிக்கை பற்றி குறிப்பிடுகின்றோம். ஒரு நாள் (ஓரிரவு) மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் புறம்பாக, மத்திய வங்கியானது பங்கேற்கும் நிறுவனங்களுடன் நீண்டகால மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கும் தீர்மானித்திருக்கிறது.

இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்படும் அனைத்து மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களும், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் செய்யப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கும். இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட நியதிகள் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளின் அதே கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்குமிடையில் ஏதாவது ஒவ்வாமை அல்லது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் தொழிற்பாட்டு அறிவுறுத்தலே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரயோகிக்கத்தக்க நியதிகளும் நிபந்தனைகளும் நடைமுறைகளும் கீழே தரப்படுகின்றன.

1. சந்தை தொழிற்பாடுகள் குழு நீண்ட கால மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏலம் எப்பொழுது அவசியமானது என்பது பற்றி அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அறிவிக்கும். இவ்வறிவித்தலானது வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகை, முதிர்ச்சித் திகதி (காலம்) ஏலமிடும் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை அறிவிக்கும்.

2. ஏலமிடும் நாளுக்கு முன்னுள்ள ஒரு வேலை நாளன்று ஏல அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் தொகை மற்றும் வட்டி வீதம் என்பனவற்றைக் கொண்ட விலைக்கோரலை ஏலமிடும் நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. விலைக்கோரல்கள் இந்நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதேநேர விலைக்கோரல் முறைமை பழுதடைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே விலைக்கோரல்கள் தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கோரல்கள் 15 நிமிடங்களுக்கிடையில் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கையெழுத்துக்களுடன் கூடிய தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

   தொலைநகலின் மூலப்பிரதி, அதேநாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டிற்கும் ஆகக் கூடியது ஆறு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கலாம். ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை ஒரு மில்லியனாகவும் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. ஏலங்களின் பெறுபேறுகள் அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் வழிமுறைகளினூடாக ஏலமிடப்பட்ட நாளன்று 1430 மணியளவில் வெற்றி பெற்ற விலைக்கோரல்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றைத் தருகின்ற ஏலங்களின் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

6. வெற்றிபெற்ற ஒவ்வொரு விலைக்கோரலாளர்களுக்கும் அவர்களின் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் ஒதுக்கப்பட்ட தொகை பற்றியும் இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையினூடாக 1430 மணிக்கு அறிவிக்கப்படும் ஒதுக்கீடுகள் வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்களில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்கோரலுக்காகவும் கேட்டுக் கொள்ளப்பட்ட தொகைக்காக, நடைமுறைச் சந்தை விலைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளில் பத்திரங்களற்ற பிணையங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. வெற்றி பெற்ற ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் உறுதிப்பாடொன்று, பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக வழங்கப்படும். உறுதிப்படுத்தல் பெரும்பாலும் இணைப்பு 1இல் உள்ள படிவத்தினை பெருமளவிற்கு ஒத்ததாக இருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தலைச் சரியான முறையில் அவதானித்துக் கொள்ளுமாறும் உறுதிப்படுத்தல் தொடர்பான பத்திரமொன்றினை தமது பதிவேட்டில் வைத்துக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றன. இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையில் ஏற்படும் தொலைநுட்ப தவறுகள் காரணமாக உறுதிப்படுத்தலை அவதானிக்க அல்லது அதன் அச்சிடப்பட்ட பத்திரமொன்றினை வைத்திருப்பதற்கு பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளுமிடத்தும் அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை தொலைநகலில் அனுப்பும்.

8. தீர்ப்பனவு நாளன்று கொடுக்கல் வாங்கல்கள் வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக தீர்ப்பனவு செய்யப்படும். பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை, தீர்ப்பனவு நாளன்று 0800 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும். இதனடிப்படையில் முறைமையானது இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான நிதிப் பெறுகைகளுக்கு (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) எதிராக லங்கா செகுயரிலுள்ள வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை (கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) மாற்றல் செய்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யப்படும். இது தொடர்பாக, முறைமைக்கு எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் தேவைப்படுத்தப்படவில்லை.

9. இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களை பங்கேற்கும் நிறுவனங்கள் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ்

மாத்திரமே வர்த்தகப்படுத்த முடியும். அத்தகைய மீள்கொள்வனவுகளின் முதிர்ச்சித் திகதி, இலங்கை மத்திய வங்கியுடனான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் முதிர்ச்சித் திகதிக்கு முன்னான ஒரு வேலை நாளுக்கு பிந்தியதாக இருக்கக்கூடாது. பிணையங்களின் பதிலீடுகள் அனுமதிக்கப்படமாட்டா.

10. வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், பிணையங்களின் கொள்வனவு விலையினை தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தீர்ப்பனவு செய்வதற்கு லங்கா செட்டிலிலுள்ள தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். லங்கா செகுயர் வியாபாரத்திற்கு மூடப்படுவதற்கு முன்னதாக மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து, பங்கேற்கும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் வழங்கப்பட்டவாறு கணிக்கப்பட்ட விற்பனை பெறுமதிக்கும் (விற்பனை பெறுமதி) மீள்கொள்வனவு பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டிற்குச் சமமான தொகையினை நட்ட ஈடுடாகச் செலுத்தப் பொறுப்புடையனவாகும். அத்தகைய நட்ட ஈடானது அடுத்த வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும். கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான பிணையங்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கத்தினை கொண்டிருக்குமிடத்து அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கமும் இக் கிளை வாசகத்தின் நோக்கத்திற்காக, தனித்தனி மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படும்.

11. முதிர்ச்சி நாளன்று (மீள்கொள்வனவுகள்) லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கிக்கு சொந்தமான கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வழங்கலுக்கெதிராக மேலேயுள்ள கிளைவாசகம் 8இல் காட்டப்பட்டுள்ள அதே முறையினைப் பின்பற்றி பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை, பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவு விலையினை கொடுப்பனவு செய்வதற்காக 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

12. மீள்கொள்வனவு விலை கொள்வனவு விலையினையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை) பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட விதத்தில் கணிக்கப்படும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருக்கும்.

13. பங்கேற்கும் நிறுவனங்கள், மீள்கொள்வனவு நாளினை உடனடுத்து வரும் வேலை நாளன்று, லங்கா செகுயர் வியாபாரத்தினை மூடுவதற்கு முன்னதாக, மேலே கிளை வாசகம் 11இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் திருப்புவதனை இயலச் செய்யும் விதத்தில் லங்கா செகுயரிலுள்ள அவற்றின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவு கணக்கிலுள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துதல் வேண்டும். மீள்கொள்வனவு நாளன்று, மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக திருப்புவதனை இயலச் செய்யும் விதத்தில் பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் போதுமான பிணையங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், மத்திய வங்கி கீழேயுள்ள கிளை வாசகம் 14இல் காட்டப்பட்டவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

14. மேலேயுள்ள கிளை வாசகம் 13இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளின்படி செய்து கொள்ளப்பட்ட மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனமொன்று தவறுமிடத்து, இலங்கை மத்திய வங்கி, அதன் தற்றுணிவின்படி, செலுத்தத் தவறிய மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை அலுவல்சார் விலைகளில் ஒரு உடனடி விற்பனைக் கொடுக்கல் வாங்கல்களாக மாற்றிக் கொள்ளும். அலுவல்சார் விலைகள் அத்தகைய பிணையங்களின் கொள்வனவு விலைகளிலும் பார்க்க உயர்வானதாக இருக்குமிடத்து, பங்கேற்கும் நிறுவனங்கள், அலுவல்சார் விலைக்கும் பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்குமிடையிலான வேறு நாட்டிற்கு சமமானதொரு தொகையினையும் மேலேயுள்ள கிளை வாசகம் 12இல் குறிப்பிடப்பட்ட அவற்றின் வட்டிக் கூறினையும் (கொள்வனவு விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையிலான வேறுபாடு) மத்திய வங்கிக்கு செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாதல் வேண்டும். அலுவல்சார் விலைகள் கொள்வனவு விலைக்கு சமமானதாக அல்லது குறைவானதாக இருக்குமிடத்து பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு மேலே குறிப்பிடப்பட்ட வட்டிக் கூறினை செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். மேலேயுள்ள அடிப்படையில் கணிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய தொகையும் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும். மேலும், மத்திய வங்கியின் தற்றுணிவின்படி, இலங்கை மத்திய வங்கியுடன் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் பங்கேற்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளும் புறக்கீடு செய்யப்படும்.

15. விலைக்கோரல்கள் குறிப்பிட்ட ஒரு வீதத்தில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினை விஞ்சும் சந்தர்ப்பத்தில், திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை அத்தகைய விலைக்கோரலாளர்களிடையே "விகிதசம" அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கமைய, வெட்டிக் குறைக்கப்பட்ட வீதத்திலான விலைக்கோரல்கள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடும்.

16. எந்தவொரு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான மீள்கொள்வனவு நாள் வங்கி விடுமுறை நாளாக இருக்குமிடத்து, அத்தகைய நாளன்று வரும் அத்தகைய மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களினது தரப்பினரின் கடப்பாடுகளை அந்நாளினை தொடர்ந்து வரும் வியாபார நாளன்று மேற்கொள்ள முடியும்.

17. இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனத்தின் விலைக்கோரலை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமைகளை தன்வசம் கொண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன் அறிவித்தலுடன் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினை திருத்தவோ மாற்றவோ அல்லது அதன் எந்தவொரு நியதியையும் அத்துடன் அல்லது நிபந்தனைகளையும் மாற்றுவதற்கோ உரிய உரிமைகளைத் தன்வசம் கொண்டுள்ளது.

**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

இணைப்பு 1

**இலங்கை மத்திய வங்கி - திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**

**திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல் நிலைமை**

**பங்கேற்கும் நிறுவனம் :**

**ஏல நாள்**

**ஏலங்களின் எண்ணிக்கை**

| ப.நி. | விலைக் கோரல் | ஏல வகை | சமர்ப்பிக்கப்பட்ட நாள்/ தொடர்பு எண் | ப.பி.அ.எண் | ஏற்றுக்கொள்ளப்பட்ட/ கொள்வனவுப் பெறுமதி | விளைவு | பிணையங்களின் முகப்புப் பெறுமதி | மீள்கொள் வனவுப் பெறுமதி | முதிர்ச்சி யடையும் நாள் | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/18**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 செத்தெம்பர் 30

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

**நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2008 பெப்புருவரி 21ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0006/16 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனமொன்று ஒரு கலண்டர் மாதத்தில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை அதன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் பயன்படுத்தும் தடவைகளின் எண்ணிக்கை வரம்பு **2008 ஒத்தோபர் 2ஆம் நாள் தொடக்கம் மாதமொன்றிற்கு மூன்று (3) தடவைகளிலிருந்து ஆறு (6) தடவைகளுக்கு** அதிகரிக்கப்படுமென்பதை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் (பங்கேற்கும் நிறுவனங்கள்) இத்தால் அறியத்தரப்படுகிறது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/19**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 13

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2008 செத்தெம்பர் 30ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0006/18 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனமொன்று ஒரு கலண்டர் மாதத்தில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை அதன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் பயன்படுத்தும் தடவைகளின் எண்ணிக்கை வரம்பு **2008 ஒத்தோபர் 15ஆம் நாள் தொடக்கம் மாதமொன்றிற்கு ஆறு (6) தடவைகளிலிருந்து பத்து (10) தடவைகளுக்கு** அதிகரிக்கப்படுமென்பதை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் (பங்கேற்கும் நிறுவனங்கள்) இத்தால் அறியத்தரப்படுகிறது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**தொழிற்பாட்டு சுற்றிக்கை எண்: 35/01/005/0007/02**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 16

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97 என்பனவற்றின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பாலும் 2008 ஒத்தோபர் 16ஆம் நாள் வெளியிடப்பட்ட இலக்கம் 1571/12 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கமைய இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பேண வேண்டிய ஒதுக்குகள் அத்தகைய மொத்த வைப்புப் பொறுப்புக்களில் ஒன்பது புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக (9.25 சதவீதம்) இருத்தல் வேண்டுமென அவை இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் 2008 ஒத்தோபர் 17ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். 2003 மாச்சு 20ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0007/01 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளக்கப்பட்டிருந்த மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் பிரயோகத்திலிருக்கும்.

**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0006/20**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 31

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2008 ஒத்தோபர் 13ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0006/19 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனமொன்று ஒரு கலண்டர் மாதத்தில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை அதன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் பயன்படுத்தும் தடவைகளின் எண்ணிக்கை வரம்பு **2008 நவெம்பர் 1ஆம் நாள் தொடக்கம் மாதமொன்றிற்கு பத்து (10) தடவைகளிலிருந்து மூன்று (3) தடவைகளுக்கு** குறைக்கப்படுமென்பதை பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் (பங்கேற்கும் நிறுவனங்கள்) இத்தால் அறியத்தரப்படுகிறது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0010/07**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 31

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்

இது, நாணயக்கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0010/01 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0010/01 கொண்ட எமது சுற்றறிக்கை மூலம் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக விதிக்கப்பட்ட நாணயக்கடிதத்திற்கு எதிரான அளவுத்தேவைப்பாடுகள் 100 சதவீதத்திலிருந்து 200 சதவீதத்திற்கு உடனடியாக உயர்த்தப்பட்டுள்ளமை பற்றி வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்
இலங்கை மத்திய வங்கி
நாணயச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0010/08**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 ஒத்தோபர் 31

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத்தேவைப்பாடுகள்**

நாணயக் கடிதங்களைத் திறக்கின்ற வங்கிகளில் அத்தகைய நாணயக் கடிதங்களை திறக்கின்ற நேரத்தில் அத்தகைய நாணயக் கடிதத்தினை உள்ளடக்குகின்ற விதத்தில் ஆகக் குறைந்தது இறக்குமதிப் பெறுமதிகளின் 100 சதவீதம் கெண்ட காசு வைப்பொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, அட்டவணை அ1 இல் (இணைக்கப்பட்டுள்ளது) குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களின் இறக்குமதிக்காக வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதமெதுவும் உடனடியாகத் திறக்கப்படக்கூடாது என வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அட்டவணை அ1இல் குறிப்பிடப்பட்ட பொருட்களின் இறக்குமதியினை உள்ளடக்குகின்ற ஏற்கனவேயுள்ள நாணயக் கடிதங்களைப் பொறுத்த வரை, மேலேயுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள நியதிகள் தவிர அத்தகைய நாணயங்களின் பெறுமதியில் அதிகரிப்புக்களைச் செய்வதற்கு வங்கிகள் அனுமதிக்கப்படக்கூடாது.

வங்கிகள் தமது இறக்குமதி வாடிக்கையாளர்கள் இச்சுற்றறிக்கை மூலம் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த அளவுத்தேவைப்பாடுகளை வழங்குவதற்கு, அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச் செய்யும் விதத்தில் முற்பணங்கள் எதனையும் வழங்கக்கூடாது.

இச்சுற்றறிக்கையின்படி அளவுவைப்புகள் பெறப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள் தொடர்பான பொருட்பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

வங்கிகள் மறுஅறிவித்தல் வரை இப்பணிப்புரைக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்
இலங்கை மத்திய வங்கி
நாணயச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரர்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0010/09**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 நவெம்பர் 04

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, நாணய கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான முறையே 2004.10.22 மற்றும் 2008.10.31 நாளிடப்பட்ட எண்கள் 35/01/005/0010/01 மற்றும் 35/01/005/0010/07 கொண்ட எமது சுற்றறிக்கைகள் தொடர்பானது.

2004.10.22ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0010/01 கொண்ட எமது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட **அட்டவணை அ**, நாணயக் கடிதங்களுக்கு எதிராக 200 சதவீத அளவு வைப்புத் தேவைப்படுகின்ற பொருட்களின் பட்டியல் என்ற தலைப்பினைக் கொண்ட **அட்டவணை அ** இன் மூலம் (இணைக்கப்பட்டுள்ளது) உடனடியாக நீக்கப்படுகின்றது என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0010/10**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 நவெம்பர் 04

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, நாணய கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2008.10.31 நாளிடப்பட்ட எண் 35/01/005/0010/08 கொண்ட எமது சுற்றறிக்கை தொடர்பானது.

முன்னர் குறிப்பிடப்பட்ட எமது சுற்றறிக்கையின் அட்டவணை அ, நாணயக் கடிதங்களுக்கு எதிராக 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்படுகின்ற பொருட்களின் பட்டியல் என்ற தலைப்பினைக் கொண்ட **அட்டவணை அ1** இன் மூலம் (இணைக்கப்பட்டுள்ளது) உடனடியாக நீக்கப்படுகின்றது என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

**பணிப்பாளர்**/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**தொழிற்பாட்டு சுற்றிக்கை எண்: 35/01/005/0007/03**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 நவெம்பர் 26

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97 என்பனவற்றின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பாலும் 2008 நவெம்பர் 26ஆம் நாள் வெளியிடப்பட்ட இலக்கம் 1577/7 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கமைய இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பேண வேண்டிய ஒதுக்குகள் அத்தகைய மொத்த வைப்புப் பொறுப்புக்களில் ஏழு புள்ளி ஏழு ஐந்து சதவீதமாக (7.75 சதவீதம்) இருத்தல் வேண்டுமென அவை இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் 2008 நவெம்பர் 28ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். 2003 மாச்சு 20ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/0007/01 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளக்கப்பட்டிருந்த மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் பிரயோகத்திலிருக்கும்.

**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

**சுற்றிக்கை எண்: 35/01/005/0010/11**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2008 திசெம்பர் 05

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்

இது, நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீது 2008.11.04 நாளிடப்பட்ட எண்கள் 35/01/005/0010/09 மற்றும் 35/01/005/0010/10 கொண்ட எமது சுற்றறிக்கைகள் தொடர்பானது.

எமது முன்னைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட நாணயக் கடிதத்திற்கு எதிரான 200 சதவீத அளவு வைப்பு தேவைப்படும் விடயங்கள் என்ற தலைப்பினைக் கொண்ட அட்டவணை ‘அ’ மற்றும் நாணயக்கடிதத்திற்கு எதிராக 100 சதவீத அளவு வைப்பு தேவைப்படும் விடயங்கள் என்ற தலைப்பினைக் கொண்ட அ1 என்பன, 2008.12.08 ஆம் நாளிலிருந்து இங்கே இணைக்கப்பட்டுள்ள 05.12.2008 நாளிடப்பட்ட முறையே **அட்டவணைகள் அ மற்றும் அ1** என்பனவற்றின் மூலம் நீக்கப்படுகின்றன என்பது அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறியத் தரப்படுகிறது.

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு சுங்க நிலையத்திலான வர்த்தகப்படுத்தலின் கீழ் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு அளவு வைப்புத் தேவைப்பாடுகள் பொருந்தாது என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

அ) மூன்றாவது நாடொன்றிற்கு மீள ஏற்றமதி செய்யப்படும் வரை சுங்க வரி செலுத்தப்படாத பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பொருட்கள்

ஆ) மூன்றாவது நாடொன்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னதாக சுங்கவரி செலுத்தப்படாத பண்டகசாலைகளில் மீள பொதியிடல், சுட்டுத்துண்டு ஒட்டுதல், இலகுவான பதனிடல்களை மேற்கொள்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

இ) வர்த்தகப்படுத்துகின்ற நாட்டிற்குள் பொருட்கள் கொண்டு வரப்படாமல் இரண்டாவது நாட்டிலிருந்து மூன்றாவது நாட்டிற்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள்

ஈ) சுங்கத்தீர்வை செலுத்தப்படாத பண்டகசாலைக்கு சரக்குகளை எடுத்துச் செல்லாமலே ஒரு கப்பலிலிருந்து/ வான் கலத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றப்படும் பொருட்கள்.

**பணிப்பாளர்**
உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

## அட்டவணை அ

## ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகளுக்கெதிராக 200 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடு - 05.12.2008

| இணங்குவிக்கப் பட்ட குறியீடு | விபரம் |
|---|---|
| | **ஓட்டுநர் உட்பட பத்து அல்லது அதற்கும் கூடுதலான ஆட்கள் பயணிக்கக்குகூடிய உந்து ஊர்திகள்** |
| அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது (டீசல் அல்லது ஓரளவு டீசல்) | |
| 8702.10.10 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத பதின் மூன்று பயணிகள் இருக்கைக்கு குறையாத (வயது வந்தோர்) உந்து ஊர்திகள் |
| 8702.10.20 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய பதின் மூன்று பயணிகள் இருக்கைக்கு குறையாத (வயது வந்தோர்) உந்து ஊர்திகள் |
| 8702.10.30 | ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதினேழு இருக்கைகளுக்கு குறையாத (வயது வந்தோர்) விஞ்சாத இயலளவைக் கொண்ட உந்து ஊர்திகள் |
| 8702.10.40 | ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதின் மூன்று இருக்கைகளுக்கு குறையாத (வயது வந்தோர்) பதினேழு இருக்கைகளை விஞ்சாத இயலளவைக் கொண்ட உந்து ஊர்திகள் |
| ஏனையவை | |
| 8702.90.10 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத பதின் மூன்று பயணிகள் இருக்கைக்கு குறையாத (வயது வந்தோர்) உந்து ஊர்திகள் |
| 8702.90.20 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய பதின் மூன்று பயணிகள் இருக்கைக்கு குறையாத (வயது வந்தோர்) உந்து ஊர்திகள் |
| 8702.90.30 | ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதின் மூன்று பேர் அதற்குக் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் பதினேழு பேருக்கு விஞ்சாத (வயது வந்தோர்) இருக்கைகளை கொண்ட உந்து ஊர்திகள் |
| 8702.90.40 | ஐந்தாண்டுகளை விஞ்சிய பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதின் மூன்று பேர் அதற்குக் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் பதினேழு பேருக்கு விஞ்சாத (வயது வந்தோர்) இருக்கைகளை கொண்ட உந்து ஊர்திகள் |
| | **நிலைய பார வண்டிகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட (இணங்குவிப்பு தலைப்பு 87.02இன் கீழ் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர) ஆட்களின் போக்குவரத்திற்காக முக்கியமாக வடிவமைக்கப்பட்ட உந்து ஊர்திகள்** |
| பனிக்கட்டிகளில் பயணிக்கக்கூடிய வண்டிகள் ஹொல்வ் ஊர்திகள் மற்றும் அதையொத்த ஊர்திகள் | |
| 8703.10.10 | மூன்றரையாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.10.20 | மூன்றரையாண்டுகளுக்குக் கூடுதலாக பழமை வாய்ந்தவை |
| தீப்பொறி பரப்பும் உள்ளக வெப்பமுறக்கூடிய பரிவர்த்தன பிஸ்டன் இயந்திரம் (டீசல் அல்லது ஓரளவு டீசல்) | |
| | 1,000 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவு |
| 8703.21.60 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத, நிலைய ஊர்திகள் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள் |
| 8703.21.70 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய, நிலைய ஊர்திகள் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள் |
| | ஏனையவை |
| 8703.21.91 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.21.92 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| | 1,000 சி.சி. யை விஞ்சிய ஆனால் 1,500 ஐ விஞ்சாத உருளை இயலளவு |
| 8703.22.50 | மூன்றரையாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்த நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள் |
| 8703.22.60 | மூன்றரையாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்த நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள் |
| 8703.22.70 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத ஏனையவை |
| 8703.22.80 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய ஏனையவை |
| | 1,500 சி.சி. யை விஞ்சிய ஆனால் 3,000 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவு |
| | மூன்றரையாண்டுகளை பழமையை விஞ்சாத 2,000 சி.சி. உருளை இயலளவிற்குட்பட்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.23.51 | 1,600 சி.சி. உருளை இயலளவை விஞ்சாதவை |
| 8703.23.59 | ஏனையவை |
| 8703.23.60 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய 2,000 சி.சி. உருளை இயலளவிற்கு விஞ்சாத நிலைய ஊர்திகள் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.23.70 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத 2,000 சி.சி. உருளை இயலளவிற்கு விஞ்சிய நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |

| | |
|---|---|
| 8703.23.80 | மூன்றரையாண்டுகளுக்கு கூடுதலான பழமை வாய்ந்த 2,000 சி.சி. இற்கும் கூடுதலான உருளை இயலளவைக் கொண்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| | ஏனைவை |
| 8703.23.91 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத 2,000 சி.சி. இற்கு உட்பட்ட உருளை இயலளவு |
| 8703.23.92 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய 2,000 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவு |
| 8703.23.93 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத 2,000 சி.சி. உருளை இயலளவினை விஞ்சியவை |
| 8703.23.94 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய 2,000 சி.சி. உருளை இயலளவினை விஞ்சியவை |
| | 3,000 சி.சி. யை விஞ்சிய உருளை இயலளவு |
| 8703.24.50 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.24.60 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.24.70 | ஏனையவை, மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.24.80 | ஏனையவை, மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| | அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்டன் இயந்திரத்துடன் கூடியது (டீசல் அல்லது ஓரளவு டீசல்) |
| | 1,500 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவு |
| 8703.31.70 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.31.80 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| | ஏனையவை |
| 8703.31.91 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.31.92 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| | 1,500 சி.சி. யை விஞ்சிய ஆனால் 2,500 சி.சி. விஞ்சாத உருளை இயலளவு |
| | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத, 2,000 சி.சி. விஞ்சாத உருளை இயலளவுடன் கூடிய நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.32.51 | 1,600 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவு |
| 8703.32.59 | ஏனையவை |
| 8703.32.60 | மூன்றரையாண்டுகளுக்கு கூடுதலான பழமை வாய்ந்த 2,000 சி.சி. விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.32.70 | மூன்றரையாண்டுகளை விஞ்சாத 2,000 சி.சி. உருளை இயலளவினைக் கொண்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.32.80 | மூன்றரையாண்டுகளுக்கு கூடுதலான பழமை வாய்ந்த 2,000 சி.சி. யை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| | ஏனையவை |
| 8703.32.91 | மூன்றரையாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்த 2,000 சி.சி. யை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட உருளைகள் |
| 8703.32.92 | மூன்றரையாண்டுகளை விஞ்சிய 2,000 சி.சி. விஞ்சாத இயலளவைக் கொண்ட உருளைகள் |
| 8703.32.93 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத, 2,000 சி.சி. விஞ்சிய இயலளவைக் கொண்ட உருளைகள் |
| 8703.32.94 | மூன்றரையாண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்த 2,000 சி.சி. யை விஞ்சிய இயலளவைக் கொண்ட உருளைகள் |
| | 2,500 சி.சி. யை விஞ்சிய இயலளவைக் கொண்ட உருளைகள் |
| 8703.33.50 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சாத, நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.33.60 | மூன்றரையாண்டுகள் பழமையை விஞ்சிய, நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட்ட உந்து ஊர்திகள் |
| 8703.33.70 | மூன்றரையாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.33.80 | மூன்றரையாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை |
| 8703.90.30 | ஏனைய மின்பொருட்கள், மூன்றரையாண்டுகளை விஞ்சாதவை |
| 8703.90.40 | ஏனைய மின்பொருட்கள், மூன்றரையாண்டுகளுக்கும் கூடுதலானவை |
| 8703.90.50 | ஏனையவை, மூன்றரையாண்டுகளை விஞ்சாதவை |
| 8703.90.60 | ஏனையவை, மூன்றரையாண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |

| | |
|---|---|
| **பொருள் போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள்** | |
| அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது (டீசல் அல்லது ஓரளவு டீசல்): | |
| | 1,500 முப க்கு குறைவான ஊர்திகள் |
| 8704.21.81 | ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.21.82 | ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை |
| 8704.21.91 | ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.21.92 | ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| தீப்பொறிச் சுவாலை உள்ளக அழுத்தி பிஸ்டன் இயந்திரங்கள் | 1,500 முப க்கும் குறைவான ஏனைய ஊர்திகள் |
| 8704.31.71 | ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.31.72 | ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை |
| 8704.31.91 | ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.31.92 | ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை |
| 8704.90.30 | மின்பொருட்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.90.40 | ஏனைய, மின்பொருட்கள் ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலாக பழமை வாய்ந்தவை |
| 8704.90.50 | ஏனையவை, ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8704.90.60 | ஏனையவை, ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| **87.01 இலிருந்து 87.05 வரையான தலைப்பீனைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான எந்திரத்துடன் பொருத்தப்பட்ட அடிச்சட்டங்கள்:** | |
| 8706.00.20 | 87.02 தலைப்பிலான ஏனைய உந்து ஊர்திகளுக்கான எந்திரங்களுடன் பொருத்தப்பட்ட புதிய அடிச்சட்டங்கள் |
| 8706.00.40 | ஏனைய உந்து ஊர்திகளுக்கான இயந்திரங்களுடன் பொருத்தப்பட்ட ஏனைய புதிய அடிச்சட்டங்கள். |
| 8706.00.50 | எந்திரங்களுடன் பொருத்தப்பட்ட பாவிக்கப்பட்ட அடிச்சட்டங்கள் |
| **87.01 இலிருந்து 87.05 வரையான தலைப்பினைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான உடல் பாகங்கள் (வாகன வண்டிகள் உட்பட)** | |
| 8707.10 | 87.03 தலைப்பினைக் கொண்ட ஊர்திகளுக்கானவை |
| 8707.90.10 | வெட்டுவதன் மூலம் பிரதான ஊர்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டமையின் மூலம் ஏனைய உடற்பாகங்களுக்கும் வாடகை ஊர்திகளுக்கும் இணைக்கப்படுகின்றவை ஆனால் அத்தகை இணைப்புக்களின் காரணமாக உயர்மட்டத்தில் வகைப்படுத்தப்படாதவை |
| 8707.90.90 | ஏனையவை |
| **87.01 இலிருந்து 87.05 வரையிலான தலைப்பினைக் கொண்ட உந்து ஊர்திகளின் உடற்கோப்புகள் மற்றும் பொருத்துக்கள்** | |
| 8708.29.10 | உடற்கோப்புகளினதும் வாடகை ஊர்திகளினதும் "வெட்டியெடுக்கப்பட்ட பாகங்கள்" |
| 8708.70.10 | மெருகூட்டலைக் காட்டுகின்ற டயர்களுடன் பொருத்தப்பட்ட சில்லு வளையங்கள் |
| 8708.70.20 | ஏனையவை, டயர்களுடன் பொருத்தப்பட்ட சில்லு வளையங்கள் |
| 8708.99.20 | எந்திரங்களுடன் பொருத்தப்படாத ஏனைய புதிய அடிச்சட்டங்கள் ஆனால், பொருத்தப்பட்டவை அல்லது பொருத்தப்படாதவை |
| 8708.99.30 | எந்திரங்களுடன் பொருத்தப்படாத ஏனைய பாவிக்கப்பட்ட அடிச்சட்டங்கள் ஆனால், பொருத்தப்பட்டவை அல்லது பொருத்தப்படாதவை |
| 8708.99.40 | உந்து ஊர்திகளின் வெட்டப்பட்ட "உடற்கோப்புக்கள்" |
| **எந்திர ரீதியாக செலுத்தப்படாத இளுவை வண்டிகள் மற்றும் ஓரளவு இளுவை வண்டிகள்; ஏனைய ஊர்திகள் அவற்றின் பாகங்கள்;** | |
| வீடமைப்பு அல்லது முகாம் நோக்கங்களுக்கான நடமாடும் மூடுவண்டிகளுக்கான இளுவை மற்றும் ஓரளவு இளுவை ஊர்திகள் | |
| 8716.10.01 | ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான பழமையானவை |
| 8716.10.02 | ஐந்து ஆண்டுகளுக்கு கூடுதலான பழமையானவை |

## அட்டவணை அ1

## நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடுகளுக்குட்பட்ட பொருட்களின் பட்டியல்

| விபரம் | இணங்குவிக்கப்பட்ட தலைப்புக்களை உள்ளடக்கியவை |
|---|---|
| தாவர எண்ணெய் | 1511.10 தவிர்ந்த 1511 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் 1512.11 தவிர்ந்த 1512 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சாக்கிலேட்டுக்கள் | 1806 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| பாண், பேஸ்ரி, கேக் வகை, விசுக்கோத்து மற்றும் ஏனைய வெதுப்பகப் பொருட்கள் | 1905 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| பியர் | 2203 |
| வைன், நறுமணமூட்டப்பட்ட குடிவகைகள் மற்றும் புளித்த காடி குடிவகைகள் | 2204, 2205 மற்றும் 2206இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| மதுசாரம், பழத்தேறல் வகை மற்றும் ஏனைய மதுசார வகைக் குடிவகை | 2208இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| வாசனைப் பொருட்கள் மற்றும் குளியலறைத் திரவங்கள் | 3303 |
| அழகு சாதனங்கள் அல்லது ஒப்பனைத் தயாரிப்புக்கள் (உதட்டுச் சாயம், கண்ணுக்கு தீட்டும் பொருட்கள், கைவிரல் நகங்கள் மற்றும் கால் விரல் நகங்களுக்கான அழகு சாதனங்கள் போன்றவை) | 3304இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| தலைமுடிக்கு பயன்படுத்தும் தயாரிப்புக்கள் | 3305இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| முகச்சவரத்திற்கு முன்னான முகச்சவரம் செய்கின்ற பொழுது அல்லது முகச்சவரத்தின் பின் பயன்படும் பொருட்கள், உடல் சுத்தமாக்கிகள், வியர்வை துர்நாற்றத்தினை அகற்றும் பொருட்கள், நறுமணமூட்டப்பட்ட குளியல் உப்புக்கள், ஏனைய குளியல் பொருட்கள், அறைகளுக்கான வாசனைப் பொருட்கள் அல்லது சுத்தமாக்கல் பொருட்கள் | 3307.10, 3307.20, 3307.30, 3307.41 மற்றும் 3307.49 |
| சவர்க்காரம் மற்றும் உடல் மெருகூட்டல் உற்பத்திகள் | 3401இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சாப்பாட்டு மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பொருட்கள், குளியலறைப் பொருட்கள் மற்றும் பிளாத்திக்குகள் | 3924.90.01 நீங்கலாக 3924 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் (பாலூட்டும் போத்தல்களுக்கான சூப்பிகள்) |
| நெய்யப்பட்ட அல்லது பின்னப்பட்ட ஆடைப்பொருட்கள் | 6117.80.01, 6117.80.09 மற்றும் 6117.90 தவிர்ந்த அத்தியாயம் 61இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| நெய்யப்படாத அல்லது பின்னப்படாத ஆடைப்பொருட்கள் | 6217.10 மற்றும் 6217.20 தவிர்ந்த அத்தியாயம் 62இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| காலணி | 6406 (பகுதிகள்) தவிர்ந்த அத்தியாயம் 64இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| செயற்கைப் பூக்கள் | 6702இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சுவர் ஓடுகள், தரை ஓடுகள் மற்றும் அவற்றைப் போன்றனவும் | 6907 மற்றும் 6908இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| மண்பாண்டம், புரோசலின் அல்லது சீனாவிலிருந்தான உணவு மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள் | 6911 மற்றும் 6912இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சிலைகள் வேறு அலங்கார மட்பாண்டப் பொருட்கள் | 6913இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| உணவு மேசை, சமயலறை, குளியலறை, அலுவலகம், உள்ளக அலங்காரம் அல்லது அதனை ஒத்த நோக்கங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் | 7013.99.01 (குழந்தைகளுக்கு பாலூட்டும் போத்தல்) தவிர்ந்த 7013இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| போலி ஆபரணங்கள் | 7117இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| துருப்பிடிக்காத உருக்கினாலான உணவு மேசைப்பொருட்கள், சமயலறைப்பொருட்கள், ஏனைய வீட்டுப் பாவனைப்பொருட்கள் | 7323.93 |
| பூட்டுக்களும் ஆமைப் பூட்டுக்களும் | 8301.10 8301.20, 8301.30, 8301.40 மற்றும் 8301.50 |

| | |
|---|---|
| மின் விசிறிகள் | 8414.51, 8414.59, 8414.59.10 |
| குளிரூட்டிகள் | 8415இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| குளிர்சாதனப் பெட்டிகள், ஆழ்குளிரூட்டிகள் மற்றும் ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளினதும் ஆழ்குளிரூட்டியினதும் துணைக்கருவிகள் | 8418.91.01, 8418.91.02, 8418.91.09, 8418.99.01, 8418.99.02 மற்றும் 8418.99.09 தவிர்ந்த 8418இன் கீழான அனைத்து இணங்குவிப்புக்கள் |
| உணவுத்தட்டுக்கள் கழுவும் பொறிகள் | 8422.11 |
| வீட்டுப்பாவனைக்கான மற்றும் சலவை நிலையத்திற்குரிய வகையிலான பொறிகள் | 8450.20 மற்றும் 8450.90 தவிர்ந்த 8450இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மின்னியல் எந்திரங்களிலான வீட்டுப்பாவனைப் பொருட்கள் | 8509.90 (உதிரிப்பாகங்கள்) தவிர்ந்த 8509இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மின் உந்து அதனுடன் இணைக்கப்பட்ட முகச்சவரக்கருவிகள், முடிவெட்டும் கருவிகள் மற்றும் முடி அகற்றும் கருவிகள் | 8510.90 (உதிரிப்பாகங்கள்) தவிர்ந்த 8510இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| உடனடியாக அல்லது நீரைச் சேமித்து சூடாக்கும் பொறிகலன்கள் மற்றும் நீரில் அமிழ்த்தும் கொதிகலன்கள் | 8516.10 |
| தலைமுடி உலர்த்திகள் மற்றும் தலைமுடி அலங்கரிப்புக் கருவிகள் | 8516.31 மற்றும் 8516.32 |
| மின் இசுத்திரிக்கைப் பெட்டிகள் | 8516.40 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மைக்ரோவ் வேவ் ஒவன்கள் | 8516.50 |
| ஏனைய ஒவன்கள் மற்றும் அடுப்புக்கள் | 8516.60 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| கோப்பி மற்றும் தேனீர் தயாரிப்புப் பொறிகள் | 8516.71 |
| வாட்டும் பொறிகள் | 8516.72 |
| செலூலர் செல்லிடத் தொலைபேசிகள் | 8517.12.10 மற்றும் 8517.12.20 |
| வீடியோ பதிவு செய்தல் அல்லது மீளத் தயாரிக்கும் கருவிகள், வீடியோ ஒலிச்சீராக்கிகளுடன் அல்லது இல்லாமல் | 8521இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலையங்களின் கீழும் |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் | 8528.72 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| அன்ரனாக்கள் | 8529.10.10, 8529.10.20, 8529.10.30 |
| ஒளிகாலும் மின்குமிழ்கள், நீண்ட மின் ஒளிகாலும் விளக்குகள் | 8539.22 |
| கை மணிக்கூடுகளும் மேசை மணிக்கூடுகளும் | 9101, 9102, 9103 மற்றும் 9105இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| விளக்குகள் வெளிச்சப் பொருத்துக்கள் | 9405.10, 9405.20, 9405.30, 9405.40, 9405.40.10, 9405.40.20 மற்றும் 9405.40.90 |
| விளையாட்டுப் பொருட்கள் | 9503 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |

**தொடர்பு எண்: 06/04/01/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 மாச்சு 28

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டு சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் கப்பல்களை தொழிற்படுத்தாது பொதுவாகச் சரக்குகளை கொண்டு செல்பவர்களுக்கான (உரிமம் வழங்குகின்ற) ஒழுங்குவிதிகள் - 2005**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2005/09/23ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 06/07/07/2005 இன்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் இத்தால் உடனடியாக இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனையும் தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு எண்: **06/04/02/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 மே 06

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்களில் செய்யப்படும் முதலீடு**

வெளிநாட்டு பிரசைகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச்சபைகள், மற்றும் வெளிநாட்டு நிதியங்கள், சமவாய நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், அத்தகைய முதலீடுகளின் கூட்டுத்தொகை வெளிநிற்கும் திறைசேரி உண்டியல் இருப்பில் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு திறைசேரி உண்டியல்களை இப்பொழுது கொள்வனவு செய்யலாம், விற்கலாம் அல்லது மாற்றல் செய்யலாம் என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**1. கொடுப்பனவுமுறை**

திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்கின்ற வெளிநாட்டுப் பிரசைகள், அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் அல்லது வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவிற்கான கொடுப்பனவுகளை வங்கித்தொழில் முறையினூடான உள்முக பணவனுப்பல்களின் மூலமும் முதலீட்டாளரின் பெயரில் திறக்கப்பட்ட "திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்று அழைக்கப்படும் சிறப்பு ரூபா கணக்குகளினூடாகவும் வழிப்படுத்த முடியும். இக் கணக்குகளை தகமையுடைய தனிப்பட்ட முதலீட்டாளர்களோ அல்லது இரண்டு அல்லது மூன்று தகமையுடைய முதலீட்டாளர்கள் கூட்டாகவோ வைத்திருக்கமுடியும்.

**2. திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - 2 இற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

கணக்குகளில் பின்வருவனவற்றை வரவு வைக்கலாம்:-

(அ) வங்கித்தொழில் முறையினூடாக வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல் பெறுகைகள்;

(ஆ) திறைசேரி உண்டியல்களின் விற்பனை, மாற்றல் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளிலிருந்து பெறப்பட்ட பெறுகைகள் அல்லது அந்த மூலதனப் பெறுகைகள் மூலமாகப் பெறப்பட்ட வருமானம்.

**3. திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - 2 இற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கணக்குகளில் பற்று வைக்கலாம்:-

(அ) திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கான கொடுப்பனவுகள்;

(ஆ) முதனிலை வணிகர்களுக்கான கொடுப்பனவுகள்;

(இ) தொடர்பான வங்கிக் கட்டணங்களின் கொடுப்பனவுகள்;

(ஈ) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உள்ளூர் செலவுகள்;

(உ) திறைசேரி உண்டியல்களின் விற்பனை அல்லது மாற்றல் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் அல்லது அதன் மூலதன இலாபமீட்டிப் பெறப்பட்ட எந்தவொரு வருமானத்தையும் வெளியில் அனுப்புதல்

**4. அறிக்கையிடும் தேவைப்பாடு**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைக்கப்பட்ட படிவத்தினை ஒத்தவாறு தற்போதுள்ள அதேநேர கணனி முறைமையினூடாக நாளாந்த அடிப்படையில் தகவல்களை இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர் ..........................................................................**

**.......................................... இல் உள்ளவாறு திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு பற்றிய நாளாந்தக்கூற்று**

ரூ. மில்

| விடயம் | தொகை |
|---|---|
| 01. ஆரம்ப மீதி (முன்னைய நாளின் முடிவு மீதி) | |
| 02. உட்பாய்ச்சல்கள் | |
| அ. மூலதனம் | |
| ஆ. வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல் | |
| 03. மீளப் பெறப்பட்டவை | |
| அ. உள்நாட்டு மீளப்பெறல் | |
| ஆ. வெளிநாட்டிற்கான பணவனுப்பல் | |
| 04. இறுதி மீதி | |

*தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்*
"டி" கிளை
தொலைபேசி எண் : 2477242
மின்னஞ்சல் முகவரி: **ecd@cbsl.lk**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேடமானது

இல. 1550/21 வெள்ளிக்கிழமை 2008 மே 23

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

### பகுதி I : தொகுதி (I) - பொது
### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்
### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7, 10, 11, 15 மற்றும் 30 (5) பிரிவுகளின் நியதிகள் தொடர்பிலான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2007 சனவரி 22ஆம் திகதியிட்ட இல. 1481/1 கொண்ட அரச வர்த்தமானியில் (விசேடமானது) வெளியிடப்பட்ட அறிவித்தலின் பந்தி 1 நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் பந்தியை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகிறது.

**"1. அனுமதி**

(அ) இலங்கைச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (423ஆம் அத்தியாயம்) தொடர்பில் ஏற்புடையதாயிருக்கின்ற 10ஆம், 11ஆம், 15ஆம் மற்றும் 30ஆம் பிரிவின் 5ஆம் உபபிரிவுகளின் ஏற்பாட்டு நியதிகளில், வெளிநாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், ஒத்துழைப்பு நிதியங்கள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகள் ஆகியோருக்கு இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும், அத்துடன்

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளின்படி இலங்கையில் வதியும் ஒருவர் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் தொடர்பாக, வெளிநாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் எந்த கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் அல்லது வரவு வைப்பதற்கும்

இதனகத்துப் பின்னர் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது."

டீ வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு
2008 மே 23

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேடமானது

இல. 1550/22 வெள்ளிக்கிழமை 2008 மே 23

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

### பகுதி I : தொகுதி (I) - பொது
### இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்
### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்
### செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நியதிகளிலான அனுமதி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) பிரிவு 7இன் நோக்கங்களுக்காக வெளிநாட்டுப் பிரசைகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டு நிதியங்கள், ஒத்துழைப்பு நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களிலான அவர்களது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கையில் வதியும் ஆட்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அல்லது வரவுகளைச் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

டீ வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு
2008 மே 23

**தொடர்பு எண்: 06/04/03/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 மே 23

*அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**தொடர்பான விடயம்: 2007.01.22ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/03/2007 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

06.12.07 நாளிடப்பட்ட எண் 06/04/10/2007 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினால் திருத்தப்பட்டவாறான மேற்குறிப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் கீழேயுள்ளவாறு இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

1. 1ஆம் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுவதன் மூலம்

   "1. வெளிநாட்டு நிதியங்கள் பிராந்திய நிதியங்கள் அல்லது இருவாயினொத்த நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகள் ஆகியோர் ரூபா நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் அனுமதிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்ட மேலேயுள்ள வகையினர் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளூடாக திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் மாற்றல் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர். அத்தகைய திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இம் முறியினை இரண்டாந்தரச் சந்தையில் எந்தவொரு ஆளுக்கும் அவர் இலங்கையில் வதிபவராயினும் சரி, இலங்கைக்கு வெளியில் வதிபவராயினும் சரி வைத்திருக்க வேண்டும் என்ற காலப்பகுதித் தேவைப்பாடு எதுவுமின்றி விற்பனை செய்யலாம்.

2. 3ஆம் பந்தியின் துணைப்பந்தி (அ) இல் "இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட" என்ற வாசகத்தை நீக்கி விடுவதன் மூலமும்

27.12.06 நாளிடப்பட்ட தொடர்பு எண் 06/04/10/2007 இன் கீழ் விடுக்கப்பட்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி : ஆளுநர்
துணை ஆளுநர் (டபிள்யூ)
துணை ஆளுநர் (ஜே)
உ. ஆளுநர் (எஸ்எம்)
கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்

**தொடர்பு எண்: 06/04/04/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 மே 29

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலின் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்குமொரு வழிமுறையாக அவர்களின் வெளிநாட்டு செலாவணித் தேவைப்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் “இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு” என்ற பெயரில் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கமைய, பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு நேரடியாகவோ மறைமுகமாகவோ இரத்தினக்கல் அத்துடன் அல்லது ஆபரண ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

**2. கணக்குகளைத் திறத்தல்**

இத்திட்டத்தின் கீழான கணக்குகளை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால், இரத்தினக்கல் அத்துடன்/ அல்லது ஆபரண ஏற்றுமதியாளரென தனிப்பட்டவருக்கு, நிறுவனத்திற்கு அல்லது கம்பனிக்கு உறுதிப்படுத்தி வழங்கிய சான்றிதழை சான்றாகச் சமர்ப்பிப்பதன் மூலம் தனிப்பட்ட ஒருவர், நிறுவனமொன்று, அல்லது கம்பனியொன்று கட்டுப்படுத்தப்படாத வடிவிலமைந்த சேமிப்பு அல்லது நிலையான வைப்புக் கணக்கொன்றினைத் திறக்க முடியும்.

**3. கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

(அ) குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வங்கித்தொழில் முறையினூடாகப் பெறப்பட்ட இரத்தினக்கல் அத்துடன்/ அல்லது ஆபரணங்களின் ஏற்றுமதிப் பெறுகைகள்;

(ஆ) இலங்கைச் சுங்கத்திற்கு பிரகடனம் செய்யப்பட்டு வெளிநாட்டில் விற்பனை செய்யப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பெறுகைகள் மற்றும் இலங்கைச் சுங்கத்தினால் வழங்கப்பட்ட பொதிகளின் பிரகடனப்படுத்தல் பிரதியொன்றுடன் கணக்கு வைத்திருப்பவர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் நேரடியாக வழங்கிய பெறுகைகள்;

(இ) இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கு மூலப்பொருட்களை வழங்கியமை தொடர்பாகப் பெறப்பட்ட வங்கி வரைவு அல்லது வங்கி மாற்றல் வடிவில் கணக்கு வைத்திருப்பவரினால் உள்நாட்டில் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள்;

(ஈ) கணக்கில் ஒன்று சேர்ந்த வட்டி.

**4. கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

(அ) 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக மற்றும் உணவு அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டு 1998 ஏப்பிறல் 8ஆம் நாளிடப்பட்ட இலக்கம் 1022/6 கொண்ட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இசைவாக இரத்தினக்கற்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதிகள் உட்பட்டிருக்குமிடத்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்கள் மற்றும் மூலப்பொருட்களின் இறக்குமதிகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியிலமைந்த கொடுப்பனவுகள்;

(ஆ) வெளிநாடுகளில் பட்டை தீட்டப்படாத இரத்தினக்கல் மற்றும் ஏனைய மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் நேரத்தில் செய்யப்படுகின்ற ஐ.அ.டொலர் 10,000 இனை விஞ்சாத வெளிநாட்டு நாணயத்தாள்களிலமைந்த மீளப்பெறுகைகள்;

(இ) உள்நாட்டில் வழங்குவதற்காக இலங்கை ரூபாவில் மேற்கொள்ளப்படும் மீளப்பெறுகைகள் கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்படுகின்றன. எனினும், அத்தகைய மீளப்பெறுகைகள் வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றப்பட்டு கணக்கிற்கு மீள வரவு வைக்கப்படுவதற்கு தகமையுடையனவாகா;

(ஈ) பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்கள் அல்லது ஆபரணங்களின் உள்ளூர் வழங்குநர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படும் கொடுப்பனவுகள், இவை வங்கி மாற்றல் அல்லது வங்கி வரைவுகளின் வடிவில் இருத்தல் வேண்டும்.

**5. ஆகக் குறைந்த மீதித் தேவைப்பாடு**

இத் திட்டத்தின் கீழுள்ள கணக்கொன்று குறைந்தது ஐ.அ.டொலர் 10,000 கொண்ட மீதிகளைப் பேண வேண்டும்.

**6. அறிக்கையிடும் தேவைப்பாடு**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அறிக்கையிடும் காலாண்டுப்பகுதியைத் தொடர்ந்து வரும் 15 நாட்களுக்குள் இணைக்கப்பட்டுள்ளவாறான செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் காலாண்டுப்படிவத்தில் ஒவ்வொரு கணக்கினதும் விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இணைப்பு

**வங்கியின் பெயர் : ......................................................................**

**...................................................................... மாதத்திற்கானது**

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு**

| கணக்கு இலக்கம் | கணக்கு வைத்திருப்பவரின் பெயர் | நாணயம் | ஆரம்ப மீதி | மொத்த வரவுகள் | மொத்த பற்றுக்கள் | முடிவிலுள்ள மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**தொடர்பு எண்: 06/04/05/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூன் 02

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்குகள்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் வைப்பிடுவதற்கு, பின்வரும் நடைமுறைகளின் கீழ் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து முதலீடுகளை ஏற்றுக் கொள்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றார்கள்.

i) **கணக்குகளைத் திறப்பதற்கு தகுதியுடைய முதலீட்டாளர்கள்:** வெளிநாட்டு பிரசைகள், இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கைப் பிரசைகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் நாட்டிற்கான நிதிகள், இருவாயினொத்த நிதிகள் மற்றும் பிராந்திய நிதிகள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் ஆகியோர் கணக்குகளை இரண்டு அல்லது மூன்று தகுதியுடைய முதலீட்டாளர்கள் கூட்டாகவும் வைத்திருக்கலாம்.

ii) **கணக்குகளின் வகை:** குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் அல்லது இலங்கை ரூபாவில் தவணை வைப்புக்கள் அல்லது சேமிப்பு வைப்புக்கள்

iii) **அனுமதிக்கப்பட்ட வரவுகள்:**

(அ) அத்தகைய வைப்புக்களில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறையினூடாக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட உள்முக பணவனுப்பல்களின் பெறுகைகள்.

(ஆ) பயணிகள் காசோலை, வங்கி வரைவுகள் வடிவிலமைந்த வெளிநாட்டு நாணயம் அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்கான அவரின் விஜயத்தின் போது இலங்கைச் சுங்கத்திற்கு பிரகடனம் செய்யப்பட்டு நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நாணயத்தாள்களையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்ட நாணயத்தாள்களாகவும் பயணிகள் காசோலை இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டதாகவும் வங்கி வரைவு கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் புறக்குறிப்பீடு செய்யப்பட்டதாகவுமிருக்குமிடத்து மட்டும் வரவு வைக்கலாம்.

(இ) கணக்கிலுள்ள நிதியின் மீது ஒன்று சேர்ந்த வட்டி

iv) **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**: வெளிச் செல்லும் பணவனுப்பல்கள் ஏனைய வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகளுக்கான மாற்றல்கள், கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் மேற்கொள்ளும் செலவுகள் மற்றும் பற்றுவரி போன்ற சட்ட ரீதியான கொடுப்பனவுகள்.

v) **ஆகக் குறைந்த கணக்கு மீதி**: ஐ.அ.டொலர் 10,000 அல்லது அதற்குச் சமமான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் அல்லது இலங்கை ரூபா.

vi) **வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்குகளிலுள்ள மொத்த மீதிக்கான உச்ச எல்லை:** அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரின் வெளிநாட்டு முதலிட்டு வைப்புக் கணக்கின் மீதான மொத்தப் பொறுப்புக்கள் உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் 20 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

vii) **இடர்நேர்வு முகாமைத்துவம்**: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது மற்றைய வியாபாரங்களுடன் தொடர்பான இடர்நேர்வுகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு தொடர்பான திரவ இடர்நேர்வு மற்றும் செலாவணிவீத இடர்நேர்வு போன்ற உள்ளார்ந்த இடர்நேர்வுகளைத் தனித்தனியாக மதிப்பிட்டு குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முறையினை நடைமுறைப்படுத்தல் வேண்டும். அத்தகைய முகாமைத்துவ முறைமைகளை காத்திரமான முறையில் அணுகுவதற்கான தகவல்கள் தேவையான வேளைகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு பரீட்சிப்புக்காகக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

viii) **அறிக்கையிடல்**: அடுத்து வரும் காலாண்டின் 15ஆம் நாளுக்குப் பிந்தாமல், இணைக்கப்பட்ட படிவத்திலுள்ளவாறு காலாண்டு அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தகவல்களைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கின் காலாண்டுக்கூற்று ............................... முடிவிலுள்ளவாறு**

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர் .....................................**

| விடயம்/ நாணயம் | எண்ணிக்கை /தொகை |
|---|---|
| 01. கணக்குகளின் எண்ணிக்கை<br>ஐ.அ. டொலர்<br>இசுரேலிங் பவுண்<br>யூரோ<br>இலங்கை ரூபா<br>ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 02. மொத்த வெளிநின்ற மீதி<br>ஐ.அ. டொலர்<br>இசுரேலிங் பவுண்<br>யூரோ<br>இலங்கை ரூபா<br>ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 03. வரவுகள்<br>(அ) உள்முக பண வரவுகள் '000<br>ஐ.அ. டொலர்<br>இசுரேலிங் பவுண்<br>யூரோ<br>இலங்கை ரூபா<br>ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)<br>(ஆ) நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு வைப்புச் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயம் '000<br>ஐ.அ. டொலர்<br>இசுரேலிங் பவுண்<br>யூரோ<br>இலங்கை ரூபா<br>ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |
| 04. பற்றுக்கள்<br>ஐ.அ. டொலர்<br>இசுரேலிங் பவுண்<br>யூரோ<br>இலங்கை ரூபா<br>ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | |

மு.குறிப்பு: தயவுசெய்து நாணய அடிப்படையில் கணக்கு மீதான தகவல்களைத் தரவும்

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் : .................................................

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயரும் முகவரியும் : .................................................

திகதி : .................................................

**தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்:**

'டி' கிளை

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

தொலைபேசி எண் : 2477242

தொலைநகல் எண் : 2477716

மின்னஞ்சல் முகவரி : ecd@cbsl.lk

**தொடர்பு எண்: 06/04/07/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 2

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்குகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், 2008 யூலை 1ஆம் நாளில் உள்ள வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்கில் வரவு வைப்பதற்கான மொத்த வெளிநின்ற நிலுவையினை கணக்கு வைத்திருப்பவர்களுக்கு அல்லது அவர்களது சட்டபூர்வமான நன்மைபெறுநர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளியில் அனுப்புவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

(i) அத்தகைய தடுத்து வைக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான விபரங்களை அதாவது பெயர், தொகை மற்றும் கணக்கு வைத்திருப்பவர் வதியும் நாட்டிலுள்ள முகவரி என்பனவற்றை அதிகாரம்பெற்ற வணிகர் செலாவணிக்கட்டுப்பாட்டாளருக்கு சமர்ப்பித்து மீதியை விடுவிப்பதற்கு முன்னர் இவை கிடைத்தமை தொடர்பான விடயங்களை செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்; அத்துடன்

(ii) கணக்கு வைத்திருப்பவர், அனுப்ப வேண்டிய தொகை தொடர்பாக உள்நாட்டரசிறைத் திணைக்களத்திலிருந்து வரி கொடுத்துத் தீர்த்தமைக்கான சான்றிதழை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2. புலம்பெயர்ந்த ஒருவருக்கு அல்லது புலம்பெயர்ந்தவரின் சார்பாக செய்யப்படும் எந்தவொரு வெளிச்செல்லும் பணவனுப்பலும் புலம் பெயர்ந்தவரின் பெயரில் பேணப்படும் தடுத்து வைத்தல் கணக்கினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் நியதிகளில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் ஏற்கனவேயுள்ள தடுத்து வைத்தல் கணக்கு அல்லது புதிய தடுத்து வைத்தல் கணக்கில், 2008 யூலை 1ஆம் நாளிற்குப் பின்னர் செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(i) வெளிமுகப் பணவனுப்பல் நிதி மூலதன நிதியத்திலிருந்து ஆண்டொன்றிற்கு ஆகக் கூடியது ஐ.அ.டொலர் 20,000 இற்கு சமமானதாக அல்லது கணக்கு வைத்திருப்பவரின் வருமான மூலம் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மீது உண்மை மற்றும் நிதியியல் சொத்துக்களின் முதலீடு, ஓய்வூதிய நன்மைகள், காப்புறுதிப் பூட்கைகளின் மீதான கோரல் மற்றும் பெறப்பட்ட வாடகை போன்ற அனைத்து மூலங்களிலுமிருந்து தடுத்து வைத்தல் கணக்கிற்குரியவரினால் பெறப்பட்ட எந்தவொரு வருமானத் தொகையினையும் வெளியில் அனுப்பலாம். அத்தகைய பணவனுப்பல் ஆண்டிற்கு கணக்கு வைத்திருப்பவர் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடனும் பேணுகின்ற அனைத்து தடுத்து வைத்தல் கணக்குகளினதும் கூட்டுத்தொகையில் ஐ.அ.டொலர் 20,000 இனை விஞ்சக்கூடாது என்பதுடன் கணக்கு வைத்திருப்பவர் ஆண்டொன்றிற்கு அனுமதிக்கப்பட்ட எல்லையான ஐ.அ.டொலர் 20,000 இனை விஞ்சும் விதத்தில் பணவனுப்பலை மேற்கொண்டிருக்கவில்லை அல்லது மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனைப் பிரகடனப்படுத்தி சமாதான நீதவான் சரியாக உறுதிப்படுத்தி முத்திரை பொறித்த சத்திய கடதாசியினை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(ii) இலங்கையில் முதலீடு செய்வது உட்பட இலங்கையில் எந்தவொரு நோக்கத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படலாம்.

4. மேலே வழங்கப்பட்ட அனுமதியானது, செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல் நியதிகளுக்கிணங்க தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்து வைக்கப்படவுள்ள எந்தவொரு கணக்கிற்கும் அல்லது தொகைக்கும் பொருந்தாது.

5. கணக்கு வைத்திருப்பவருடன் இணங்கிக் கொண்டவாறு தடுத்து வைக்கப்பட்ட கணக்கிலுள்ள மீதிக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வட்டியைச் செலுத்தலாம்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிச்செல்லும் பணவனுப்பல்களுக்காக விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி தொடர்பாக வாராந்த அடிப்படையில் படிவம் 4 இனை பூரணப்படுத்தி செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமெனவும், தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளின் கீழுள்ள வெளிநாட்டு செலாவணியின் வெளிச்செல்லும் பணவனுப்பல் தொடர்பான திரண்டகூற்றினை மாதாந்த அடிப்படையில் அடுத்து வரும் மாதத்தின் 1 ஆவது கிழமைக்குப் பிந்தாமல் இணைக்கப்பட்ட படிவத்திலுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

7. வதியாதோர் தடுத்து வைத்தல் கணக்குகள் தொடர்பாக விடுக்கப்பட்ட முன்னைய அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

8. விளக்கம்

"தடுத்து வைத்தல் கணக்கு" என்பது செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 31இன் நியதிகளில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக அல்லது வதிவற்றோரின் எந்தத் தொகையினையும் வரவு வைப்பதற்குமாகத் திறக்கப்பட்டு பேணப்படும் கணக்குகள் எனப் பொருள்படும்.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**........................................ மாதத்திற்கான தடுத்து வைத்தல் கணக்கு நிதியத்தின் வெளிச்செல்லும் பணவனுப்பல் தொடர்பான திரண்ட கூற்று**

ஐ.அ.டொலர்

| விடயம் | தொகை |
|---|---|
| 01. 2008 யூலை 2ஆம் நாளிலிருந்து .......... மாத இறுதிவரை அனுப்பப்பட்ட மொத்தம்<br>02. ........... இம் மாத* காலத்தில் அனுப்பப்பட்ட மொத்தம் | |

**தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்:**
'டி' கிளை
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
தொலைபேசி எண் : 2477242
மின்னஞ்சல் முகவரி : ecd@cbsl.lk

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் : ...................................................
அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயரும் முகவரியும் : ...................................................

படிவம் 4

| வங்கி | கிளை | தொடர் இல. |
|---|---|---|
| ☐☐☐☐ | ☐☐☐ | ☐☐☐☐☐☐☐ |

# இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி விற்பனை - புலம்பெயர்ந்தோர் மற்றும் தடுத்துவைத்தல் கணக்கு வைத்திருப்போர்

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்**

விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) :.................................................

தற்போதைய முகவரி (பெரிய எழுத்துக்களில்) :.................................................
.................................................
.................................................
.................................................

வெளிநாட்டு முகவரி :.................................................
.................................................
.................................................
.................................................

தேசியம் :.................................................

தொழில் அல்லது நிபுணத்துவம் :.................................................

தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் :.................................................
.................................................

விண்ணப்பத்தாரியுடன் சேர்ந்து செல்லும் தங்கியிருப்போரின் பெயர்கள் :
1).................................................
2).................................................
3).................................................
4).................................................
5).................................................

தங்கியிருப்போரின் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு இலக்கங்கள் :
1).................................................
2).................................................
3).................................................
4).................................................
5).................................................

நா.மா.ஆ.

இலங்கையிலிருந்து புறப்பட உத்தேசித்திருக்கும் திகதி :.................................................

வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவின் நோக்கம் :.................................................

வெளிநாட்டுச் செலாவணி பின்வருவனவற்றிற்காக விண்ணப்பிக்கப்படுகிறது

பயணிகள் காசோலை :.................................................
வரைவுகள் :.................................................
நாணயத்தாள்கள் :.................................................
ஏனையவை (குறிப்பிடுக) :.................................................

**விண்ணப்பத்தாரியினதும் சேர்ந்து செல்லும் தங்கியிருப்போரினதும் பிரகடனம்**

மேலே குறிப்பிட்ட நாட்டில் நிரந்தரமாக வசிப்பதற்காக நான்/ நாங்கள் இலங்கையை விட்டு செல்கின்றோம் எனவும் எனது/ எமது அறிவுக்கெட்டிய வரையில் இத்தால் சமா்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் வெளிப்படுத்துகிறோம். நான்/ நாங்கள் இதே நோக்கத்திற்காக எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமும் எந்தவொரு விண்ணப்பத்தையும் செய்யவில்லை என்று வெளிப்படுத்துகின்றோம்.

**திகதி:** ........................ ........................................................................

**நா.மா.ஆ.** **விண்ணப்பத்தாரியின் கையொப்பம்**

**செலாவணிக்கட்டுப்பாட்டாளருக்கு**

வங்கிக் குறியீடு : .................................................
கிளையின் குறியீடு : .................................................
துறையின் குறியீடு : .................................................
நாட்டிற்கான குறியீடு : .................................................
நோக்கத்திற்கான குறியீடு : .................................................
நாணயத்திற்கான குறியீடு : .................................................

வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி
பயணிகள் காசோலை : .................................................
வரைவுகள் : .................................................
நாணயத்தாள்கள் : .................................................
ஏனையவை (குறிப்பிடுக) : .................................................

வங்கியின் தொடர்பு இலக்கம் : .................................................

தொடர்பான ஆவணங்களை நான் பரீட்சித்துள்ளேன். கோரிக்கையின் நம்பகத்தன்மையையிட்டு நான் திருப்திப்படுவதுடன் விண்ணப்பத்தாரியினால் தரப்பட்ட நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனையையும் உறுதிப்படுத்துகின்றேன்.

**திகதி:** .......................... ........................................................

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் ஒப்பமும் முத்திரையும்**

**தொடர்பு எண்: 06/04/08/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 2

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

## புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை

புலம் பெயர்ந்தோரின் வெளிமுக பணவனுப்பல்களுக்காக குடும்பமொன்றிற்கு அல்லது இலங்கையிலிருந்து அவர்கள் புறப்படுகையில் குடும்பத்துடன் சேர்ந்து செல்லாத தனிப்பட்ட ஒருவருக்கு ஆகக் கூடியது ஐ.அ.டொலர் 150,000 இற்குச் சமமான பெறுமதி கொண்ட வெளிநாட்டுச் செலாவணியினை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பின்வரும் நடைமுறைகளுக்குட்பட்டு விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

(i) பணவனுப்பலின் ஆகக்கூடிய பெறுமதி, அனைத்து மூலங்களிலுமிருந்து பெறப்பட்ட சட்ட ரீதியான நிதிகளையும் புலம்பெயர்வதன் பொருட்டு அனுப்புவதற்கு என எதிர்பார்த்துள்ள ஏதாவது உண்மை அல்லது நிதியியல் சொத்துக்கள், கோரல் தொகை, அல்லது இலங்கையில் பெறப்பட்ட வருமானம் மற்றும் புலர்பெயர்ந்தவர்களினால் ஏற்றுமதி செய்யப்பட்ட தனிப்பட்ட ஆபரணங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட பொருட்களின் பெறுமதியினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(ii) ஆகக்கூடிய பெறுமதியான ஐ.அ.டொலர் 150,000 எந்த ஒருவரினதும் அல்லது அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினாலும் புலம்பெயரும் குடும்பமொன்றிற்கு அல்லது குடும்பத்துடன் சேர்ந்து செல்லாத தனிப்பட்டவருக்கு செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனையினை உள்ளடக்கும்.

(iii) உத்தேசிக்கப்பட்ட நாளன்று குறிப்பிட்ட நாட்டிற்கு நிரந்தரமாக வதிவதற்காக செல்லும் தீர்மானம் புலம்பெயர்பவரின் இறுதியானதும் மாற்றமுடியாததுமான தீர்மானம் என்பதனையும் பணம் அனுப்புவதற்கு சட்ட ரீதியான தடைகள் எதுவுமில்லை என்பதனையும் பிரகடனப்படுத்தும் சமாதான நீதிவானினால் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியொன்றினை சமர்ப்பித்தல்.

(iv) அனுப்பப்படவுள்ள நிதியத்தொகை தொடர்பாக உள்நாட்டரசிறைத் திணைக்களத்திலிருந்து வரி தீர்ப்பனவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல்.

(v) தனிப்பட்ட ஆபரணங்களின் ஏற்றுமதிகளைப் பொறுத்த வரை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடமிருந்து மதிப்பீட்டறிக்கையினைச் சமர்ப்பித்தல்.

(vi) செல்லுபடியாகும் கடவுச்சீட்டையும் புலம்பெயர்வதற்கான விசாவின் புகைப்படப்பிரதியையும் சமர்ப்பித்தல்.

(vii) ஐ.அ.டொலர் 150,000 இற்கு மேலதிகமாகவுள்ள எந்தவொரு நிதியினையும் தடுத்து வைத்தல் கணக்கு தொடர்பாக 2008 யூலை 2ஆம் நாளன்று விடுக்கப்பட்ட எண் 06/04/07/2008 கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை நியதிகளுக்கிணங்க திறக்கப்பட்டு பேணப்படும் “வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்கில்” வரவு வைக்கப்படல் வேண்டும்.

(viii) பணவனுப்பல்களுக்கான விண்ணப்ப செயற்பாடுகள் புலம்பெயர்பவர் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்ல உத்தேசித்துள்ள நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் இடம்பெறல் வேண்டும்.

(ix) ஒரு தவணைக்கும் கூடுதலாக பணவனுப்பல்கள் மேற்கொள்ளப்படுமிடத்து, அனைத்து தவணைப் பணவனுப்பல்களும் ஒரே அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(x) கடவுச்சீட்டில், விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தொகையும், பணவனுப்பலின் நோக்கமும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் புறக்குறியீடு செய்யப்படல் வேண்டும்.

(xi) புலம்பெயர்ந்தவர்கள் இலங்கையை விட்டு புறப்பட்டுச் சென்ற பின்னர் அவர்களினால் நிதியினை வெளியில் அனுப்புவதற்கு செய்யப்படும் விண்ணப்பங்கள் ஒப்புதலுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(xii) புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 4 இனை வாராந்த அடிப்படையிலும் புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டு செலாவணி விற்பனை

தொடர்பாக திரட்டப்பட்ட கூற்றினை இணைக்கப்பட்ட படிவத்திலுள்ளவாறு அடுத்து வரும் மாதத்தின் 1ஆவது வாரத்திற்கு பிந்தாமல் மாதாந்த அடிப்படையிலும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2. புலம்பெயர்வோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை தொடர்பாக முன்னர் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**........................................ மாதத்திற்கான புலம்பெயர்ந்தோருக்கான வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான திரண்ட கூற்று**

ஐ.அ.டொலரில்

| விடயம் | எண்ணிக்கை/ தொகை |
|---|---|
| 1. பணவனுப்பல்களின் எண்ணிக்கை<br>2. 2008 யூலை 2ஆம் நாளிலிருந்து ........... மாத இறுதிவரை அனுப்பப்பட்ட மொத்தம்<br>3. ................... மாத காலத்தில் நிகழ்ந்த மொத்த பணவனுப்பல்கள் | |

தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்
“டி” கிளை
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
தொலைபேசி எண் : 2477242
மின்னஞ்சல் முகவரி : ecd@cbsl.lk

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் .......................................................
அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பெயர் மற்றும் முகவரி .......................................................

**தொடர்பு எண்: 06/04/09/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 3

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள்**

இப்பணிப்புரையானது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் 2008.06.02 ஆம் நாளிடப்பட்ட எண்: 06/04/05/2008 கொண்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமானதாகும்.

தங்களுக்கு இத்தால் பின்வரும் விடயங்கள் அறிவிக்கப்படுகின்றன.

1. வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் வருமான வரி, பிடித்து வைக்கும் வருமானவரி மற்றும் பற்றுவரி என்பனவற்றிலிருந்து விலக்குப் பெற்றுள்ளன என்பதனை உள்நாட்டரசிறைத் திணைக்களம் உறுதிப்படுத்தியிருக்கிறது.
2. வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கானது **“சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு”** என மீளப் பெயரிடப்பட்டிருக்கிறது.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/11/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 10

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

## மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் - சிறப்புக் கணக்குகள்

இலங்கை அரசாங்கம், "இலங்கை எனது கனவு இல்ல நிகழ்ச்சித்திட்டம்" என்பதன் கீழ் வதிவிட விசாவில் இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்க விரும்பும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளை வரவேற்பதற்கு தீர்மானித்திருக்கிறது. இத்திட்டம் 55 வயதைக் கடந்த அனைத்து மூத்த வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் உரியதாகும். விண்ணப்பதாரிகள் தமது வாழ்க்கைத் துணையையும் அவர்களில் தங்கியிருப்போரையும் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படுவர்.

இத் திட்டத்தின் கீழ் விண்ணப்பதாரி ஒருவர் ஆகக் குறைந்தது ஐ.அ.டொலர் 15,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயகத்தினை அனுப்பி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் விண்ணப்பதாரியின் பெயரில் திறக்கப்பட்ட நிலையான வைப்பு வெளிநாட்டு நாணயக் கணக்கில் அத்தகைய நிதியினை வைப்புச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இத்தொகை, விண்ணப்பதாரி வதிவோர் விசாவில் இலங்கையில் எவ்வளவு காலம் தங்கியிருக்கிறாரோ அக் காலப்பகுதி வரை கணக்கில் இருத்தல் வேண்டும். பிரதான விண்ணப்பதாரிக்கான மாதாந்த பணவனுப்பலான ஐ.அ.டொலர் 1,500 இற்குப் புறம்பாக, வாழ்க்கைத் துணை மற்றும் தங்கியிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இலங்கையில் அவர்கள் வாழ்வதற்காக ஐ.அ.டொலர் 750 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயத்தினை கணக்கு வைத்திருப்பவரின் பெயரிலுள்ள இலங்கை ரூபாவிலான சேமிப்பில் அல்லது நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளினால் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நிதியினை வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புக் கணக்குகளை தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் திறப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

### மூத்த வெளிநாட்டு பிரசைகள் நிலையான வைப்புக்கணக்கு - வெளிநாட்டு நாணயம்

#### வரவுகள்

வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட ஆகக் குறைந்த ஆரம்பத் தொகையான ஐ.அ.டொலர் 15,000 இனை அல்லது மாற்றத்தக்க ஏதாவதொரு வெளிநாட்டு நாணயத்திலான அதற்குச் சமமான தொகையினை வைப்பிலிடும் நோக்கத்திற்காக இக் கணக்குகள் திறக்கப்பட வேண்டும்.

#### பற்றுக்கள்

மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தினை முடிவுறுக்கத் தீர்மானிக்கும் நேரத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதலுடன் இக் கணக்கிலிருந்தான மீளப் பெறுகைகள் அனுமதிக்கப்படும்.

மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகளின் மீது செலுத்தப்படும் வட்டி மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் ரூபாக் கணக்கிற்கு கீழே குறிப்பிடப்பட்டவாறு மாற்றல் செய்யப்பட வேண்டும்.

### மூத்த வெளிநாட்டு பிரசைகள் ரூபாய்க் கணக்கு

நாட்டிற்குள் எடுத்துவரப்பட்ட ஆகக் குறைந்த வைப்பான ஐ.அ.டொலர் 1,500 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவிற்கு மாற்றியதன் மூலமாக வைப்புடன் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கு வடிவத்தில் இக் கணக்குகளைத் திறக்கலாம்.

#### வரவுகள்

இக் கணக்கிற்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(i) மூத்த வெளிநாட்டுப் பிரசைகளால் தமது வாழ்க்கைச் செலவிற்காக நாட்டிற்குள் எடுத்து வரப்பட்ட வெளிநாட்டு நாணயம் (அதாவது மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1,500) மற்றும் அவரின் வாழ்க்கைத் துணை மற்றும் தங்கியிருப்போர் ஒவ்வொருக்குமான

வாழ்க்கைச் செலவிற்காக கொண்டு வரப்பட்ட நிதியம் (அதாவது மாதமொன்றிற்கு ஒவ்வொரு தங்கியிருப்பவர்களுக்கும் மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 750/-)

(ii) மூத்த வெளிநாட்டுப் பிரசைகள் நிலையான வைப்புக் கணக்குகளில் உள்ள நிதியத்தின் மீது செலுத்தப்படும் வட்டி.

**பற்றுக்கள்**

கணக்கிற்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(i) முதலீட்டாளரினதும் அவரில் தங்கியிருப்பவர்களினதும் உள்ளூர் செலவுகள்

(ii) முதலீட்டாளர் அத்துடன்/ அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்பவர்களின் நடைமுறைப் பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவின் பொருட்டாக வெளிச் செல்லும் பணவனுப்பல்கள்

அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும், ரூபா மற்றும் வெளிநாட்டுக் கணக்குகள் தொடர்பான காலாண்டுக் கூற்றுக்களை மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பர் மாத காலாண்டுகள் ஒவ்வொன்றும் முடிவடைந்த 15 நாட்களுக்கிடையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 'டி' கிளைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2008.07.09 ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/10/2008 இன் கீழ் விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/12/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 11

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

## வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தாள்களை வழங்குதல்

வெளிநாடுகளுக்கு பயணிக்கும் இலங்கையர்களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியாக வெளிநாட்டு நாணயத்தாள்களை வழங்குகின்ற அளவினை தற்போதைய மட்டமான ஐ.அ.டொலர் 1,000 இலிருந்து ஐ.அ.டொலர் 2,000 இற்கு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதாவது மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திற்கு அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனினும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு நாணயங்களை வழங்கும் பொழுது கோரிக்கையின் உண்மைத்தன்மையினைப் பற்றி திருப்தியடைந்த பின்னர் தற்றுணிவின்படி நுணுக்கமான கவனிப்புக்களை மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2007.06.14 நாளிடப்பட்ட தொடர்பு எண் 06/04/08/2007 இன் கீழ் விடுக்கப்பட்ட முன்னைய பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

டீ வசந்த
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேடமானது

இல. 1559/16 புதன்கிழமை 2008 யூலை 23

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5, 7, 8, 11, 22(1) மற்றும் 30 (5) ஆம் நியதிகளிலான அனுமதி**

அனுமதி - இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (423ஆம் அத்தியாயம்) தொடர்பில் ஏற்புடையதாயிருக்கின்ற 5ஆம், 7ஆம், 8ஆம், 11ஆம் பிரிவுகள், பிரிவு 22இன் உபபிரிவு (1) மற்றும் பிரிவு 30இன் உபபிரிவு (5) என்பவற்றின் நியதிகளில் இலங்கை அரசால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பான கொள்வனவு, உரிமை மாற்றல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பின்வரும் வகை ஆட்களுக்கும் அவ்வாறான வகை ஆட்களால் அல்லது அவர்களுக்கு முறிகளை ஏற்றுமதி செய்வதற்கும் இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

(i) 1937இன் இலக்கம் 7 கொண்ட பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் 1923இன் இலக்கம் 8 கொண்ட உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட முதன்மை வணிகர்கள்.

(ii) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரஜைகள்.

(iii) இலங்கைக்கு வெளியே அவர்களின் நிரந்தர வதிவிடத்தை ஏற்படுத்திக் கொண்ட இலங்கைப் பிரஜைகள்.

(iv) தொழில் புரிவதற்கு அல்லது வியாபாரத்தை அல்லது தொழில்சார் நிறுவனத்தை நிறுவுவதற்கு இலங்கைக்கு வெளியே சென்ற இலங்கைப் பிரஜைகள்.

(v) இலங்கை தவிர்ந்த ஏனைய நாடொன்றின் சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத நிறுவனங்கள்.

(vi) செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட ஒப்புதல் தொடர்பில் அவ்வாறான காப்புறுதிக் கம்பனிகளால் வர்த்தக வங்கிகளில் பேணப்படுகின்ற விசேட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு எதிராக இலங்கை அபிவிருத்தி முறிகளின் சகல கொள்வனவுகளும் பற்று வைக்கப்படுமிடத்து, 2000இன் இலக்கம் 43 கொண்ட காப்புறுதி கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தை நடத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்.

2001 நவெம்பர் 01இன் இலக்கம் 1208/14 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2008 யூலை 23

**தொடர்பு எண்: 06/04/13/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 யூலை 25

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டில் தரையிறங்கும் கட்டணம்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்**

2007.12.31 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்துள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை அவர்களது உள்நாட்டு வான்வழிக் கட்டணங்கள்/ உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக சரக்கு அனுப்புவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற்சரக்கு பற்றுச் சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பற்சரக்கு அனுப்புவோரின் பெயர்கள் | பதிவு எண் |
|---|---|
| 01) காபர் லயின்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0249 |
| 02) ஈசி பிறேயிட் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0250 |
| 03) லா வோக் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0251 |
| 04) அற்லஸ் பிறேயிட் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0252 |
| 05) சதேன் மரிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0253 |
| 06) பிறேயிட்சிப்ஸ் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0254 |
| 07) பான் குளோபல் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0255 |
| 08) மக்ஸிப் ஏஜன்சிஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0256 |
| 09) வோயெஜர் லொஜிஸ்ரிக்ஸ் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0257 |
| 10) டீபி லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0258 |
| 11) ஏஎஸ்ஏசி மரிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0259 |
| 12) கொன்கோட் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0260 |
| 13) ரான்ஸ் நெற் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0261 |
| 14) யுனிஸ்ரார் குளோபல் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0262 |
| 15) ஏசியா ரிரேட் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0263 |
| 16) ஏசியான் ரைகர் லயின்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0264 |
| 17) ரிரான்ஸ்மராயின் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0265 |
| 18) எவ்எம்எல் கார்கோவேஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0266 |

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/14/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 ஓகத்து 26

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

**இலங்கை அரசாங்கத்தினால் 2007இல் வழங்கப்பட்ட பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதித்தல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட எண் 02/17/800/0005/01 கொண்ட சுற்றறிக்கையின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட பன்னாட்டு ரீதியான நாட்டிற்கான முறியில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பாக பின்வருவனவற்றிற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றார்கள்:

(i) 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7(அ)இன் ஏற்பாட்டு நியதிகளில், பன்னாட்டு ரீதியான நாட்டிற்கான முறிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு.

(ii) செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 11(2) மற்றும் 17(2)இன் ஏற்பாட்டு நியதிகளில் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு பன்னாட்டு ரீதியான நாட்டிற்கான முறிகளை மாற்றல் செய்யவும் அத்தகைய நாட்டிற்கான முறிகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடையே வர்த்தகம் செய்யவும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/15/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 நவெம்பர் 4

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

**பயண நோக்கங்களுக்காக வழங்கப்படும் வெளிநாட்டுச் செலாவணியினை கண்காணிக்கும் திட்டம்**

1994/03/18ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/டி/ஜிஎல்/1994/2 இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்களின் விடயம் 'சி' இன் பந்தி 2 இன் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதன்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கோரிக்கையின் உண்மைத்தன்மையினைச் சரிபார்த்து வெளிநாட்டில் கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட ஏதாவதொரு நோக்கத்திற்காக வெளிநாட்டிற்கு பயணம் செய்வதற்கான செலாவணியினை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அத்தகைய அனுமதியில் எவ்வித மாற்றங்களும் இல்லாதிருந்த அதேவேளையில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஐ.அ.டொலர் 5,000 அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயத்திற்கும் கூடுதலாக ஆளொருவருக்கு ஏதாவது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கியிருப்பின் நீங்கள் அதனை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் மாதாந்த அடிப்படையில் 2008 நவெம்பர் 3ஆம் நாள் தொடக்கம் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்க வேண்டும் என இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் தொடர்பான மாதாந்த அறிக்கை

| விண்ணப்பதாரியின் பெயர் | விண்ணப்பதாரியின் முகவரி | தே.அ.அட்டை மற்றும் கடவுச்சீட்டு இல. | நோக்கம்: பயணம், மருத்துவம் அல்லது கல்வி | ஐ.அ.டொலரில் அல்லது அதற்குச் சமமான ஏதாவது மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தொகை |
|---|---|---|---|---|
| | | | | |

.....................................
**நாள்/மாதம்/ஆண்டு**

..................................................................................
**வங்கியால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் முத்திரையும்**

**தொடர்பு எண்: 06/04/18/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 திசெம்பர் 3

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

### வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

செலாவணிக் கட்டுப்பாட்டினை மேலும் தாராளமயப்படுத்தும் ஒரு வழிமுறையாகவும் தொழிலாளர் பணவனுப்பலை முறைசார்ந்த முறையினூடாக அதிகரிக்கும் பொருட்டும் 2008 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

1. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 1988/05/05 நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசி/08/88(டி) இன் நியதிகளில் விதிக்கப்பட்டிருந்த கணக்கு வைத்திருப்பவரினால் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத்தினை வரவு வைப்பதற்கு கடவுச்சீட்டின் மீதான சுங்கத்தின் உறுதிப்படுத்தல் அல்லது சுங்கப் பிரகடன அட்டையினை சமர்ப்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு திருத்தப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத் தரப்படுகிறது. கடவுச்சீட்டின் மீதான சுங்கத்தின் உறுதிப்படுத்தலோ அல்லது சுங்கப் பிரகடன அட்டையோ இல்லாமல் கணக்கு வைத்திருப்பவரினால் கொண்டு வரப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களிலான எந்தளவு தொகையினையும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைப்பதற்காக ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தற்பொழுது அனுமதிக்கப்படுகிறார்கள்.
2. 2007.06.15ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் 06/04/09/2007இன் நியதிகளில், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தினைப் பொறுத்தவரை விதிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 1,000 என்ற வரையறை இத்தால் நீக்கப்படுவதுடன் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எந்தளவு தொகையினையும் ஏற்றுக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/19/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 திசெம்பர் 3

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா

**வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

செலாவணிக் கட்டுப்பாட்டினை மேலும் தாராளமயப்படுத்தும் ஒரு வழிமுறையாகவும் தொழிலாளர் பணவனுப்பலை முறைசார்ந்த முறையினூடாக அதிகரிக்கும் பொருட்டும் 2008 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

1. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 1991/08/01 நாளிடப்பட்ட எண் ஈசி/52/91(டி) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டமையின் மூலம் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறப்பதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடு தற்போதைய மட்டமான ஐ.அ.டொலர் 500 அல்லது அதற்குச் சமமான ஏனைய குறித்துரைக்கப்பட்ட நாணயங்களிலிருந்து ஐ.அ.டொலர் 100 அல்லது அதற்குச் சமமான ஏனைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. கடவுச்சீட்டின் மீதான சுங்கத்தின் உறுதிப்படுத்தலோ அல்லது சுங்கப் பிரகடன அட்டையோ இல்லாமல் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் எந்தவொரு தொகையினையும் ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/20/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 திசெம்பர் 8

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள*
*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

**முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளில் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், 2008 திசெம்பர் 08ஆம் நாளிலிருந்து பின்வரும் முன்மதியுடைய தேவைப்பாடுகளைப் பின்பற்றியொழுகுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(i) முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளுக்கெதிராக இறக்குமதி செய்யப்படவுள்ள இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை ஏ1இல் தரப்பட்டுள்ள பொருட்களின் மொத்த பொருட்பட்டியல் பெறுமதியின் மீது 100 சதவீதமான அளவு வைப்புத் தேவைப்பாடொன்று இறக்குமதியாளரினால் வங்கியில் பணவனுப்பல் மேற்கொள்ளும் நேரத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(ii) அளவு வைப்புத் தேவைப்பாடு பெறப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கி பொருட்பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

(iii) இலங்கைச் சுங்கத்திலிருந்து பொருட்கள் அகற்றப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற ஆவணச்சான்றினை சமர்ப்பிப்பதன் மீது அளவு வைப்புத் தேவைப்பாடு விடுவிக்கப்படல் வேண்டும்.

(iv) இவ்விறக்குமதிகள் தொடர்பான அளவு வைப்புத் தேவைப்பாட்டில் வைப்பிலிடுவதற்கு இறக்குமதியாளர்களை இயலச் செய்யும் விதத்தில் வங்கிகள் கடன் எதனையும் வழங்கக்கூடாது.

(v) அளவு வைப்புத் தேவைப்பாடு நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கும்.

(vi) அத்தகைய அளவு வைப்புக்களுக்கு வங்கி வட்டி செலுத்துதல் வேண்டும்.

(vii) இவ்வறிவுறுத்தல்களின் நியதிகளில் இறக்குமதிகளுக்காக விதிக்கப்பட்டுள்ள அளவு வைப்புத் தேபைப்பாடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு துறைமுக பண்டகசாலை வர்த்தகத்தின் கீழ் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பொருந்தாது.

(அ) இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள், அத்தகைய பொருட்கள் மூன்றாவது நாடொன்றிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்படும் வரை சுங்கவரி செலுத்தாத பண்டகசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) மீள் பொதியிடல்/ சுட்டுத்துண்டு ஒட்டுதல்/ சாதாரண பதனிடலுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அவை மூன்றாவது நாடொன்றிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னர் சுங்கவரி செலுத்தாத பண்டகசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

(இ) வர்த்தகரின் நாட்டிற்கு பொருட்கள் வராமலேயே இரண்டாவது நாட்டிலிருந்து மூன்றாவது நாட்டிற்கு பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்தல்.

(ஈ) சுங்கவரி செலுத்தாத பண்டசாலைகளுக்கு சரக்குகள் எடுத்துச் செல்லாமலே ஒரு கப்பல்/ வான்கலத்திலிருந்து மற்றொன்றிற்கு மாற்றல் செய்தல்

(viii) வங்கிகள் அத்தகைய அளவு வைப்புக்களின் விபரங்களடங்கிய மாதாந்த கூற்றினை இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள படிவத்தில், செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கான ஒரு பிரதியுடன் வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முறையே 06/11/2008 மற்றும் 11/11/2008 நாளிடப்பட்ட தொடர்பு எண் 06/04/16/2008 மற்றும் 06/04/172/2008 என்பனவற்றின் கீழ் முன்னர் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

பி டி டபிள்யு ஏ சில்வா
**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

## அட்டவணை அ1

## நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்பாடுகளுக்குட்பட்ட பொருட்களின் பட்டியல்

| விபரம் | இணங்குவிக்கப்பட்ட தலைப்புக்களை உள்ளடக்கியவை |
|---|---|
| தாவர எண்ணெய் | 1511.10 தவிர்ந்த 1511 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள்<br>1512.11 தவிர்ந்த 1512 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சாக்கிலேட்டுக்கள் | 1806 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| பாண், பேஸ்ரி, கேக் வகை, விசுக்கோத்து மற்றும் ஏனைய வெதுப்பகப் பொருட்கள் | 1905 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| பியர் | 2203 |
| வைன், நறுமணமூட்டப்பட்ட குடிவகைகள் மற்றும் புளித்த காடி குடிவகைகள் | 2204, 2205 மற்றும் 2206இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| மதுசாரம், பழத்தேறல் வகை மற்றும் ஏனைய மதுசார வகைக் குடிவகை | 2208இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| வாசனைப் பொருட்கள் மற்றும் குளியலறைத் திரவங்கள் | 3303 |
| அழகு சாதனங்கள் அல்லது ஒப்பனைத் தயாரிப்புக்கள் (உதட்டுச் சாயம், கண்ணுக்கு தீட்டும் பொருட்கள், கைவிரல் நகங்கள் மற்றும் கால் விரல் நகங்களுக்கான அழகு சாதனங்கள் போன்றவை) | 3304இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| தலைமுடிக்கு பயன்படுத்தும் தயாரிப்புக்கள் | 3305இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| முகச்சவரத்திற்கு முன்னான முகச்சவரம் செய்கின்ற பொழுது அல்லது முகச்சவரத்தின் பின் பயன்படும் பொருட்கள், உடல் சுத்தமாக்கிகள், வியர்வை துர்நாற்றத்தினை அகற்றும் பொருட்கள், நறுமணமூட்டப்பட்ட குளியல் உப்புக்கள், ஏனைய குளியல் பொருட்கள், அறைகளுக்கான வாசனைப் பொருட்கள் அல்லது சுத்தமாக்கல் பொருட்கள் | 3307.10, 3307.20, 3307.30, 3307.41 மற்றும் 3307.49 |
| சவர்க்காரம் மற்றும் உடல் மெருகூட்டல் உற்பத்திகள் | 3401இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சாப்பாட்டு மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பொருட்கள், குளியலறைப் பொருட்கள் மற்றும் பிளாத்திக்குகள் | 3924.90.01 நீங்கலாக 3924 இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் (பாலூட்டும் போத்தல்களுக்கான சூப்பிகள்) |
| நெய்யப்பட்ட அல்லது பின்னப்பட்ட ஆடைப்பொருட்கள் | 6117.80.01, 6117.80.09 மற்றும் 6117.90 தவிர்ந்த அத்தியாயம் 61இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| நெய்யப்படாத அல்லது பின்னப்படாத ஆடைப்பொருட்கள் | 6217.10 மற்றும் 6217.20 தவிர்ந்த அத்தியாயம் 62இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| காலணி | 6406 (பகுதிகள்) தவிர்ந்த அத்தியாயம் 64இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| செயற்கைப் பூக்கள் | 6702இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சுவர் ஓடுகள், தரை ஓடுகள் மற்றும் அவற்றைப் போன்றனவும் | 6907 மற்றும் 6908இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| மண்பாண்டம், புரோசலின் அல்லது சீனாவிலிருந்தான உணவு மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள் | 6911 மற்றும் 6912இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| சிலைகள் வேறு அலங்கார மட்பாண்டப் பொருட்கள் | 6913இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| உணவு மேசை, சமயலறை, குளியலறை, அலுவலகம், உள்ளக அலங்காரம் அல்லது அதனை ஒத்த நோக்கங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் | 7013.99.01 (குழந்தைகளுக்கு பாலூட்டும் போத்தல்) தவிர்ந்த 7013இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| போலி ஆபரணங்கள் | 7117இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| துருப்பிடிக்காத உருக்கினாலான உணவு மேசைப்பொருட்கள், சமயலறைப்பொருட்கள், ஏனைய வீட்டுப் பாவனைப்பொருட்கள் | 7323.93 |
| பூட்டுக்களும் ஆமைப் பூட்டுக்களும் | 8301.10 8301.20, 8301.30, 8301.40 மற்றும் 8301.50 |
| மின் விசிறிகள் | 8414.51, 8414.59, 8414.59.10 |
| குளிரூட்டிகள் | 8415இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| குளிர்சாதனப் பெட்டிகள், ஆழ்குளிரூட்டிகள் மற்றும் ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளினதும் ஆழ்குளிரூட்டியினதும் துணைக்கருவிகள் | 8418.91.01, 8418.91.02, 8418.91.09, 8418.99.01, 8418.99.02 மற்றும் 8418.99.09 தவிர்ந்த 8418இன் கீழான அனைத்து இணங்குவிப்புக்கள் |
| உணவுத்தட்டுக்கள் கழுவும் பொறிகள் | 8422.11 |

| | |
|---|---|
| வீட்டுப்பாவனைக்கான மற்றும் சலவை நிலையத்திற்குரிய வகையிலான பொறிகள் | 8450.20 மற்றும் 8450.90 தவிர்ந்த 8450இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மின்னியல் எந்திரங்களிலான வீட்டுப்பாவனைப் பொருட்கள் | 8509.90 (உதிரிப்பாகங்கள்) தவிர்ந்த 8509இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மின் உந்து அதனுடன் இணைக்கப்பட்ட முகச்சவரக்கருவிகள், முடிவெட்டும் கருவிகள் மற்றும் முடி அகற்றும் கருவிகள் | 8510.90 (உதிரிப்பாகங்கள்) தவிர்ந்த 8510இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| உடனடியாக அல்லது நீரைச் சேமித்து சூடாக்கும் பொறிகலன்கள் மற்றும் நீரில் அமிழ்த்தும் கொதிகலன்கள் | 8516.10 |
| தலைமுடி உலர்த்திகள் மற்றும் தலைமுடி அலங்கரிப்புக் கருவிகள் | 8516.31 மற்றும் 8516.32 |
| மின் இசுத்திரிக்கைப் பெட்டிகள் | 8516.40 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| மைக்ரோவ் வேவ் ஒவன்கள் | 8516.50 |
| ஏனைய ஒவன்கள் மற்றும் அடுப்புக்கள் | 8516.60 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| கோப்பி மற்றும் தேனீர் தயாரிப்புப் பொறிகள் | 8516.71 |
| வாட்டும் பொறிகள் | 8516.72 |
| செலூலர் செல்லிடத் தொலைபேசிகள் | 8517.12.10 மற்றும் 8517.12.20 |
| வீடியோ பதிவு செய்தல் அல்லது மீளத் தயாரிக்கும் கருவிகள், வீடியோ ஒலிச்சீராக்கிகளுடன் அல்லது இல்லாமல் | 8521இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலையங்களின் கீழும் |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் | 8528.72 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| அன்ரனாக்கள் | 8529.10.10, 8529.10.20, 8529.10.30 |
| ஒளிகாலும் மின்குமிழ்கள், நீண்ட மின் ஒளிகாலும் விளக்குகள் | 8539.22 |
| கை மணிக்கூடுகளும் மேசை மணிக்கூடுகளும் | 9101, 9102, 9103 மற்றும் 9105இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகள் |
| விளக்குகள் வெளிச்சப் பொருத்துக்கள் | 9405.10, 9405.20, 9405.30, 9405.40, 9405.40.10, 9405.40.20 மற்றும் 9405.40.90 |
| விளையாட்டுப் பொருட்கள் | 9503 இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |

இணைப்பு 1

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்
வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01
தொலைநகல்: 2477711 மின்னஞ்சல்: hdajit@cbsl.lk

**அறிக்கை I - முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளில் செய்யப்பட்ட இறக்குமதிகள் மீதான அளவு வைப்புத் தேவைப்பாடு**

**வங்கியின் பெயர் :**
**அறிக்கையிடும் மாதம்:**

| வங்கி குறியீடு | இறக்குமதியாளரின் பெயர் | பணவனுப்பல் திகதி (திதிமாமாஆஆஆஆ) | பணவனுப்பலின் தொடர்பு எண் | பொருள்பட்டியல் பெறுமதி | | வைப்பு (ரூ.) | வைப்புத் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணய வகை | பெறுமதி | | |
| | | | | | | | |

அறிக்கை II - முன்கூட்டிய கொடுப்பனவு நியதிகளில் செய்யப்பட்ட இறக்குமதிகள் மீதான அளவு வைப்புக்களை விடுவித்தல்

வங்கியின் பெயர் :

அறிக்கையிடும் மாதம்:

| வங்கி குறியீடு | இறக்குமதியாளரின் பெயர் | பணவனுப்பல் திகதி (திதிமாமாஆஆஆஆ) | பணவனுப்பலின் தொடர்பு எண் | பொருள்பட்டியல் பெறுமதி | | வைப்புக்களை விடுவிக்கும் நாள் | பொருட்களை அகற்றிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நாணய வகை | பெறுமதி | | |
| | | | | | | | |

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01
தொலைநகல்: 2477716 மின்னஞ்சல்: advance.ecd@cbsl.lk

**தொடர்பு எண்: 06/04/21/2008**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 01
2008 திசெம்பர் 30

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

## சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான்வழிக் கட்டணம்/ உள்நாட்டில் தரையிறங்கும் கட்டணங்கள்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை வழங்குதல்

2008.07.25 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்துள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை அவர்களது உள்நாட்டு வான்வழிக் கட்டணங்கள்/ உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக சரக்கு அனுப்புவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற்சரக்கு பற்றுச் சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பற்சரக்கு அனுப்புவோரின் பெயர்கள் | பதிவு எண் |
|---|---|
| 01) எயார் மறையின் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0267 |
| 02) மிற்சுயிக் ஓ.எஸ்.கே. லயின்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0268 |
| 03) இன்ர கொன்ரினன்ரல் கொன்ரேயினர் லயின் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0269 |
| 04) களம்பு கொன்ரேயினர் லயின் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0270 |
| 05) மறையின் எக்ஸ்பிறஸ் லயின்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0271 |
| 06) ஓஷன் வே இன்ரநஷனல் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0272 |
| 07) பெரி லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0273 |
| 08) ஐஎவ்பி லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0274 |
| 09) எம் அன்ட் எவ் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0275 |
| 10) எஸ்ஈடிஎஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0276 |
| 11) மக்லறன்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் லிமிடெட் | 06/07/009/0277 |

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

# காப்புறுதித் தொழிலுக்காக உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் என்பன மீதான விதிகள்

**அறிமுகம்:**

பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன நாட்டின் நிதியியல் ஆற்றலுக்கும் அதேபோன்று தனிப்பட்ட நிறுவனங்களின் உறுதிப்பாட்டிற்கும் பல்வேறு வழிகளிலும் தீமை பயக்கின்றன. வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பதும் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என அறியப்படும் விதிகளான நெருக்கமாகக் கண்காணிக்கும் நடைமுறைகளும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழித்து விடும் சட்ட அமைப்பின் காத்தரமானதொரு பகுதியாக விளங்குகின்றன. இவ்விதிகள் காப்புறுதித்துறை நிறுவனங்களின் பாதுகாப்புடனும் ஆற்றல்வாய்ந்த தொழிற்பாடுகளுடனுடனும் ஒத்துச் செல்வது மட்டுமன்றி அவற்றை அதிகரிக்கவும் செய்கின்றன.

வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பது மற்றும் நெருக்கமாகக் கவனிக்கும் நடைமுறைகள் மீதான தொழிற்பாட்டு வழிகாட்டல்களைத் தயாரிக்கின்ற வேளையில், காப்புறுதி ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கும் தகவல்களை இரகசியமாகப் பெறும் படிவம், குறுக்கு விற்பனைகள் அல்லது வேறு எந்தவொரு நோக்கத்திற்காகவும் அவை தொடர்பான விபரங்களை பகிரங்கப்படுத்தக்கூடாதெனவும் உணரப்படக்கூடிய இடர்நேர்வுடன் தொடர்பாகக் கேட்கப்படும் தகவல்கள் பிறர் உரிமையில் தலையிடுவதாகாது எனவும் அது கீழே வழங்கப்பட்டுள்ள விதிகளுடன் முரண்படாதவை எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல் என்பன மீதான விதிகள் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியிருக்கின்றன.

- பகுதி I - மேற்பார்வையாளரின் பங்கு
- பகுதி II - காப்புறுதியில் பணம் தூயதாக்கலும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலும்
- பகுதி III - பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றிற்கு எதிரான கட்டுப்பாட்டு வழிமுறைகளும் நடைமுறைகளும்
- பகுதி IV - பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டம்
- பகுதி V - ஐயத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் வடிவமைப்பு முறை

இவ் விதிகள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3)இன் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையும் அல்லது இவற்றிற்கு இணங்கி ஒழுகாமையும் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் தண்டனைக்குரியதொன்றாகவும் விளங்கும்.

**பணிப்பாளர்**
நிதியியல் உளவறிதல் பிரிவு

11 செத்தெம்பர் 2008

## பகுதி I - மேற்பார்வையாளரின் பங்கு

1. மேற்பார்வை அதிகாரிகள் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளுடன் இணைந்தும் மற்றைய மேற்பார்வையாளர்களின் ஒத்துழைப்புடனும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கும் நோக்கங்களுக்காக அத்தகைய அச்சுறுத்தல்களை தடை செய்வதற்கும் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான அவர்களின் இயலாற்றலை மதிப்பிடும் பொருட்டு காப்புறுதியாளர்களை போதுமான விதத்தில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

### தொடர்பான காப்புறுதி மைய தத்துவங்களை பிரயோகித்தல்

2. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் பன்னாட்டு அமைப்பின்படி, ஆற்றல்மிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை முறைமையினைக் கொண்ட காப்புறுதி மையத் தத்துவங்கள், வினைத்திறன் பாதுகாப்பு, நியாயம் மற்றும் உறுதியான காப்புறுதிச் சந்தைகளுக்கு அவசியமானதாகும். நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள், நிதியியல் நிறுவனங்கள் போதுமான ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதனையும் நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதனையும் நியாயாதிக்கங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் 23 ஆவது விதந்துரைப்பின்படி, முன்மதியுடைய நோக்கங்களுக்காகப் பிரயோகிக்கப்படுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வழிமுறைகள் பணம் தூயதாக்கலுடன் ஒத்திசைவாக இருக்கவேண்டியதுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றினை ஒத்தவிதத்தில் பிரயோகிக்கப்படலும் வேண்டும்.

3. ஆகவே, மேற்பார்வையாளர் காப்புறுதி மையத் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் கடமைகளை ஆற்றும் நோக்கங்களுக்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றுடன் தொடர்பான விடயங்களை அறிந்திருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, கம்பனி ஆளுகை விடயங்கள் மீதான நியமங்களை பிரயோகித்தல்; காப்புறுதியாளரின் கட்டுப்பாடு மற்றும் சொத்துடமை ஒப்புதல்கள் மற்றும் அவற்றிற்கான மாற்றங்கள்; முக்கியமான சொந்தக்காரர்கள், சபை உறுப்பினர்கள், மூத்த முகாமையாளர்களின் (பொருத்தமானதும் சரியானதும்) பொருத்தமான தன்மையினை பரீட்சித்தல், மற்றும் இக்கருத்துக்களின்படி காப்புறுதியாளர்களின் உள்ளகக்கட்டுப்பாட்டு வழிமுறைகளின் பொருத்தமான தன்மை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

4. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றுடன் தொடர்பான மேற்பார்வைக் கடமைகளில் கவனம் செலுத்துவது காப்புறுதி செய்து கொள்பவர்களின் தவறான நடத்தையினால் ஏற்படும் இடர்நேர்வுகளைத் தடுக்கின்ற பன்னாட்டு முயற்சிகளை அதிகரிக்கும். இது பணிப்பாளர் சபையினது விழிப்புணர்வினையும் காப்புறுதியாளர்களின் முகாமைத்துவத்தினையும் உயர்த்தும், உள்ளகநடைமுறைகளை காத்திரமான முறையில் பேண உதவும், அத்துடன் காப்புறுதி நன்மைகளை குற்றவாளிகள் அல்லது அவர்களைச் சேர்ந்தவர்கள் வைத்திருப்பதனை அல்லது நலவுரித்துக்களைக் கட்டுப்படுத்துவதனை அல்லது காப்புறுதியாளரின் முகாமைத்துவ தொழிற்பாடுகளைக் கொண்டிருப்பதனைத் தடுக்கும்.

5. மேற்பார்வையாளர்கள், உரிமம் வழங்குகின்ற கட்டத்திலும் மேற்பார்வை நடைபெற்று வரும் காலங்களிலும் மேற்பார்வை செயற்பாடு நடைபெற்று வரும் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்விடர்நேர்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

6. மேற்பார்வை அதிகாரசபை, தலப்பரீட்சிப்புக்களை நடத்தும் அதிகாரம் உட்பட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றைத் தடுப்பதற்கான தேவைப்பாடுகளுடன் காப்புறுதியாளர்களினால் செய்யப்படும் இணங்குவிப்புக்களை கண்காணித்து உறுதிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இது, அத்தகைய இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதுடன் தொடர்பானதாக காப்புறுதியாளரிடமிருந்து கிடைக்கும் எந்தவொரு தகவலையும் கட்டாயமாகச் சமர்ப்பிப்பதற்கும் அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகத் தவறுமிடத்து போதுமான நிருவாகத் தண்டனைகளை விதிப்பதற்கும் அங்கீகாரமளித்தல் வேண்டும்.

7. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றை தடுப்பதற்காக, மேற்பார்வையாளர் இம் முறைமையின் காத்திரமான தன்மை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும். இம் மீளாய்வு மற்றைய தகுதி பெற்ற அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படுவதனையும் உள்ளடக்கியிருக்கும்.

8. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனைத் தடுப்பதற்கு என்ற விதத்தில் காப்புறுதித்துறை இயலாற்றலைக் கொண்டு வரும் விதத்தில் மேற்பார்வையாளர்களுக்கு போதுமான நிதி, மனித, தொழில்நுட்ப வளங்களை வழங்குதல் வேண்டும். இதன் அலுவலர்கள் உயர்ந்த நேர்மை மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் சட்டங்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடும் வழிகள் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியிடல் சட்ட நியமங்களுக்கு காப்புறுதியாளர்கள் இணங்கி ஒழுகுவதனைக் கண்காணிப்பதற்கு பயன்படுத்தப்படும் நுட்பங்கள் தொடர்பாகவும் போதுமான பயிற்சிகள் பெற்றிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### கண்காணிப்பு தொடர்பான இணங்குவிப்புக்கள்

9. காப்புறுதியாளர்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழித்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள், இவ் வழிகாட்டல் பத்திரங்கள் மற்றும் மேற்பார்வையாளர்களால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் அதேபோன்று முகாமைத்துவத்தினால்

உருவாக்கப்பட்ட கொள்கை மற்றும் நடைமுறைகளை பின்பற்றுகின்றார்களா என்பதனை மேற்பார்வையாளர்கள் கண்காணித்தல் வேண்டும்.

10. தலத்திலான பரீட்சிப்புக்களை நடத்தும் பொழுது மேற்பார்வையாளர் காப்புறுதியாளரின் பூட்கைகளையும் முறைகளையம் பொதுவாக பரிசீலிக்க வேண்டியதுடன் அவற்றுடன் சேர்த்து கொள்கைக் கூற்றுக்கள், நடைமுறைகள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள், கைநூல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அதேபோன்று தொழிற்பாடுகளின் போதுமாந்தன்மை என்பனவற்றையும் பரிசோதித்தல் வேண்டும். ஆவணங்களை அடையாளம் காண்பதற்காகவும் சரிபார்ப்பதற்குமாக எழுமாறான அல்லது இடர்நேர்வு அடிப்படையில் வாடிக்கையாளர் கோவைகளையும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கான காலத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் மீதான இணங்குவிப்பு அலுவலர்களுக்கான உள்ளக அறிக்கைகள் என்பனவற்றையும் பரிசோதித்தல் வேண்டும்.

11. மேற்பார்வையாளர் பொருத்தமான சரியான வழிமுறைகளை அல்லது ஒப்புதலளிப்புக்களை மேற்கொள்ள வேண்டியதுடன், பொருத்தமானதாக இருக்குமிடத்து, காப்புறுதியாளரொருவரின் இணங்கியொழுகல் போதுமானதாக இல்லாதவிடத்து சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்களைத் தொடர்பு கொள்ளல்வேண்டும்.

**ஒத்துழைப்பு**

12. நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் 31ஆவது விதந்துரைப்பானது, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் என்பனவற்றைத் தடுக்கும் விதத்தில் நியாயாதிக்கமானது கொள்கை வகுப்போர், நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்கள் மற்றும் மேற்பார்வையாளர் ஆகியோர் அவர்களுக்கு ஒத்துழைப்பும் பொருத்தமானவிடத்து கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து நடைமுறைக்கிடுவதில் ஒருவர் மற்றவரின் கரிசனையுடன் உள்நாட்டு ரீதியில் இணைப்புக்களை மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் காத்திரமான பொறிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என எடுத்துக்கூறுகிறது.

13. நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் 40 ஆவது விதந்துரைப்பானது நியாயாதிக்கங்கள் மேற்பார்வையாளர்கள் உட்பட தமது தகுதி வாய்ந்த அதிகாரிகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன் அவர்களது வெளிநாட்டு இணைக்கிணையாளர்களுக்கு சாத்தியமானளவிற்கு விரிந்த பன்னாட்டு ஒத்துழைப்புக்களையும் வழங்குதல் வேண்டும். பணம் தூயதாக்கல் மற்றும் முக்கியமாக வலியுறுத்தப்படும் குற்றங்கள் ஆகிய இரண்டுடனும் தொடர்பான தகவல்கள் பற்றி இணைக்கிணையாளர்களிடையே சரியானதும் உறுதியானதுமான விடயங்களை கேட்டுக் கொள்வதன் பேரில் அல்லது இயல்பாக பரிமாற்றிக் கொள்வதற்கு தெளிவானதும் காத்திரமானதுமான வழிகள் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

14. நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் 40ஆவது விதந்துரைப்பானது தகவல் பரிமாற்றமானது நியாயமற்ற கடுமையான நிபந்தனைகளின்றி அனுமதிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

குறிப்பாக,

‰ மேற்பார்வையாளர் உட்பட தகுதிவாய்ந்த அதிகாரிகள், கோரிக்கை இறைவிடயங்களுடன் தொடர்பானது என்ற ஒரே பின்னணியின் அடிப்படையில் உதவிக்கான கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது.

‰ ஒத்துழைப்பு வழங்குவதனை நிராகரிப்பதற்கான அடிப்படைக் காரணமாக இரகசியமான அல்லது அந்தரங்கத் தன்மையினைப் பேணுமாறு நிதி நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கின்ற சட்டங்களை நாடுகள் கேட்கக்கூடாது.

‰ மேற்பார்வையாளர்களை உள்ளடக்கிய தகுதிவாய்ந்த அதிகாரிகள் விசாரணைகளை நடத்தக்கூடியவர்களாகவும் சாத்தியமானவிடத்து வெளிநாட்டு இணக்கிணையாளர்களின் சார்பில் புலனாய்வுகளை மேற்கொள்ளக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

15. தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் பரிமாற்றப்பட்ட தகவல்கள் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதனால் தனிப்பட்ட இரகசியம் மற்றும் தரவுப் பாதுகாப்புக்களைக் கரிசனையில் கொண்டு கட்டுப்பாடுகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்பார்வையாளர் நிறுவுதல் வேண்டும்.

16. தொடர்புபட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளின் வகை, தன்மை மற்றும் ஒத்துழைப்பின் நோக்கம் என்பனவற்றினைப் பொறுத்து தகவல் பரிமாற்றங்களுக்கு வேறுபட்ட வழிமுறைகள் பொருத்தமானவையாக இருக்கமுடியும். தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் பொறிமுறைகள் அல்லது வழிமுறைகள் இருபுடை அல்லது பல்புடை உடன்படிக்கைகள் அல்லது உடன்படிக்கைகள் புரிந்துணர்வு ஒப்பந்தம், பரஸ்பர அடிப்படையிலான பரிமாற்றங்கள் அல்லது பொருத்தமான பன்னாட்டு அல்லது பிராந்திய அமைப்புக்களூடான இணைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

## பகுதி II - காப்புறுதியில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல்

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றின் செயல்முறை

1. பணம் தூயதாக்கல் என்பது குற்றச் செயல்கள் மூலம் பெறப்படும் பணம் அவற்றின் சட்டத்திற்கு முரணான உருவாக்கத்திலிருந்து வேறு உருவமொன்றிற்கு மாற்றப்படும் செயல்முறையாகும். இப் பணத்தொகை வெற்றிகரமான முறையில் “தூயதாக” மாற்றப்படும் பொழுது குற்றவாளிகள் இப் பணத்தின் ஆரம்ப மூலத்தினை எடுத்துக்காட்டாமலேயே பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். பணம் தூயதாக்கல் பல்வேறு வழிகளில் இடம் பெறமுடியும்.

2. பயங்கரவாதத்திற்கு நிதியிடல், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்கு அல்லது அதனைக் கொண்டு நடத்துவதற்கு பயன்படுத்தும் உள்நோக்குடன் அவ்வாறு பயன்படுத்துவதற்காக நிதியங்களை ஏதாவதொரு விதத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தவறான முறையில் பெறுகின்ற அல்லது சேகரிக்கின்றதொரு செயல்முறை என வரைவிலக்கணம் செய்யலாம். பயங்கரவாதத்திற்கு சட்ட ரீதியான வருமானத்தின் மூலமும் நிதியிட முடியும்.

### காப்புறுதியின் பாதிக்கப்படக்கூடிய தன்மை

3. ஆயுள் காப்புறுதி மற்றும் ஆயுளல்லாத காப்புறுதியினை பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோரும் வேறுபட்ட வழிகளில் பயன்படுத்த முடியும். பாதிக்கப்படக்கூடிய தன்மை ஒப்பந்தங்களின் சிக்கல் நிறைந்த மற்றும் நியதிகள் (ஆனால் வரையறுக்கப்பட முடியாது) பகிர்ந்தளிப்பு, கொடுப்பனவுமுறை (காசு அல்லது வங்கி மாற்றல்) மற்றும் ஒப்பந்தச் சட்டம் போன்ற காரணிகளில் தங்கியிருக்கின்றது. இப் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை மதிப்பிடும் பொழுது காப்புறுதியாளர்கள் இக் காரணிகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இதன் கருத்து யாதெனில், பொதுவாகவும் ஒவ்வொரு வியாபார உறவு முறையிலும் வியாபார வகைகளின் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளுக்கு தயாராக இருக்கவேண்டும் என்பதேயாகும்.

4. உதாரணமாக ஆயுள் காப்புறுதி வகை ஒப்பந்தங்கள் பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கான கருவியாக மாறுவதன் மூலம் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் அவை:

‰ இணைக்கப்பட்ட அலகுகள் அல்லது இலாபத்துடன் கூடிய தனிக் காப்புறதிக் கட்டளை ஒப்பந்தங்கள்

‰ காசுப் பெறுமதியினைக் கொண்டிருக்கும் தனிக் காப்புறுதிக் கட்டணத்தினைக் கொண்ட ஆயுள் காப்புறுதிப் பூட்கைகள்

‰ நிலையான மற்றும் மாறுபடும் ஆண்டுத்தொகைகள்

5. ஆயுள் காப்புறுதி பூட்கைகள் முதிர்ச்சியடையும் பொழுது அல்லது கையளிக்கப்படும் பொழுது பூட்கை வைத்திருப்பவருக்கு அல்லது மற்றைய நன்மைபெறுநர்களுக்கு நிதி கிடைக்கத்தக்கதாக இருக்கும். காப்புறுதியாளர் புதிய நன்மைபெறுநர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்யும் பொருட்டு முதிர்ச்சிக்கு அல்லது கையளிப்பிற்கு முன்னதாக சாத்தியான கொடுப்பனவிற்கு எதிராக ஒப்பந்தத்திற்குரிய மாற்றக்கூடும் பூட்கையொன்றினை மற்றைய நிதியியல் சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக பிணையமாக மாற்றமுடியும். அவர்களிடமேயுள்ள இம் முதலீடுகள், நிதியியல் முறைமையிலுள்ள எந்தவொரு இடத்திலிருந்தான ஆரம்பத்துடன் சிக்கலான கொடுக்கல் வாங்கலின் நுணுக்கமான தளமொன்றின் தனிப்பகுதியாகவும் இருக்கக்கூடும்.

6. ஆயுள் காப்புறுதியல்லாத பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் விரிவாக்கப்பட அல்லது முழுமையாகப் போலியான கோரல்களினூடாக எடுத்துக்காட்டாக தீவைப்பு அல்லது பொய்யான கோரலுக்கான காரணங்களின் மூலமாக சட்ட ரீதியான நிதிகளின் மூலமான முதலீட்டில் ஒரு பகுதியினைப் பெற்றுக் கொள்ளுதல். மற்றைய எடுத்துக்காட்டுக்கள் காப்புறுதியாளரின் காசோலையொன்றின் மூலம் கட்டண வருமானத்திற்கான பூட்கைகளை இரத்துச் செய்தல் மற்றும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளளிக்குமாறு கோருகின்ற கோரிக்கையுடன் கூடிய மேலதிக கொடுப்பனவுகள். குற்றவாளி ஒருவர் உண்மையில் சேதத்திற்குரிய முழுத்தொகையையும் முழுமையாகப் பெற்றுக்கொள்ளாத வேளையில் அதனைப் பெற்றுக் கொண்டதாகக் கூறும் பொழுது பணம் தூயதாக்கல் குறைந்த காப்புறுதியினூடாகவும் நிகழக்கூடும் சொத்து மற்றும் மரணத்தினை உள்ளடக்கும் காப்புறுதியினூடாக பயங்கரவாதத்திற்கு எவ்வாறு வசதியளிக்கப்படுகின்றது என்பதற்கான எடுத்துக்காட்டு பயங்கரவாதத்திற்கு உதவி புரிவதற்கான தொழிலாளர் இழப்பீடு, பயங்கரவாதப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான பொருள் ஒப்படைப்பு, முக்கியமான காப்புறுதி உள்ளடக்கம், வர்த்தகக் கொடுகடன் என்பனவற்றின் பயன்பாட்டினையும் உள்ளடக்கும்.

7. மீள்காப்புறுதியை பயன்படுத்தி பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் ஒன்றில் போலியான காப்புறுதிக் கம்பனிகளை அல்லது மீள்காப்புறுதி இடையீட்டாளர்கள் ஏற்படுத்துவதன் மூலம் முன்னணி ஒழுங்குகள் மற்றும் பயன்படுத்தத்தக்க பணம் என்பனவற்றை முன்னிலைப்படுத்துவதன் மூலம் அல்லது வழமையான மீள்காப்புறுதியின் கொடுக்கல் வாங்கல்களை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ள முடியும். எடுத்துக்காட்டுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

‰ நிதியின் மூலத்தினை மறைக்கும் பொருட்டு குற்றச் செயல் அல்லது பயங்கரவாத நிதிப்பெறுகைகளை மீள்காப்புறுதி மூலம் காப்புறுதியாளர்களூடாக துல்லியமான முறையில் பயன்படுத்திக் கொள்ளல்;

‰ குற்றப் பணத்தைத் தூயதாக்கிக் கொள்ள அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு பயன்படும் பொய்யான காப்புறுதி நிறுவனம்;

‰ பொய்யான காப்புறுதியாளர் நிறுவனம் குற்றச்செயல் மூலம் பெறப்படும் பணத்தினை அல்லது பயங்கரவாத நிதியினை சட்ட ரீதியான மீள்காப்புறுதிக்குப் பயன்படுத்திக் கொள்ள உதவக்கூடும்.

8. சுதந்திரமான அல்லது அவ்வாறல்லாத காப்புறுதி இடையீட்டாளர்களுக்கு விநியோகம், பங்குகளைப் பொறுப்பேற்றல் மற்றும் கோரல்களைத் தீர்ப்பனவு செய்தல் என்பன முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இவர்கள் காப்புறுதி பூட்கை வைத்திருப்பவர்களுடன் அடிக்கடி நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதனால் இடையீட்டாளர்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றில் முக்கிய பங்கினை ஆற்ற முடியும். நிதியியல் நடவடிக்கைச் செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் இடையீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் நெருக்கமான கண்காணிப்புக்கள் காரணமாக கடுமையான நிபந்தனைகளின் கீழ் காப்புறுதியாளர்கள் வாடிக்கையாளர்களின் மீது தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். காப்புறுதியார்களுக்கு பிரயோகிக்கப்படுகின்ற அதே தத்துவங்கள் பொதுவாக காப்புறுதி இடையீட்டாளர்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும். பணத்தை தூயதாக்க வேண்டும் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிட வேண்டும் என்று எண்ணுமொருவர், இவற்றைப் பற்றி அறிந்திராத அல்லது உறுதிப்படுத்தாத, தேவையான நடைமுறைகளை அல்லது பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாத்திற்கு நிதியிடுவது தொடர்பான சாத்தியமான தகவல்களை அடையாளம் காணாத அல்லது அறிக்கையிடாத காப்புறுதி இடையீட்டாளர் ஒருவரை அணுகலாம். இடையீட்டாளர்கள் தாமாகவே காப்புறுதியாளர்களுக்கு சட்டத்திற்கு முரணான நிதியத்தினை வழிப்படுத்தும் வழியாக ஏற்படுத்திக் கொள்ளலாம். வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கண்காணிக்கும் இடையீட்டாளர்களின் பொறுப்பிற்குப் புறம்பாக இதில் காப்புறுதியாளர்களின் ஈடுபாடுகளைக் கவனிக்கும் இறுதிப் பொறுப்பும் அவர்களிடமிருக்கின்றது.

## பகுதி III - பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் என்பனவற்றிற்கெதிரான கட்டுப்பாட்டு வழிமுறைகளும் நடைமுறைகளும்

1. குற்றவாளிகள், பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடும் நோக்கத்திற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுப்பதில் காப்புறுதியாளர்கள் தொடர்ச்சியாக விழிப்புடன் இருத்தல் வேண்டும். பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் என்பனவற்றின் இடர்நேர்வுகளை விளக்கிக் கொள்வதன் மூலம் காப்புறுதியாளர்கள் இவ்விடர்நேர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றியும் எத்தகைய நடைமுறைகளையும் வழிமுறைகளையும் காத்திரமான முறையிலும் வினைத்திறனான ரீதியிலும் நடைமுறைக்கிடலாம் என்பது பற்றியும் தீர்மானிக்கக்கூடிய ஒரு நிலைக்கு வரலாம்.

2. ஆற்றல்மிக்க வியாபார நடைமுறைகள் மற்றும் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றின் பொருட்டு காப்புறுதியாளர்கள் ஒவ்வொரு வியாபார தொடர்புகளினதும் இடர்நேர்வுகளை மதிப்பிடும் பொருட்டான கட்டுப்பாடுகளை ஏற்கனவே தொடங்கியிருத்தல் வேண்டும். வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் வர்த்தக ரீதியான இடர்நேர்வு வெறுமனே மதிப்பீடுகளுக்கும் மோசடித் தடுப்புகளுக்கும் மட்டும் பொருத்தமான நடவடிக்கை மட்டுமன்றி பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் என்பனவற்றையும் தடைசெய்வதன் காரணமாக இதன் கட்டுப்பாட்டு வழிமுறைகள் இவற்றின் தற்போதைய கட்டுப்பாடுகளுடனும் இணைக்கப்படல் வேண்டும். பூட்கை வைத்திருப்பவரின் அடையாளம் மற்றும் சரிபார்ப்பு என்பனவற்றிற்கு அப்பாலும் செல்லுகின்ற வாடிக்கையாளரை நெருக்கமாக கவனிக்கின்ற கோட்பாடு முழு வியாபாரத் தொடர்புகளினதும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளை அடையாளம் காணுகின்ற விடயம் வரை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

3. கண்காணிப்பு கடமை பின்வரும் கூறுகளை முக்கியமாக உள்ளடக்கியிருக்கும்.

‰ பொருட் காப்பீடுகளை பரிசோதித்தல் மற்றும் அடையாளத்தினைச் சரிபார்ப்பது உட்பட வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல்,

‰ ஐயத்திற்குரிய வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல் வாங்கல்களை அறிந்து கொண்டு அறிக்கையிடல், மற்றும்

‰ இணங்குவிப்பு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள், பதிவேடுகளைப் பேணுதல், அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சியளித்தல் போன்ற காப்புறுதியாளர் அமைப்பு மற்றும் அலுவலர்களுக்கு செயல் விளைவூட்டும் ஏற்பாடுகள்

### வாடிக்கையாளர், நன்மை பெறும் உடமையாளர் மற்றும் நன்மை பெறுநர்கள் மீது பொருத்தமான கவனிப்பினை மேற்கொள்ளுதல்

4. காப்புறுதியாளர்கள் தாம் வணிகர் தொடர்புகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்கள்[1] பற்றி தெரிந்திருத்தல் வேண்டும். வாடிக்கையாளரை நுணுக்கமாக கவனிக்கும் முறையினை ஏற்படுத்துவதில் முதல் நடவடிக்கை யாதெனில், வேறுபட்ட வாடிக்கையாளர் பற்றிய குறிப்புக்களுடன் இணைந்த விதத்தில் வழங்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட சாதனங்கள் பற்றிய மற்றைய விடயங்களுடன் அவர்கள் தொடர்பான தெளிவான தன்மையினை விருத்தி செய்தல் எடுக்கப்பட்ட இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட வாடிக்கையாளர் ஏற்றுக் கொண்ட பூட்கைகள் மற்றும் நடைமுறைகளை ஏற்படுத்திக் கொள்வதாகும். சாதனங்கள் மீதான பூட்கைகள், சந்தைகள் மற்றும் வாடிக்கையாளர் உட்பட இக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் காப்புறுதியாளரின் பணிப்பாளர் சபையின் உபாயக் கொள்கைகளின் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும்.

[1] சாதாரணமான நிலைமையில் ‘வாடிக்கையாளர்’ என்ற சொல் ‘பூட்கை வைத்திருப்போரை’க் குறிக்கும்.

5. பொருள் காப்பீட்டு இடர்நேர்வு, மதிப்பு சார்ந்த இடர்நேர்வு, ஒன்று திரள்வதனால் ஏற்படும் இடர்நேர்வு[2] மற்றும் சட்ட ரீதியான இடர்நேர்வு போன்ற இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மை பற்றி காப்புறுதியாளர் உபாயக் கொள்கைகள் தீர்மானம் செய்யும். உபாயக் கொள்கைகள் தீர்மானிக்கப்பட்ட பின்னர், வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மை பெறும் சொந்தக்காரர்[3] மற்றும் வியாபாரத் தொடர்புகளின் சிக்கலான தன்மை என்பனவற்றின் பின்னணி மற்றும் புவியியல் அடிப்படை போன்ற இடர்நேர்வுக் காரணிகளைக் கணக்கிலெடுத்த பின்னரே வாடிக்கையாளர்களை ஏற்றுக்கொள்கின்ற கொள்கைகள் உருவாக்கப்படல் வேண்டும். எனவேதான், மேலே குறிப்பிடப்பட்டவாறு, பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பது தொடர்பான கட்டுப்பாட்டு வழிமுறைகளும் நடைமுறைகளும் ஒட்டுமொத்த வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிப்பதில் முக்கியமானதொரு பகுதியாக விளங்குகின்றது.

6. எடுத்துக்காட்டாக, ஓய்வு பெற்றதன் பின்னர் செலுத்தப்பட வேண்டிய வருடாந்த ஓய்வூத் தொகையினைக் கொண்ட ஊழியர் ஒருவருக்கு குழும ஓய்வூதியத்தினை அவர்கள் விற்றிருப்பதிலும் பார்க்க அவர்கள் தனிக்காப்புறுதிப் பூட்கை வடிவில் குறுங்காலத்தனை உள்ளடக்கும் கருவியினை விற்றிருப்பின் அவை பணம் தூயதாக்கலுக்கு கூடியளவு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனை காப்புறுதியாளர் அறிந்திருத்தல் வேண்டும். குறுங்கால விற்பனைகள் பணம் தூயதாக்குதலைக் கூடியளவிற்கு பாதிக்குமென்பதனால் பின்னையதிலும் பார்க்க இதனை இதன் வாடிக்கையாளரின் பின்னணியினையும் காப்புறுதிக் கட்டணத்தின் மூலத்தினையும் மிகத் தீவிரமாக பரீட்சித்துக் கொள்ள வேண்டுமென கோரப்படுகின்றது. செல்வத்தின் மூலத்தினை பரீட்சிப்பது போன்ற செயற்பாட்டு பரீட்சிப்பிதற்காக வெளியிடப்பட்ட எந்தவொரு வரம்பிற்கும் ஓரளவு கீழேயுள்ள கட்டணங்களுக்காக வெளியே எடுக்கப்பட வேண்டிய பல்வேறு பூட்கைகளுக்கான கோரிக்கைகள் பற்றியும் காப்புறுதியாளர் அறிந்திருத்தல் வேண்டும்.

7. காப்புறுதியாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

‰ வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல், வாடிக்கையாளரின் அடையாளம், நம்பகத்தன்மை, ஆவணங்கள் தொடர்பாக சுதந்திரமான மூலம், தரவு அல்லது தகவல் என்பனவற்றைச் சரிபார்த்தல்,

‰ வாடிக்கையாளர் இன்னொருவரின் சார்பில் செயற்படுகின்றவரா என்பதனைத் தீர்மானித்தல், அவ்வாறாயின், அத்தகைய ஆளின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்கு போதுமான அடையாளங்களைப் பெற்றுக் கொள்ள நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்,

‰ நன்மைகளின் (இறுதி) சொந்தக்காரரை அடையாளம் காணுதல், நன்மைகளின் சொந்தக்காரர் யார் என்பதனை அறிந்து கொள்வதில் காப்புறுதியாளர் திருப்தியடைகின்ற விதத்தில் நன்மைகளின் சொந்தக்காரரின் அடையாளத்தினைச் சரிபார்ப்பதற்கான நியாயமான வழிமுறைகளை மேற்கொள்ளுதல். சட்ட ரீதியான ஆட்கள் மற்றும் ஒழுங்குகளுக்காக, காப்புறுதியாளர்கள், வாடிக்கையாளரின் சொத்துடமை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பினை விளங்கிக் கொள்வதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும்,

‰ வியாபார உறவு முறைகள் மற்றும் ஏனைய தொடர்பான காரணிகளின் நோக்கம் மற்றும் உண்மையான தன்மைகள் மீதான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்,

‰ தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் வியாபார தொடர்பு முறைகளை நெருக்கமாகக் கவனிப்பதுடன் வியாபார தொடர்பு முறைகளின் காலப்பகுதி முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொடுக்கல் வாங்கல்கள் வாடிக்கையாளர் மற்றும் நன்மைகளின் சொந்தக்காரர் தொடர்பான காப்புறுதியாளரின் அறிவு, தேவையானவிடத்து நிதியங்களின் மூலம் உட்பட அவர்களின் வியாபார இடர்நேர்வு தோற்றப்பாடு என்பனவற்றுடன் ஒத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும்.

8. இவ் வழிமுறைகளின் அளவும் குறித்துரைக்கப்பட்ட வடிவமும் பின்வரும் வாடிக்கையாளர், வியாபாரத் தொடர்பு முறை மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன உள்ளிட்ட தொடர்பான காரணிகளை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வுப் பகுப்பாய்வின் மூலம் தீர்மானிக்கப்படலாம். அதிகரித்தளவில் நெருக்கமாகக் கவனிப்பதற்கான அழைப்பு உயர்ந்தளவு இடர்நேர்வு வகைகளுடன் தொடர்பானதாக இருந்தது. உயர் இடர்நேர்வினைக் கொண்ட வாடிக்கையாளர் அத்துடன்/ அல்லது நன்மைகளின் சொந்தக்காரர்களுடனான தொடர்புகளை நிறுவுவதன் மீதான தீர்மானங்கள் மூத்த முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட வேண்டும். குறைந்த இடர்நேர்வ வகைகளைப் பொறுத்தவரை தேசிய சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு காப்புறுதியாளர்கள் குறைந்த அல்லது இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகளைப் பிரயோகிக்கலாம்.

9. வியாபார தொடர்புகளை நிறுவுவதற்கு முன்னதாக, காப்புறுதியாளர், தேவைப்படுத்தப்பட்ட சாதனத்தின் பண்புகளையும், வியாபாரத் தொடர்புகளின் நோக்கம் மற்றும் தன்மைகளையும் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகளின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை

[2] ஒன்று திரள்வதனால் ஏற்படும் இடர்நேர்வு: அதே பாரிய வியாபாரக் குழுமம், தொகுதி அல்லது புவியியல்சார் பிரதேசத்திற்குச் சொந்தமான ஆட்கள் அல்லது கூட்டுத்தாபனங்களுடன் பெருமளவு அளவுக்கு மீறிய வியாபாரங்களைச் செய்யும் போது ஏற்படும் இடர்நேர்வு.

[3] நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களின்ப நன்மைகளுக்குச் சொந்தக்காரர் என்பவர் 'எவரின் சார்பில் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றதோ அந்த வாடிக்கையாளா அத்துடன்/ அல்லது ஆளிற்குச் சொந்தமான அல்லது இறுதியான கட்டுப்பாட்டுக்களைக் கொண்டிருக்கும் இயல்பான ஆளினைக் குறிக்கும்' ஒரு ஆளின் மீது அல்லது ஒழுங்கின் மீது இறுதியான காத்திரமான கட்டுப்பாடுகளை பிரயோகிக்கும் அத்தகைய ஆட்களை இது கூட்டிணைக்கும்.

உருவாக்கிப் பேணுவதன் பொருட்டான ஏனைய தொடர்பான காரணிகள் என்பனவற்றை மதிப்பிட வேண்டும். இம் மதிப்பீடுகளின் அடிப்படையில், காப்புறுதியாளர் வியாபாரத் தொடர்புகளை ஏற்றுக் கொள்வதா அல்லது இல்லையா என்பது பற்றிய தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். கோட்பாடுகளின் அடிப்படையில், மிக வெளிப்படையாகவே புனை பெயர்களைப் பயன்படுத்துகின்ற அல்லது அடையாளம் அறியப்படாத அநாமதேய வாடிக்கையாளர்களுக்கு அல்லது நன்மை பெறுநர்களுக்கு காப்புறுதியாளர் காப்புறுதிகளை வழங்கக்கூடாது.

10. எந்தவொரு முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் ஒழுங்குப்படுத்தப்படாத இடர்நேர்வு தோற்றப்பாடுகளை உருவாக்கும் பொழுது பரிசீலிக்கப்படுவதற்கான காரணிகளை பூரணமானவையாகக் கருதக்கூடாது. இவை பின்வருவனவற்றை (பொருத்தமானவிடத்து) உள்ளடக்குகின்றன.

‰ வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் சொந்தக்காரரின் வகையும் பின்னணியும்,

‰ வாடிக்கையாளர் அத்துடன்/ அல்லது நன்மை பெறுநர்களின் புவியியல் தளம்,

‰ வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் சொந்தக்காரரின் நடவடிக்கைகளினது புவியியற் கோளம்,

‰ நடவடிக்கைகளின் தன்மை,

‰ கொடுப்பனவு முறையும் அதேபோன்று கொடுப்பனவு வகையும் காசு, தந்தி மாற்றல், ஏனைய வகைக் கொடுப்பனவுகள்

‰ நிதியின் மூலம்,

‰ நடவடிக்கையின் அளவும் அவற்றின் கால இடைவெளியும்,

‰ வியாபார தொடர்புகளின் வகையும் சிக்கலான தன்மையும்,

‰ இவற்றில் எது பெற்றாலும் கொடுப்பனவுகள் மூன்றாந்தரப்பினருக்கு வழங்கப்படும்,

‰ வியாபாரத் தொடர்புகள் செயலற்றிருக்கின்றதா,

‰ கொண்டு வருபவர் தொடர்பான ஏதாவது ஒழுங்குகள்

‰ பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் அல்லது ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பான ஐயம் அல்லது அறிவு

11. வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் தேவைப்பாடுகள் அனைத்தும் புதிய வாடிக்கையாளர்களுக்கும் அதேபோன்று பொருள்தன்மை மற்றும் இடர்நேர்வு அடிப்படைகளுக்கும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர் அத்துடன்/ அல்லது நன்மைபெறும் சொந்தக்காரர்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும். பின்னயதன்படி காப்புறுதியாளர் பொருத்தமான நேரத்தில் நெருக்கமான கவனிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். காப்புறுதியில், ஒப்பந்த நாளுக்குப் பின்னர் நிகழும் பல்வேறுபட்ட கொடுக்கல் வாங்கல்கள் அல்லது ஆரம்ப நிகழ்வுகள் நெருக்கமாகக் கவனித்தல் எங்கே பொருத்தமாக இருக்கும் என்பதனை எடுத்துக்காட்டின. இவ்வாரம் நிகழ்வுகள் நன்மைகளின் மாற்றம் உட்பட கோரல் அறிவித்தல், சமர்ப்பிப்பதற்கான கோரிக்கைகள் மற்றும் கொள்கை மாற்றீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

12. அனைத்து சிக்கலான விடயங்களிலும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய தன்மை வெளிப்படையான பொருளாதார அல்லது புலனாகக்கூடிய சட்ட ரீதியான நோக்கங்களைக் கொண்டிராத வழமைக்கு மாறான பாரிய கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்களின் வழமைக்கு மாறான அனைத்து தன்மைகள் என்பன வியாபார தொடர்புகளையும் தற்பொழுது நடைபெற்று வரும் நெருக்கமாகக் கவனிப்பு ஆகிய இரண்டிற்கும் இன்றியமையாதனவாகும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கான பின்னணியும் நோக்கமும் சாத்தியமான அளவிற்கு பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் கண்டறியப்பட்ட விடயங்கள் எழுத்துருவில் தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்கும் கணக்காய்வாளர்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக, "கொடுக்கல் வாங்கல்கள்" என்பது பரந்த புலனாற்றல், கருத்து விசாரணைகள், காப்புறுதிக் கொள்கை காப்புறுதிக் கட்டளைக் கொடுப்பனவுகள், நன்மைகள், நன்மை பெறுபவர்கள் மற்றும் காலப்பகுதி போன்றவற்றின் அடிப்படையில் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

13. எந்தவொரு தொடர்பான சரிபார்ப்பு விடயத்தினதும் பூரணமான சரிபார்ப்பு அல்லது வியாபார உறவு முறையில் வியாபாரத்தின் நோக்கம் மற்றும் உண்மையான தன்மை என்பன தொடர்பான தகவல்களைப் பெறும் சந்தர்ப்பம் தோல்வியுறும்விடத்து, காப்புறுதியாளர் காப்புறுதி ஒப்பந்தத்தினை முடிவிற்குக் கொண்டு வரவோ அல்லது கொடுக்கல் வாங்கல்களை நடத்தவோ அல்லது வியாபார உணர்வுகளை முடிவுறுத்தவோ கூடாது. காப்புறுதியாளர்கள் ஐயத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிடைக்கச் செய்வது பற்றியும் பரிசீலனையில் கொள்ள வேண்டும்.

**வியாபாரத் தொடர்புமுறைகளை நிறுவுதல்**

14. வாடிக்கையாளருக்கும் காப்புறுதியாளருக்குமிடையில் காப்புறுதி ஒப்பந்தமொன்றினை முடிவுறுத்துவதற்கு முன்னதாக இவ்விருவருக்குமிடையேயும் சாத்தியமான மற்றைய தரப்பினருக்குமிடையே ஒப்பந்தத்திற்கு முன்னான வியாபார உறவு முறைகள் ஏற்கனவே இருக்கும். காப்புறுதி பூட்கையொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர்:

‰ காப்புறுதியாளர் ஒப்பந்தத்திலும் கொள்கை நிலைமைகளிலும் விபரிக்கப்பட்ட குறிப்பிட்ட இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்றார்,

‰ காப்புறுதிக் கட்டளை கொடுப்பனவுகள், முற்பணங்களின் கொடுப்பனவுகள் அல்லது இறுதி நன்மைகள் போன்ற குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறக்கூடும் அத்துடன்,

‰ உள்ளடக்கத் தொகையில் மாற்றம் அல்லது நன்மை பெறுநர்களில் மாற்றம் போன்ற குறிப்பிட்ட சில நிகழ்வுகள் இடம் பெறலாம்.

15. காப்புறுதியாளர், வாடிக்கையாளரின் குறிப்பிடத்தக்க பின்னணி, மற்றைய நிலைமைகள் மற்றும் தேவை என்பனவற்றினை மிகக் கவனமாக மதிப்பிட வேண்டியது அவசியமாகும். இம் மதிப்பீடுகள் வர்த்தக நோக்கங்களுக்காகவும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் (காப்புறுதியாளரின் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை தீர்மானிப்பதுடன் போதுமான காப்புறுதிக் கட்டணத்தினையும் நிர்ணயிக்கின்றது) அதேபோன்று தீவிரமான வாடிக்கையாளர் முகாமைத்துவ காரணங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனை எய்தும் விதத்தில் காப்புறுதியாளர் தொடர்பான தகவல்களை உதாரணமாக நிதியத்தின் மூலம் தொடர்பான விபரங்கள், வருமானம் தொழில்நிலை, மருத்துவ வரலாறு போன்றவற்றினைச் சேகரிப்பார். ஒப்பந்த நோக்கங்களையும் அதன் பின்னர் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் நிறுவுவதற்கு உசாத்துணையாக விளங்கக்கூடிய வாடிக்கையாளர் விபரக் குறிப்பினை உருவாக்க வழிவகுக்கும்.

16. வாடிக்கையாளர் விபரக் குறிப்பினை உருவாக்குவதும் பணம் தூயதாக்கலுக்கு எதிரான சட்டம்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் போன்ற நோக்கங்களுக்கும் காப்புறுதியாளரின் ஒருமைப்பாட்டினையும் அதன் வியாபாரத்தினையும் பாதுகாப்பதற்கும் அதன் மூலம் முக்கியமானது என்பதனை காப்புறுதியாளர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

17. மேலும், நன்மைகளின் சொந்தக்காரரும் அடையாளம் காணப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும். இவ்வழிகாட்டல் பத்திரத்திற்கான நோக்கங்களுக்காக நன்மைகள் சொந்தக்காரரின் தெரிவித்தல்கள் பூட்கைகளை வைத்திருப்பவரின் சொந்தக்காரர்/ கட்டுப்பாட்டாளருக்கும் அதேபோன்று ஒப்பந்தங்களின் நன்மை பெறுநர்களுக்கும் பொருந்தும்.

18. மீள்காப்புறுதியினைப் பொறுத்தவரை, வியாபாரத்தின் தன்மை காப்புறுதி கொள்கை வைத்திருப்பபோர் மற்றும் மீள்காப்புறுதிக் கம்பனிகளுக்கிடையேயான ஒப்பந்த ரீதியான உறவுமுறை போதியளவில் காணப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மீள்காப்புறுதியாளர் கொள்கை வைத்திருப்போரை அல்லது நன்மைகளின் சொந்தக்காரர் தொடர்பான சரிபார்ப்புக்களை மேற்கொள்வது நடைமுறைக்குரிய மாற்றமாகவும் முடியாத ஒரு விடயமாகவும் காணப்பட்டது. ஆகவே, மீள்காப்புறுதி வியாபாரத்திற்காக, மீள்காப்புறுதியாளர்கள் அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதியாளர்களுடன் மாத்திரம் (1) அதாவது ஒன்றில் உரிமம் பெற்ற அல்லது மீள்காப்புறுதிப் பூட்கைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் (2) நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவிற்கு ஆகவே மீள்காப்புறுதி வியாபாரத்தினைப் பொறுத்தவரை மீள்காப்புறுதியாளர்கள் அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதியாளர்களான (1) உரிமம் பெற்ற அல்லது காப்புறுதிப் பூட்கைகளை வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டவர் அத்துடன் (2) எடுத்துக்காட்டாக நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு மற்றும் வர்த்தக சங்கத்திலிருந்து அல்லது காப்புறுதியாளரின் பணிமனைக்கு விஜயம் செய்யும் மீள்காப்புறுதியாளர்களிடமிருந்து தகவல் கிடைக்காதவிடத்து காப்புறுதிக் கொள்கைகள் தேவைப்படுத்திய அல்லது பணம் தூயதாக்கலுக்கெதிரான அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கின்ற குறைந்தது இவ்வழிகாட்டல் பத்தரங்களுக்குச் சமமானவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்கதாக இருக்குமிடத்து காப்புறுதி வணிகத்தை மேற்கொள்ளலாம்.

19. காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பாக வாடிக்கையாளர் மற்றும் நன்மைகளின் சொந்தக்காரர் ஆகியோரின் அடையாளம் நிறுவப்படும் பொழுது தெரிந்த மோசடிக்காரர் அல்லது பணம் தூயதாக்குவோர் (கைத்தொழில் தரவுகளிலிருந்து கிடைப்பது சாத்தியமானது) மற்றும் தெரிந்த அல்லது சந்தேகத்திற்குரிய பயங்கரவாதிகள் (ஐக்கிய நாடுகளினால் வெளியிடப்பட்ட பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய ஒப்புதல் பெற்ற பட்டியல்) ஆகியோர் மீதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தகவல்களுக்கு எதிராக வாடிக்கையாளர்களையும் நன்மைகளின் சொந்தக்காரரையும் பரிசோதிப்பதன் மூலம் அவரின் வியாபாரத்திலுள்ள இடர்நேர்வுகளை மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது.

### அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்க்கும் கால நேரம்

20. குறிப்பிட்ட ஒரு ஆளுடன் வியாபார தொடர்பு முறைகள் நிறுவப்படுகின்ற வேளையில் வாடிக்கையாளர்களையும் நன்மை பெறுநர்களையும் கோட்பாட்டு ரீதியாக அடையாளம் கண்டு சரிபார்க்கும் நடவடிக்கைகள் இடம் பெறவேண்டும். இதன் கருத்து யாதெனில் காப்புறுதி பத்திரத்தினை வைத்திருப்பவர்களின் அடையாளத்தினை (சொந்தக்காரர்/ கட்டுப்பாட்டாளர்) காப்புறுதி ஒப்பந்தம் முடிவாக்கப்படும் முன்னர் அல்லது அந்த நேரத்தில் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். செல்லுபடியாகக் கூடிய விதி விலக்குகள் பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்படுகின்றன.

21. பணம் தூயதாக்கல் தொடர்பான இடர்நேர்வுகளும் பயங்கரவாதத்திற்கு நிதியிடும் இடர்நேர்வுகளும் காத்திரமான முறையில் க ட்டுப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, காப்புறுதி ஒப்பந்தம் பூட்கை உடமையாளருடன் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் பயன்பெறுநரின் அடையாளம் காணலும் சரிபார்ப்பும் இடம் பெறக்கூடும். எனினும், அடையாளம் காணுதலும் சரிபாப்பும் கொடுப்பனவு செய்யப்படும் வேளையிலோ அல்லது அதற்கு முன்னரோ அல்லது பூட்கையின் கீழ் நன்மைபெறுநர் அவருக்குக் கையளிக்கப்பட்ட உரிமைகளை பயன்படுத்துகையிலோ மேற்கொள்ளப்பட வேண்டும்.

22. பூட்கை உடமையாளர் அத்துடன்/ அல்லது நன்மைபெறுநர் சரிபார்ப்புகளுக்கு முன்னர் வியாபார தொடர்பு முறைகளை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுமிடத்து, நிதியியல் நிறுவுனங்கள் கரிசனைக்குரிய நிலைமைகளில் முகாமைத்துவ இடர்நேர்வுகள் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். அத்தகைய நடைமுறைகள் எண்ணிக்கை வகைகள் அத்துடன்/

அல்லது செயலாற்றக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் தொகை போன்ற வழிமுறைகளை உள்ளடக்கியிருக்க வேண்டியதுடன் பெருமளவான அல்லது சிக்கலான கொடுக்கல் வாங்கல்களின் கண்காணிப்பு தொடர்புமுறை வகைகளுக்காக எதிர்பார்க்கப்படும் விதிகளுக்குப் புறம்பாகவே மேற்கொள்ளப்படுகிறது. காப்புறுதியாளர் வியாபார தொடர்பு முறைகளை ஏற்கனவே தொடங்கியவிடத்தும் சரிபார்ப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுக முடியாமல் இருக்குமிடத்து வியாபார தொடர்பு முறைகள் இடைநிறுத்தப்பட வேண்டியதுடன் சந்தேகத்திற்குதிய கொடுக்கல் வாங்கல் அறிக்கையினை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு வழங்குவது பற்றி பரிசீலித்தல் வேண்டும்.

23. சரி பார்ப்புக்களை மேற்கொள்வதற்கு முன்னதாக வியாபார தொடர்பு முறைகளைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலைகளுக்கான உதாரணங்கள் வருமாறு:

‰ குழும ஓய்வூதிய திட்டங்கள்

‰ நேருக்கு நேர் முகம் காணாத வாடிக்கையாளர்கள்

‰ விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதற்கு முன்பாகவே காப்புறுதிக் கட்டணம் செய்யப்பட்டு இடர்நேர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டவை, அத்துடன்

‰ பூட்கைகளை பிணையங்களாக பயன்படுத்துமிடத்து.

24. மேலும், நேருக்கு நேர் முகம் காணாத வியாபார விடயங்களைப் பொறுத்தவரை, சரிபார்ப்பு வியாபார தொடர்பு முறைகள் நிறுவப்பட்டதன் பின்னர் அனுமதிக்கபடலாம். எனினும், நேருக்கு நேர் முகம் காணாத வியாபார தொடர்பு முறைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களுடன் இணைந்த குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு காப்புறுதியாளர்கள் பூட்கைகளையும் நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**வியாபார தொடர்பு முறைகளின் போதான கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும்**

25. வியாபாரத் தொடர்பு முறைகளின் போது காப்புறுதியாளர் தற்போது நடைபெற்று வரும் நெருக்கமாகக் கவனிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் வேண்டும். பொதுவாக, காப்புறுதியாளர், ஒப்பந்தத்தினை நியதிகளின் கீழ், பூட்கைக்கான கேட்டுக்கொள்ளப்பட்ட அனைத்து மாற்றங்கள் தொடர்பாகவும் அத்துடன்/ அல்லது உரிமைகளை நடைமுறைப்படுத்துவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் உரித்தாளரின் தோற்றக் குறிப்புக்களுடன் பொருந்திவராத மாற்றம்/ கொடுக்கல் வாங்கல்கள் அல்லது வழமைக்கு மாறான மற்றை காரணங்கள் அல்லது சந்தேகங்கள் இருக்குமாயின் அவை மதிப்பிடப்பட வேண்டும். உயர் இடர்நேர்வு வகைகளைப் பொறுத்தவரை உயர்ந்த நெருங்கிய கவனித்தல் அவசியமாகும். வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் நிகழ்ச்சித்திட்டமானது, வாடிக்கையாளர்கள் தகவல்களைப் போதுமானளவிற்கு திரட்டி பகுப்பாய்வு செய்யக்கூடிய அளவிற்கு சந்தை முறையில் நிறுவப்படுதல் வேண்டும்.

26. வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் தேவைப்பாட்டினைக் கொண்ட ஒப்பந்தங்களை நிறுவியதற்குப் பின்னரான கொடுக்கல் வாங்கல் அல்லது செயற்றூண்டல் நிகழ்வுகளின் எடுத்துக்காட்டுக்களாவன:

‰ நன்மை பெறுநர்களில் மாற்றம் (எடுத்துக்காட்டாக, குடும்ப உறுப்பினர் அல்லாதவர்களை உள்ளடக்குவதற்கு அல்லது நன்மைபெறுநர்கள் தவிர்ந்த வேறொரு ஆளுக்கு கொடுப்பனவுகளைச் செய்யுமாறு கோருதல்),

‰ காப்புறுதி செய்யப்பட்ட மூலதனத்தில் அத்துடன்/ அல்லது காப்புறுதிக்கட்டளைக் கொடுப்பனவில் மாற்றம்/ அதிகரிப்பு (எடுத்துக்காட்டாக, பூட்கை உடமையாளரின் வருமானத்தினைக் கொண்டு பார்க்கையில் அல்லது பூட்கைக் கட்டணங்களில் பல மேலதிகக் கொடுப்பனவுகள் காணப்பட்டு அதன் பின் பூட்கை உடமையாளர் மூன்றாந்தரப்பினருக்கு பணத்தினை மீளச் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தல்),

‰ காசுகளைப் பயன்படுத்துதல் அத்துடன்/ அல்லது பாரிய தன்னொரு காப்புறுதிக் கட்டணத்தின் கொடுப்பனவு,

‰ வெளிநாட்டு தரப்பினருக்கான அல்லது அவர்களிடமிருந்து தந்தி மூலமான கொடுப்பனவு அல்லது சமர்ப்பிப்பு,

‰ கொடுக்கல் வாங்கல்களின் அநாமதேய தன்மையை அனுமதிக்கின்ற வங்கித்தொழில் சாதனங்களின் மூலமான கொடுப்பனவு

‰ பூட்கை உடமையாளரின், குறிப்பாக வரி செலுத்தும் வதிவிடத்தின் முகவரி அத்துடன் அல்லது வதிவிடத்தின் முகவரி மாற்றம்,

‰ ஏற்கனவேயுள்ள ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான உச்ச மொத்தத் தொகை,

‰ தனியாள் ஓய்வூதிய ஒப்பந்தத்திற்கான மொத்த உதவுதொகை,

‰ நன்மைகளை முன்கூட்டியே கொடுப்பனவு செய்வதற்கான கோரிக்கை

‰ பூட்கையை பிணையாக/ பிணையமாக பயன்படுத்துதல் (எடுத்துக்காட்டாக புகழ்மிக்க நிதியியல் நிறுவனங்களினால் ஈட்டினை நிதியிடுவதற்கு தேவைப்படுத்தினாலொழிய பூட்கைகள் பிணையங்களாக பயன்படுத்தப்படுவது வழமைக்கு மாறாக பயன்படுத்தலாகும்),

%o நன்மை வகைகளின் மாற்றம் (எடுத்துக்காட்டாக, வருடாந்த தொகையிலிருந்து மொத்தக் கொடுப்பனவிற்கான கொடுப்பனவு வகையில் மாற்றம்),

%o பூட்கையினை உரிய காலத்திற்கு முன்னர் கையளித்தல் அல்லது காலப்பகுதியில் மாற்றம் (தண்டங்கள் அல்லது வரி நிவாரணங்களின் இழப்பு ஏற்படுமிடத்து).

27. மேற்குறிப்பிட்ட பட்டியல் முழுமையானதல்ல. காப்புறுதியாளர்கள் கொடுக்கல் வாங்கல்களின் மற்றைய வகைகளை அல்லது அவர்களது வியாபார வகைகளுக்கும் பொருத்தமான செயற்றூண்டல் நிகழ்வுகள் பற்றி பாசீலித்தல் வேண்டும்.

28. இக் கொடுக்கல் வாங்கல்களினதும் நிகழ்வுகளினதும் சம்பவம் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தலுக்கான தேவை பிரயோகிக்கப்பட வேண்டுமென்பதனை சுட்டுவதாக இல்லை. அடையாளம் காணுதலும் சரிபார்த்தலும் ஏற்கனவே செயலாற்றப்பட்டிருக்குமாயின் கைவசமுள்ள தகவல்களின் உண்மை தன்மை பற்றிய சந்தேகங்கள் எழுந்தாலொழிய காப்புறுதியாளர் இதன் மீது தங்கியிருக்காலம். எடுத்துக்காட்டாக ஒரு காப்புறுதி பூட்கைகளிலிருந்தான நன்மைகளை இன்னொரு காப்புறதி பூட்கையின் காப்புறுதிக் கட்டணங்களை கொடுப்பனவிற்கு நிதியிடப் பயன்படுத்துமாயின் சந்தேகங்கள் எழலாம்.

29. மிகச் சிறந்த சாத்தியமான அடையாளப்படுத்தல் ஆவணங்களை ஒவ்வொரு சரிபார்ப்பு விடயங்களுக்கும் பெற்றுக் கொள்ள வேண்டும். "மிகச் சிறந்த சாத்தியமானது" என்பதன் கருத்துயாதெனில் இது மிகவும் புகழ் பெற்றதும் அத்துடன் அல்லது அலுவல்சார் ரீதியில் அசலானதும் என்பதனால் இதனை பிரதிபண்ணுவதோ அல்லது சட்டத்திற்கு முரணாக கொள்வனவு செய்வதோ மிகக் கடினமானதாகும்.

**தனிப்பட்டவர்கள்**

30. பின்வரும் தனியாள் தொடர்பான தகவல்கள் பரிசீலிக்கப்படல் வேண்டும்:

%o பயன்பாட்டிலுள்ள முழுப்பெயர்,

%o பிறந்த திகதியும் இடமும்

%o தேசியம்

%o அஞ்சல் குறியீடு உட்பட தற்போதைய நிரந்தர முகவரி

%o தொழிலும் தொழில்தருநரின் பெயரும் (சுய தொழிலாயின் சுயதொழிலின் தன்மை) அத்துடன்

%o தனிப்பட்டவரின் மாதிரி கையொப்பம்

31. வெவ்வேறுபட்ட நியாயாதிக்கங்கள் வெவ்வேறுபட்ட அடையாளப்படுத்தல் ஆவணங்களைக் கொண்டிருப்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆளடையாளத்தினை நிறுவும் பொருட்டு, சாத்தியமானளவிற்கு பின்வரும் ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

%o தேசிய அடையாள அட்டை, அல்லது

%o தற்போதைய செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

32. மூல ஆவணங்கள் தனிப்பட்டவரினால் கையெழுத்திடப்பட வேண்டியதுடன் தனிப்பட்டவர் நேருக்கு நேர் சந்திப்பவராயின் ஆணங்கள் தனிப்பட்டவரின் புகைப்படத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆவணங்களின் பிரதிகள் வழங்கப்படுமிடத்து பொருத்தமான அதிகாரிகளும் தொழில்சார் நிபுணர்களும் பிரதிகளின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவர்.

33. எந்தவொரு பெயரிலும் இலகுவாகப் பெறக்கூடிய ஆவணங்கள் நுணுக்கமான முறையில் சரிபார்க்கப்படாமல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாவணங்கள் விண்ணப்பதாரியின் புகைப்படத்தினைக் கொண்டிருப்பினும் கூட தொழில்தருநரினால் வழங்கப்படும் அடையாள அட்டை, கடன் அட்டைகள், வியாபார அட்டை, தற்காலிக ஓட்டுநர் உரிமப்பத்திரம் (புகைப்படம் இல்லாதது) மற்றும் மாணவர் ஒன்றிய அட்டை போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

**சட்ட ஆட்கள், கம்பனிகள், பங்குடமை மற்றும் ஏனைய நிறுவனங்கள்/ ஒழுங்குகள்**

34. சட்ட ஆட்கள், கம்பனிகள், பங்குடமைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்/ ஒழுங்குகள் ஆகியோர் தொடர்பாக வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மேற்கொள்வதற்கு வழமையாகத் தேவைப்படுகின்ற வழிமுறைகளின் வகைகள் இயற்கையான ஆட்களின் அடையாளம் காண வேண்டிய தேவைப்பாட்டினையும் நலிவுறுத்துக்களையும், சட்ட ஆட்களின் அல்லது ஒழுங்குகளின் மனம் மற்றும் முகாமைத்துவத்தனையும் உள்ளடக்கியிருந்தது. வாடிக்கையாளர் அல்லது கட்டுப்பாட்டு நலவுரித்துக்களின் உரிமையாளர் ஒழுங்குமுறைப்படுத்தல் வெளிப்படுத்துகை தேவைப்பாட்டிற்கு உட்பட்டுள்ள பகிரங்கக் கம்பனியாக இருக்குமிடத்து அக் கம்பனியின் எந்தவொரு பங்குடமையாளரினையும் அடையாளம் காணுகின்ற அல்லது சரிபார்க்கின்ற தேவையிருக்காது.

35. நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்பு - 5 வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் சொந்தக்காரர்கள் சட்ட ஆட்களாக அல்லது சட்ட ரீதியான ஒழுங்குமுறைகளாக இருக்குமிடத்து காப்புறுதியாளர்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டுமென தேவைப்படுத்துகின்றது.

‰ வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் சொந்தக்காரரின் சார்பில் செயற்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ள ஆளொருவரையும் அவ்வாறு சரிபார்ப்பதற்காகவும் அடையாளம் காண்பதற்காகவும் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதுடன் அவ்வாளின் அடையாளத்தை சரி பார்க்கவும்,

‰ சட்ட ஆளின் அல்லது சட்ட ஒழுங்கின் சட்ட அந்தஸ்தினை சரிபார்த்தல் உ-ம் நிறுவனத்தின் கூட்டிணைப்பு அல்லது அதையொத்த சான்று அல்லது அது, இருக்கின்றது என்பதற்கான சான்றிற்கு ஆதாரமொன்றினைப் பெற்றுக் கொள்ளல், அத்துடன் சொத்துடமையின் விளக்கமொன்றிற்கான படிவம் மற்றும் வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் சொந்தக்காரர்களின் கட்டுப்பாட்டு அமைப்பு.

36. நம்பிக்கைகள் அல்லது அதையொத்த ஒழுங்குகள் பயன்படுத்தப்படுமிடத்து உண்மையான தன்மையினையும் உள்பொருளையும் புரிந்து கொள்வதில் குறிப்பாகக் கவனம் எடுக்கப்படுதல் வேண்டும். வாடிக்கையாளர் நம்பிக்கைக் குறைவாக இருக்குமிடத்து, காப்புறுதியாளர் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நம்பிக்கை சொத்தின் மீது கட்டுப்பாடுகளைச் செலுத்துகின்ற மற்றைய ஆட்கள், தீர்த்து வைப்பவர் மற்றும் நன்மைபெறுநர்களின் அடையாளங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். பூட்கைகளை எடுக்கும் வேளையில் பயன்பெறுநர்களின் அடையாளங்களை சரிபார்ப்பது சாத்தியமற்றதாக இருக்குமிடத்து எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்வதற்கு முன்னதாக சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

37. கம்பனிகள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய சட்ட முயற்சியாண்மைகள் என்பனவற்றினை அடையாளம் காணுதல் மற்றும் சார்ப்புக்கள் என்பனவற்றினைக் கையாளும் போது அவை சட்டத்திற்கு மாறான நோக்கங்களுக்காக தவறாகப் பயன்படுத்தப்படவிருப்பது தெரியவருமாகையால் காப்புறுதியாளர் வகை துறைகள், கம்பனிகள் அல்லா் வேறுவிதமானவை பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

38. நிறுவனமொன்றின் சார்பில் செயற்படுவதற்கு அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்குமிடத்து தனிப்பட்ட உள்நோக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக போதுமான சரிபார்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

39. பின்வரும் ஆவணங்கள் அல்லது அவற்றிற்குச் சமமானவைகள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

‰ கூட்டிணைப்புச் சான்றிதழ்

‰ நன்மைகளின் உரித்தாக்கங்களினதும் அத்துடன்/ அல்லது செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் பெயர் பெயர்கள் மற்றும் முகவரி/ முகவரிகள்

‰ யாப்பு ரீதியான ஆவணங்கள் உ-ம் ஒப்பந்தப் பத்திரம் மற்றும் அகவிதிகள், பங்குடமை உடன்படிக்கைகள்

‰ உரியவரினால் வழங்கப்பட்ட அட்டோர்ணித்தத்துவம் அல்லது ஏனைய அதிகாரப்பத்திரங்கள்

40. தொழில்தருநரினால் அனுசரணை வழங்கப்பட்ட ஓய்வூதியம் அல்லது சேமிப்புத் திட்டத்தின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் காப்புறுதியாளர் ஆகக் குறைந்த பட்சம் பிரதான தொழில்தருநரின் பொறுப்பேற்கப்பட்ட சரிபார்ப்பு மற்றும் திட்டத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் சரிபார்ப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஏதுமிருப்பின்)

41. பிரதான தொழில்தருநரின் சரிபார்ப்பு, வியாபாரத்திற்கான நிறுவன ரீதியான விண்ணப்பதாரரின் சரிபார்ப்பிற்கான நடைமுறைகளுக்கிணங்க காப்புறுதியாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இத் திட்டத்தின் எந்தவொரு நம்பிக்கைப் பொறுப்பாளரினதும் சரிபார்ப்பு பொதுவாக தொடர்பான ஆவணங்களின் பரிசோதனைகளையும் உள்ளடக்கியிருக்கும். இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

‰ நம்பிக்கை உறுதி அத்துடன்/ அல்லது சாதனங்கள் மற்றும் எந்தவொரு துணை ஆவணமும்,

‰ நடைமுறை நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்,

‰ பொது இடாப்புக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை,

‰ தொழில்சார் மதியுரையாளர் அல்லது முதலீட்டு முகாமையாளர்களிடமிருந்தான உசாத்துணைகள்.

42. நியாயாதிக்கங்களுக்கிடையே சட்ட ரீதியான கட்டுப்பாடுகளில் வேறுபாடுள்ளமையினால், அத்தகைய ஆவணங்களின் தோற்றுவாய் இடம், இவை தயாரிக்கப்பட்டமைக்கெதிரான பின்னணி என்பனவற்றிற்கு குறிப்பிடத்தக்களவிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

**உயர்ந்தளவு இடர்நேர்வுகளைக் கொண்ட வாடிக்கையாளர்கள் ஒத்துழைக்காத நாடுகள் மற்றும் பிராந்தியங்களைப் பொறுத்த வரை அதிகரித்த வழிமுறைகள்**

43. அதிகரித்த வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் வழிமுறைகள் அனைத்தும் உயர்ந்த இடர்நேர்வு வியாபார தொடர்பு முறைகளுக்கும் வாடிக்கையாளருக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும். இது, வாடிக்கையாளரின் தனிப்பட்ட இடர்நேர்வு நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதியாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட உயர்ந்த இடர்நேர்வு வியாபார தொடர்பு முறைகள் பின்வரும் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார தொடர்பு முறைகளின் வகை ஆகிய இரண்டினையும் உள்ளடக்குகிறது.

44. அதிகரித்த வாடிக்கையாளர் கவனிப்பினைப் பொறுத்தவரை, பொதுவாக காப்புறுதியாளர் பின்வருவனவற்றில் எவை சாத்தியமான மேலதிக வழிமுறைகள் என்பனவற்றை பரிசீலிக்க வேண்டும்.

%o வேறுவிதத்தில் தேவைப்படுத்தினாலன்றி உறுதிப்படுத்தல்கள் கோரிக்கையின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள், மேலதிக ஆவணங்கள் என்பனவற்றின் உறுதிப்படுத்தல்கள் பொருத்தமான அதிகாரம் வழங்கப்பட்டோர் மற்றும் தொழில்சார் நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

%o கம்பனி வாடிக்கையாளர் அமைப்பு உள்ளிட்ட வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் உரித்தாளர் ஆகியோரை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களின் பின்னணி பற்றி நெருக்கமாகக் கவனித்தல் தொடர்பான செயலாற்றம்

%o நிதியத்தினதும் செல்வத்தினதும் மூலத்தின் மீதான நெருக்கமாகக் கவனிப்பது தொடர்பான செயலாற்றம்.

%o வியாபார தொடர்பு முறைகளை நிறுவுவதற்காக மூத்த முகாமைத்துவ ஒப்புதல் பெறுதல்

%o வியாபார உறவு முறைகளை பொறுத்தவரை தற்போதைய அதிகரிக்கப்பட்ட கண்காணிப்பினை மேற்கொள்ளுதல்

### கொண்டு வருபவர் பூட்கைகள்

45. கொண்டு வருவர் பூட்கை என்பது பூட்கை ஆவணங்களை வைத்திருக்கும் ஆட்களுக்கு அல்லது காப்புறுதியாளருக்குத் தெரியாமலோ அல்லது அவரின் சம்மதம் இல்லாமலோ புறக்குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழை வைத்திருப்பவருக்கு காப்பு நிதியினைக் கொடுப்பனவு செய்வதனை தேவைப்படுத்துகின்ற காப்புறுதி ஒப்பந்தமாகும். இவ்வகைப் பூட்கை ஒவ்வொரு நியாயாதிக்கத்திலும் இருக்காது. எனினும், இது எங்கே இருக்கிறதோ அங்கு புறக்குறிப்பீடு செய்பவரின் அடையாளமின்றியே ஒரு ஆளிடமிருந்து இன்னொரு ஆளுக்கு இலகுவாக மாற்றல் செய்யக்கூடியதொரு நிதியியல் சாதனமாக இருந்து வருகிறது. நன்மைகள் கோரப்படுகின்ற வேளையில் பூட்கை முதிர்ச்சியடைகையில் மாத்திரம் காப்புறுதியாளரினால் அடையாளப்படுத்தலும் சரிபார்த்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றின் நோக்கம் கொண்டு வருபவர் பூட்கைகளை ஊக்கம் குன்றச் செய்தல் வேண்டும். நியாயாதிக்க முறையில் கொண்டு வருபவர் பூட்கைகள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் கூட காப்புறுதியாளர், மேலே குறிப்பிடப்பட்டவாறு, வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் தன்மையினை உயர்த்துவதற்கு பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

### முதிர்ச்சிக்கு முன் பணம் பெறும் ஒழுங்குகள்

46. காப்புறுதி பூட்கை உடமையாளர் கடுமையான அல்லது இறக்கும் தருவாயிலிருக்குமிடத்து, அவரின் மரணத்திற்கு முன்னர் நிதியினைப் பெறும் பொருட்டு அவரின் மரணத்திற்குப் பின் ஆயுள் காப்புறுதி பூட்கையின் நன்மைகளை மூன்றாந்தரப்பினருக்கு மாற்றுவதற்காக உரித்தினை மாற்றுவதற்கு அவர் தீர்மானிக்கலாம். சில நியாயாதிக்கங்களில் இத்தகைய உரித்துக்களைக் கொள்வனவு செய்து விற்பதற்காக முதிர்ச்சிக்கு முன் பணம் பெறும் கம்பனிகள் காணப்படுகின்றன. இந்த விடயங்களில் “கொண்டு வருபவர் பூட்கைகள்” இன் கீழ் விபரிக்கப்பட்டவாறு அதையொத்த இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. முதிர்ச்சிக்கு முன்பாகவும் பெறும் ஒழுங்குகள் அனுமதிக்கப்படும் நியாயாதிக்கங்களில் மேற்பார்வை செய்கின்ற அல்லது ஒழுங்குவிதிகள் விதந்துரைக்கப்பட்டள்ளன. முதிர்ச்சிக்கு முன்னரே பணத்தினை ஒழுங்கு செய்யும் கம்பனிக்கு பணத்தினை செலுத்தும் தேவையுள்ள காப்புறுதியாளர் மேலே குறித்துரைக்கப்பட்டவாறு முதிர்ச்சிக்கு முன்னர் பணத்தினை ஒழுங்கு செய்யும் கம்பனி மற்றும் நன்மைகளின் உரித்தாளர் ஆகியோரின் அடையாளங்களையும் சரிபார்ப்புக்களையும் மேற்கொள்வது உட்பட வாடிக்கையாளர் நெருக்கமாக கவனிக்கும் செயற்பாட்டினை அதிகரித்த அளவில் மேற்கொள்ளல் வேண்டும்.

### அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட்ட ஆட்கள்

47. அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட்ட ஆட்கள் என்பது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் முக்கியமாக அரசியல் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. உதாரணமாக நாட்டின் அல்லது அரசாங்கத்தின் தலைவர் மூத்த அரசியல்வாதிகள், மூத்த அரசாங்க நியாயாதிக்க அல்லது இராணுவ அலுவலர்கள், அரச கூட்டுத்தாபனத் தலைவர் முக்கிய அரசியல் கட்சியின் அலுவலர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம். குடும்ப உறுப்பினர்கள் அல்லது அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட்ட ஆட்களின் நெருங்கிய நண்பர்களுடனான வியாபாரத் தொடர்புகள் அரசியல் ரீதியாக வெளிக்காட்ட ஆட்களின் புகழினை ஒத்ததாக புகழுடன் தொடர்பான இடர்நேர்வுகளுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. வரைவிலக்கணம் நடுத்தர நிலையிலுள்ளவர்களை அல்லது முன்னைய வகைகளில் செய்யப்பட்ட மிக இளைய தனிபட்டவர்களையும் உள்ளடக்க எண்ணியுள்ளது.

48. நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் அரசியல் ரீதியில் வெளிப்படுத்தப்பட்ட ஆட்கள் தொடர்பாக மேலதிக முறையில் நெருக்கமான கவனிப்பினைத் தேவைப்படுத்துகின்றது. இந் நோக்கத்திற்காக காப்புறுதியாளர் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

%o வாடிக்கையாளர் அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட்ட ஆளா என்பதனை தீர்மானிப்பதற்காக பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைகளைக் கொண்டிருத்தல். காப்புறுதியாளரின் பணிப்பாளர் சபை புகழ் வாய்ந்த மற்றும் ஏனைய தொடர்பான இடர்நேர்வுகள் இணைந்துள்ள தன்மையினைக் கருத்திற் கொண்டு அரசியல் ரீதியாக வெளிக்காட்டப்பட்ட ஆட்கள் தொடர்பாக வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளல் கொள்கையினை கட்டாயம் நிறுவிக் கொள்ளவேண்டும்,

‰ அத்தகைய வாடிக்கையாளர்களுடன் வியாபாரத் தொடர்பு முறைகளை நிறுவுவதற்கான மூத்த முகாமைத்துவ ஒப்புதல்களைப் பெறுதல்,

‰ செல்வங்களின் மூலம் மற்றும் நிதியங்களின் மூலம் என்பனவற்றை நிறுவுவதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்ளுதல்; அத்துடன்

‰ தற்பொழுதுள்ள வியாபார உறவு முறைகளின் கண்காணிப்பினை உயர்த்துவதற்கான நடவடிக்கை

**புதிய அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்கள்**

49. சந்தைக் காப்புறுதிச் சாதனங்களுக்கு புதிய அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியும். இவ்வகை நேருக்கு நேர் சந்தித்திராத வியாபார சரிபார்ப்புக்கள் வியாபார உறவு முறை நிறுவப்பட்டதன் பின்னர் அனுமதிக்கப்படக் கூடியதாக இருந்தபோதும் காப்புறுதியாளர் சரிபார்ப்புக்களை பூரணப்படுத்தல் வேண்டும்.

50. நேருக்கு நேர் காணாத வாடிக்கையாளர்கள், நேருக்கு நேர் கண்ட வாடிக்கையாளர்களைப் போன்று அதே ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடிகின்ற போதும், அவர்களின் அடையாளத்தினைச் சரிபார்ப்பது மிக இடர்ப்பாடானதாகும். ஆகவே, நேருக்கு நேர் காணாத வாடிக்கையாளர்களிடமிருந்து வியாபாரத்தினை ஏற்றுக் கொள்கையில் காப்புறுதியாளரொருவர் நேருக்கு நேர் காணும் வாடிக்கையாளர் ஒருவரை ஏற்றுக் கொள்வதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள உயர் இடர்நேர்வுகளை தணிப்பதற்கான குறித்துரைக்கப்பட்டதும் போதுமான வழிமுறைகளுடன் கூடிய துணை நிரப்பிகளையும் அதற்குச் சமமான காத்திரமான அடையாளம் காணும் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

51. அத்தகைய இடர்நேர்வுகளத் தணிக்கும் வழிமுறைகளுக்குான உதாரணங்கள்:

‰ பொருத்தமான அதிகாரிகளினாலும் ஆவணங்களை வழங்கிய தொழில்சார் நிபுணர்களினாலும் சான்றுபடுத்தல்,

‰ நேருக்கு நேர் காணும் வாடிக்கையாளர்களுக்குத் தேவைப்படும் ஆவணங்களை முழுமைப்படுத்துவதற்கு மேலதிக ஆவணங்களைக் கோருதல்,

‰ காப்புறுதியாளரினால் வாடிக்கையாளர் சுதந்திரமாக தொடர்பு கொள்ளப்படுதல்,

‰ மூன்றாந்தரப்பினரின் அறிமுகம், உ-ம் பந்திகளில் கூறப்பட்டுள்ள பிரமாணங்களுக்கான இடையீட்டு விடயம்,

‰ ஒத்த வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் நியமங்களுக்கு உட்பட்ட விதத்தில், வாடிக்கையாளரின் பெயரிலுள்ள கணக்கொன்றினூடாக முதலாவது கணக்கொன்று மேற்கொள்ளப்படுவதற்காக தேவைப்படுத்தல்.

**ஒத்துழைக்காத நாடுகளும் பிராந்தியங்களும்**

52. நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் நியாயாதிக்கங்களால் இணங்கி ஒழுகப்படுகின்றமை பற்றி காலத்திற்குக் காலம் பன்னாட்டு அமைப்புக்களினால் மதிப்பிடப்பட்டு வருகின்றன. நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களை போதுமானளவிற்கு பிரயோகிக்காத நியாயாதிக்கங்கள் நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவினால் ஒத்துழைக்காத நாடுகள் மற்றும் பிராந்தியங்களாக பட்டியலிடப்படக் கூடும். குறிக்கப்பட்ட சூழ்நிலைகளில், நியாயாதிக்கம் பொருத்தமான எதிர் நடவடிக்கைகளை விதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களை போதியளவில் பிரயோகிக்காத நியாயாதிக்கத்திலிருந்து உருவாகின்ற வியாபாரங்களுக்காக காப்புறுதியாளர்கள் முக்கியமாக விற்கப்படாத பங்குகள் மற்றும் கோரல் தீர்ப்பனவுகளில் விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

**இலகுபடுத்தப்பட்ட முறையில் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்**

53. பொதுவாக, வியாபார உறவுமுறைகளைப் பொறுத்தவரை வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் வழிமுறைகள் முழு வீச்சில் பிரயோகிக்கப்படல் வேண்டும். எனினும், பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான இடர்நேர்வு குறைவாக இருக்குமாயின், (காப்புறுதியாளரின் சொந்த மதிப்பீட்டின் அடிப்படையில்) அத்துடன் வாடிக்கையாளரின் அடையாளம் மீதான தகவல்களும் நன்மைகளின் உரித்தாளர் பகிரங்கமாக கிடைக்கத்தக்கதாக அல்லது தேசிய கணனி முறையில் எங்கு சென்றாலும் போதுமான பரிசோதனை மற்றும் கட்டுப்பாடுகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின் நாட்டின் சட்டவாக்கம் வாடிக்கையாளரின் அடையாளத்தினை அடையாளப்படுத்தல் மற்றும் சரிபார்ப்பினை மேற்கொள்கையில் இலகுபடுத்தப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் வழிமுறைகள், நன்மைகளின் உரித்தாளர் மற்றும் வியாபார உறவுமுறைகளுக்கான மற்றைய தரப்பினர் என்பனவற்றிற்கு உட்பட்டு காப்புறுதியாளர் நியாயமான பிரயோகங்களை மேற்கொள்ளலாம்.

54. இலகுபடுத்தப்பட்ட அல்லது குறைக்கப்பட்ட வழிமுறைகளை பிரயோகிக்கக்கூடிய வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு பின்வரும் உதாரணங்கள் பட்டியலிட்டிருக்கிறது என்பதனை காப்புறுதியாளர்கள் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்:

‰ நிதியியல் நிறுவனங்கள் - நிதியியல் நடவடிக்கைகள் செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்காரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கும் தேவைப்பாடுகளுக்குட்பட்டிருக்குமிடத்து இணங்குவிப்புகளுக்கும் அவற்றின் கட்டுப்பாடுகளுக்குமான மேற்பார்வை செய்யப்படும்.

‰ ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகளுக்குட்பட்ட பகிரங்கக் கம்பனிகள்

‰ அரச நிருவாகம் அல்லது தொழில் முயற்சிகள்

55. இலகுபடுத்தப்பட்ட முறையில் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் அல்லது குறைக்கப்பட்ட வழிமுறைகளை பல்வேறு வகை சாதனங்களை அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்காக ஏற்றுக் கொள்ள முடியும்.

‰ முதிர்ச்சிப் பெறுமதி ரூ.1 மில்லியனுக்கம் குறைவாக அல்லது தனியோரு காப்புறுதிக் கட்டணம் ரூ.500,00 இற்குக் குறைவாக இருக்குமிடத்து ஆயுள்காப்புறுதி பூட்கைகள்

‰ கையளிப்பதற்கான கிளைவாசகம் மற்றும் பிணையமாகப் பயன்படுத்த முடியாத பூட்கை காணப்படாதவிடத்து ஓய்வூதிய திட்டங்களுக்கான காப்புறுதிப் பூட்கைகள்

‰ கூலிகளிலிருந்து கழிப்பதன் மூலம் பங்களிப்புக்கள் செலுத்தப்படுமிடத்தும் திட்டத்திற்காவும் உறுப்பினர்களின் நலிவுரித்துக்களின் சாட்டுதலை அனுமதிக்காத திட்ட ஒழுங்கு விதிகளும் காணப்படுமிடத்து ஊழியர்களுக்கான ஓய்வூதிய நன்மைகள் வழங்குகின்ற ஓய்வூதியம், ஓய்வூதிய நிதியம் அல்லது அதையொத்த திட்டங்கள்

‰ காப்புறுதி செய்யப்பட்ட தொகை ரூ. 1 மில்லியனுக்கும் குறைவாக இருக்குமிடத்து பொதுவான காப்புறுதிப் பூட்கைகள்

**இடைநிலையாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பினர் மீது தங்கியிருத்தல்**

56. காப்புறுதியாளர்கள் தொழிற்படுகின்ற நியாயாதிக்க சட்டவாக்கங்களின் மீது தங்கியிருக்கும் தன்மையானது, பின்வரும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனிக்கும் மூலங்களின் செயற்பாட்டிற்கு இடைநிலையாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பினர் மீது தங்கிருப்பதனை அனுமதிக்கக்கூடும்.

‰ நம்பகமானதும் சுதந்திரமான மூலங்களைக் கொண்ட ஆவணங்கள் தரவுகள் அல்லது தகவல்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் மற்றும் வாடிக்கையாளரை சரிபார்த்தல்,

‰ சொத்துரிமை மற்றும் வாடிக்கையாளரின் கட்டுப்பாட்டு அமைப்பு என்பனவற்றை விளங்கிக் கொள்வதற்காக நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வது உட்பட இடைநிலையாளர்கள் அல்லது மூன்றாந்தரப்பினர், நன்மைகளின் உரித்தாளர் யார் என்பதனை தெரிந்து கொள்வதில் திருப்திப்படுகின்ற அளவிற்கு நன்மைகளின் உரித்தாளர்களை அடையாளம் காண்பதுடன் நன்மைகளின் உரித்தாளர்களின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்கான நியாயமான வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல்; அத்துடன்

‰ வியாபார உறவு முறைகளுக்கான நோக்கம் மற்றும் உண்மையான தன்மை மீதான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

57. அத்தகைய நம்பகத்தன்மை அனுமதிக்கபட்டிருக்குமிடத்து பின்வரும் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

‰ காப்புறுதியாளர் மேலே குறிப்பிடப்பட்ட மூலங்கள் பற்றிய அவசியமான தகவல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். அடையாளம் காணும் தரவுகள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனிக்கும் தேவைப்பாடுகள் தொடர்பான ஏனைய தொடர்புபட்ட ஆவணங்கள், இடைநிலையாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பினரிடமிருந்து கோரியவுடன் தாமதமின்றிக் கிடைக்கும் என்பதில் தாமே திருப்திப்பட்டுக் கொள்ளும் விதத்தில் போதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். காப்புறுதியாளர்கள் இடையீட்டாளர் மற்றும் மூன்றாந்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நெருக்கமாகக் கவனிக்கும் தன்மையின் தரம் பற்றியும் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும்.

‰ இடையீட்டாளர்களும் மூன்றாந்தரப்பினரும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யபடுகின்றவர்கள் என்பதனையிட்டு காப்புறுதியாளர் தாமாகவே திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுடன், நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் 5 மற்றும் 10 என்பனவற்றுடன் இணைந்து செல்லும் விதத்தில் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனிக்கும் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

58. அத்தகைய நம்பிக்கைக்குரிய தன்மைகள் அனுமதிக்கப்படுமிடத்து, காப்புறுதியாளரிடம் எஞ்சியிருக்கும் வாடிக்கையாளர் அத்துடன்/ அல்லது நன்மைகளின் உரித்தாக்கங்களை அடையாளம் கண்டு சரிபார்க்கும் இறுதிப்பொறுப்பு இடையீட்டாளர்கள் மற்றும் மூன்றாந்தரப்பினரையே சார்ந்திருக்கிறது. முன்னைய பந்தியில் எடுத்துக்காட்டப்பட்டவாறு காப்புறுதியாளரின் பரிசோதனைகள் இடையீட்டாளர்கள் அல்லது மூன்றாந்தரப்பினரின் ஒவ்வொரு தனிப்பட்ட வரிகளையும் பரிசோதிப்பதனை உள்ளடக்கியிருக்கவில்லை. காப்புறதியாளர், பணம் தூயதாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழித்தல் வழிமுறைகள் போதுமானளவு நடைமுறைப்படுத்தப்படுவதனையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளல் வேண்டும்.

59. இடையீட்டாளர்கள்/ மூன்றாந்தரப்பினர்களுடனான ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட கிளைவாசகங்களை உள்ளடக்குவதன் மூலம் அல்லது வேறு ஏதாவது பொருத்தமான நடவடிக்கைகளின் மூலம் காப்புறதியாளர்கள் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். இக் கிளைவாசகங்கள் இடையீட்டாளர்கள்/ மூன்றாந்தரப்பினர் தேவையான வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் வழிமுறைகளை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளுக்கான கடப்பாடுகள், வாடிக்கையாளரின் கோவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளை வழங்குதல் மற்றும் கோரிக்கையின் மீது தாமதமின்றி காப்புறுதியாளருக்கு வாடிக்கையாளரின் கோவையினை கிடைக்கச் செய்தல் (பிரதிகள்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ஒப்பந்தமானது நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல் போன்ற பிரச்சனைகளுக்கு இணங்குதல் காப்புறுதியாளரைப் பொறுத்தவரை சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றை உள்ளடக்கும். இது, வாடிக்கையாளர்கள் அத்துடன்/ அல்லது இடையீட்டாளர்கள்/ மூன்றாந்தரப்பினரால் நிரப்பப்படுவதற்கான காப்புறுதியாளரினால் பயன்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் உரித்தாளர் ஆகியோரை அடையாளம் காண்பது மீதான தகவல்கள் அதேபோன்று அவர்களின் அடையாளத்தினைச் சரிபாப்பதற்காக பயன்படுத்தப்படும்.

60. காப்புறுதியாளருக்கு, இடையீட்டாளர் அல்லது மூன்றாந்தரப்பினர் பொருத்தமான முறையில் நெருக்கமாகக் கவனிப்பினை மேற்கொள்வதற்கு இயலாற்றலுடையவர்களா என்பது பற்றி ஏதும் சந்தேகம் இருக்குமாயின், காப்புறுதியாளர்கள் அதன் சொந்த வாடிக்கைளார் மற்றும் நன்மைகளின் உரித்தாளர் தொடர்பான அதன் சொந்தமான சரிபார்த்தலையும் பொறுப்பேற்று நிறைவு செய்தல் வேண்டும்.

## பகுதி IV - பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டம்

### நிறுவனம் மற்றும் அலுவலர் இடர்நேர்வு முகாமைத்துவ ஒழுங்குகள்

1. காப்புறுதியாளர்கள், பணம் தூயதாக்கலையும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனையும் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு காப்புறுதியாளரினதும் நிகழ்ச்சித்திட்டமும், அந்த காப்புறுதியாளரினால் தயாரிக்கப்பட்ட தகவல்களின் தொகுதியினைக் காத்திரமான முறையிலும் வினைத்திறனுடனும் கையாளக்கூடிய போதுமான வலுவான தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும். நிகழ்ச்சித்திட்டங்களும் முறைமைகளும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றைக் கையாள்வதற்கான தொழிற்பாட்டு ரீதியானதும், நடைமுறைச் சாத்தியமானதும் வழுவற்றதுமான அணுகுமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்நிகழ்ச்சித்திட்டங்களும் முறைமைகளும் குழும அமைப்பு, நிறுவன ரீதியான அமைப்பு பொறுப்பாண்மை அமைப்பு மற்றும் உற்பத்திகள் மற்றும் சந்தை நிலைமைகள் என்பனவற்றை பின்பற்றுவதாக இருத்தல் வேண்டும்.

2. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் அபிவிருத்தியுடன் மற்றையவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

   - வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் வழமைக்கு மாறாறன அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிதல் மற்றும் அறிக்கையிடும் கடப்பாடுகள், இக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் தொடர்பூட்டல் மற்றும் ஊழியர்களுக்கான கட்டுப்பாடுகள்
   - பொருத்தமான இணங்குவிப்பு முகாமைத்துவ ஒழுங்குகள்
   - பதிவேடுகளைப் பேணுகின்ற ஒழுங்குமுறைகள், அத்துடன்
   - ஊழியர்களை நியமிக்கும் பொழுது உயர்ந்த நியமங்களை உறுதிப்படுத்தும் விதத்தில் போதுமான முறையில் அவர்களைப் பற்றி கூர்ந்து ஆராய்தல்
     * தற்பொழுது நடைபெற்றுவரும் ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
     * இக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதனை பரீட்சிப்பதற்கு (மாதிரி பரீட்சிப்புக்களினூடாக) போதுமான மூலவளங்களைக் கொண்ட சுதந்திரமான கணக்காய்வுத் தொழிற்பாடொன்று

3. கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் அபிவிருத்தி காப்புறுதியாளர்கள் சட்டவாக்கங்களுக்கு இணங்கி ஒழுகுவதனை இயலச் செய்ததுடன் அதன் சொந்த அமைப்பிற்கான வாடிக்கையாளர் நெருங்கிக் கவனிப்பதற்குரிய விரும்பத்தக்க நியமங்களை நிர்ணயிக்கவும் செய்தது. காப்புறுதியாளரின் பணி அதன் உள்ளக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுக் என்பனவற்றுடன் இணங்கி ஒழுகும் விதத்தில் காப்பறுதியாளரின் வேலைகள் உள்ளனவா என்பதனைச் சரிபார்க்கும் விதத்தில் கணக்காய்வு தொழிற்பாடுகள் இடம் பெறுதல் வேண்டும். கணக்காய்வு தொழிற்பாடுகள் சுதந்திரமானவையாக இருப்பது முக்கியமானதாக இருப்பதுடன் பிரயோகிக்கத்தக்கவிடத்து கணக்காய்வாளர் நேரடியாக அணுகத்தக்க வசதியையும் முகாமைத்துவத்திற்கும் பணிப்பாளர் சபைக்கும் நேரடியாக அறிக்கையிடத்தக்கவராயும் இருக்கிறார்.

4. காப்புறுதியாளரின் பணிப்பார் சபையும் மூத்த முகாமையும் அபிவிருத்தியடைந்த உள்ளகக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவற்றை நிறுவி நடைமுறைப்படுத்தவும் அவற்றைப் பின்பற்றவும் ஆதரவளித்ததுமை மிக முக்கியமானதாகும். உள்ளக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கும் வழிமுறைகளை நடைமுறைக்கிடல் காப்புறதியாளர்களுக்கு தொடர்பான முன்னுரிமையை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். மேலும், காப்புறுதியொன்றின் பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பான அனைத்து முக்கிய விடயங்களையும் காப்புறதியாளர் தூயதாக்கப்பட்ட பணத்தை அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிட்ட பணத்தினை பயன்படுத்தி வருகின்றாரா என்பது தொடர்பான சந்தேகங்களில் கிரமமான முறையில் அறிவித்தல் வேண்டும். இத்தகவல்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

5. இணங்குவிப்பு முகாமைத்துவ ஒழுங்குகள், முகாமைத்துவ மட்டத்தில் இணங்குவிப்பு அலுவலரொருவரை நியமிப்பதனை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் என்பனவற்றிற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தக்கூடிய வேறுபட்ட வகைச் சாதனைங்களையும் கொடுக்கல் வாங்கல்களையும் பற்றி போதியளவு அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும். அலுவலர் ஒருவரிடமிருந்து சந்தேகத்திற்குரிய வாடிக்கையாளர் அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அறிக்கை ஒன்றை பெற்றதும் இணங்குவிப்பு அலுவலர், அத்தகைய அறிக்கை கொண்டுள்ள தகவல்கள் சந்தேகத்தினை உறுதிப்படுத்துகின்றதா என்பதனை தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். காப்புறுதியாளர் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டுமா என்பது பற்றி தீர்மானிக்கும் பொருட்டு இணங்குவிப்பு அலுவலர் விபரங்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பிய அனைத்து அறிக்கைகளுக்காக ஒரு பதிவேட்டினையும் அவரின் அலுவலரினால் அவருக்குச் செய்யப்பட்ட அனைத்து அறிக்கைகளுக்கும் வேறு ஒரு பதிவேட்டையும் பேணுதல் வேண்டும்.

6. காப்புறுதியாளர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

‰ பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத்திற்கு நிதியிடல் பற்றிய சந்தேகங்களிருப்பின் அலுவலர் தாமதமின்றி இணங்குவிப்பு அலுவலருக்கு அறிவிக்க வேண்டும் என்ற தெளிவான நடைமுறையொன்று இருப்பதனை,

‰ பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் பற்றிய சந்தேகங்களை தாமதமின்றி நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும் என்ற தெளிவான நடைமுறையொன்று இருப்பதனை,

‰ தமது அலுவலர்களுக்கு சந்தேகம் ஏற்படும் போது யாருக்கு அவர்கள் அறிவிக்க வேண்டும் என்பதனை எல்லா அலுவலர்க்கும் தெரியப்படுத்தல்.

7. காப்புறுதியாளர்களுக்கு, அத்துடன் கிளைகளுக்கு மற்றும் குறிப்பாக நிதியியல் நடவடிக்கைச் செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் போதுமானளவிற்கு பிரயோகிக்கப்படாத நியாயாதிக்கப் பகுதிகளிலுள்ள வெளிநாட்டில் அமைந்துள்ள பெரும்பாலும் சொந்தமாக்கப்பட்ட துணை நிறுவனங்களுக்கும் பொருந்தத்தக்க தத்துவங்களை காப்புறுதியாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே கிளைகளும் பெரும்பாலும் சொந்தமான காப்புறுதிக் கம்பனிகளும் உள்நாட்டு நியாயாதிக்க தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தொடர்பான பொருத்தமான வழிமுறைகளை அவதானத்தில் கொள்ள வேண்டும். உள்ளூரில் பிரயோகிக்கத்தக்க சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இந்நடைமுறைப்படுத்தலை தடுக்குமிடத்து, தாய் நிறுவனத்தின் நியாயாதிக்கத்திலுள்ள மேற்பார்வையாளருக்கு காப்புறதியாளர் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் விதந்துரைப்புக்கள் பிரயோகிக்கப்பட முடியாது என்பதனை அறிவித்தல் வேண்டும்.

8. காப்புறுதியாளர்களும் நிதியியல் நிறுவனங்களும் அவர்களின் கடப்பாடுகள் பிரத்தியேகத் தன்மைக்கும் தரவுப் பாதுகாப்புக்களின் கரிசனைகளுக்கும் உட்பட்ட விதத்தில் பொதுவான, விடயங்களிலும் முக்கியமான விடயங்கள் தொடர்பாகவும் போக்குகள் மற்றும் இடர்நேர்வுகள் ஆகிய இரண்டிலும் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் தொடர்புகளையும் கொண்டிருக்க வேண்டுமென விதந்துரைக்கப்படுகிறது.

**பதிவேடுகளைப் பேணுதல்**

9. காப்புறுதியாளர்கள், ஒவ்வொரு வாடிக்கையாளர் அத்துடன் அல்லது நன்மைகளின் உரித்தாளர்களின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு மீதும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் செயற்பாடுகளூடாக (உ-ம் பெயர், முகவரி, கொடுக்கல் வாங்கல்களின் தன்மை அது மேற்கொள்ளப்பட்ட திகதி, தொடர்புபட்டுள்ள நாணயத்தின் வகை மற்றும் தொகை மற்றும் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்டுள்ள எந்தவொரு கணக்கினதும் வகை மற்றும் அடையாள இலக்கம்) அலுவல்சார் அடையாளப்படுத்தல் ஆவணங்கள் (கடனைச் சீட்டு, அடையாள அட்டை அல்லது அதையொத்த ஆவணங்கள்) வியாபாரத் தொடர்புகள் முடிவடைந்து குறைந்த பட்சம் ஆறு ஆண்டுகளுக்கு கணக்கு கோவைகள் மற்றும் வியாபாரக் கடிதத் தொடர்புகள் என்பன தொடர்பான பதிவேடுகளை பேணி வருதல் வேண்டும்.

10. காப்புறுதியாளர்கள் வியாபாரத் தொடர்புகள் முடிவடைந்து குறைந்த பட்சம் ஆறு ஆண்டுகளுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஆகிய இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் மீதுமான தேவையான பதிவேடுகள் பேண வேண்டியதுடன் தகுதி வாய்ந்த அதிகாரிகளிடமிருந்தான தகவல் கோரிக்கைகளையும் மிகச் சரியாக வழங்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய பதிவுகள் தொடர்புபட்ட நாணயங்களின் வகை மற்றும் தொகை உட்பட தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணிப்பினைப் பெறுவதற்கு போதுமானவையாகவும் தேவையானவிடத்து குற்றவியல் நடவடிக்கைக்காக வழக்குத் தொடுப்பதற்கான சான்றுகளையும் இதன் பொருட்டு வழங்குதல் வேண்டும்.

11. காப்புறுதியாளர்கள், வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல் செயற்பாட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் தரவுகள் அல்லது தகவல்களை நாளதுவரை பூரணமாக்கப்பட்ட விதத்தில் வைத்திருப்பதனையும் குறிப்பாக உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட வாடிக்கையாளர் வகைகளை அல்லது வியாபார உறவுமுறைகள் தொடர்பான ஏற்கனவேயுள்ள பதிவுகளை மீளாய்வு செய்வதனையம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

12. காப்புறுதியாளர்கள் போதுமான நடைமுறைகளைத் தாம் கொண்டிருப்பது பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

‰ பூரணப்படுத்தப்பட்டிருக்குமிடத்து வாடிக்கையாளர் நிதியியல் மதிப்பீடு, வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பகுப்பாய்வு, ஒழுங்குமுறைப்படுத்தல் ஆவணங்களின் பிரதிகள் கொடுப்பனவு முறையின் விபரங்கள், நன்மைகளின் தெளிவாக்கம் மற்றும் காப்புறுதியாளர்களின் சரிபார்ப்பிற்கு ஆதாரமான ஆவணங்களின் பிரதிகள் உள்ளிட்ட ஆரம்ப முன்மொழிவு ஆவணங்களை பெறுவதற்கு

‰ ஒப்பந்தத்தின் முதிர்ச்சி வரையிலுள்ளவை உட்பட ஒப்பந்தத்தினை பேணுவதுடன் இணைந்த விற்பனைக்கு பின்னைய பதிவேடுகளைப் பெறுவதற்கு

‰ நிறைவு பெற்ற "அகற்றல் ஆவணங்கள்" உட்பட முதிர்ச்சி செயற்பாடுகள் அத்துடன்/ அல்லது கோரல் தீர்ப்பனவுகளின் விபரங்களை பெறுவதற்கு

**அலுவலர்களை நுணக்கமாக ஆராய்தல்**

13. அலுவலர்கள் தமது கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான திறமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஈடுபாடுகளில் மற்றும் தொடர்பான காரணிகளில் சாத்தியமான முரண்பாடுகள் எடுத்துக்காட்டாக ஊழியரின் நிதியியல் பின்னணி என்பனவற்றினைக் கவனத்திற்கு கொண்டு காப்புறுதி நடவடிக்கைகளை கொண்டு நடத்துவதற்கு அவர்கள் பொருத்தமான இயலாற்றலையும் நம்பகத்தன்மையினையும் கொண்டிருக்கின்றார்களா என்பதனை வாடிக்கையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14. காப்புறுதியாளர், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிக்கின்றவை தொடர்பாக தமது நிறுவனத்திலுள்ள முக்கியமான அலுவலர்களையும் முக்கிய அலுவலர்கள் கொண்டிருக்கக்கூடிய தகுதியும் பொருத்தமான தேவைப்பாடுகளையும் அடையாளம் காணவேண்டும். பந்திகள் 19 மற்றும் 20 தொடர்பான பதிவுகளின் விபரங்களைத் தருகின்றன.

15. காப்புறுதியாளர்களிடமுள்ள அலுவலர்களின் ஏற்புடமை மற்றும் நேர்மை என்பனவற்றிற்கான ஆரம்ப மற்றும் தற்போதைய மதிப்பீடுகளுக்கான பொறுப்பாண்மை மதிப்பீடுகள் தொடர்பான நடைமுறைகள் அலுவலர்கள் பூர்த்தி செய்யவேண்டிய ஏற்புடைமை மற்றும் நேர்மைத் தேவைப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

16. முக்கியமான அலுவலர்களின் தொழில்நிலை பற்றிய தீர்மானங்கள், அவர்கள் ஏற்புடமை மற்றும் நேர்மை என்பன தொடர்பான தேவைப்பாடுகளை கொண்டுள்ளார்களா என்ற நியாயத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. முக்கிய அலுவலர் தொடர்பாக பெறப்பட்ட அடையாளம் காணப்பட்ட தரவுகள் பற்றி காப்புறுதியாளர் பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். பதிவேடுகள் ஏற்புடைமை மற்றும் பொருத்தமான தேவைப்பாடுகளுடன் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட நெருக்கமான கவனிப்புக்களை எடுத்துக்காட்டுவனவாக இருத்தல் வேண்டும்.

**அலுவலர்களின் பயிற்சி**

18. காப்புறுதி அலுவலர்கள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் சட்டவாக்கங்களுடன் தொடர்பான விடயங்கள், ஒழுங்குவிதிகள், வழிகாட்டல்கள் மற்றும் காப்புறுதியாளருக்கே சொந்தமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றில் ஆரம்ப மற்றும் தற்போதைய பயிற்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு காப்புறுதியாளரும் அதன் சட்டம், ஒழுங்கமுறைப்படுத்தல் மற்றும் வர்த்தக தேவைப்பாடுகள் என்பனவற்றிற்கேற்ப அதன் அலுவலர்களுக்கு எவ்வாறு பயிற்சியளிக்க வேண்டும் என்ற தேவையினை எவ்வாறு ஈடுசெய்ய முடியும் என்ற தீர்மானத்தினை எடுக்க வேண்டியிருக்கின்ற போதும், நிகழ்ச்சித்திட்டம் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

‰ புதிய நிகழ்வுகள், நடைமுறை பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடும் புதிய நுட்பங்கள், முறைகள் மற்றும் போக்குகள் உட்பட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் பற்றிய தன்மைகள் மற்றும் செய்முறைகள் பற்றிய விபரணங்கள்

‰ தொடர்பன சட்டங்கள் கொண்டிருக்கும் முக்கியமான சட்ட ரீதியான கடப்பாடுகள் பற்றிய பொதுவான விளக்கம்

‰ சந்தேகத்திற்குரிய வாடிக்கையாளர்கள்/ கொடுக்கல் வாங்கல்களை சரிபார்த்து அடையாளம் காணுதலை குறிப்பாக வலியுறுத்துதல் மற்றும் இணங்குவிப்பு அலுவலருக்கு சந்தேகம் தொடர்பாக அறிக்கையிடும் தேவைப்பாடு என்பன உட்பட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கொள்கை மற்றும் முறைமைகள் பற்றிய பொதுவான விளக்கங்கள்.

19. தமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்யவேண்டிய ஊழியர்களுக்கு கொடுபட வேண்டிய மிகக் குறித்துரைக்கப்பட்ட பயிற்சியை இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது வகை ஊழியர்கள் பின்வருவனவற்றுடன் தொடர்பான அலுவலர்களாவர்.

‰ புதிய வியாபாரமும் ஏற்றுக் கொள்ளலும் - ஒன்றில் நேரடியாக அல்லது விற்பனை ஆட்கள் போன்ற இடையீட்டாளர்களூடாக புதிய பூட்கை உடமையாளர்கள் அத்துடன்

‰ கோரல்களின் தீர்ப்பனவு, அத்துடன்

‰ காப்புறுதிக் கட்டணங்களை சேகரித்தல் அல்லது கொடுப்பனவுக் கோரல்கள்

அவர்களுக்கு சட்ட ரீதியான பொறுப்பாண்மைகள் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பற்றிய கொள்கைகள் பற்றியும், குறிப்பாக வாடிக்கையாளரை ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் அனைத்து தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், சரிபார்க்கும் தேவைப்பாடுகள் மற்றும் பதிவுகள், சந்தேகத்திற்குரிய வாடிக்கையாளர்/ கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான சந்தேகம் என்பனவற்றில் அவர்களுக்கு அறிவூட்டல் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க, சந்தேகங்கள் இணங்குவிப்பு அலுவலகத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டுமென்பது பற்றி அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவ அலுவலர்களையும் கணக்காய்வு செய்யும் முறைமைகளையும் மேற்பார்வை செய்யும் பொறுப்புக்களைக் கொண்ட மூத்த முகாமையாளர் உள்ளிட்ட இரண்டாவது வகை அலுவலர்களுக்கு பணம் தூயதாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழித்தலுடன் தொடர்பான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி உயர்ந்தமட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். இப் பயிற்சி பின்வருவனவற்றை உள்ளக்கியிருத்தல் வேண்டும்.

%o பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பற்றிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அவர்களின் பொறுப்பாண்மைகள்,

%o குற்றங்கள் மற்றும் அதனுடனான தண்டங்கள் உட்பட தொடர்பான சட்டங்கள்,

%o சாதனங்களின் பணிகள் மற்றும் தடைச் சட்டங்கள் என்பன தொடர்பான நடைமுறைகள்,

%o உள்ளக அறிக்கையிடும் நடைமுறைகள், அத்துடன்

%o சரிபார்ப்பு மற்றும் பதிவேடுகளைப் பேணுவதற்கான தேவைப்பாடு.

20. முன்னைய பந்திகளில் குறிப்பிடப்பட்ட பயிற்சிகளுக்கும் புறம்பாக, இணங்குவிப்பு அலுவலர் தொடர்பான அனைத்து சட்டவாக்கங்கள் மற்றும் வழிகாட்டல்கள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்காரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பற்றிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய சகல அம்சங்களிலும் ஆழமான பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் செல்லுபடியாகும் தன்மை சந்தேகத்திற்குரிய வாடிக்கையாளர்/ கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றின் மீது பரந்ததும் தொடர்ச்சியானதுமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பகுதி V - சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல்

1. நிதியமானது சட்டத்திற்குமாறான நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான பணமாக இருக்கக்கூடுமென்பதற்கான சந்தேகம் அல்லது சந்தேகப்படுவதற்கான நியாயமான காரணம் காப்புறுதியாளருக்கு இருக்குமிடத்து அச் சந்தேகத்தினை நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு உரிய முறையில் அறிவித்தல் வேண்டும்.

2. சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கண்டறியும் மிக முக்கியமானதொரு முன் நிபந்தனையாதெனில் வழமைக்கு மாறான அக் கொடுக்கல் வாங்கல்களை அல்லது தொடர்ச்சியான கொடுக்கல் வாங்கல்கள்/ தொடர்பான வாடிக்கையாளர் மற்றும் வியாபார உறவுமுறைகள் பற்றி காப்புறுதியாளருக்கு போதுமானளவிற்கு தெரிந்திருப்பதாகும்.

3. சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் உதாரணங்களின் வகைகளில் ஒன்றாகவோ பலவாகவோ இருக்கக்கூடும்.

%o வாடிக்கையாளரின் சொந்த வழமையான நடவடிக்கைகளின் பின்னணியில் அவரின் வழமைக்கு மாறான எந்தவொரு நிதியியல் நடவடிக்கையும்,

%o வழமையான நிதியியல் நடவடிக்கையின் போது இடம்பெறும் வழமைக்கு மாறாக எந்தவொரு கொடுக்கல் வாங்கலும்

%o வழமைக்கு மாறான தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்கள்

%o வழமைக்கு மாறாக அல்லது அநுகூலமற்ற விதத்தில் காப்புறுதிக் கொள்கையை முதிர்ச்சிக்கு முன்னர் மீட்டல்

சில வழமையான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நிதியியல் நடவடிக்கைகளின் போது வழமைக்கு மாறான எந்தவொரு இடையீட்டாளரையும் தொழிலுக்கமர்த்தல். உ-ம் கோரல் கொடுப்பனவுகள் அல்லது வழமைக்கு மாறான இடையீட்டாளருக்கு உயர்ந்தளவு தரகு

%o வழமைக்கு மாறான கொடுப்பனவு மாதிரி

%o பன்னாட்டு ஒப்புதலுக்குட்பட்டு எந்தவொரு ஆளினதும் எந்தவொரு ஈடுபாடும்

4. சரிபார்ப்பு ஆரம்பித்ததும், தீர்மானமொன்றிற்கு அல்லது மறுப்பொன்றினை நோக்கி தொடர்வதாயிருக்க வேண்டும். வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பூட்கை உடமையாளர் விண்ணப்பத்தினை தொடராதிருப்பவராயின், இது சந்தேகத்திற்குரியதாகக் கருதப்படும்.

5. காப்புறுதியாளர்கள் தமது பணிப்பாளர்கள் அலுவலர்கள் மற்றும் ஊழியர் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கை அல்லது தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படுகின்றன அல்லது அறிவிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையினை வெளிப்படுத்தவே கூடாது. சந்தேகத்தின் விளைவாக வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனிக்கும் செயற்பாடுகளை மேலதிகமாக மேற்கொள்வதாயின் அது பூட்கை வைத்திருப்பவருக்கு, நன்மைபெறுநருக்கு அல்லது சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையின் ஏனைய விடயங்களுக்கு தேவையற்ற தகவல்களையளிப்பதாக இருக்கும் என்பதனை காப்புறுதியாளர் தெரிந்திருத்தல் வேண்டும். எனவே, காப்புறுதியாளர் அதிகளவில் நெருக்கமாகக் கவனிக்கும் நடவடிக்கைகளை தொடரக்கூடாது எனத் தீர்மானிக்கலாமெனினும், சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கைகளை கோவைப்படுத்தலாம்.

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2008 மே 23

**தொடர்பு எண்: 037/01/016/0001/008**

*உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**நிதியியல் நிறுவனங்களுக்கான வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் மீதான விதிகளுக்கு இணங்கியொழுகுதல்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2007ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாளிடப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட விதிகள் தொடர்பானது.

வாடிக்கையாளர் கணக்குகளைத் திறப்பது மற்றும் வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிப்பது என்பனவற்றில் குறிப்பிட்ட சில வங்கிகள் போதுமானளவிற்கு வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றாமையானது வங்கித்தொழில் துறைகளில் நியாயமற்ற போட்டிக்கு வழிவகுத்துள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது வங்கித்தொழில் நிறுவனங்களினதும் நம்பகத்தன்மையினையும் வங்கித்தொழில் துறையின் ஐக்கியத்தையும் கடுமையாகப் பாதிப்பது மட்டுமன்றி குற்றவாளிகள் எமது நிதியியல் முறைமையினைச் சுரண்டுவதற்கும் வழிவகுக்கிறது. ஆகவே, நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நுணுக்கமாகக் கவனித்தல் தொடர்பான விதிகளை கடுமையாகப் பின்பற்றுமாறும், பணம் தூயதாக்கலை ஒழித்தல், பயங்கரவாதத்திற்கு நிதியிடலை தடுத்தல் என்பனவற்றில் தேசிய ரீதியான முயற்சிக்கு பங்களிக்கும் விதத்தில் வங்கித்தொழில் நிறுவனங்களை பாதுகாக்கும் விதத்தில் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

மேலும், 2006ஆம் ஆண்டின் நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் எச் சட்டத்திற்கு முரணான செயலும் அல்லது இணங்கி ஒழுகாமையும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள
எச் ஏ கருணாரத்ன
**பணிப்பாளர்**/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: உரிமம் பெற்ற வங்கிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்கள்
இலங்கை வங்கியாளர் சங்கம்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்/ இ.ம.வங்கி

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2008 யூன் 24

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**கனடாவிலுள்ள பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் உலக தமிழர் இயக்கத்தினை உள்ளடக்குதல்**

எல்.ரி.ரி.ஈ. யின் முக்கிய அமைப்பான "உலக தமிழர் இயக்கத்தினை" கனடாவின் குற்றச் சட்டக் கோவைக்கு இசைய 2008 யூன் 13ஆம் நாளிலிருந்து பயங்கரவாத குழுவொன்றாக கனடா அரசாங்கம் பட்டியலிட்டிருக்கிறது.

கனடாவின் நிதியியல் நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அலுவலகத்தினாலும் கனடிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஸ்ரொக் வெல்டே அவர்களின் அலுவலகத்தினாலும் வெளியிடப்பட்ட அலுவல்சார் அறிவித்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உலக தமிழர் இயக்கம் பட்டியலிடப்பட்டிருப்பதானது கனடாவிலுள்ள அனைத்து ஆட்களும் வெளிநாடுகளிலுள்ள கனடாப் பிரசைகளும் உலகத் தமிழர் இயக்கத்துடனும் அதற்குச் சொந்தமான அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்களிலும் தொடர்புகளைக் கொண்டிருப்பதனைத் தடை செய்வதாகவுள்ளது. உலக தமிழர் இயக்கம் போன்ற பட்டியலிடப்பட்ட இயக்கமொன்றின் எந்தவொரு நடவடிக்கையிலும் தெரிந்து கொண்டே பங்கு பற்றுவது, பங்களிப்பது அல்லது வசதிப்படுத்துவது சட்டத்திற்கு முரணாகக் கருதப்படும்.

இதற்கமைய, தயவுசெய்து தங்களின் வங்கியூடாக உலக தமிழர் இயக்கத்திற்கு செய்யப்பட்ட அல்லது செய்யப்படவுள்ள பணவனுப்பல்கள் மீதான விபரங்களைக் கண்காணித்து திகதி, நன்மைபெறுநர்கள் மற்றும் தொடர்பான தொகை உள்ளிட்ட விபரங்களை உடனடியாக எமக்கு அறிக்கையிடவும்.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: உரிமம் பெற்ற வங்கிகளினதும் அனைத்து
இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2008 யூன் 30

**தொடர்பு எண்: 037/01/023/0001/008**

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006 செத்தெம்பர் 15ஆம் திகதியிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 4 இற்கு மேலதிகமாக:

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேதகு சனாதிபதியினால் வெளியிடப்பட்ட 2008 யூன் 25ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1555/9 கொண்ட சிறப்பு வர்த்தமானியின் நியதிகளுக்கிணங்க, காசு மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல்களுக்கான அறிக்கையிடும் கீழ் மட்டம் 2008 யூன் 01ஆம் நாள் தொடக்கம் ரூ.1,000,000 அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்திற்குத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள மேலேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துமாறு தாங்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

கிடைக்கப்பெற்றமை பற்றி தயவுசெய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள
**பணிப்பாளர்**/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: அனைத்து உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 பெப்புருவரி 25

**சுற்றறிக்கை: ஆர்ரிஜிஎஸ்/01/2008**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் பங்கேற்பாளரின் பெயர் மாற்றம்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் பின்வரும் பெயர்களின் கீழ் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(i) அட்டன் நசனல் வங்கி பிஎல்சி

(ii) இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி

லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2008 பெப்புருவரி 27 முதல் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

**பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர்**

(i) அட்டன் நசனல் வங்கி பிஎல்சி

(ii) இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி

வங்கிகளின் பெயரும் வங்கிகளின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடும் மாற்றமின்றியிருக்கும்.

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளர்**

கே பி திஸ்ஸகருண
**மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 ஏப்பிறல் 7

**சுற்றறிக்கை: ஆர்ரிஜிஎஸ்/02/2008**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2008 ஏப்பிறல் 11ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

2008 ஏப்பிறல் 11ஆம் நாளன்று (2008 ஏப்பிறல் 12ஆம் நாளன்று வரும் சட்ட ரீதியான விடுமுறை சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது) லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்துவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2008 ஏப்பிறல் 11ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதன்படி 2008 ஏப்பிறல் 11ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணை பி.ப. 1.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு மாற்றப்படவுள்ளன.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| ரூபா வரைவுத் தீர்ப்பனவு சீராக்க தீர்ப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தீர்த்தல்களில் பல்புடை தேறிய தீர்ப்பனவு | பி.ப. 2.00 |
| மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தை தொழிற்பாடு - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொடுப்பனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளர்**

கே ஆர் எம் சிறிவர்த்தன
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 மே 27

**சுற்றறிக்கை: சிஜரிஎஸ்/01/2008**

*காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின்*
*அனைத்து பங்கேற்பு நிறுவனங்களுக்கும்*

**காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைமையின் கீழ் வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் என்பனவற்றிற்கான பங்கேற்பு நிறுவனங்களின் பணி விதிமுறைகள் மற்றும் நியம நேரம் என்பன மீதான பொதுவான பணிப்புரை**

பங்கேற்கும் நிறுவனங்களின் கவனம் 2007 நவெம்பர் 14ஆம் நாளிடப்பட்ட எண் 01/2007 கொண்ட மேலேயுள்ள பணிப்புரையின் பிரிவு 6(iii) மற்றும் (iv) இன் பால் ஈர்க்கப்படுகின்றது. இதில் பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

6. (iii) எந்தவொரு தாமதத்திற்கும் அலுவலர்கள் பொறுப்புக்கூறும் தன்மையினை மதிப்பிடும் விதத்தில் நடைமுறைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வாடிக்கையாளர் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அவசியமான நடடிவக்கைகளின் பொருட்டு வெட்டு நேரத்திற்கு முன்னர் சேகரிக்கப்பட்டு அதே வேலை நாளன்று தீர்ப்பனவிற்கு அனுப்பப்படாத காசோலைகள் பெறுகைகள், ரி +1 என் வரவு வைக்கப்படாத காசோலைகள் மற்றும் தாமதங்களுக்கான காரணங்கள்; அத்துடன்

(iv) வாடிக்கையாளர் பணிகளின் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் இப் பணிப்புரைக்கு இணங்கியொழுகும் தன்மையினை மதிப்பீடு செய்வதற்காக காலாந்தர மதிப்பீடுகள் அரையாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் தொடர்பான காலப்பகுதி முடிவடைந்து இரண்டு கிழமைகளுக்கிடையில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அரையாண்டு அறிக்கை சமர்ப்பித்தல்.

இதற்கமைய, ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் பணிப்புரைக்கு அவை இணங்கி ஒழுகுவது தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள படிவம் இல. சிபிஎஸ்எல்/ சிஜரிஎஸ்/ ரி+1/ 1 இல் ஒவ்வொரு ஆண்டும் சனவரி 15 மற்றும் யூலை 15 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களும் 2008 சனவரியிலிருந்து யூன் இறுதி வரையுள்ள காலப்பகுதிக்கான அரையாண்டு அறிக்கையினை இணைக்கப்பட்டுள்ள வடிவம் எண் சிபிஎஸ்எல்/ சிஜரிஎஸ்/ ரி+1/ 1 இல் 2008 யூலை 15 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

கே பி திஸ்ஸகருண
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

படிவ எண். சிபிஎஸ்எல்/ சிஜரிஎஸ்/ ரி+1/ 1

வங்கியின் பெயர் : ........................................................................
கிளையின் பெயர் : ........................................................................
அறிக்கையிடும் காலம் : 2008 சனவரியிலிருந்து யூன் இறுதி வரை

**அரையாண்டு அறிக்கை**

**காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் கீழ் வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கான காசோலை பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள் தொடர்ந்து பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான பொதுவான பணிப்புரை**

1. வெட்டு நேரத்திற்கு முன்னர் சேகரிக்கப்பட்டு அதே வியாபார நாளன்று தீர்ப்பனவிற்கு அனுப்பப்படாத காசோலைகள்

| காசோலைகளின் எண்ணிக்கை | காரணங்கள் |
|---|---|
| | |

2. பெறுகைகள் ரி +1 அன்று வரவு வைக்கப்படாத காசோலைகள் (லங்கா கிளியரில் அல்லது பங்கேற்கும் நிறுவனங்களில் எதிர்பாரா நிகழ்வுகள் போன்ற காரணங்களின் காரணமாக மேலதிக நாள்கள் வழங்கப்பட்ட காசோலைகள் நீங்கலாக)

| காசோலைகளின் எண்ணிக்கை | காரணங்கள் |
|---|---|
| | |

திகதி : ........................................ ................................................................

**அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 யூன் 20

**சுற்றறிக்கை: ஆர்ரிஜிஎஸ்/03/2008**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் பெயர் மாற்றங்கள்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் றஸ்ட் வங்கியும் வரையறுக்கப்படட சம்பத் வங்கியும் பின்வரும் பெயர்களின் கீழ் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(i) நேஷன்ஸ் றஸ்ட் வங்கி பிஎல்சி

(ii) சம்பத் வங்கி பிஎல்சி

இதற்கமைய லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2008 யூன் 25ஆம் நாளிலிருந்து கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

**பங்கேற்கும் நிறுவனத்தின் பெயர்**

(i) நேஷனஸ் றஸ்ட் வங்கி பிஎல்சி

(ii) சம்பத் வங்க பிஎல்சி

மேற்குறிப்பிட்ட வங்கிகளின் கணக்கின் பெயரும் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடும் மாற்றமின்றியிருக்கும்.

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளர்**

கே பி திஸ்ஸகருணை
**மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 ஒத்தோபர் 13

**சுற்றறிக்கை: ஆர்ரிஜிஎஸ்/04/2008**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியினால் வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் (பாக்கித்தான்) வியாபாரம் கையேற்கப்படுகின்றமை**

வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் (பாகித்தான்) வியாபாரத்தனைக் கையேற்பதற்கு ஸ்டான்டட் சார்டட் வங்கிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்டான்ட் சார்ட்டட் வங்கியின் அத்தகைய கையேற்பு 2008 ஒத்தோபர் 13ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரவிருப்பதாக அறிவித்திருக்கிறது. இதற்கமைய, லங்கா செட்டில் மீதான ஒழுங்குகள் 2008 ஒத்தோபர் 14ஆம் நாள் தொடக்கம் பின்வருமாறு இருக்கும்.

தற்பொழுது வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் (பாகித்தான்) வங்கியினால் வைத்திருக்கப்படும் வாடிக்கையாளர் கணக்குகள் இனிமேல் ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியினால் வைத்திருக்கப்படும். 2008 ஒத்தோபர் 13ஆம் நாளன்று வியாபாரம் மூடப்படும் பொழுது வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் (பாகித்தான்) கணக்குகளிலிருந்த மீதிகள் ஸ்டான்டட் சார்ட்டட் வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்படும். சுவிப்ற் பயன்படுத்துனர் அடையாளக் குறியீடும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தீர்ப்பனவுக் கணக்கும் பின்வருமாறு இருக்கும்.

சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு : SCBLLKLXXXX

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தீர்ப்பனவுக் கணக்கு : SCBLLKLXXXX010004402

வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி (பாகித்தான்) லங்கா செட்டில் முறையில் பங்கேற்பாளராகத் தொழிற்படுவதனை 2008 ஒத்தோபர் 13ஆம் நாள் வியாபாரம் மூடப்படுவதுடன் நிறுத்திக் கொள்ளும். இதற்கமைய சுவிப்ற் பயன்பாட்டு அடையாளக் குறியீடு SCBLPKKXULK மற்றும் SCBLPKKXULK010004413 அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கு இலக்கம் 2008 ஒத்தோபர் 13ஆம் நாளிலிருந்து தொழிற்படுத்துவதனை நிறுத்திக் கொள்ளும்.

ஜே பீ மாம்பிட்டிய
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 ஒத்தோபர் 15

**சுற்றறிக்கை: சிஜரிஎஸ்/02/2008**

*காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையில் பங்கேற்கும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறைமையினை இறுவட்டு உள்ளடக்க முறைமைக்கு மாற்றுதல்**

முழுத் தீர்ப்பனவு சுற்றோட்டத்திற்கும் காசோலைகள் சென்று வருகின்ற நகர்வினை நீக்கி விடுகின்றமையின் மூலமாக காசோலை தீர்ப்பனவு செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 2006இல் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை 2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், பிரதிமைப்படுத்தல் மற்றும் அனுப்புதல்களுக்காக ஏறத்தாழ 50 சதவீதமான காசோலைகள் இன்னமும் பௌதீக ரீதியாக சமர்ப்பிக்கப்படுவது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

பௌதீக ரீதியாக காசோலைகளைக் கையாள்வதிலுள்ள வினைத்திறனற்ற தன்மை, தொடர்புபட்டுள்ள இடர்நேர்வு, தேறல் செய்யப்பட்ட காசோலைகளை குறிப்பிட்ட நேர வரையறைக்குள் நன்மை பெறுநர்களின் கணக்கிற்கு வரவு வைக்கமுடியாமை என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட தேசிய கொடுப்பனவுகள் சபையின் உறுப்பினர்கள் 2008 பெப்புருவரி 29ஆம் நாள் நடைபெற்ற அவர்களின்

கூட்டத்தில் சேகரிப்பு வங்கியில் பௌதீக காசோலைகளின் சுற்றோட்டக் குறைப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் பங்கேற்கின்ற நிறுவனங்களிடமிருந்து காசோலைகளின் பிரதிமைப்படுத்தல் நேரடியாக பெற்றுக் கொள்வதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

மேலும், 2008 ஓகத்து 20ஆம் நாள் நடைபெற்ற தேசிய கொடுப்பனவுகள் சபையின் கூட்டத்தில் சேகரிப்பு வங்கிகளில் காசோலைகள் பிரதிமை செய்யப்படுகின்ற முறைமைக்கு அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களும் மாறிக் கொள்வதற்கான காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் தகவல்களை அதேநேரத்தில் லங்கா கிளியருக்கு அனுப்பக்கூடிய நேரடியான தொடர்பூட்டலை நோக்கி நகர்வதற்கு முன்னான ஒரு இடைக்கால ஒழுங்காக இறுவட்டொன்றை சமர்ப்பிப்பதற்கு இறுதித் திகதியொன்றினை குறித்துரைப்பதற்கு தீர்மானித்திருந்தன.

அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களும் தற்பொழுது காசோலை பிரதிமைப்படுத்தலை இறுவட்டுமுறையில் சமர்ப்பிக்காதிருப்பின் இறுவட்டு உள்ளடக்க முறைக்கு கீழே குறித்துரைக்கப்பட்ட இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ மாறிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

அ. மேல் மாகாணம் - 2009 மாச்சு 31

ஆ மற்றைய அனைத்து மாகாணங்களும் - 2009 யூன் 30

ஜே பீ மாம்பிட்டிய
**பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 ஒத்தோபர் 29

**சுற்றறிக்கை: ஆர்ரிஜிஎஸ்/05/2008**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தம் - 2003 ஓகத்து (திருத்தப்பட்டவாறு)

## லங்கா செட்டில் முறைமையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை

முறைமையினைத் தரமுயர்த்தி மேம்படுத்துவதற்காக, கொடுப்பனவு சீர்திருத்த வழிகாட்டல் குழு 2008.10.21ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் மூடும் நேரத்தினை 15 நிமிடங்களினால் முன் நகர்த்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை தொடர்பான லங்கா செட்டில் முறைமை ஒழுங்கு விதிகளின் (திருத்தப்பட்டவாறு) தொகுதி 4 இன் கிளை வாசகம் 1.2 இலுள்ள அட்டவணையினை கீழேயுள்ள பந்தி 2இல் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு திருத்தியிருக்கிறது.

2. நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை தொடர்பான லங்கா செட்டில் முறைமை ஒழுங்கு விதிகளின் (திருத்தப்பட்டவாறு) தொகுதி 4இன் கிளை வாசகம் 1.2 இலுள்ள அட்டவணை, 2008 நவெம்பர் 03ஆம் நாளிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படுகிறது என்பதனை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறைமை ஆரம்பமாகிறது | அ.நே.மொ.தீ.முறைமை/ ப.தீ. முறைமைப் பிரயோகம் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்த செய்முறைகள் ஆரம்பமாதல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை பூரணப்படுத்தல் மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைக் குறிப்பிடல் |
| மு.ப. 8.00 | லங்கா செட்டில் முறைமை வியாபாரத்திற்காக திறக்கப்படுதல் | கணனி முறைமையானது கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ள திறக்கப்படுகிறது |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள்கொடுப்பனவு தன்னியக்கமாக நேர்மாற்றுதல் | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குதல் மற்றும் தி.ச. தொழிற்பாட்டின் மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்த்தல் |
| மு.ப. 8.15 | முதிர்ச்சி வட்டிக் கொடுப்பனவுகள் நாளின் கோவையைத் தொடங்குதல் | முதிர்ச்சிப் பெறுகைகளை தீர்ப்பனவு செய்தல்/ பிணையங்களின் நறுக்குக் கொடுப்பனவுகள், லங்கா செட்டிலின் கட்டணங்கள்/ தண்டப்பணத்தினை மேற்கொள்ளுதல். |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சிலிப்ஸ்/ பிரதான இசைவுகள் |
| மு.ப. 8.30 | உடனடி விற்பனை/ கொள்வனவுகள் | தி.ச. தொழிற்பாட்டின் உடனடி விற்பனை மற்றும் கொள்வனவுகளை தீர்த்தல் |

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 11.00 | நேர்மாற்று மீள்கொள்வனவினை நேர்மாற்றுதல் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| மு.ப. 11.45 | நேர்மாற்று மீள்கொள்வனவு (ஏலம்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 12.45 | மீள்கொள்வனவு ஏலம் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 1.00 | முதலாந்தர ஏலத் தீர்ப்பனவினை மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழ் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 2.15 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | ரூபா வரைவுத் தீர்ப்பனவு |
| பி.ப. 2.45 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | தீர்ப்பனவு தீர்த்தல் மற்றும் சீராக்க தீர்த்தல் |
| பி.ப. 3.00 | மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிரதான நேரக் குறைப்பு | வங்கியிலிருந்து வங்கிக்கானவை நீங்கலாக, மூன்றாந்தரப்பினர் சார்பாக புதிய கொடுக்கல் வாங்கல்கள் (T + 0 இற்காக) மூடுதல் (MT2XX தொடர்கள்) |
| பி.ப. 4.00 | மீள்கொள்வனவு (துணை நில்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | நேர்மாற்று மீள்கொள்வனவு துணை நில் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப. 4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு |
| பி.ப. 4.30 | வியாபாரத்திற்கான மூடும் நேரத்தினை இறுதியாக்க் குறைத்தல் | மேலதிக உள்ளீடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வியாபாரத்திற்கு முறைமை மூடப்பட்டதுடன் ஒழுங்கு/ தீர்ப்பனவு செயற்பாடுகள் நிறுத்தப்படுவதுடன் இன்னமும் ஒழுங்கிலிருந்த எந்த ஒரு கொடுக்கல் வாங்கலும் நிராகரிக்கப்படும். |
| பி.ப. 4.30 இலிருந்து பி.ப. 5.00 வரை | நாளின் முடிவிலுள்ள செய்முறை | நாளின் முடிவிலுள்ள செய்முறைகள் அதாவது அறிக்கை பொதுப் பேரேட்டு ஏற்றுமதிக் கோவை, பட்டியலிடல் கூற்றுக்களை அச்சடிக்கும் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.00 | கணனி முறையை மூடிவிடுதல் | அ.நே.மொ.தீ.முறை/ ப.தீ. முறையின் மென்கலப் பிரயோகங்களை மூடிவிட ஆரம்பித்தல், வேறிடத்தில் சேமிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் |

3. பங்கேற்பாளர்கள், தமது தீர்ப்பனவுக் கணக்குகளை 'பிறோசர்' என அழைக்கப்படும் கோவைத் தொழிற்படு நிலையத்தினூடாகக் கண்காணிக்குமாறும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையில் பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதியின் தீர்ப்பனவு நேரத்தில் அவர்களது தீர்ப்பனவு கணக்குகளில் போதுமான நிதி வைத்திருப்பதனை உறுதிப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டனர்.

4. இதன்படி 2008 நவெம்பர் 3ஆம் நாளிலிருந்து அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் மூடிவிடும் நேரம் பி.ப. 5.00 மணியாக இருக்கும்.

**சி ஜே பி சிறிவர்த்தன**
பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளர்

**கே பி திஸ்ஸகருண**
மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2008 திசெம்பர் 05

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்: பிஎஸ்டி/ ஏசியு/01/2008

*அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

### ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உடன்படிக்கைக்கும் நடைமுறை விதிகளுக்குமான திருத்தங்கள்

**1. அறிமுகம்**

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் நியதிகளுக்கிணங்க, ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளிடையேயான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் 2009.01.01ஆம் நாள் தொடக்கம் ஆசிய தீர்ப்பனவு

பொறிமுறைகள் ஒன்றில் ஐ.அ.டொலரில் அல்லது யூரோவில் நடைபெற முடியும் என்பது பற்றி வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய செயலகத்தில் பேணப்படும் கணக்குகளை "ஆசிய நாணய அலகு" என (அதாவது ஆ.தீ. ஒன்றிய டொலர் அல்லது ஆ.தீ. ஒன்றிய யூரோ) பெயர் குறிப்பிடப்பட்ட கணக்கில் வைக்கப்படுவதுடன் இது ஆ.நா. அலகு என்ற சுருக்க வடிவத்தில் குறிப்பிடப்படும். ஒரு ஆ.நா. அலகு டொலர் மற்றும் ஒரு ஆ.நா. அலகு யூரோ என்பனவற்றின் பெறுமதி முறையே ஒரு டொலருக்கும் ஒரு யூரோவிற்கும் சமமானதாகும்.

இதன்படி, இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் திணைக்களம் அல்லது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட முன்னைய அனைத்து தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களையும் நீக்கிவிடுகிறது என்பது பற்றி கவனத்தில் கொள்ளுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**2. யூரோவில் நோஸ்றோ கணக்குகளைத் திறத்தல்**

வர்த்தக வங்கிகள் ஏற்கனவேயுள்ள ஐ.அ.டொலர்களில் குறித்துரைக்கப்பட்ட நோஸ்றோ கணக்குகளுக்குப் புறம்பாக, ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளிலுள்ள அவற்றின் தொடர்பு வங்கிகளுடன் யூரோவில் குறித்துரைக்கப்பட்ட நோஸ்றோ கணக்குகளை (ஆ.தீ. ஒன்றிய யூரோ கணக்குகள் என அழைக்கப்படவுள்ளது) திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழான அனைத்து தகமை பெற்ற கொடுக்கல் வாங்கல்களும், கொடுக்கல் வாங்கல் செய்யும் நாணயத்தினைப் பொறுத்து (உ-ம் ஐ.அ.டொலர் அல்லது யூரோ) இக்கணக்குகளினூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இக்கணக்குகளின் தொழிற்பாடுகள் தற்பொழுதுள்ள செலாவணிக்கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் மூலமும் மத்திய வங்கியினால் விடுக்கக்கூடிய அல்லது காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக்கூடிய மற்றைய பணிப்புரைகள் விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது வழிகாட்டல்களின் மூலமும் ஆளப்படும்.

**3. வர்த்தக கொடுக்கல் வாங்கல்களையும் ஏனைய பணவனுப்பல்களையும் தீர்ப்பனவு செய்தல், மிகை நிதியங்களை அனுப்புதல், நோஸ்றோ கணக்குகளுக்கு நிதியிடல் மற்றும் பெறுமதி நாட்கள்**

(i) அனைத்துப் பொருள் பட்டியல்களும் கொடுப்பனவுச் சாதனங்களும் ஐ.அ. டொலர்களில் அல்லது யூரோவில் அல்லது மாற்றத்தக்க நாணயங்களில் குறித்துரைக்கப்பட வேண்டும்.

(ii) வர்த்தக வங்கிகள், வெளிநாட்டிலுள்ள அவற்றின் தொடர்பு வங்கிகளினால் இலங்கையில் பேணப்படும் அவர்களின் ஆ.தீ. அலகு டொலர் அல்லது ஆ.தீ. அலகு யூரோ கணக்குகளிலுள்ள மிகை நிதியங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்ற வேளையில், சம்பந்தப்பட்ட வர்த்தக வங்கிகள், சம்பந்தப்பட்ட உறுப்பினர் மத்திய வங்கிக்கூடாக மாற்றல்களை மேற்கொள்ளும் பொருட்டு பெறுமதி நாளன்று மத்திய வங்கிக்கு ஐ.அ.டொலர்/ யூரோ தொகைகளை கிடைக்கச் செய்ய வேண்டும். மாற்று வழிமுறையொன்றாக இம் மாற்றல்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர்களை/ யூரோவினை வர்த்தக வங்கிகள் கொள்வனவு செய்யலாம்.

(iii) வெளிநாட்டிலுள்ள தமது ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய யூரோ கணக்கிலுள்ள மிகை நிதியங்களை திருப்பியனுப்ப உத்தேசிக்கின்ற இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் தொடர்பான மத்திய வங்கிகள் ஊடாக அத்தகைய மாற்றல்களை மேற்கொள்ளுமாறு தமது சம்பந்தப்பட்ட வங்கிகளைக் கேட்டுக் கொள்ளலாம். தொடர்பான மத்திய வங்கியிடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும், இலங்கை மத்திய வங்கி, பெறுநர் வர்த்தக வங்கிகளுக்கு ஐ.அ.டொலர்களில்/ யூரோவில் அல்லது இலங்கை ரூபாவில் நிதியினைக் கிடைக்கச் செய்யும்.

(iv) இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் வெளிநாட்டிலுள்ள அவற்றின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் அல்லது ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய யூரோ கணக்குகளுக்கு நிதியிட விரும்புமிடத்து அத்தகைய டொலர் யூரோ தொகைகள் தொடர்பான பெறுமதி நாட்களில் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். வர்த்தக வங்கிகள் விரும்புமிடத்து இந் நோக்கத்திற்காக அவை மத்திய வங்கியிலிருந்து இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ.டொலர்/ யூரோவினைக் கொள்வனவு செய்யலாம்.

(v) இச் சுற்றறிக்கைக்கான பெறுமதித் திகதி உடன் பெறுமதித் திகதியாக அல்லது மறுநாள் பெறுமதித் திகதியாக இருக்கும்.

**4. நொஸ்றோ கணக்குகளின் நிதியிடலுக்கான கோரிக்கைகளும் அத்தகைய கணக்குகளிலுள்ள மிகை நிதிகளை தாய்நாட்டிற்கு அனுப்புதலும்**

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளிலுள்ள தொடர்பு வங்கிகளில் வைத்திருக்கப்படும் நொஸ்றோ கணக்குகளை நிதியிடுவதற்கான வர்த்தக வங்கிகளின் கோரிக்கைகளும் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளில் அத்தகைய முகவர்களினால் வைத்திருக்கப்பட்ட மிகையான நிதிகளை தாய் நாட்டிற்கு அனுப்புதலை சுவிப்ற் தொலைத்தொடர்பூட்டல் ஊடகம், தொலைநகல் அல்லது தொலைபேசியூடாக மத்திய வங்கிக்கு அனுப்பலாம்.

(i) சுவிப்ற் முறையினூடான தொடர்பூட்டல்

சுவிப்ற் முறை பயன்படுத்தப்படுமிடங்களில், வர்த்தக வங்கிகள் தனிப்பட்ட நிதிய மாற்றல்களுக்கு எம்ரி/202 ஐயும் பல்வேறு நிதிய மாற்றல்களுக்கு எம்ரி/203 ஐயும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன், அத்தகைய தொடர்பூட்டல்கள் அதே வேலை நாளன்று 14.45 மணிக்கு முன்பாகப் பெறப்படவும் வேண்டும்.

(ii) தொலைபேசியூடான தொடர்பூட்டல்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பிரிவிற்கு மாற்றல்களின் விபரங்கள் தொலைபேசி மூலமாக அறிவிக்கப்படுகையில், அத்தகைய அறிவித்தல்கள் 14.45 மணிக்கு முன்பாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிவிப்பவருடைய பெயரும் பெறுபவருடைய பெயரும் இரு தரப்பிலிருந்தும் குறிக்கப்பட வேண்டியிருப்பதோடு எழுத்திலான உறுதிப்பாடு பொருத்தமான ரீதியில், இணைக்கப்பட்டுள்ளன. “அ1 அல்லது அ2”/ “ஆ1 அல்லது ஆ2” படிவத்தில் அதே நாளன்று 15.40 மணிக்கு முன்னதாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் குறிக்கப்பட்ட பிரிவினை வந்தடைதல் வேண்டும்.

| தொடர்பு கொள்ள வேண்டிய ஆட்கள் | தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் | தொலை நகல் |
|---|---|---|
| திருமதி. ரன்ஜனி வீரசிங்க | 2477535 | 2422819 |
| திருமதி. ஹேமா அல்கம | 2477057/ 53 | 2346280 |

(iii) உடனடி அடிப்படையில் அல்லது நாளைய அடிப்படையில் நோஸ்றோ கணக்குகளின் நிதியிடல் விபரங்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பிரிவிற்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட வேண்டியதுடன் தொலைபேசி செய்தியை உடனடுத்து எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் சுவிப்ற் அல்லது தொலைநகல் மூலமாக (சுவிப்ற் வசதி கிடைக்காதவிடத்து மட்டும்) அனுப்பப்படுதல் வேண்டும்.

**5. இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளுக்கு நிதிகளை மாற்றம் செய்தல்**

ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழான தீர்ப்பனவுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கான அனைத்து வரவுகளும் தொடர்பான பெறுமதி நாட்களில் பின்வரும் கணக்குகளுக்கு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| நாணயம் | வங்கி | கணக்கு இலக்கம் |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | பெடரல் றிசேர்வ் வங்கி, நியூயோர்க் | 021083527 |
| யூரோ | டியூச் புண்டொஸ் வங்கி, பிராங்வேர்ட் | 5040040828 |

**6. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டிலுள்ள நோஸ்றோ கணக்குகளுக்கான யூரோ கொடுகடன்கள்**

இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளினால் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட யூரோ கணக்குகளுக்கு ஆசிய தீர்ப்பனவுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி நிதிய மாற்றல்களை மேற்கொள்ளும் பொருட்டு வர்த்தக வங்கிகள் அவர்களது தொடர்பு வங்கிகளின் பெயர்களையும் தொடர்பான கணக்கு இலக்கங்களையும் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்கள பணிப்பாளருக்கு 2008.12.31 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**7. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய யூரோ கடன்கள் மீதான வட்டி**

மற்றைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளின் வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆ.தீ. ஒன்றிய யூரோ கணக்குகளின் மீது, பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி வட்டிக் கொடுப்பனவுகளை பரிசீலிப்பதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

**பணிப்பாளர்**
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

படிவம் "அ1"

**நோஸ்றோ கணக்குகளை நிதியிடல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

........................................................ ஆகிய நாங்கள் பெடரல் றிசேவ் பாங் ஒப் நியூ யோர்க், நியூ யோர்க்கிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் எண் 021083527 கொண்ட கணக்கிற்கு ஐ.அ. டொலர் .................................................................................. (பெறுமதியை சொற்களில்) .......................................................................................................... (திகதி) ............................................................ இல் செலுத்துவதற்கு இத்தால் உடன்படுகிறோம்.

தயவுசெய்து இத்தொகையை ........................................................................................................................................ (பங்குபற்றும் மத்திய வங்கியினதும் அலுவலகத்தினதும் பெயர்) ஊடாக ............................................................................. (தொடர்பான வங்கியின் பெயர்) இல் உள்ள .......................................................... கணக்கு இலக்கத்திற்கு வரவு வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

தங்கள் உண்மையுள்ள

............................................................................ (அ)

............................................................................ (ஆ)

அதிகாரம்பெற்ற அலுவலர்கள்

படிவம் "அ2"

**நோஸ்றோ கணக்குகளை நிதியிடல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

........................................................ ஆகிய நாங்கள் டியூச் புண்டெஸ் வங்கி பிராங்வேர்ட்டு இலுள்ள இலங்கை மத்திய வங்கியின் எண் 5040040828 கொண்ட கணக்கிற்கு யூரோ ................................................................... (பெறுமதியை சொற்களில்) .......................................................... ...................................... (திகதி) ............................................................ இல் செலுத்துவதற்கு இத்தால் உடன்படுகிறோம்.

தயவுசெய்து இத்தொகையை ...................................................................................................... (பங்குபற்றும் மத்திய வங்கியினதும் அலுவலகத்தினதும் பெயர்) ................................................ ஊடாக ......................................................... (தொடர்பான வங்கியின் பெயர்) இல் உள்ள ........................................................... கணக்கு இலக்கத்திற்கு வரவு வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

தங்கள் உண்மையுள்ள

............................................................................ (அ)

............................................................................ (ஆ)

அதிகாரம்பெற்ற அலுவலர்கள்

## படிவம் "ஆ1"

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளின் வர்த்தக வங்கிகளது வோஸ்றோ கணக்குகளிலுள்ள மிகை நிதியங்களை ஒப்படைத்தல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துக்கூடாக ............................................................................(பங்குபற்றும் மத்திய வங்கியின் பெயர்) க்கு ............................................................................ (பங்குபற்றும் நாடுகளின் வர்த்தக வங்கி) இன் கணக்கில் மேலே கூறப்பட்ட வங்கியினால் எம்மிடம் வைத்திருக்கப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் கணக்கிலுள்ள மிகை நிதியமாக ஐ.அ.டொலர் ................................................ (சொற்களில்) கொண்ட தொகையை ....................................... (பெறுமதி நாளில்) செலுத்துவதற்கான ஒழுங்குகளை தயவுசெய்து மேற்கொள்ளவும்.

பெடரல் றிசேவ் பாங் ஒப் நியூ யோர்க், நியூ யோர்க் இலுள்ள உங்களுடைய கணக்கு இலக்கம் 021083527 SRILAG இற்கு எமது தொடர்பு வங்கிகள் ஊடாக மேலே குறிக்கப்பட்ட பெறுமதி நாளில் ஐ.அ.டொலர் ....................... இல் செலுத்துவதற்கு உடன்படுகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள

............................................................................ (அ)
............................................................................ (ஆ)
அதிகாரம்பெற்ற அலுவலர்கள்

## படிவம் "ஆ2"

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பு நாடுகளின் வர்த்தக வங்கிகளது வோஸ்றோ கணக்குகளிலுள்ள மிகை நிதியங்களை ஒப்படைத்தல்**

பணிப்பாளர்
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துக்கூடாக ............................................................................ (பங்குபற்றும் மத்திய வங்கியின் பெயர்) க்கு ............................................................................ (பங்குபற்றும் நாடுகளின் வர்த்தக வங்கி) இன் கணக்கில் மேலே கூறப்பட்ட வங்கியினால் எம்மிடம் வைத்திருக்கப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய டொலர் கணக்கிலுள்ள மிகை நிதியமாக யூரோ .................................................................. (சொற்களில்) கொண்ட தொகையை ....................................... (பெறுமதி நாளில்) செலுத்துவதற்கான ஒழுங்குகளை தயவுசெய்து மேற்கொள்ளவும்

டியூச் புண்டெஸ் வங்கி பிராங்வேர்ட்டு இலுள்ள உங்களுடைய கணக்கு இலக்கம் 5040040828 SRILAG இற்கு எமது தொடர்பு வங்கிகள் ஊடாக மேலே குறிக்கப்பட்ட பெறுமதி நாளில் யூரோ ....................... இல் செலுத்துவதற்கு உடன்படுகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள

............................................................................ (அ)
............................................................................ (ஆ)
அதிகாரம்பெற்ற அலுவலர்கள்

பொதுப்படுகடன் திணைக்களம்
2008 மே 6

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நிறைவேற்று அலுவலர்களுக்கும்*
*மற்றும் முதனிலை வணிகர்களுக்கும்*

## பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

### வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் விற்பனை, கொள்வனவு மற்றும் மாற்றல் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான வழிகாட்டல்களும் நடைமுறைகளும் கீழே எடுத்துக்காட்டப்படுகின்றன. இத் தொழிற்பாடுகளின் எந்தவொரு விடயத்திற்கும் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களும் இல்லாதவிடத்து உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான திறைசேரி உண்டியல் வழங்கலில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்பொழுது ஏற்புடைத்தான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், நடைமுறைகள், முறை ஒழுங்கு விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய ஏற்புடைத்தான விதிகள் போன்றன எதுவுமில்லையாயின், பங்கேற்கும் முகவர்கள் இது தொடர்பாக கீழே கையொப்பமிட்டவர்களிடமிருந்து தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ் வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2008 மே 05ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1. **பொது**

**1.1 தகமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள்**

பின்வரும் முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்:

1.1.1 வெளிநாட்டு நிதியங்கள் சமவாய நிதியங்கள் அல்லது பிராந்திய நிதியங்கள்
1.1.2. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்; மற்றும்
1.1.3. வெளிநாட்டுப் பிரசைகள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொழுது அனைத்து பங்கேற்கும் முகவர்களும் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நியம சரிபார்ப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**1.2 திறைசேரி உண்டியல்களின் காலம்**

எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய, விற்க அல்லது மாற்றல் செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**1.3 திறைசேரி உண்டியல்களின் முதலீடு மீதான வரையறை**

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீதான மொத்த முதலீடு எந்தவொரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது (கீழேயுள்ள கிளை வாசகம் 2.3 இற்கு உட்பட்டு)

**1.4 பதிவுகள்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பகத்தில் பங்கேற்கும் முகவர்கள் தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கு பொறுப்புடையவராவர். வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான அனைத்து திறைசேரி உண்டியல் கொடுக்கல் வாங்கல்களும் மத்திய வைப்பகமுறையின் வாடிக்கையாளர் வெளிநாட்டு கணக்கு வகையின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

வெளிநாட்டு கணக்கு வைத்திருப்போருக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை மத்திய வைப்பகமுறை வழங்கும்.

அ) மாதகாலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று

ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று

இ) முதிர்ச்சிப் பெறுகைகள் அத்துடன்/ அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது மேற்கொள்ளப்பட வேண்டுமோ

அவற்றை எடுத்துக் காட்டுகின்ற கூற்றொன்று

இக் கூற்றுக்கள் மத்திய வைப்பகமுறையில் பதிவு செய்யப்பட்டவாறு முதலீட்டாளரின் பெயர், முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

2. விற்பனை நடைமுறைகள்

2.1 மேலேயுள்ள கிளை வாசகம் 1.1இன் கீழ் தகுதிபெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களை முதலாந்தர ஏலங்களிலிருந்து முதனிலை வணிகர்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

வாடிக்கையாளர்களிடமிருந்தும் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு பங்கேற்கும் முகவர்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் சட்டத் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் லங்கா செட்டில் முறையின் ஒழுங்குகளையும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் மற்றும் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மற்றைய வழிகாட்டல்களையும் மீறவில்லை என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2.2 திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியும் திறைசேரி முறிகளின் விற்பனை/ மாற்றல்/ முதிர்ச்சி என்பன மூலம் அடையப்பட்ட பெறுகைகள் அல்லது வட்டி/ மூலதன இலாபம் என்பன மூலம் பெறப்பட்ட ஏதும் வருமானம் என்பன உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பங்கேற்கும் முகவர்களினால் முதலீட்டாளர்களின் பெயரில் திறக்கப்பட்ட “திறைசேரி உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - 2” என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கினூடாகவே வழிப்படுத்தப்பட வேண்டும். எனவே, பிரத்தியேக இக்குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக வாடிக்கையாளரின் சார்பில் சிறப்புக் கணக்கொன்றைத் திறப்பது பங்கேற்கும் முகவர்களின் கடமையாகும். 2008.05.05 நாளன்று செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இவற்றிற்கு ஏற்புடைத்தனவாக இருக்கும்.

2.3 விற்பனையினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் வரையறையில் (வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதம்) கிடைக்கத்தக்கதாகவுள்ள தன்மை பற்றி இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து விசாரித்துக் கொள்வது பங்கேற்பு முகவர்களின் பொறுப்பாகும். விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு தொலைநகல்/ மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

2.4 பங்கேற்கும் முகவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறையில் தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான முதலீட்டாளர் கணக்குகளை உரிய முறையில் திறப்பதற்கு பொறுப்பாக இருப்பர்.

2.5 இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை பிணையங்களாகப் பயன்படுத்தி கீழேயுள்ள கிளைவாசகம் 1.1 இன் கீழ் விபரிக்கப்பட்ட தகுதியுடைய முதலீட்டாளர்களுடன் மட்டும் இலங்கையில் மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. நிதிய மாற்றல்கள்

3.1 வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளைக் கொள்வனவு விற்பனை செய்யும் பொழுது திறைசேரி உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டுக் கணக்கினைப் பேணுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (கட்டுக்காப்பு வங்கி) முதலீட்டாளரின் சார்பில் தொடர்பான தரப்பினருக்குக் குறிப்பிட்ட ரூபாத் தொகையினை மாற்றல் செய்யலாம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களை முதலாந்தர சந்தையிலிருந்து வாங்கும் பொழுது தொடர்பான முதனிலை வணிகர்கள் உண்டியல்களின் பெறுகைத் தொகையினை மத்திய வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக் கணக்கிற்கு அனுப்புதல் வேண்டும். எனினும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இத்திட்டத்தின் கீழ், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பயன்படுத்தி திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3.2 வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீட்டினூடகப் பெறப்பட்ட மொத்தத் தொகையில் 60 சதவீதம் வரையிலான அளவினை இலங்கை மத்திய வங்கி டொலர் நிதியமாக சந்தையிலிருந்து கொள்வனவு செய்யமுடியும்.

4. முதிர்ச்சியின் போது முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவு

திறைசேரி உண்டியல்கள் மீதான முதல் தொகையின் மீள்கொடுப்பனவானது (முகப்புப் பெறுமதி) ரூபாவில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தொடர்பான பங்கேற்பு முகவர்களுக்கு குறிப்பிட்ட முதிர்ச்சி நாளன்று செலுத்தப்படும். தொடர்பான கொடுப்பனவுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு - 2 அதே நாளன்று பெறுமதிகள் சேரும்

விதத்தில் மாற்றல் செய்வதற்கு பங்கேற்கின்ற முகவர்கள் பொறுப்பாவர்.

முதிர்ச்சி நாள் இலங்கையில் வங்கித்தொழில் நடைபெறாத நாளன்று வருமாயின் முதல் தொகையின் மீள்கொடுப்பனவு அடுத்த வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

**5. கூட்டு உடமைகள்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மத்திய வைப்பக முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிகளுடன் (தற்பொழுது இரண்டு மட்டும்) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்களை கூட்டாக வைத்திருக்கலாம். முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவுகள் கட்டுக்காப்பு வங்கி மற்றும் இணைந்த உடமையாளர்களுக்கிடையேயான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**6. வரிச் சலுகை**

திறைசேரி உண்டியல் சந்தையில் முதலீடு செய்யத் தகமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்தகைய உண்டியல்கள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்து வைத்தல் வரி நீங்கலாக, அத்தகைய முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

**7. ஏனையவை**

செலாவணி அல்லது ஏனைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இத் திறைசேரி உண்டியல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பன கண்காணித்து மேற்பார்வை செய்யும்.

இது தொடர்பாக தேவையைப் பொறுத்து காலத்திற்குக் காலம் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படும்.

இவ்வழிகாட்டல்கள் தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தல்களையும் பின்வரும் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 94 11 2477277/ 212/ 274/ 276/ 278/ 316
தொலைநகல் : 94 11 2477718/ 719/ 759
மின்னஞ்சல் : siriwardena@cbsl.lk, pddrbw@cbsl.lk, chandra@cbsl.lk

திருமதி ஆர் பீ வீரசிங்க
**பதில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

2008.05.06
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

பொதுப்படுகடன் திணைக்களம்
2008 மே 23

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*
*மற்றும் முதனிலை வணிகர்களுக்கும்*

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

**இவ்வழிகாட்டல்கள்/ நடைமுறைகள், 2007.11.30ஆம் நாளன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகளுக்குப் பதிலாக 2008/05/23 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்**

**வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகள்**

**1. தகமையுடைய முதலீட்டாளர்கள்**

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பின்வரும் வகையினர் மட்டுமே இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய தகமையுடையவர்களாவர்.

அ. வெளிநாட்டு நிதியங்கள், சமவாய நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள்

ஆ. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள்

இ. வெளிநாட்டு பிரசைகள்

2. முதலீடு

தகமையுடைய முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி முறிகளை பின்வரும் விதத்தில் வாங்க முடியும்.

அ. முதலாந்தர சந்தை கொள்வனவுகளைப் பொறுத்தவரை - இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களிடமிருந்தும்

ஆ. இரண்டாந்தரச் சந்தை கொள்வனவுகளைப் பொறுத்தவரை - முதனிலை வணிகர்களிடமிருந்து அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**(அத்தகைய நிறுவனங்களின் பட்டியல் இச் சுற்றறிக்கையின் இறுதியில் தரப்பட்டுள்ளது)**

3. பதிவுகள்

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பகத்தில் பங்கேற்கும் முகவர்கள் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்புடையவராவர்.

மத்திய வைப்பக முறை வெளிநாட்டுக் கணக்கு வகையிலுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை வழங்கும்.

அ. குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று

ஆ. ஒவ்வொரு முதலீட்டாளர்கள் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று

இ. முதிர்ச்சிப் பெறுகைகள் அத்துடன் அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமோ அவற்றை எடுத்துக் காட்டுகின்ற கூற்றொன்று

இக்கூற்றுக்கள், மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்டவாறான முதலீட்டாளரின் பெயர் மற்றும் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

4. தகு நிலைமை

திறைசேரி முறிகளின் முதல் மற்றும் அதன் மீது வரவேண்டிய வட்டி என்பன இலங்கை அரசாங்கத்தின் நேரடியான நிபந்தனைகளற்ற பொதுவான, பிணையிடப்படாத கடப்பாடுகளாக இருப்பதுடன் தற்பொழுது, எதிர்காலத்திலும் அவர்களிடையேயான நிலையும் அந்நிலைக்கு இணையானவையும் அவற்றிற்கிடையேயான எவ்வித முன்னுரிமைகளுமின்றி இலங்கை அரசாங்கத்தின் அனைத்து வெளிநிற்கும் பிணையிடப்படாத மற்றும் கீழ் நிலைப்படாத கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

5. காலம்

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யவும் விற்கவும் அல்லது மாற்றல் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

6. திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகள்

மேலேயுள்ள கிளை வாசகம் 1இன் கீழ் தகமையுடைய முதலீட்டாளர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் (இதனகத்துப் பின்னர் நிதிய/ பண மாற்றல்களுடன் தொடர்பான தொழிற்பாடுகளுக்கான "கட்டுக்காப்பு வங்கி" என அழைக்கப்படும்) **"திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு"** என்று அழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கொன்றினைத் திறந்து அக் கணக்கிற்கு ரூபாவில் வரவு வைப்பதன் மூலம் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளைச் செய்யலாம். கட்டுக்காப்பு வங்கியானது தொடர்பான ரூபாத் தொகையினை தொடர்பான தரப்பினருக்கு மாற்றல் செய்வதற்கு அவசியமான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். எனினும், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதிகளை திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாய்க் கணக்கிற்கு மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

7. திறைசேரி முறிகளை வெளியிடல் மற்றும் வழங்குதல்

கிளை வாசகம் 6இல் குறித்துரைக்கப்பட்டவாறு, முறையாகக் கொடுப்பனவுகளைச் செய்து, கிளை வாசகம் 3இல் குறித்துரைக்கப்பட்டவாறு மத்திய வைப்பக முறையில் பதிவினை மேற்கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி

முறிகள் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்குதல் வேண்டும்.

8. **மீள்கொள்வனவுச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள்**

தகமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளை பிணையங்களாகப் பயன்படுத்தி மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

9. **திறைசேரி முறிகள் மீதான வட்டி**

(i) **வட்டிக் கொடுப்பனவுகள்**

வட்டியானது ரூபாவில் ஆண்டிற்கு இரு தடவைகள், குறிப்பிட்ட திறைசேரி முறிகள் தொடர்பான கொடுப்பனவுத் திகதியன்று இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்ட தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். அத்தகைய பங்கேற்கும் முகவர்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு அத்தகைய தொகையினை அதே நாளன்று உள்ள பெறுமதிக்கு மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையனவாகும். வட்டிக் கொடுப்பனவுத் திகதி எதுவும் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம் பெறாத நாளன்று வருமாயின் அக்கொடுப்பனவுகள் அடுத்த வேலை நாளன்று வழங்கப்படும்.

(ii) **வட்டிக் காலம்**

"வட்டிக் காலம்" என்பது வழங்கப்பட்ட நாள் உட்பட அதிலிருந்து ஆனால் முதலாவது வட்டிக் கொடுப்பனவு நாள் நீங்கலான காலத்தையும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு காலப்பகுதியும் வட்டிக் கொடுப்பனவு நாளை உள்ளடக்கி ஆனால் அடுத்துவரும் வட்டிக் கொடுப்பனவு நாளை உள்ளடக்காத காலப்பகுதியொன்றாகும்.

(iii) **வட்டி வீதம்**

திறைசேரி முறிகள் மீது கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி வீதம் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறித் தொடர்களின் கூப்பன் வீதமாக இருக்கும்.

10. **முதல் தொகையினை மீளச் செலுத்துதல்**

(அ) திறைசேரி முறிகள் மீது மீளச் செலுத்தத்தக்க முதல் தொகையானது ரூபாவில் தொடர்பான பங்கேற்கும் முகவருக்கு அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு தொடர்பான கொடுப்பனவுகளை அதே நாளன்று கிடைக்கத்தக்க விதத்தில் மாற்றல் செய்வது அத்தகைய பங்கேற்கும் முகவர்களின் பொறுப்பாகும்.

(ஆ) திறைசேரி முறிகளின் முதல் தொகையானது முதிர்ச்சி நாளன்று மீளச் செலுத்தப்படத்தக்கதாகும். முதிர்ச்சி நாள் இலங்கையில் வங்கி அலுவல்கள் நடைபெறாத நாளன்று வருமாயின் முதல் தொகையின் மீளகொடுப்பனவு அடுத்துவரும் வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

11. **பணத்தினை தாய் நாட்டிற்கு அனுப்புதல்**

திறைசேரி முறிகளின் விற்பனை அல்லது மாற்றல் அல்லது முதிர்ச்சியடைவதன் மூலம் பெறப்படும் அனைத்து பெறுகைகளும் திறைசேரி முறிகளின் வட்டி வருமானமும் முழுமையாக தாய் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படலாம். எனினும், அத்தகைய வெளிநாட்டிற்கான பணவனுப்பல்கள் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாய்க் கணக்கினைப் பேணுகின்ற கட்டுக்காப்பு நிதியூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. **கூட்டு உடமைகள்**

திறைசேரி முறிகளை உடமையாளர்கள் கூட்டாகவும் வைத்திருக்கலாம். முதல் தொகையின் மீள்கொடுப்பனவும் வட்டிக் கொடுப்பனவும் கட்டுக்காப்பு வங்கிக்கும் கூட்டு உடமையாளர்களுக்குமிடையிலான உடன்படிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

13. **வரிச் சலுகை**

திறைசேரி முறிச் சந்தையில் முதலீடு செய்யத் தகமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள், அத்தகைய முறிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்து வைத்தல் வரி நீங்கலாக அத்தகைய முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

14. **முத்திரைத் தீர்வை**

திறைசேரி முறிகளின் வழங்கல், மாற்றல் அல்லது மீட்பு மீது வழங்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் முத்திரைத் தீர்வையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

## 15. நியாயாதிக்கம்

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் தொடர்பான அனைத்து விடயங்களைப் பொறுத்தவரையிலும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பிரத்தியேகமான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருக்கும்.

## 16. ஆளுகைச் சட்டம்

திறைசேரி முறிகளின் நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களினாலும் அவற்றின் பொருள் கோடல்களினாலும் ஆளப்படும்.

இது தொடர்பான மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், விடயத்தினைப் பொறுத்து செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்படும்.

இவ்வழிகாட்டல்கள் தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தலையும் பின்வரும் தொடர்புகளின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 94 11 2477277/ 212/ 274/ 281/ 276/ 278
தொலைநகல் : 94 11 2477718/ 719/ 759
மின்னஞ்சல் : pddrbw@cbsl.lk, siriwardena@cbsl.lk, chandra@cbsl.lk

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

2008.05.23
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

| நிறுவனங்களின் பெயர் | தொடர்பு எண் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| இலங்கை வங்கி பொதுப்படுகடன் பிரிவு | 94-11-2348878 | gm@boc.lk |
| கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட் | 94-11-2447516 | alg@combank.net |
| சிற்றி பாங்க் என் ஏ | 94-11-2326086 | kapilajayawardena@citigroup.com |
| டொயிஷ் பாங்க் ஏஜி | 94-11-2448581 | stefan.mahrdt@db.com |
| டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட் | 94-11-2371450 | Elgee.Perera@dfccvardhanabank.com |
| ஹபீப் பாங்க் லிமிடெட் | 94-11-2389355 | sherwani@sltnet.lk |
| ஹட்டன் நஷனல் பாங்க் லிமிடெட் | 94-11-2661303 | theaga@hnb.lk |
| ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் | 94-11-2447536 | ceosrilanka@hsbc.com.lk |
| ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் | 94-11-4242424 | naveen.agarwal@icicibank.com |
| இந்தியன் பாங்க் | 94-11-2446122 | ibcol@sltnet.lk |
| இந்தியன் ஓவசீஸ் பாங்க் | 94-11-2320515 | iobch@lgo.lk |
| எம்சிபி பாங்க் லிமிடெட் | 94-11-2440569 | gmoffice@mcb.lk |
| நஷனல் டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட் | 94-11-2448889 | Nihal.welikala@ndbbank.com |
| நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் லிமிடெட் | 94-11-4313101 | zulfigar.zavahir@nationtrust.com |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | 94-11-2565556 | nadarajah@pabcbank.com |
| பப்ளிக் பாங்க் | 94-11-2576288 | lks@publicbank.slt.lk |
| மக்கள் வங்கி | 94-11-2334041 | asoka@peoplesbank.lk |
| சம்பத் வங்கி லிமிடெட் | 94-11-2300152 | anil@sampath.lk |
| செலான் வங்கி லிமிடெட் | 94-11-2456777 | gm@seylan.lk |
| ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா | 94-11-2447166 | ceosbilk@sltnet.lk |
| ஸ்ரான்டட் சாா்ட்டட் பாங்க் | 94-11-2480012 | clive.haswell@lk.standardchartered.com |
| யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட் | 94-11-2370690 | mahenfdo@unionb.com |
| ஸ்ரான்டட் சாா்ட்டட் பாங்க் (பாகித்தான்) லிமிடெட் | 94-11-2675046 | goharulaynafzal@ubipk.com |
| **முதனிலை வணிகர்கள்** | | |
| இலங்கை வங்கி பொதுப்படுகடன் பிரிவு | 94-11-2448830 | pdu@boc.lanka.net |
| கப்பிட்டல் அலயன்ஸ் லிமிடெட் | 94-11-2317777 | general@capitalalliance.lk |
| கொமர்சல் வங்கி ஒவ் சிலோன் | 94-11-2449516 | dula@combank.net |
| சிலிங்கோ சிறிராம் செக்குரிட்டிஸ் லிமிடெட் | 94-11-2564935/6 | hiran@ceyshri.com.lk |
| பெஸ்ட் கப்பிட்டல் ரேஷரிஸ் லிமிடெட் | 94-11-2308852/53 | fclgroup@fclgroup.com |
| எச்என்பி செக்குரிட்டிஸ் லிமிடெட் | 94-11-2661199 | hndsl@hnb.lk |
| என்எஸ்பி பன்ட் மனேஸ்மன்ட் கம்பனி லிமிடெட் | 94-11-2564706 | nsbfmc@sltnet.lk |
| நட்வெல்த் செக்குரிட்டிஸ் லிமிடெட் | 94-11-4703000 | chandrad@natwealth.com |
| மக்கள் வங்கி | 94-11-2308762 | pd@peoplesbank.lk |
| செலான் பாங்க் அசற் மனேஸ்மன்ட் லிமிடெட் | 94-11-245631/2 | ajantha@seylan.lk |
| சம்பத் சுரக்கும் லிமிடெட் | 94-112305841 | surakum@sampath.lk |

பொதுப்படுகடன் திணைக்களம்
2008 மே 23

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நிறைவேற்று அலுவலர்களுக்கும்
மற்றும் முதனிலை வணிகர்களுக்கும்*

## பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

**இவ்வழிகாட்டல்கள்/ நடைமுறைகள், 2007.11.30ஆம் நாளன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகளுக்குப் பதிலாக 2008/05/23 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்**

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் விற்பனை, கொள்வனவு மற்றும் மாற்றல் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான வழிகாட்டல்களும் நடைமுறைகளும் கீழே எடுத்துக்காட்டப்படுகின்றன. இத் தொழிற்பாடுகளின் எந்தவொரு விடயத்திற்கும் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களும் இல்லாதவிடத்து உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான திறைசேரி முறி வழங்கலில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்பொழுது ஏற்புடைத்தான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், நடைமுறைகள், முறை ஒழுங்கு விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய ஏற்புடைத்தான விதிகள் போன்றன எதுவுமில்லையாயின் பங்கேற்கும் முகவர்கள் இது தொடர்பாக கீழே கையொப்பமிட்டவர்களிடமிருந்து தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. பொது

1.1 தகைமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

பின்வரும் முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்:

வெளிநாட்டு நிதியங்கள் சமவாய நிதியங்கள் அல்லது பிராந்திய நிதியங்கள்
இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்; மற்றும்
வெளிநாட்டுப் பிரசைகள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொழுது அனைத்து பங்கேற்கும் முகவர்களும் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நியம சரிபார்ப்பு நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1.2 திறைசேரி முறிகளின் காலம்

எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்ய, விற்க அல்லது மாற்றல் செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1.3 திறைசேரி முறிகளின் முதலீடு மீதான வரையறை

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான மொத்த முதலீடு எந்தவொரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது (இது தொடர்பான தேவைப்பாட்டிற்கு தயவுசெய்து கீழே 2.3 இனைப் பார்க்கவும்) கிடைக்கத்தக்க திறைசேரி முறிகளின் தொடர்கள் நாளாந்தம் (மு.ப. 9.00 மணிக்கு முன்பாக) பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும்.

1.4 பதிவுகள்

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பகத்தில் பங்கேற்கும் முகவர்கள் தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கு பொறுப்புடையவராவர். வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான அனைத்து திறைசேரி முறி கொடுக்கல் வாங்கல்களும் மத்திய வைப்பகமுறையின் வாடிக்கையாளர் வெளிநாட்டு கணக்கு வகையின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

வெளிநாட்டு கணக்கு வைத்திருப்போருக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை மத்திய வைப்பகமுறை வழங்கும்.

அ) மாதகாலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று

ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று

இ) முதிர்ச்சிப் பெறுகைகள் அத்துடன்/ அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவற்றை எடுத்துக் காட்டுகின்ற கூற்றொன்று

இக் கூற்றுக்கள் மத்திய வைப்பகமுறையில் பதிவு செய்யப்பட்டவாறு முதலீட்டாளரின் பெயர், முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

## 2. விற்பனை நடைமுறைகள்

2.1 மேலேயுள்ள கிளை வாசகம் 1.1இன் கீழ் தகுதிபெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

2.1.1 இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளை பங்கேற்கும் முகவர்களினூடாக இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்கு

2.1.2 முதனிலை வணிகர்களினூடாக திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களில் விலைக்கோரல்களை மேற்கொள்வதற்கு

வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு பங்கேற்கும் முகவர்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் சட்டத் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் முறையின் ஒழுங்குகளை மீறவில்லை என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2.2 திறைசேரி முறிகளை கொள்வனவு செய்வதற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியும் திறைசேரி முறிகளின் விற்பனை/ மாற்றல்/ முதிர்ச்சி என்பன மூலம் அடையப்பட்ட பெறுகைகள் அல்லது வட்டி/ மூலதன இலாபம் என்பன மூலம் பெறப்பட்ட ஏதும் வருமானம் என்பன உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பங்கேற்கும் முகவர்களினால் முதலீட்டாளர்களின் பெயரில் திறக்கப்பட்ட "திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கினூடாகவே வழிப்படுத்தப்பட வேண்டும். எனவே, இக்குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக வாடிக்கையாளரின் சார்பில் சிறப்புக் கணக்கொன்றைத் திறப்பது பங்கேற்கும் முகவர்களின் கடமையாகும். 2007 திசெம்பர் 06ஆம் நாளன்று செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இவற்றிற்கு ஏற்புடைத்தனவாக இருக்கும்.

2.3 விற்பனையினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் வரையறையில் (வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதம்) கிடைக்கத்தக்கதாகவுள்ள தன்மை பற்றி இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து விசாரித்துக் கொள்வது பங்கேற்பு முகவர்களின் பொறுப்பாகும். விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு தொலைநகல்/ மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

2.4 பங்கேற்கும் முகவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறையில் தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான முதலீட்டாளர் கணக்குகளை உரிய முறையில் திறப்பதற்கு பொறுப்பாக இருப்பர்.

2.5 இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளை பிணையங்களாகப் பயன்படுத்தி இலங்கையில் மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 3. நிதிய மாற்றல்கள்

வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளைக் கொள்வனவு/ விற்பனை செய்யும் பொழுது திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டுக் கணக்கினைப் பேணுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (கட்டுக்காப்பு வங்கி) முதலீட்டாளரின் சார்பில் தொடர்பான தரப்பினருக்குக் குறிப்பிட்ட ரூபாத் தொகையினை மாற்றல் செய்யலாம். முதலாந்தரச் சந்தையில் விலைக் குறிப்பீடுகள் மூலம் அவர்கள் அத்தகைய முறிகளை வாங்கியிருப்பின், தொடர்பான முதனிலை வணிகர்கள் முறிகளின் பெறுகைத் தொகையினை மத்திய வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக் கணக்கிற்கு அனுப்புதல் வேண்டும். எனினும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இத்திட்டத்தின் கீழ், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பயன்படுத்தி திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 4. திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்

குறிப்பிட்ட திறைசேரி முறித் தொடர்களின் தொடர்பான கொடுப்பனவு நாளன்று வட்டிகள் ரூபாவில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக ஆண்டிற்கு இரு தடவைகள் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் செலுத்தப்படும். பங்கேற்கும் நிறுவனங்கள் அத்தகைய பெறுகைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு அதே நாளன்று

உள்ள நன்மைப் பெறுமதியுடன் மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையனவாகும்.

ஏதாவது வட்டிக் கொடுப்பனவுகள் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம்பெறாத நாளொன்றில் வருமாயின் அத்தகைய கொடுப்பனவுகள் அடுத்த வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

**5. முதல் தொகையின் மீள்கொடுப்பனவு**

திறைசேரி முறிகள் மீதான முதல் தொகையின் மீள்கொடுப்பனவானது ரூபாவில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தொடர்பான பங்கேற்பு முகவர்களுக்கு குறிப்பிட்ட முதிர்ச்சி நாளன்று செலுத்தப்படும். தொடர்பான கொடுப்பனவுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு அதே நாளன்று பெறுமதிகள் சேரும் விதத்தில் மாற்றல் செய்வதற்கு பங்கேற்கின்ற முகவர்கள் பொறுப்பாவர்.

முதிர்ச்சி நாள் இலங்கையில் வங்கித்தொழில் நடைபெறாத நாளன்று வருமாயின் முதல் தொகையின் மீள்கொடுப்பனவு அடுத்த வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

**6. கூட்டு உடமைகள்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மத்திய வைப்பக முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிகளுடன் (தற்பொழுது இரண்டு மட்டும்) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி முறிகளை கூட்டாக வைத்திருக்கலாம். முதல் தொகையினை மீளச் செலுத்துதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் கட்டுக்காப்பு வங்கி மற்றும் இணைந்த உடமையாளர்களுக்கிடையேயான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**7. வரிச் சலுகை**

திறைசேரி முறிச் சந்தையில் முதலீடு செய்யத் தகமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்தகைய முறிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்து வைத்தல் வரி நீங்கலாக, அத்தகைய முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

**8. ஏனையவை**

8.1 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இத்திறைசேரி முறிகளை மற்றைய வெளிநாட்டுத்தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு பிணையாகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

8.2 பரிமாற்றத்தை அல்லது ஏனைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இத் திறைசேரி முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பன கண்காணித்து மேற்பார்வை செய்யும்.

இது தொடர்பாக தேவையைப் பொறுத்து காலத்திற்குக் காலம் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படும்.

இவ்வழிகாட்டல்கள் தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தல்களையும் பின்வரும் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின்னஞ்சல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 94 11 2477277/ 212/ 274/ 281/ 276/ 278
தொலைநகல் : 94 11 2477718/ 719/ 759
மின்னஞ்சல் : siriwardena@cbsl.lk, pddrbw@cbsl.lk, chandra@cbsl.lk

சி ஜே பி சிறிவர்த்தன
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

2008.05.23
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு

**சுற்றிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2008**

2008 ஓகத்து 18

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம்**

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் அறிமுகம்**

லங்கா செட்டில் முறைமை விதிகளின் (திருத்தப்பட்டவாறு) தொகுதி 1இன் விதி 2.1 மற்றும் தொகுதி 4இன் விதி 4.8 என்பன 2008 ஓகத்து 18ஆம் நாளிலிருந்து இணைப்பு 1இல் காட்டியுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

லங்காசெட்டில் முறைமை விதிகள் திருத்தப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கி நீண்ட காலமாகச் சரி செய்யப்படாதிருந்த லங்கா செட்டில் பிரயோக நிகழ்வுகளின் மாற்றுத் தீர்ப்பனவு முறையொன்றாக தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையொன்றினை அறிமுகப்படுத்தியது.

இலங்கை மத்திய வங்கி நீண்ட காலமாகக் காணப்பட்ட மீட்கப்படாத லங்கா செட்டில் பிரயோக நிகழ்வுகளினை பிரகடனப்படுத்தும் வேளையில், பங்கேற்பாளர்கள் 2003 ஓகத்தில் வெளியிடப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளின் 4.8.1 விதியில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு (திருத்தப்பட்டவாறு) இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| திருமதி ஜே பி மாம்பிட்டிய | சி ஜே பி சிறிவர்த்தன | ஏ கமலசிறி |
| **பணிப்பாளர்** | **கண்காணிப்பாளர்** | **பணிப்பாளர்** |
| கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | பொதுப்படுகடன் திணைக்களம் | உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் |

உள்ளடக்கப்பட்டவை - இணைப்பு: 1. 2003 ஓகத்தில் வெளியிடப்பட்ட லங்கா செட்டில் முறைக்கான திருத்தம்
2. இறுவட்டு 1 - இணைப்பு 1 இற்கான பிற்சேர்ப்பு 'ஈ' இன் பிரிவுகள் 3.1.1 மற்றும் 3.1.2இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட மென்பொருளைக் கொண்டிருக்கிறது.

**இணைப்பு 1**

**1) 2003 ஓகத்தில் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் தொகுதி 1இல் உள்ள விதி 1.2 இற்கான திருத்தம்**

2003 ஓகத்தில் வழங்கப்படட லங்கா செட்டில் முறைமையின் தொகுதி 1இல் உள்ள விதி 1.2 இற்கு "பங்கேற்பாளர்" மற்றும் "இலங்கையின் வதியும் ஆள்" ஆகிய இரண்டு சொற்களுக்குமிடையில் பின்வரும் பொருள் விளக்கம் புகுத்தப்படல் வேண்டும்.

"த.க. அடிப்படையாகக் கொண்ட கொ.தீ.முறை" என்பதன் கருத்து தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை

"த.க. அடிப்படையாகக் கொண்ட பி.தீ.முறை" என்பதன் கருத்து தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை

"தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைமை" என்பதன் கருத்து தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை

**2) 2003 ஓகத்தில் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் தொகுதி 4இல் உள்ள 4.8 விதிக்கான திருத்தம்**

லங்கா செட்டில் முறைமை விதிகளின் தொகுதி 4 இலுள்ள விதி 4.8 இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் திருத்தப்பட்ட விதி 4.8 பதிலாக இடப்படுகிறது.

**"4.8 ஏனைய எதிர்பாராத நிகழ்வுகள்**

**4.8.1 லங்கா செட்டில் பிரயோக நிகழ்வு**

நீண்டகாலமாக சரி செய்யப்படாதிருந்த அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை மற்றும் லங்கா செகுயர் பிரயோகப் பழுது என்பனவற்றின் காரணமாக மத்திய வங்கி லங்கா செட்டில் பிரயோக நிகழ்வொன்றினை பிரகடனப்படுத்தும். அத்தகைய பிரகடனம் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொடர்பூட்டல் சாதனங்களூடாக (தொலைபேசி, தொலைநகல், சுவிப்ற், றொயிட்டர் போன்றன) அனைத்துப்

பங்கேற்பாளர்களுக்கும், லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட், வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம் (உத்தரவாதம்) முதனிலை வணிகர் சங்கம் ஆகியவற்றிற்கு அறிவிக்கப்படும். அனைத்து பங்கேற்பாளர்களும், அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட வெட்டுபுள்ளி நேரத்திற்குள் **இணைப்பு ஈ** இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சரியாகவும் விரைவாகவும் மேற்கொள்ளல் வேண்டும்.

ஏற்கனவேயுள்ள லங்கா செட்டில் முறைமையான லங்கா செட்டில் பிரயோக நிகழ்வு (அதாவது அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பகம்) பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாக இராது. லங்கா செட்டில் முறைமைக்கானதொரு மாற்றீடாக, இலங்கை மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படவுள்ள தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைமையானது பங்கேற்பாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யக் கிடைக்கத்தக்கதாக இருக்கும். மொத்தமாக அல்லது தேறிய அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு மத்திய வங்கி உரிமையினைக் கொண்டுள்ளதுடன் பகுதியளவு தீர்ப்பனவு எதனையும் மேற்கொள்ளாது. பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்குகள் அத்துடன்/ அல்லது பிணையங்கள் கணக்கில் போதுமான நிதியங்கள் அத்துடன்/ அல்லது பிணையங்கள் கிடைக்காதவிடத்து, தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைப் பூரணப்படுத்தத் தேவையான நிதியம் அத்துடன்/ அல்லது பிணையங்கள் பெறப்படும் வரை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் முறைமையில் காத்திருக்கும். நிதியம் அல்லது பிணையங்கள் கிடைக்காமையின் காரணமாக நிலுவையில் இருக்கும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் குறிப்பிட்ட வியாபார நாளன்று முடிவில் கணனி முறைமையிலிருந்தும் இரத்துச் செய்யப்படும்.

இம் முறைமையானது அதேநேர முறைமையொன்றாக இருக்காது எனினும், பங்கேற்பாளர் இறுவட்டு அல்லது டிஸ்கெட்டுக்கள் வடிவில் கொடுப்பனவு/ பிணையங்கள் அறிவுறுத்தல் சமர்ப்பிக்குமிடத்து பின்னர் மேற்கொள்ளும் முறையில் இருக்கும். தனியாள் கணனியை அடிப்படையாக்கொண்ட முறைமையானது எந்த வகைக் கொடுப்பனவுகள் தொடர்பாகவும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய முற் திகதியிடப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் ஏற்றுக் கொள்ளாது.

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைமை இரண்டு சுதந்திரமான முறைமைகளை உள்ளடக்கியுள்ளது.

(i) தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை; அத்துடன்

(ii) தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறை

இணைப்பு 'ஈ' இல் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக, தேவையெனக் கருதப்படுமிடத்து மத்திய வங்கி ஏனைய அறிவுறுத்தல்கள்/ பணிப்புரைகள்/ சுற்றறிக்கைகள் போன்றவற்றை வெளியிடவும் மத்திய வங்கி அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

**4.8.2. நிகழ்வுகளை முடமாக்குகின்ற ஏனைய முறைமைகள்**

நிகழ்வுகளை முடமாக்குகின்ற ஏனைய முறைமைகள் ஒவ்வொரு விடயமாகக் கையாளும் போதே ஏற்படக்கூடும். அத்தகைய சூழ்நிலைகளில் மத்திய வங்கி அது அவசியமானது எனக் கருதுகின்ற பின்வரும் வழிமுறைகளை மேற்கொள்ளக்கூடும்.

‰ லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு நாட்களை விரிவாக்குதல் அல்லது சுருக்குதல்;

‰ முறைமையின் தொழிற்பாட்டினை இடைநிறுத்தல்; மற்றும்

‰ இம் முறைமை விதிகளின் கீழ், முறைமையின் தொழிற்பாட்டு நடைமுறைகளை இடைநிறுத்துதல்.

மத்தி வங்கி பங்கேற்பாளர்களுடன் தொடர்புகளை வைத்திருக்க தொடர்ந்து முயற்சிப்பதுடன் தொழிற்பாடுகளை மீளத்தொடருவதற்கான அறிவுறுத்தல்களையும் வழங்கும்.

ஆகக் குறைந்த தாமதங்களுடன் தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவது அவசியமாகையால் மத்திய வங்கி அத்தகைய அவசர வழிமுறைகளை நிறைவேற்றும். இவ்வழிமுறைகளை நிறைவேற்றுவதில் மத்திய வங்கியுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் அவசியம் ஒத்துழைக்க வேண்டும்.

**இணைப்பு ஈ**

## தொகுதி 4இன் விதி 4.8.1இன் கீழ் லங்கா செட்டில் பிரயோக நிகழ்வின் கீழான நிகழ்வில் பின்பற்றப்பட வேண்டிய தொழிற்பாட்டு பொறிமுறைகள் மற்றும் வழிமுறைகள்

### 1. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பனவற்றிலுள்ள பங்கேற்பாளர் தீர்ப்பனவு கணக்குகளின் மீதிகள்

வியாபாரங்களின் தொடக்கத்தில் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கு நகர்வதற்கு மத்திய வங்கி தீர்மானிக்குமாயின், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமையிலுள்ள பிணையங்கள் கணக்குகள் என்பனவற்றிலுள்ள பங்கேற்பாளர்களின் முன்னைய வியாபார நாளின் இறுதியிலுள்ள மீதிகளுடன் மத்திய முறைமையைத் திறக்கும். தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட முறைக்கு வியாபார நாளின் நடுப்பகுதியில் நகர்வதற்கு மத்திய வங்கி தீர்மானிக்குமாயின், எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்படுவதற்கு முன்னதாக, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர் தீர்ப்பனவு கணக்கு மற்றும் லங்கா செகுயர் முறைமையிலுள்ள பிணையங்கள் கணக்குகள் என்பனவற்றின் கிடைக்கத்தக்க பிந்திய மீதிகளைப் பயன்படுத்த முயற்சிக்கும். சூழ்நிலை அவ்வாறு நடந்து கொள்ள அனுமதிக்காதுவிடின், மத்திய வங்கி அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்குகள் மற்றும் லங்கா செகுயர் முறைமையிலுள்ள பிணையங்கள் கணக்குகள் என்பனவற்றின் முன்னைய வியாபார நாளொன்றின் முடிவிலுள்ள மீதிகளுடன் முறைமையைத் திறக்கும்.

### 2. தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் நிதிய மாற்றல்களும் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் பிணையங்களின் மாற்றல்களும்

உள்ளக பங்கேற்பாளர் நிதிய மாற்றல்கள் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு செய்யப்பட உள்ளக பங்கேற்பாளர் பிணையங்கள் மாற்றல்கள் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு செய்யப்படும். இரண்டு முறைமைகளும் பிணையங்களுடன் தொடர்பான தன்னியக்கப்படுத்தப்பட்ட வழங்கல் எதிர்கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படவில்லை.

### 3. தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்ப்பனவு முறை மற்றும் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பன தொடர்பாக பங்கேற்பாளர்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்.

கீழ் வரும் இரண்டு வகைகளின் கீழான கொடுக்கல் வாங்கல்களை இரண்டு முறைமைகளும் அங்கீகரிக்கின்றன.

(i) மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலான உள்ளக பங்கேற்பாளர் கொடுக்கல் வாங்கல்கள்;

(ii) மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்

#### 3.1 மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக உள்ளக பங்கேற்பாளரின் கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக உள்ளக பங்கேற்பாளரின் கொடுக்கல் வாங்கல்கள் இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(i) கொடுப்பனவுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

(ii) பிணையங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

##### 3.1.1 கொடுப்பனவுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியினால் செய்யப்பட்ட அதன் வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்கள் அத்துடன்/ அல்லது நாட்களின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பாக ஒவ்வொரு பங்கேற்பாளரும் அவற்றின் உள்ளக பங்கேற்பாளர் நிதிய மாற்றல்களின் விபரங்களை தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையிலுள்ள அதன் தீர்ப்பனவு கணக்கில் பற்று வைப்பதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட எக்சல் தரவு கோவையைப் பயன்படுத்தி டிஸ்கெட்/ இறுவட்டு வடிவத்தில் இணைப்பு 'ஈ' இல் உள்ளவாறான அச்சுப் பிரதியுடன், இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்டு மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு மத்திய வங்கியினால் வெளிப்படுத்தப்பட்ட வெட்டுப்புள்ளி நேரத்திற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

##### 3.1.2 பிணையங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியினால் செய்யப்பட்ட அதன் வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்கள் அத்துடன்/ அல்லது நாட்களின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பாக ஒவ்வொரு பங்கேற்பாளரும் அவற்றின் உள்ளக பங்கேற்பாளர் நிதிய மாற்றல்களின் விபரங்களை தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அதன் பிணையங்கள் கணக்கில் பற்று/ வரவு வைப்பதற்காக மத்திய

வங்கியினால் வழங்கப்பட்ட எக்சல் தரவு கோவையைப் பயன்படுத்தி டிஸ்கெட்/ இறுவட்டு வடிவத்தில் இணைப்பு ஈ.2இல் உள்ளவாறான அச்சுப்பிரதியுடன் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்டு மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அனைத்து பிணையங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் இலவசமாக வழங்கப்படும் அல்லது இலவசமாகப் பெறப்படும். இது பிணையங்களின் அசைவுடன் மட்டும் தொடர்பானதாகும். இதற்கமைய பிணையங்களின் கொள்வனவு தொடர்பான கொடுப்பனவுகளின் விபரங்கள் பிணையங்களை கொள்வனவு செய்த பங்கேற்பாளரினால் மேலே 3.1.1இல் விளக்கப்பட்டவாறு தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைக்கு அனுப்பி வைக்கப்படும்.

### 3.2 மத்திய வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள்

#### 3.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியுடனான பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பங்கேற்பாளர்கள், மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் முன்னரங்க அலுவலகத்துடன் முதலில் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்;
- நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்;
- உடனடி விற்பனைகள்; மற்றும்
- உடனடி கொள்வனவுகள்

ஒவ்வொரு பங்கேற்பாளரும் அவற்றின் ஒவ்வொரு வர்த்தகம் தொடர்பான விபரங்களை திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் முன்னரங்க அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் அறிவிக்க வேண்டியதுடன், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்துடன் அத்தகைய வணிகத்தினை மேற்கொண்டதன் பின்னர் அரை மணித்தியாலத்திற்குள் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகத்திற்கு இணைப்பு ஈ.3(அ) அல்லது ஈ.3(ஆ) அல்லது ஈ.3(இ) தரப்பட்டுள்ள தொடர்பான படிவத்தினைப் பயன்படுத்தி எழுத்து மூலமான உறுதிப்பாட்டினை தொலைநகலில் அனுப்புதல் வேண்டும். தொடர்பான கணக்குகளில் பற்றுக்களை/ வரவுகளை ஏற்படுத்துவதன் மூலம் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையிலுள்ள தொடர்பான பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்குகளிலும் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறையிலுள்ள பிணையங்கள் கணக்குகளிலும் போதுமான நிதியும் அத்துடன்/ அல்லது பிணையங்களும் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான கொடுப்பனவுப் பிரிவு தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு செய்யப்படவுள்ளதுடன் திறந்த சந்தை தொழிற்பாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான பிணையங்கள் பிரிவு தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறையில் தீர்ப்பனவு செய்யப்படும்.

இணைப்பு ஈ.4(அ) அல்லது ஈ.4(ஆ) இல் தரப்பட்டுள்ள தொடர்பான படிவத்தில் காட்டப்பட்டவாறு தீர்ப்பனவு செய்யப்பட்ட திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான உறுதிப்படுத்தலை கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் தொடர்பான பங்கேற்பாளர்களுக்கு வழங்கும்.

#### 3.2.2 ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை மத்திய வங்கி பங்கேற்பாளர்களுக்கு வழங்கும். பங்கேற்பாளர்கள், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் தேவைப்பாடுகளினது விபரங்களை உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் முன்னரங்க அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் அறிவிப்பதுடன் அத்தகைய வணிகத்திலீடுபட்டதன் பின்னர் அரைமணித்தியாலத்திற்குள் இணைப்பு ஈ.5 இலுள்ள படிவத்தில் எழுத்து மூலமான உறுதிப்பாட்டினை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களங்கள் திறந்த சந்தை தொழிற்பாடுகளின் முன்னரங்க அலுவலகத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஒவ்வொரு பங்கேற்பாளரும், மேலே 3.1.2 இல் விளக்கப்பட்டவாறு, வணிகம் இறுதிப்படுத்தப்பட்டதும் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையிலுள்ள ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு பிணையங்களை மாற்றல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளில் வழங்கப்படும் ஒவ்வொரு பங்கேற்பாளரும், மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கொடுக்கல் வாங்கல்களை திருப்பும் பொருட்டு தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

### 3.2.3 காசு வைப்புக்கள்/ மீளப்பெறுகைகள்

ஒவ்வொரு பங்கேற்பாளரும் மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்துடன் நேரடியாக தொடர்புகளைப் பேண வேண்டியதுடன் மத்திய வங்கியிலுள்ள தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையிலுள்ள அதன் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வைப்புக்களைச் செய்யுமாறு அல்லது அதிலிருந்து மீளப் பெறுகைகளைச் செய்யுமாறு கோரிக்கைகளை அனுப்பலாம். அத்தகைய காசு வைப்புக்கள் அல்லது மீள்பெறுகைகள் தொடர்பான பதிவுகளை மத்திய வங்கி தொடர்பான பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்குகளில் மேற்கொள்ளும்.

### 3.2.4 அரசாங்கத்தின் பத்திரங்களற்ற பிணையங்களின் முதலாந்தர வழங்கல்களின் தீர்ப்பனவு (திறைசேரி முறிகளின் மற்றும் உண்டியல்கள்)

பொதுப்படுகடன் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகம் அரச பிணையங்களுக்கான ஏலங்களை நடத்தும். தீர்ப்பனவு நாளன்று, பொதுப்படுகடன் திணைக்களத்தின் பின்னரங்க அலுவலகம் வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களுக்கு தொடர்பான முதனிலை வணிகர் ஒவ்வொருவரிடமிருந்து வரவேண்டிய தேறிய பெறுமதி தொடர்பாக அறிவிக்கும். இதற்கமைய, ஏலத்தில் பிணையங்களைக் கொள்வனவு செய்த ஒவ்வொரு முதனிலை வணிகர்களும் அவர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேண வேண்டியதுடன் மேலே 3.1.1இல் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவில் விளக்கப்பட்டவாறு தனியாள் கணினியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையில் தொடர்பான பிணையங்களை மாற்றல் செய்யவும் மத்திய வங்கியினை இயலச் செய்யும் விதத்தில் தொடர்பான நிதிய மாற்றல்களைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளும்.

### 3.2.5 பத்திரங்களற்ற பிணையங்களுக்கான (திறந்த உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள்) முதிர்ச்சி மற்றும் கூப்பன் கொடுப்பனவுகள்

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர் தீர்ப்பனவுக் கணக்கு ஒவ்வொன்றும் தொடர்பாக பத்திரங்களற்ற பிணையங்களுக்கான முதிர்ச்சி மற்றும் கூப்பன் கொடுப்பனவுகளை மத்திய வங்கி மேற்கொள்ளும்.

**இணைப்பு ஈ.1**

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

பணிப்பாளர்
கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை**

**உள்ளக பங்கேற்பாளர் கொடுப்பனவுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் (ஒரு நாளைக்குள்ளேயான திரவ வசதி, திறந்த சந்தை தொழிற்பாடு, மத்திய வங்கியுடனான ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக)**

| அனுப்புனரின் வங்கி அடையாளக் குறியீடு ............................................ | | பெறுமதித் திகதி ........................ | தொகை (இ. ரூபாவில்) |
|---|---|---|---|
| தீர்ப்பனவுக் கட்டளை | கொடுக்கல் வாங்கல் தொடர்பு | பெறுனர் வங்கி அடையாளக் குறியீடு | |
| | | | |

மேற்குறிப்பிட்ட தரவு/ தகவல் சரியானவையென நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

...................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

...................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.2**

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

கண்காணிப்பாளர்
பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

### தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**உள்ளக பங்கேற்பாளர் பிணையங்களுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் (ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, திறந்த சந்தை தொழிற்பாடு, மத்திய வங்கியுடனான ஏனைய கொடுக்கல் வாங்கல்கள்)**

| சமர்ப்பவரின் வங்கி அடையாளக் குறியீடு (வஅகு) | | | | பெறுமதித் திகதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தீர்ப்பனவுக் கட்டளை | கொடுக்கல் வாங்கல் தொடர்பு | வழங்கும் பங்கேற்பாளர் வஅகு | பெறும் பங்கேற்பாளர் வஅகு | மூல துணைக் கணக்கு வஅகு | சென்றடையும் நாட்டின் துணைக் கணக்கு | ஐ.எஸ்.ஐ.என் | அளவு |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

மேற்குறிப்பிட்ட தரவு/ தகவல் சரியானவையென நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

.................................................................................... ....................................................................................

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.3 (அ)**

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மீதான மத்திய வங்கியுடனான மீள்கொள்வனவு வணிகத்தினை உறுதிப்படுத்தல்**

கீழே தரப்பட்ட விபரங்களின்படி மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) மீள்கொள்வனவு வணிகத்தின் பெறுமதி (ரூ.) -

02) விற்பனைத் திகதி -

03) வணிகத்தின் முதிர்ச்சித் திகதி -

04) மீள்கொள்வனவிற்கான விளைவு வீதம் -

..................................................................................... .....................................................................................

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் (பங்கேற்பாளரின் கையொப்பம்)

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் (பங்கேற்பாளரின் கையொப்பம்)

* தொடர்பான திறைசேரி உண்டியல்/ முறிகள் தொடர்பான வீதங்கள் மற்றும் விலைகள் பற்றி, தொடர்பான பங்கேற்பாளர்கள், மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுத் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகங்களிலிருந்து விசாரணைகள் மூலமாக விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

இணைப்பு ஈ.3 (ஆ)

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

## தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் முறைமை மீதான மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள்கொள்வனவு வணிகத்தினை உறுதிப்படுத்தல்

கீழே தரப்பட்ட விபரங்களின்படி மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கான திறைசேரி உண்டியலின் விற்பனையை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) மீள்கொள்வனவு வணிகத்தின் பெறுமதி (ரூ.) -

02) விற்பனைத் திகதி -

03) வணிகத்தின் முதிர்ச்சித் திகதி -

04) மீள்கொள்வனவிற்கான விளைவு வீதம் -

05) திறைசேரி உண்டியல்/ முறிகள் ஐஎஸ்ஐஎன் இலக்கம் (மீள்கொள்வனவிற்காக) -

| ஐ.எஸ்.ஐ.என் இல. | விளைவு | விலை |
|---|---|---|

..................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

..................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

* தொடர்பான திறைசேரி உண்டியல்/ முறிகள் தொடர்பான வீதங்கள் மற்றும் விலைகள் பற்றி, தொடர்பான பங்கேற்பாளர்கள், மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுத் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகங்களிலிருந்து விசாரணைகள் மூலமாக விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.3 (இ)**

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் மீது மத்திய வங்கியுடன் மேற்கொண்ட உடனடி கொள்வனவு/ விற்பனை வணிகத்தினை உறுதிப்படுத்தல்**

கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட/ வங்கிக்கு விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி முறிகள் மற்றும் கொள்வனவுகளை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) உடனடி கொள்வனவு/ விற்பனை வணிகத்தின் பெறுமதி (ரூ.) -

02) விற்பனை/ கொள்வனவுத் திகதி -

03) பிணையத்தின் முதிர்ச்சித் திகதி -

04) விளைவு வீதம் (மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு) -

05) ஐஎஸ்ஐஎன் இலக்கம் (கொள்வனவிற்காக) -

.................................................................................... ....................................................................................

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் (பங்கேற்பாளரின் கையொப்பம்)

அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் (பங்கேற்பாளரின் கையொப்பம்)

* தொடர்பான திறைசேரி உண்டியல்/ முறிகள் தொடர்பான வீதங்கள் மற்றும் விலைகள் பற்றி, தொடர்பான பங்கேற்பாளர்கள், மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகங்களிலிருந்து விசாரணைகள் மூலமாக விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.4 (அ)**

திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவு பிரிவு
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

திகதி : ..........................................

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு பிணையங்கள் தீர்ப்பனவு முறைக்கான இரண்டாந்தர மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு - உறுதிப்படுத்தல்**

கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உங்கள் நிறுவனங்களுக்கான இலங்கை அரச திறைசேரி உண்டியல்களின் விற்பனை/ கொள்வனவினை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) திறைசேரி உண்டியல்/ முறிகள் ஐஎஸ்ஐஎன் இல. -

02) திறைசேரி உண்டியல்/ முறியின் முதிர்ச்சித் திகதி -

03) விற்பனை செய்யப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறிகளின் முகப்புப் பெறுமதி (ரூ. மில்.) -

04) விற்பனை/ கொள்வனவு திகதி -

05) மீள்கொள்வனவு திகதி (முதிர்ச்சித் திகதி) -

06) ஆண்டிற்கு உண்டியல்/ முறியின் வீதம் (விளைவு) -

07) உண்டியல்/ முறியின் விலை (ஒன்று ரூ.100) -

08) ஆண்டிற்கு மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் (விளைவு) -

09) மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு (ஒன்றிற்கு ரூ.100) -

10) செலுத்தத்தக்க பெறுமதி (ரூ.) -

11) மீளச் செலுத்தத்தக்க பெறுமதி (ரூ.) -

..........................................................................................................

தலைவர்/ திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவு பிரிவு
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.4 (ஆ)**

திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவு பிரிவு
கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

திகதி : ..........................................

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு பிணையங்கள் தீர்ப்பனவு முறைக்கான இரண்டாந்தர மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு - உறுதிப்படுத்தல்**

கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் உங்கள் நிறுவனங்களுக்கான இலங்கை அரச திறைசேரி உண்டியல்களின் விற்பனை/ கொள்வனவினை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) திறைசேரி உண்டியல் ஐஎஸ்ஐஎன் இல. -

02) வணிக திகதி -

03) தீர்ப்பனவுத் திகதி -

04) திறைசேரி உண்டியலின் முதிர்ச்சித் திகதி -

05) விற்பனை செய்யப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியலின் முகப்புப் பெறுமதி -

06) விளைவு வீதம் -

..........................................................................................................
தலைவர்/ திறந்த சந்தை தொழிற்பாடுகள் தீர்ப்பனவு பிரிவு
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

**இணைப்பு ஈ.5**

பங்கேற்பாளரின் பெயர் : ..........................................

திகதி : ..........................................

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
த.பெ. 590, கொழும்பு 01

**தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் மீது மத்திய வங்கியுடனான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி வணிகத்தினை உறுதிப்படுத்துதல்**

கீழே தரப்பட்ட விபரங்களிலுள்ளவாறு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை பெற்றுக் கொள்வதன் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்/ முறிகளின் விற்பனையை நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

01) வணிகத்தின் பெறுமதி (ரூ.) -

02) ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் செல்லுபடியாகும் நாள் -

03) பெறுமதி நேரம் -

04) வணிகத்தின் முதிர்ச்சித் திகதி -

05) திறைசேரி உண்டியல்/ முறிகளின் விபரங்கள் (நேர்மாற்று மீள்கொள்வனவிற்காக)* -

| ஐ.எஸ்.ஐ.என் இல. | விளைவு | விலை |
|---|---|---|

................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

................................................................................
அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம்
(பங்கேற்பாளரின் கையொப்பம்)

* தொடர்பான திறைசேரி உண்டியல்/ முறிகள் தொடர்பான வீதங்கள் மற்றும் விலைகள் பற்றி, தொடர்பான பங்கேற்பாளர்கள், மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுத் திணைக்களத்தின் முன்னரங்க அலுவலகங்களிலிருந்து விசாரணைகள் மூலமாக விபரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
25 மார்சு 2008

## 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை

1. இப் பணிப்பு 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (அ) எந்தவொரு நிதிக் கம்பனியினாலும் எந்தவொரு காலாண்டுப்பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம் :-

   (i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பத்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 2.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

   (ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

   விஞ்சக்கூடாது.

   (ஆ) நிதிக்கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்:-

   (i) அத்தகைய முறி அல்லது சாதனம் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பத்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 2.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

   (ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

   விஞ்சக்கூடாது.

3. நிதிக் கம்பனியொன்றினால் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டிவீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினைவிட 1 சதவீத புள்ளி குறைந்தளவான வட்டி வீதத்தினை விஞ்சக் கூடாது.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இப் பணிப்பில்,

(i) "தவணை வைப்புக்கள்" என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்; மற்றும்

(ii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
31 மாச்சு 2008

## 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை

1. இப் பணிப்பு 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் 2008 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (அ) எந்தவொரு நிதிக் கம்பனியினாலும் எந்தவொரு காலாண்டுப்பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம் :-

(i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு இரண்டு (2) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு நான்கு (4) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக்கூடாது.

(ஆ) நிதிக்கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்:-

(i) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு இரண்டு (2) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு நான்கு (4) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக்கூடாது.

3. நிதிக் கம்பனியொன்றினால் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டிவீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முந்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினைவிட ஒரு (1) சதவீத புள்ளி குறைந்தளவான வட்டி வீதத்தினை விஞ்சக் கூடாது.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இப் பணிப்பில்,

(i) “தவணை வைப்புக்கள்” என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்: மற்றும்

(ii) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2008, ஒத்தோபர் 16 ஆம் திகதி

## 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்பு

இப் பணிப்பு 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் (இதன் பின் “நிதிக் கம்பனி” எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையனவாதலும் 2009 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**2. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்**

(1) கீழ்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல் மூலம் பணிப்பாளர் சபையானது நிதிக் கம்பனியின் பாதுகாப்பையும் செயற்றிறனையும் பலப்படுத்த வேண்டும்.

(அ) நிதிக் கம்பனியின் முக்கிய நோக்கங்கள், கம்பனி தகுதிகள் என்பவற்றுக்கு அனுமதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் இவை நிதிக் கம்பனியின் அனைத்து பகுதிகளுக்கும் அறிவிக்கப்படுதலை உறுதி செய்தல்.

(ஆ) அளவிடக்கூடிய நோக்கங்களுடனான இடர்நேர்வுக் கொள்கை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளடங்கலான குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கான வியாபார நோக்கத்தினை நிதிக் கம்பனியின் முழுமையான வர்த்தக உபாயத்தினை அனுமதித்தல்.

(இ) முதன்மையான இடர்நேர்வுகளை இனங்காணுதல் மற்றும் இடர்நேர்வுகளை அறிவார்ந்த விதத்தில் முகாமைத்துவம் செய்ய பொருத்தமான முறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்.

(ஈ) வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்கு தாரர்கள், கடன்பட்டோர் என்போரை உள்ளடக்கிய அனைத்து ஆர்வலர்களுடனான தகவல் பரிமாற்றுக் கொள்கையை நடைமுறைப்படுத்தலை அனுமதியளித்தல்.

(உ) நிதிக் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகள் என்பனவற்றின் போதுமான தன்மையையும் நம்பிக்கைத் தன்மையையும் மீளாய்வு செய்தல்.

(ஊ) (i) கொள்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக் கூடிய, (ii) நடவடிக்கைகள் வழிப்படுத்தக் கூடிய, (iii) வர்த்தக நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றில் கட்டுப்பாடு செலுத்தக்கூடிய, நிலையில் உள்ள, சர்வதேச கணக்கியல் நியதிகளில் விபரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியை இனங் காணுதலும், பதவி நிலை அளித்தலும்.

(எ) நிதிக் கம்பனியினுடைய பணிப்பாளர்கள் தங்களுக்கும், பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமான அதிகாரப் பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் விபரித்தல்.

(ஏ) சபையின் கொள்கைக்கு அமைவான, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் நிதிக் கம்பனி நடவடிக்கைகள் சம்பந்தமான பொருத்தமான மேற்பார்வை இருத்தலை உறுதிப்படுத்தல்.

(ஐ) (i) சபை பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, நியமனம், தேர்தல், (ii) நலன்களின் முரண்பாடுகள் சம்பந்தமான முகாமைத்துவம், (iii) பலவீனங்களைத் தீர்மானித்தல், தேவைப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக காலத்துக்குக் காலம் சபை பணிப்பாளர்களது சொந்த ஆளுமை பழக்கங்களை மதிப்பிடுதல்.

(ஒ) பிரதான முகாமைத்துவ ஆளணி தொடர்பான பொருத்தமான அடுத்த வரிசையினர் பற்றி திட்டம் நிதிக் கம்பனியிடம் இருப்பதை உறுதிப்படுத்தல்.

(ஓ) கொள்கைகளை மீளாய்வு செய்வதற்காக, தேவை அடிப்படையில் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான தொடர்ச்சியான சந்திப்புகள், தகவல் பரிமாற்ற தொடர்புகளை அமைத்தல், கம்பனி நோக்கங்களை நோக்கிய முன்னேற்றத்தினை பரிசீலித்தல்

(ஔ) ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளுதல்.

(க) வெளிக் கணக்காய்வாளரின் சேவையை பெற்றுக் கொள்வதிலும், மேற்பார்வை செய்தலிலும் உரிய அவதானத்தை பிரயோகித்தல்.

(2) இப் பணிப்புரையின், 7ஆம் பந்திக்கு இசைவாக சபை நிதிக்கம்பனியின் தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிப்பதுடன் தலைவரதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்து அனுமதித்தல் வேண்டும்.

(3) நியாயமான வேண்டுகோளின் பேரில் பணிப்பாளர்களுக்கு உதவும் முகமாக, பொருத்தமான சந்தர்ப்பங்களில், சுதந்திரமான நிபுணர்களின் ஆலோசனையை நிதிக் கம்பனியின் செலவில் பெறுவதற்காக சபை ஏற்றுக் கொண்ட நடைமுறை இருத்தல் வேண்டும். தொடர்புபட்ட பணிப்பாளர்களுக்கு அவர்களது நிதிக் கம்பனி கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக, பணிப்பாளர்களுக்கு தனிப்பட்ட, சுதந்திர, நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபை தீர்மானம் எடுக்க வேண்டும்.

(4) ஒரு பணிப்பாளர் அவர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர்கள் தொடர்புபட்ட, அல்லது அவர் ஒரு பணிப்பாளராக இருக்கும் தாபனம் தொடர்புபட்ட எந்தவொரு சபை தீர்மானத்திலும் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் குறித்த விடயம் சம்பந்தமான சபை கூட்ட நடவடிக்கை அட்டவணையில் அவர் கோரம் சம்பந்தமாக கணக்கெடுக்கப்படக் கூடாது.

(5) நிதிக் கம்பனியின் நோக்கு, கட்டுப்பாடு என்பன அதன் உறுதியான அதிகாரத்தின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் சபையானது, தீர்மானம் எடுப்பதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான மாதிரி அட்டவணை ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

(6) நிதிக் கம்பனி தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனால் அல்லது முடியாமல் போகக்கூடும் என்று கருதினால், அல்லது முறிவடைந்து போனால் அல்லது வைப்பாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் கொடுப்பனவுகளை இடைநிறுத்தம் செய்யக்கூடும் எனக் கண்டால் பணிப்பாளர் சபையானது எத்தீர்மானத்தையும் நடவடிக்கையையும் எடுக்க முன்னர் உடனடியாக வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளருக்கு நிதிக் கம்பனியின் நிலை பற்றி அறியத் தரவேண்டும்.

(7) இப்பணிப்புரைக்கு கீழ்ப்படிந்து ஒழுகும் வருடாந்த கூட்டிணைப்பு ஆளுகை பற்றிய அறிக்கையை சபை நிதிக் கம்பனியின் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்க வேண்டும்.

(8) ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பணிப்பாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை நடைமுறைப்படுத்தலும், அத்தகைய மதிப்பீடு சம்பந்தமான அறிக்கைகளைப் பேணுதலும் வேண்டும்.

## 3. சபையின் கூட்டங்கள்

(1) சபை தொடர்ச்சியாக சந்திப்பதுடன் சபை கூட்டங்கள் பொதுவாக ஒரு மாத இடைவெளியில், ஒவ்வொரு நிதியாண்டிலும் குறைந்தது 12 தடவைகள் நடத்தப்பட வேண்டும். எழுத்து மூலமான யோசனைகள்/ பத்திரிகைகள் சுற்றறிக்கை செய்யப்படுவதன் மூலமாக சபையின் ஒப்புதலைப் பெறுதலை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.

(2) தொடர் கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களின் விடயங்களையும் மற்றும் யோசனைகளையும், அத்தகைய விடயங்களும் யோசனைகளும் நிதிக் கம்பனியின் வர்த்தக முன்னேற்றம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன சம்பந்தமானதாக இருக்கும் பட்சத்தில், உள்ளடக்க ஏதுவாக தக்க ஒழுங்கு முறைகள் இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

(3) வழமையான சபைக் கூட்டங்களுக்கு அனைத்து பணிப்பாளர்களும் பிரசன்னமாகவிருக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக, குறைந்தது 7 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். மற்றைய அனைத்து சபை கூட்டங்களுக்கும் நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்படலாம்.

(4) ஒரு பணிப்பாளர் மிக அண்மையிலான கடந்த 12 மாத காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டங்களில் பிரசன்னமாகாது இருந்தால் அல்லது மிக அண்மையான மூன்று தொடர்ச்சியான கூட்டங்களில் பிரசன்னமாகாது இருந்தால் அவர் பணிப்பாளர் பதவியிலிருந்து நிறுத்தப்படுவார் என்பதை சபை ஒழுங்கு விதிகள் உறுதி செய்யவேண்டும். எனினும், மாற்று பணிப்பாளர் மூலமாக, பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றல் வருகை என ஏற்றுக் கொள்ளப்படும்.

(5) சபை கம்பனி செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவரது பிரதான பொறுப்புக்களானது சபையினதும் பங்குதாரர்களின் கூட்டங்களினதும் செயலாளர் சேவையை கையாளுவதுடன் சட்டத்திலும் மற்றும் ஒழுங்கு விதிகளிலும் குறிப்பிட்ட ஏனைய பணிகளை நிறைவேற்றுவதாகும்.

(6) சபை கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் பணியை தலைவர் கம்பனி செயலாளரிற்கு கையளித்திருந்தால் கம்பனி செயலாளர்அத்தகைய பணியை நிறைவேற்றும் பொறுப்புடையவராவார்.

(7) சபை நடைமுறைகளை மற்றும் ஏற்புடைய சட்டங்கள், பணிப்புக்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை ஏற்று வழி நடத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகள் என்பனவற்றைப் பெறும் உரித்துடையவர்களாவர்.

(8) கம்பனி செயலாளர், சபை, கூட்டங்களின் குறிப்புக்களை பேணிவருவதுடன், அக் குறிப்புக்களானது எந்தப் பணிப்பாளருடைய நியாயமான முன்னறிவித்தலின் அடிப்படையில் நியாயமான காலத்திற்குள் பரிசோதனைக்காகத் திறந்திருக்கவும் வேண்டும்.

(9) சபை அதன் கடமைகளைச் செய்யும் போது உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொண்டதா என குறிப்புகளிலிருந்து பெறக் கூடிய விதமாக தேவையான விபரங்களுடன், சபை கூட்டங்களின் குறிப்புகள் பதியப்பட வேண்டும். சபை கூட்டத்தின் குறிப்புகள், தெளிவாகவும் பின்வருவனவற்றை உள்ளடக்குவனவாகவும் அமைய வேண்டும். (அ) சபை அதன் தீர்மானம் எடுத்தலில் உபயோகப்படுத்தப்பட்ட தரவுகள், தகவல்களின் சுருக்கம் (ஆ) சபையால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் (இ) சபை அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் எடுத்ததென விளக்கும். உண்மையை அறிதலுக்கான கலந்துரையாடல்களும், ஒத்த எதிர்மறையான தொடர்புபட்ட விடயங்களும் (ஈ) சபையின் திட்டங்கள் கொள்கைகள் என்பனவற்றுக்குக் கீழ்ப்படிதலையும், தொடர்புபட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஒழுகுவதையும் குறிக்கும் தொடர்புடைய நிருவாக அதிகாரிகளின் ஒப்புதல்களும் சான்றிதழ்களும் (உ) நிதிக் கம்பனி எதிர்நோக்கும் இடர்நேர்வு பற்றிய சபையின் அறிவும், விளங்கிக் கொள்ளும் தன்மையும், மேற்கொள்ளும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய பொதுநோக்கு மற்றும் (ஊ) சபையின் முடிவுகளும் தீர்மானங்களும்.

## 4. சபையின் உள்ளமைப்பு

(1) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, சபை பணிப்பாளர்களது எண்ணிக்கை 5 இற்கு குறையாமலும் 13 இற்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

(2) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இப் பணிப்புரையின் (5) (1) ஆம் பந்தி என்பவற்றுக்கமைய பிரதான நிறைவேற்று அதிகாரப் பொறுப்பை வகிக்கும் பணிப்பாளர் நீங்கலாக, ஒரு பணிப்பாளரது மொத்த சேவைக்காலம் ஒன்பது வருடத்திற்கு மேற்படலாகாது. நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரின் பதவிக் காலமானது இப் பணிப்புரைத் திகதி வரையுள்ள அப்பணிப்பாளரது மொத்த பதவிக் காலத்தை உள்ளடக்குவதாக இருக்கும்.

(3) ஒரு நிதிக் கம்பனியின் அலுவலகர், சபை பணிப்பாளராக (இதன் பின்னர் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட, தேர்ந்தெடுக்கப்பட, நியமிக்கப்பட முடியும். அத்தகைய நிறைவேற்றுப் பணிப்பாளர் தொகை சபை பணிப்பாளர்களில் அரை பங்கிற்கு மேற்படாத வகையில் அமைய வேண்டும். அவ்வாறான பட்சத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்க வேண்டும்.

(4) மொத்த பணிப்பாளர்களில் சுதந்திரமான நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களாக குறைந்தது நான்கில் ஒரு பங்கினரை சபை கொண்டிருக்கும். இது, இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்.

ஒரு நிறைவேற்று தரத்திலில்லாத பணிப்பாளர் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பாராயின் அவரை சுதந்திரமானவராகக் கருதல்கூடாது.

(அ) நிதிக் கம்பனியின் வழங்கியிறுத்த மூலதனத்தில் 2 சதவீதத்தை விட அதிகமாக அல்லது வேறு நிதிக் கம்பனியின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீத மேலதிகமாக கொண்டிருந்தால்

(ஆ) நிதிக் கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியில் குறிப்பிட்ட திகதியில் மொத்த மிகுதி பெறுமதி 10 சதவீதமிற்கு மேற்பட்டதாகவும் இப்பணிப்புரையின் 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறாக நிதிக் கம்பனியின் ஏதாவது ஒரு வர்த்தக நடவடிக்கையை தற்போது அல்லது பணிப்பாளர் நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் மேற்கொண்டிருத்தால்

(இ) பணிப்பாளராக நியமிக்கப்பட முன்னரான மிக அண்மையிலான இரு வருட காலத்துக்குள் நிதிக் கம்பனியில் பணியாற்றியிருத்தல்

(ஈ) நிதிக் கம்பனியின் அல்லது பிறிதொரு நிதிக் கம்பனியின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அதிகமாக பங்குகளைக் கொண்டிருந்தால், அல்லது 12.5 சதவீதத்தை விஞ்சும் இறுத்த மூலதனத்தினை கொண்டிருந்தால் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ அதிகார உறுப்பினரின் உறவினராக இருத்தல்

(உ) கடன்பட்டோர், பங்குதாரரின் பிரதிநிதியாக அல்லது அவ்வகையான நிதிக் கம்பனியின் வேறுவகையான பங்குதாரராக இருத்தல்

(ஊ) ஒரு கம்பனியின் அல்லது வியாபார நிறுவனத்தின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அல்லது அதிகமான பங்குகளைக் கொண்டிருந்தால் அல்லது பணியாளர் அல்லது பணிப்பாளராக இருத்தல்:

(i) பணிப்புரையின் 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு நிதிக் கம்பனியின் கடைசி கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளவாறு மீதியிருந்த மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு மேற்பட்டதாக, நிதிக் கம்பனியுடன் ஒரு நடவடிக்கையினைக் கொண்டிருத்தல், அல்லது

(ii) அதில் ஏதாவது நிதிக் கம்பனியின் ஏனைய பணிப்பாளர்கள் பணியாற்றினால் அல்லது பணிப்பாளர்களாக அல்லது நிதிக்கம்பனியின் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு மூலதன நிதியின் 10 சதவீதம் அதிகமான பங்குகளை கொண்ட பங்குதாரர்களாக இருந்தால் அல்லது

(iii) அதில் நிதிக் கம்பனியின் ஏதாவது பணிப்பாளர்கள், பணிப்புரை 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு நிதிக் கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியில் மீதமிருந்த மொத்தப் பெறுமதியில் குறிப்பிட்ட காலத்திற்கு 10 சதவீதத்திற்கு மேற்பட்டதான நடவடிக்கை யொன்றினை மேற்கொண்டிருந்தால்.

(5) சுதந்திரமான நிறைவேற்றுத்தரமல்லா பணிப்பாளருக்குப் பதிலாக மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சுதந்திரமான நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளருக்கு பொருந்தக்கூடிய அடிப்படைகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

(6) நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் நேர்மையான பின்னணி உடையவராக இருப்பதுடன், வழிமுறைகள், செயற்பாடுகள், வளங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளை அளிக்கக்கூடிய தேவையான தேர்ச்சி, அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

(7) பிரசன்னமான பணிப்பாளர்களில் அரைவாசிப் பேர் நிறைவேற்று அதிகார தரத்தில் அல்லாத பணிப்பாளர்களாக இல்லாதவிடத்து, கூட்டத்திற்கு தேவையான குறைந்தளவு (கோரம்) பணிப்பாளர்கள் பிரசன்னமாகி இருந்தாலும், கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதாக கொள்ளப்படலாகாது. இது இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்.

(8) நிதிக் கம்பனியின் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் அனைத்து கம்பனி தகவல் தொடர்புகளிலும் சுதந்திரமான நிறைவேற்றுத் தரத்திலல்லாத பணிப்பாளர்கள் வெளிப்படையாக அடையாளம் காட்டப்பட வேண்டும். தனது வருடாந்த கூட்டிணைப்பு ஆளுமை அறிக்கையில் நிதிக் கம்பனி தலைவர், நிருவாகப் பணிப்பாளர், நிருவாகத் தரமற்ற பணிப்பாளர், சுதந்திரமான நிருவாகத் தரமற்ற பணிப்பாளர் ஆகியோரது பெயர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர் வர்க்கப்படியான சபை கட்டமைப்பை, நிதிக் கம்பனி வெளிப்படுத்த வேண்டும்.

(9) சபையின் புதிய பணிப்பாளர்கள் நியமனங்களில் கவனத்தில் கொள்ளப்பட்ட, வெளிப்படையான முன்மாதிரியான நடைமுறை இருக்க வேண்டும். சபையின் முறையான தொடர்ந்து வரும் நியமனங்கள் சம்பந்தமாக நடைமுறைகள் இருக்க வேண்டும்.

(10) தற்காலிக வெற்றிடம் ஒன்றை நிரப்ப நியமிக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும் அவர்களது நியமனங்களின் பின்னர், முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தேர்தலுக்கு உட்படக்கூடியவர்களாகும்.

(11) ஒரு பணிப்பாளர் பதவியிலிருந்து இராஜினமா செய்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால், சபையானது பணிப்பாளரின் இராஜினாமா, பதவி நீக்கம், இராஜினாமா அல்லது பதவி நீக்கப்பட்டமைக்கான காரணங்களுடன், தொடர்புபட்ட பணிப்பாளருக்கு சபையுடனான முரண்பாடு ஏதும் இருப்பின் அது உள்ளடங்கலாக மற்றும் அதனுடன் மட்டும் மட்டுப்படாத தகவல்களை பங்குதாரர்களுக்கு அறிவிப்பதுடன், இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரின் அவதானத்திற்கும் கொண்டு வரப்பட வேண்டும்.

### 5. பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்

(1) இதனகத்து கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, ஒரு நபர் 70 வயதினைக் கடந்திருந்தால், அவர் நிதிக் கம்பனியின் பணிப்பாளராக சேவையாற்ற முடியாது.

(2) நிதிக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவர் நிதிக்கம்பனியொன்றின் துணைக் கம்பனிகள் சகோதர கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள்/ சபைகள்/ தாபனங்களில் பணிப்பாளராக அல்லது அதற்குச் சமமான பதவியினை வகிக்கக்கூடாது. அத்தகைய, பணிப்பாளர் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் சட்ட விதிகளின்படி விசேடமாகக் குறிப்பிடப்பட்ட வியாபார சபைகளாக குறித்துரைக்கப்பட்ட கம்பனிகளாக இருக்குமிடத்து 10 கம்பனிகளுக்கு மேல் பணிப்பாளராகவோ அல்லது அதற்குச் சமமான பதிவியினையோ வகிக்கக்கூடாது.

### 6. தொழிற்பாடுகளின் அதிகார ஒப்படைப்பு

(1) சபையானது ஒப்படைக்கப்பட்ட ஒழுங்கு விடயங்கள் சபையின் இயலாற்றலுக்கு முட்டுக்கட்டையாகவோ அல்லது அதனைக் குறைப்பதாகவோ பொதுவாக அதன் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு சபையானது சபைக் குழுவிற்கோ, முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ, நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கோ எந்த ஒரு விடயத்தையும் ஒப்படைக்கக்கூடாது.

(2) நிதிக் கம்பனியின் தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய விதத்தில் அவை இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, காலாந்தர அடிப்படையில் சபை ஒப்படைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

### 7. தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்

(1) இப் பணிப்புரை, 2009 சனவரி 1 இலிருந்து ஆரம்பிக்கும் மூன்று வருடங்களின் பின்னர் தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பணி வெவ்வேறாக இருக்க வேண்டியதுடன் தனிப்பட்ட ஒரே ஆளினால் செயற்படுத்தப்படவும் கூடாது.

(2) தலைவர் நிறைவேற்று அல்லா பணிப்பாளராக இருக்க வேண்டும். தலைவர் சுதந்திரமான பணிப்பாளராக இல்லாதவிடத்து, பெருமளவு சுதந்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை மூத்த பணிப்பாளராக பொருத்தமான காலமொன்றிற்கு நியமிக்கலாம். மூத்த பணிப்பாளரின் பதவி நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(3) சபையானது அதன் ஆண்டறிக்கையின் மிக முக்கியமானதொரு பகுதியாக இருக்கக்கூடிய கூட்டிணைப்பு ஆளுகை அறிக்கையில், தலைவரினதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் பெயர், மற்றும்தனித்தன்மையினையும் தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையில் ஏதாவது உறவுமுறை இருப்பின் (நிதிசார், வியாபாரம், குடும்பம் அல்லது தொடர்பான உறவுமுறைகள் உட்பட) அதன் தன்மைகளையும் சபையின் உறுப்பினர்களிடையேயான உறவுமுறைகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(4) தலைவர் (அ) சபைக்கு தலைமைத்துவத்தினையும் (ஆ) சபை வேலைகள் காத்திரமான முறையில் நடைபெறுவதனையும் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துபவராகவும் அனைத்து முக்கியமானதும் பொருத்தமானதுமான விடயங்கள் சபையினால் சரியான நேரத்தில் கலந்துரையாடப்பட்டமையினை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) தலைவர், ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் முக்கிய பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும். தலைவர் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் பொறுப்பினை கம்பனிச் செயலாளருக்கும் வழங்கலாம்.

(6) சபைக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சனைகள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் சரியான முறையில் விளக்கமளிக்கப்பட்டமையை தலைவர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் பணிப்பாளர்கள் உரிய நேரத்தில் போதுமான தகவல்கள் பெற்றுக் கொண்டமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(7) தலைவர் சபை விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் முழுமையானதும் தீவிரமானதுமான பங்களிப்பினை வழங்கும் விதத்தில் அவர்களைஊக்குவிக்க வேண்டியதுடன் சபையானது நிதிக் கம்பனியின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டு இயங்குவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(8) தலைவர் குறிப்பாக நிறைவேற்று அல்லா பணிப்பாளர்களின் காத்திரமான பங்களிப்பிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களிடையே இறுக்கமான உறவுமுறையொன்று ஏற்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(9) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நிறைவேற்றுப் பணிகள் எவற்றினதும் நேரடி மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.

(10) தலைவர், பங்குதாரர்களுடன் காத்திரமான தொடர்பூட்டல்களை பேணுவதற்கும் பங்குதாரர்களின் கருத்துக்களை சபைக்கு தெரிவிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(11) முதன்மை நிறைவேற்று அலுவலர், நிதிக் கம்பனியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரங்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உச்ச நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படலாம்.

## 8. சபை நியமித்த குழுக்கள்

(1) இப்பணிப்புரைகளின் 8(2) மற்றும் 8(3) இம் பந்திகளில் எடுத்துக் காட்டப்பட்டவாறு, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் குறைந்தது இரண்டு சபைக்குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையளிக்க வேண்டும். குழுவினது ஒவ்வொரு குழுவும் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டத்தைக் கூட்டவும், கூட்ட நிகழ்ச்சிகளையும் அறிக்கைகள் போன்றவற்றைப் பேணவும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது, ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், அவற்றின் பங்கு என்பன மீதான செயலாற்ற அறிக்கையினை ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) கணக்காய்வு குழு

கணக்காய்வு குழு தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடைத்தனவாக இருக்கும்:

அ) குழுவின் தலைவராக, கணக்காய்வு அத்துடன் அல்லது கணக்கியலில் தகமைகளைக் கொண்டுள்ள சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

ஆ) சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்கள் நிறைவேற்று தரமல்லா பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

இ) குழு (i) தொடர்பான சட்ட நியதிகளுக்கிணங்க கணக்காய்வு பணிகளை வழங்கும் விதத்தில் வெளிக் கணக்காய்வாளர்களை நியமித்தல் (ii) கணக்காய்வாளருக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் (iii) தொடர்பான கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்தல் மற்றும் (iv) கணக்காய்வுப் பங்காளர் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கு கணக்காய்வில் ஈடுபட்டும் குறிப்பிட்ட கணக்காய்வு பங்காளர் முன்னைய காலம் முடிவடையும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னும் கணக்காய்வில் ஈடுபட்டிருக்குமிடத்து பணிக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதாவது பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் என்பன தொடர்பான விடயங்களின் மீது விதந்துரைப்புக்களைச் செய்யலாம்.

ஈ) பிரயோகிக்கத்தக்க நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க குழு வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரத்தையும் குறிக்கோளையும் கணக்காய்வு செய்முறையின் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

உ) தொடர்பான சட்ட நியதிகள், ஒழுங்கு விதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு அல்லாத பணிகளை வழங்குவதற்காக வெளிக்கணக்காய்வொன்றில் ஈடுபடுவது மீதான கொள்கையொன்றினை குழு உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது குழுவினது, கணக்காய்வல்லா பணிகளின் வெளிக்கணக்காய்வாளர் ஒருவரின் ஏற்பாடுகள் கணக்காய்வாளர் சுதந்திரத்திற்கோ அல்லது பாரபட்சமற்ற தன்மைகளுக்கோ சேதமேற்படுத்தாத தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கணக்காய்வு அல்லாத பணிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் வெளிக் கணக்காய்வாளரின் சுதந்திரமான தன்மை அல்லது பாரபட்சமற்ற தன்மையினை மதிப்பிடும் பொழுது குழு பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) கணக்காய்வு நிறுவனத்தின் தேர்ச்சியும் அனுபவமும் கணக்காய்வு அல்லாத பணிகளின் பொருத்தமான ஏற்பாட்டாளர் என்ற தன்மையினை வழங்குமா என்பது பற்றியும்;

(ii) வெளிக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்தகைய பணிகளின் ஏற்பாடுகளின் மூலம் கணக்காய்வுகளின் பாரபட்சமற்ற அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்புக்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது பற்றியும்; அத்துடன்

(iii) கணக்காய்வு அல்லாத பணிகளின் தன்மை, தொடர்பான கட்டண அளவுகள், கணக்காய்வு நிறுவனம் தொடர்பில் தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கட்டளை அளவுகள் என்பன வெளிக் கணக்காய்வாளரின் பாரபட்சமற்றதன்மை அத்துடன்/ அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் எதனையும் ஏற்படுத்துமா என்பது பற்றியும்.

ஊ) குழுவானது, கணக்காய்வு தொடங்குவதற்கு முன்னதாக, வெளிக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் தன்மை மற்றும் செயற்பரப்பு பற்றி கலந்துரையாடி பின்வருவனவற்றை இறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். (i) கூட்டிணைப்பு ஆளுகை மற்றும் நிதிசார் அறிக்கையிடல் மீதான முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கு நிதிக் கம்பனி இணங்கியொழுகுவது பற்றிய மதிப்பீடொன்று (ii) தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் அறிக்கையிடும் கடப்பாடுகள் என்பனவற்றிற்கிணங்க, நிதியியல் கூற்றுகளைத் தயாரித்தல் அத்துடன் (iii) ஒன்றிற்கு கூடுதலான கணக்காய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளவிடத்து நிறுவனங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துதல்.

எ) நிதிக் கம்பனியின் நிதியியல் கூற்றுக்களின் முழுமையான தன்மையினைக் கண்காணிக்கும் பொருட்டு, அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைகளுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் அதில் உள்ளடக்கியுள்ள குறிப்பிடத்தக்க நிதிசார் அறிக்கையிடல் தீர்ப்புக்கள் என்பன தொடர்பாக நிதிக் கம்பனியின் நிதிசார் தகவல்களை குழு மீளாய்வு செய்தல் வேண்டும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்கையில் குழுவானது (i) முக்கிய தீர்ப்புக்குரிய துறைகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கங்கள் (iv) நிகழ்ந்து கொண்டிருக்கும் கரிசனைக்குரிய எடுகோள்கள் (v) கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கி ஒழுகுதல் என்பனவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

ஏ) இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து தோன்றுகின்ற விடயங்கள், பிரச்சனைகள் மற்றும் ஒதுக்குகள் என்பனவற்றையும், தேவையானவிடத்து முதன்மையான முகாமைத்துவ ஆளணியினர் சமூகமளிக்காத போது கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் உட்பட கணக்காளர் கலந்துரையாட விரும்புகின்ற விடயங்களையும் குழு கலந்துரையாடுதல் வேண்டும்.

ஐ) வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தினையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்பினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

ஒ) நிதிக் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பாக குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

(i) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் மூலவளங்களின் போதுமாந்தன்மையினையும் திணைக்களம் அதன் வேலைகளைச் செய்வதற்கு தேவையான அதிகாரங்கள் கொண்டுள்ளமையினைப் பற்றிய திருப்தியடைவது பற்றியும் மீளாய்வு செய்தல்

(ii) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தையும் உள்ளகக் கணக்காய்வு செய்முறைகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையானவிடத்து, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் விதந்துரைப்புக்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தல்

(iii) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்களின் செயலாற்றத்தின் கணிப்பீடு அல்லது மதிப்பீடு பற்றிய மீளாய்வு

(iv) தலைவர், மூத்த அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் தொடர்பான நியமனம் அல்லது முடிவுறுத்தலை விதந்துரைத்தல்

(v) உள்ளக முதன்மைக் கணக்காய்வாளர் மற்றும் வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் யாரும் இருப்பின் அவர்கள் உட்பட உள்ளக கணக்காய்வாளர் புதிய திணைக்களத்தின் மூத்த அலுவலர்களின் பதவி விலகல்களை குழு மதிப்பீடு செய்தது என்பதனையும் பதவி விலகும் மூத்த அலுவலர்களும் வெளியிலிருந்து பதவி விலகுவோரும் தமது பதவி விலகல் தொடர்பான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்

(vi) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமானது என்பதனையும் இது பக்க சார்பற்ற முறையில், தேர்ச்சியுடனும், தொழில்சார் நிபுணத்துவத்துடனும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தல்.

ஓ) குழு உள்ளக புலனாய்வுகள் தொடர்பாக முக்கியமாகக் கண்டறியப்பட்டவைகளையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்புக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஔ) முதன்மை நிதி அலுவலர், முதன்மை உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வெளிக் கணக்காய்வாளர்களின் ஒரு பிரதிநிதி கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். குழுவின் அழைப்பின் பேரில் ஏனைய சபை உறுப்பினர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களும் கூட கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். எனினும், குறைந்தது, ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை நிறைவேற்று பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமலே குழுவானது வெளிக்கணக்காய்வாளர்களைச் சந்திக்க வேண்டும்.

க) குழுவானது (i) தொடர்பான நியதிகளுக்குட்பட்ட எந்தவொரு விடயத்தையும் புலனாய்வு செய்வதற்கான தெளிவான அதிகாரத்தினையும் (ii) அவ்வாறு செய்வதற்கான வளங்களையும் (iii) தகவல்களைப் பெறுவதற்கான முழு வசதிகளையும், தேவையானவிடத்து (iv) தேவையான அனுபவங்களுடன் வெளிநாட்டிலிருந்து தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளையும் அத்துடன் வெளிநாட்டவர்களை அழைப்பதற்கும் அதிகாரங்களை கொண்டுள்ளது.

ந) கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை உரிய நேரத்தில் அறிவிப்பதுடன், குழுவானது கிரமமாக கூட வேண்டுமென்பதுடன் அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் பொறுப்புக்களிலும் அதன் முடிவுகளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

ச) குழுவானது, முறைசாராத வழிகளில் (i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளினது விபரம் (ii) ஆண்டொன்றில் நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்ட தனிப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் விபரங்கள் என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

ஞ) குழுவின் செயலாளர் (இவர் கம்பனியின் செயலாளராகவோ அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் தலைவராகவோ இருக்கலாம்) குழுக் கூட்டத்தின் விபரமான நிகழ்ச்சிகளை பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ட) குழுவானது நிதிக் கம்பனியின் அலுவலர்களின் ஒழுங்குகள், நம்பிக்கைகள், நிதியியல் அறிக்கையிடலில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்கள் பற்றி எழுப்பிய கருத்துக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களை பற்றி மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்படி, அத்தகைய விடயங்கள் தொடர்பான நியாயமானதும் சுதந்திரமானதுமான புலனாய்வுகளின் பொருட்டு குழு இடம் பெறுகின்ற சரியான ஒழுங்குகளையும் பொருத்தமான பின் தொடர் நடவடிக்கைகளையும், வெளிக் கணக்காய்வாளருடனான நிதிக் கம்பனியின் உறவு முறையினை மேற்பார்வை செய்கின்ற முக்கிய பிரதிநிதித்துவ சபையாக தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(3) ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(அ) குழுவானது குறைந்தபட்சம் ஒரு நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் மற்றும் கொடுகடன், சந்தை, திரவத்தன்மை தொழிற்பாடு மற்றும் உபாய இடர்நேர்வு போன்ற விரிந்த இடர்நேர்வு வகைகளை மேற்பார்வை செய்கின்ற முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குழு முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டியுள்ளதுடன் அதிகாரசபையின் உட்கட்டமைப்பு மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குட்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது, நிதிக் கம்பனியின் நேரக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையம் அதாவது கொடுகடன் சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்நேர்வுகளையும் மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களினூடாக மதிப்பீடு செய்தல் வேண்டும். துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர்நேர்வு முகாமைத்துவம் நிதிக் கம்பனியின் அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணியம்சார் மற்றும் தரம் சார்ந்த இடர்நேர்வு வரையறைகளுக்குள் முகாமைப்படுத்துவதற்காக கொடுகடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக்குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமாந்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஈ) நிதிக் கம்பனியின் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முன்மதியுடைய மட்டங்களுக்கு அப்பாலுள்ள மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளின் தாக்கத்தினை தணிப்பதற்காக குழு பொருத்தமானதும் சரியானதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(உ) புதிய மாற்றங்களை உள்ளடக்கிய வியாபாரத்தினை தொடர்ந்து நடத்துவதற்கான திட்டங்கள் உட்பட, இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்காக குழு குறைந்த பட்சம் காலாண்டு அடிப்படையில் கூடுதல் வேண்டும்.

(ஊ) குறிப்பிட்ட இடர்நேர்வினை அடையாளம் காண தவறிய மற்றும் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட அத்துடன்/ அல்லது வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் பணிக்கப்பட்டவாறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அலுவலர்களுக்கெதிராக குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(எ) குழுவானது ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்த ஒரு வாரத்திற்கிடையில், சபையின் கருத்து, இணக்கப்பாடு அத்துடன்/ அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புக்களுக்காக இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) வியாபாரத் தொழிற்பாடுகளின் அனைத்துத் துறைகள் தொடர்பான சட்டம், ஒழுங்கு விதிகள், பணிப்புக்கள், விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல், வழிகாட்டல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பனவற்றுடன் நிதிக் கம்பனி இணங்கி ஒழுகுவதனை மதிப்பிடுவதற்காக குழுவானது இணக்க தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறப்பு இணங்குவிப்பு அலுவலர் இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் காலத்திற்கு காலம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அவர் கடமைப்பட்டவராக இருப்பார்.

9. **தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

(1) 2007 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன்வழங்கல்) பணிப்புரை, 2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்) பணிப்புரை அல்லது காலத்திற்கு காலம் நீக்கப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு பின்வருவன மேலதிகமானவை.

(2) எந்த ஒரு ஆளுடனும் குறிப்பாக, இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "தொடர்புபட்ட தரப்பினர்கள்" எனக் கருதப்படக்கூடிய ஆட்களின் பின்வரும் வகையினருடனான நிதிக் கம்பனியின் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எழக்கூடிய நலவுரித்துக்களின் எந்த ஒரு முரண்பாட்டினையும் தவிர்ப்பதற்கு சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) ஒரு நிதிக் கம்பனியின் துணைக் கம்பனி

(ஆ) ஏதாவது நிதிக் கம்பனியின் இணைக் கம்பனி

(இ) நிதிக் கம்பனியின் ஒரு பணிப்பாளர்

(ஈ) ஒரு நிதிக் கம்பனியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்

(உ) ஒரு நிதிக் கம்பனியின் பணிப்பாளரின் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய உறவினரொருவர்

(ஊ) நிதிக் கம்பனியில் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அதிகமாக உரித்துடைய பங்குதாரர்

(எ) ஏதாவது நிதிக் கம்பனியின் பணிப்பாளர் அல்லது ஏதாவது நிதிக் கம்பனியின் பணிப்பாளரின் நெருங்கிய உறவினர் அல்லது இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அதிகமாக உரித்துடைய பங்குதாரர் பற்றியதொரு கரிசனை.

(3) இப்பணிப்புரையினால் உள்ளடக்கப்படக்கூடிய தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் வகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) கடன்வசதிகளை வழங்கல்

(ஆ) வைப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் முதலீடுகளின் வடிவில் நிதிக் கம்பனியில் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல்

(இ) நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட அல்லது நிதிக் கம்பனியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக் கொண்ட எந்தவொரு பணியினதும் வழங்கல் அல்லது அத்தகைய சேவைகளை நிதிக் கம்பனியிலிருந்து பெற்றுக் கொள்ளல்

(ஈ) நிதிக் கம்பனிக்கும் எந்தவொரு தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடல் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதல் அல்லது பேணுதல், அத்தகைய தொடர்புட்ட தரப்பினர்களுக்கு நன்மை தரத்தக்க உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகளை நம்பிக்கைகளை அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கக்கூடும்.

(4) தொடர்பான தரப்பினருடன், இதே வியாபாரத்தினை நிதிக் கம்பனியுடன் மேற்கொள்கின்ற மற்றையவர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "மிகச் சாதகமான வசதியை" வழங்கக்கூடிய விதத்தில் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் நிதிக் கம்பனி ஈடுபடவில்லை என்பதனை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தில் "மிகச் சாதகமான வசதி" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) தொடர்பான தரப்பினருக்கு "மொத்த தேறிய கடன் வசதியை" வழங்குகின்றமை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிதிக் கம்பனியின் ஒழுங்குமுறைப் படுத்தல் மூலதனத்தின் முன்மதியுடைய சதவீதத்தினை விஞ்சும்.

"மொத்த தேறிய கடன்வசதி" மொத்தக்கடன் வசதிகளிலிருந்து நிதிக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் அத்தகைய தொடர்பான தரப்பினர்களினால் செய்யப்பட்ட காசுப் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் மற்றும் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன் கூடிய படுகடன் சாதனங்கள் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படலாம்

(ஆ) தொடர்பற்ற ஒப்பிடத்தக்க இணைக்கிணைத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடுகையில் நிதிக் கம்பனியின் மிகச் சிறந்த கடன் வழங்கல் வீதத்திலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தினை விதித்தல் அல்லது நிதிக் கம்பனி வைப்புக்களுக்குக் கூடுதலான வட்டி வீதத்தினைச் செலுத்துதல்

(இ) சாதகமான நியதிகள், வர்த்தக இழப்புக்களை உள்ளடக்குதல் அத்துடன்/ அல்லது கட்டணங்களை/ தரகுகளைத் தளர்த்துதல் போன்ற முன்னுரிமை ரீதியில் நடத்துதல் தொடர்புபடாத தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் வழமையான வியாபார காலத்திற்கு கூடுதலாக காலப்பகுதியை நீடித்தல்

(ஈ) மதிப்பீட்டு நடைமுறைகள் ஏதுவுமில்லாமல் தொடர்பான தரப்பினருக்கு பணிகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து பணிகளைப் பெறுதல்

(உ) நிதிக் கம்பனிக்கும் தொடர்புபட்ட கம்பனிக்கும் இடையே அறிக்கையிடும் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல் சட்ட ரீதியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயலாற்றத்திற்காக தேவைப்படுத்தப்பட்டவை நீங்கலாக தொடர்பான தரப்பினருடன் உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகள் நம்பிக்கைகள் அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

## 10. வெளிப்படுத்துதல்கள்

(1) (அ) கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடைத்தான, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினால் விபரிக்கப்பட்ட படிவங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களையும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் தயாரித்து பிரசுரிப்பதனையும் அத்துடன் (ஆ) அத்தகைய கூற்றுக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுருக்கமான வடிவத்தில் வெளியிடப்பட வேண்டும் என்பதனையும் சபை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(2) ஆண்டறிக்கையில் பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்துதல்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளமையினை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைவாக, குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான கூற்றொன்று.

(ஆ) நிதிசார் அறிக்கையிடல் முறையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான உறுதிகளை வழங்குவதற்காகவும் வெளிநோக்கங்களுக்கான நிதிகள் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளமையினை நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறியினை உறுதிப்படுத்துவது பற்றிய கூற்றொன்று

(இ) 2010 மார்ச்சு 31இற்கு பின்னர் தயாரிக்கப்பட்டு அல்லது வெளியிடப்படும் எந்தவொரு கூற்றுத் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயன்பாடு மீதான வெளிக் கணக்காய்வாளரின் சான்றிதழ்.

(ஈ) பெயர்கள், நிதிக் கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விபரங்கள்.

(உ) 2010 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து வெளியிடப்படும் வருடாந்த அறிக்கையில் நிதிக் கம்பனியினால் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம்/ ஊதியங்களின் விபரம்.

(ஊ) 9(4) ஆம் பந்தியில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி. தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட தேறிய கடன் வசதியினை நிதிக் கம்பனியின் மூலதன நிதியின் சதவீதமாகவும் வெளிப்படுத்தல் வேண்டும்.

(எ) நிதிக் கம்பனியினால் அதன் முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கு செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதி மற்றும் நிதிக் கம்பனி அதன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி என்பன செலுத்தப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட கடன்வசதி, வங்கியில் செய்யப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடுகள் போன்ற வகைகளில் சபையினால் காட்டப்படுதல் வேண்டும்.

(ஏ) முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளடன் இணங்கி ஒழுகுவது தொடர்பான விபரங்களையும் இணங்கி ஒழுகாமை பற்றிய விடயங்களைச் சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளையும் குறிப்பிடுகின்ற ஒரு அறிக்கை.

(ஐ) நிதிக் கம்பனியின் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகள் அல்லது சட்டத்துக்கு இணங்கி நடக்கத் தவறுதல் வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட பணிப்புக்கள், விதிகளை மீறியமை பற்றிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பான கூற்று

அவ்வாறிருப்பின் அத்தகைய கரிசனைக்குரிய விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நிதிக் கம்பனியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் சேர்த்து நாணயச்சபை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும்.

(ஒ) ஆண்டு கூட்டிணைப்பு ஆளுகை அறிக்கையில் நாணயச் சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகள், விதிகள் மற்றும் சட்டத்திற்கு இணங்கி ஒழுகியமை தொடர்பான வெளிக் கணக்காய்வாளர் சான்றுபடுத்தலை 2011 சனவரி 1ஆம் நாளுக்கு பின்னர் பிரசுரித்தல்.

**11. இடைக்கால ஏற்பாடுகள்**

(1) இப் பணிப்புரைத் திகதியில், நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் எண்ணிக்கை ஒன்றில் 5 ஐ விட குறைவாகவோ அல்லது 13 ஐ விட அதிகமாகவோ காணப்படின், அந்த நிதிக்கம்பனியானது பந்தி 4(1) உடன் இப் பணிப்புரை திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இணங்கிப் போதல் வேண்டும்.

(2) இப் பணிப்புரைத் திகதியில், நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை பணிப்பாளர் சபையின் அரைவாசிக்கு மேலாக இருந்தால், சபையானது மேலதிகமான நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் பற்றிய விபரத்தை இப் பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரிற்கு அறிவிக்க வேண்டும். அதற்கு பின் அத்தகைய மேலதிக நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக கருதப்பட மாட்டார்கள்.

(3) இப் பணிப்புரையின் 4(2) ஆம் பந்தியின் கீழ் 9 வருடங்களில் ஓய்வுபெறவேண்டிய தேவைப்பாடு உள்ளவர்களுக்கு பின்வரும் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படலாம்.

2009 சனவரி 1 இல் ஒன்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள அல்லது 2009 திசெம்பர் 31 இல் அந்த தவணையை பூர்த்தி செய்யும் ஒரு பணிப்பாளர் 2009 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் அதிகூடிய எல்லையாக மேலும் 3 வருடங்கள் தொடர்ந்து இருக்கலாம்.

(4) இப் பணிப்புரையின் 5 (1) ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய வயதெல்லை தொடர்பாக பின்வரும் இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்:

2009 சனவரி 1 ஆம் நாள் 70 வயதை அடைந்த அல்லது 2009 திசெம்பர் 31 ஆம் நாள் 70 வயதை அடையும் ஒரு பணிப்பாளர், 2009 சனவரி 1 ஆம் நாளிலிருந்து ஆகக் கூடிய எல்லையாக மேலும் மூன்று வருடங்களுக்கு தொடரலாம்.

(5) இப் பணிப்புரையின் 5 (2) ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய 20 கம்பனி பணிப்பாளர் தொடர்பாக பின்வரும் இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் :

எந்த ஒரு நபர் 5 (2) ஆம் பந்தியில் தரப்பட்ட வரையறைக்கு உட்பட்டு பணிப்பாளர் பதவியை வகிப்பின் அந் நபர் 2009 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் ஆகக் கூடிய மூன்று வருடங்களுக்கு பதவி வகிக்கலாமென்பதுடன் அது தொடர்பாக நாணயச் சபைக்கு அறியத்தரவும் வேண்டும்.

(6) சுகயீனம் போன்ற காரணத்தால் அல்லது சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏதும் தகுதியீனங்கள் காரணமாக 11(3), 11(4) மற்றும் 11(5) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி விலக்குகள் ஏற்புடையதானது என நாணயச் சபை கருதினால், நாணயச் சபை அந்த நபரை விசாரித்ததன் பின்பு அந்த நபருக்கு அறிவித்ததன் பின்னர், நாணயச் சபை விதிவிலக்கு காலத்தை மட்டுப்படுத்தவும் முடியும்.

**12. வரைவிலக்கணம்:**

(1) “சட்டம்” என்பது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினை குறிக்கும்

(2) “கடனுதவி” என்பது 2007 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன்வழங்கல்) பணிப்புரையின் உள்ளடக்கத்தினை குறிக்கும்

(3) “உறவினர்” என்பது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளினைக் குறிக்கும்.

(4) “முதன்மை முகாமைத்துவ ஆளணி” என்பது நிறுவனத்தின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்தும், பணிப்புரை வழங்கும் அல்லது திட்டமிடும் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரத்தினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொண்டுள்ள பணிப்பாளர் (நிறைவேற்றுத் தன்மையுடையவராகவோ அல்லது வேறு வகையில்) உட்பட்டோரை குறிக்கும்.

(5) “கணிசமான வட்டி” என்பது என்பது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ள அதே பொருளினைக் குறிக்கும்.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு.
2008, திசெம்பர் 31 ஆம் திகதி.

## 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை - திருத்தம்) பணிப்புரை

இப் பணிப்பு 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை - திருத்தம்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் (இதன் பின் "நிதிக் கம்பனி" எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையனவாதலும் 2009 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் 4 ஆம் பந்தி இதனகத்து பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) உப பந்தி (4) இல் "இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்." என்ற சொல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன:

"01.01.2009 இல் ஆரம்பமாகும் மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்."

(2) உப பந்தி (7) இல் "இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்." என்ற சொல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன:

"01.01.2009 இல் ஆரம்பமாகும் மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்."

3 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் 11 ஆம் பந்தி இதனகத்து பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) உப பந்தி (1) இல் "இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்." என்ற சொல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன:

"01.01.2009 இல் ஆரம்பமாகும் மூன்று வருடங்களில் இணங்கிப் போதல் வேண்டும்."

(2) (அ) உப பந்தி (2) இல் "இப் பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள்." என்ற சொல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன:

"01.01.2009 இல் ஆரம்பமாகும் மூன்று வருடங்களுக்குள்."

(ஆ) உப பந்தி (2) இல் "இதன் பிறகு" என்ற சொல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன:

"01.01.2009 இல் ஆரம்பமாகி மூன்று வருடங்களின் முடிவில்."